# தேசிய கொள்கை கட்டமைப்பு

செழிப்பான ஒரு தேசம்

அழகிய ஒரு வாழ்க்கை

## சுருக்கம்

**உள்ளடக்கம்**


1. **நிறைவானதொரு வாழ்க்கை – வசதியானதொரு நாடு** **5**

1.1 நாகரீமடைந்ததொரு பிரஜை - முன்னேற்றமடைந்ததொரு மனித வளம் 7

1.2 சுறுசுறுப்பானதொரு வாழ்க்கை – ஆரோக்கியமான மக்கள் 17

1.3 வசதியானதொரு வீடு - ஆரோக்கியமானதொரு வாழ்க்கை 24

1.4 வலிமையுடன் செயலாற்றும் ஒரு பிரஜை - வெற்றி பெற்ற மக்கள் 25

1. 5 வளமானதொரு கலாச்சார வாழ்க்கை – இரக்கமுள்ளதொரு சமூகம் 30

1.6 பாதுகாக்கப்பட்டதொரு வரலாறு – மபாரம்பரியம் முழுதும் புதுமையை புகுத்துதல் 38

1.7 நிலைபேறானதொரு உயிரியல் உலகம் - பசுமையானதொரு வாழ்க்கை 40

1.8 சுதந்திரமான ஊடகத்தொழில் - புறநிலை தகவலறிந்ததொரு தகவல் சமூகம் 49

2. கௌரவமானதொரு வாழ்க்கை – பாதுகாப்பானதொரு நாடு 51

2.1 பாதுகாப்பானதொரு சமூகம் - வளமானதொரு நாடு 52

2.2 வினைத்திறனானதொரு தொழிற்படை – கௌரவமானதொரு தொழில்முறை வாழ்க்கை 59

2.3 பாரபட்சமற்ற மனித அடையாளம் - சமூக வாழ்வில் பாலின சமத்துவம் 65

2.4 சிறுவர்களுக்கான பாதுகாப்பானதொரு உலகம் - ஆக்க பூர்வமானதொரு எதிர்கால சந்ததி 64

2.5 ஒரு மன நிறைவு கொண்டதொரு இளமைப்பருவம் - நாகரீக நயமுடைய சுதந்திரமான சிந்தனையாளர்கள் 68

2.6 கௌரவத்திற்குரியதொரு சிரேஷ்ட பிரஜை - அர்த்தமுள்ளதொரு ஓய்வான வாழ்க்கை 72

2.7 தடையற்றதொரு சமூக வாழ்க்கை – நியாயமானதொரு சமத்துவமானதொரு அணுகு முறை 73

3. நவீனமயமானதொரு வாழ்க்கை – செழிப்பானதொரு தேசம் 77

3.1 ஒரு ஜனநாயக பொருளாதாரம் - செல்வம் மிகுந்ததொரு நாடு 80

3.2 உயர்வான உற்பத்தித்திறன் - உணவுப் பாதுகாப்புள்ளதொரு நாடு 92

3.3 உயர் தரத்திலான கால்நடை உற்பத்திப் பொருட்கள் – ஒரு தொழில் முயற்சி அணுகுமுறை 98

3.4 நிலைபேறானதொரு முகாமைத்துவம் - தரமானதொரு கடல் வளம் 108

3.5 டிஜிடல்மயமாக்கப்பட்டதொரு அரசு – ஒரு சர்வதேச பங்கேற்பு 110

3.6 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அணுகுமுறை – சமூகத்திற்கான விஞ்ஞான ரீதியான தீர்வுகள் 114

3.7 நவீனமயப்படுத்தப்பட்டதொரு சுற்றுலாக் கைத்தொழில் - கவர்ச்சிகரமானதொரு இறுதி செல்லிடம் 124

3.8 தொழில்முயற்சியின் மேம்பாடு – ஒரு சேதன அணுகுமுறை 129

3.9 நிலைபேறான வளங்களின் பயன்பாடு – உயர்வான நன்மைகளின் உருவாக்கம் 139

3.10 பாதுகாக்கப்பட்டதொரு எரிசக்தி நிலையம் - நிலைபேறானதொரு வருவாய் மூலம் 144

3.11 சிறந்ததொரு பொதுப் போக்குவரத்து சேவை – விரைவான பயண இலக்கு 154

3.12 நிலைபேறானதொரு கடல் வளம் - உலகளாவிய கடல் வர்த்தகத்தில் ஒரு பகுதியைப் பெறுதல் 161

3.13 பாதுகாப்பானதொரு தரவு முறை – ஒரு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் புரட்சி 164

3.14 உற்பத்தித்திறன் வாய்ந்ததொரு காணி முகாமைத்துவம் - ஒன்றிணைக்கப்பட்ட கட்டுப்பாட்டுத் திட்டம் 170

3.15 விஞ்ஞான ரீதியாக நிர்வகிக்கப்படும் நிர்மாணக் கைத்தொழில் - சிறந்த தரமான தொழிற்படை 175

3.16 நெகிழ் திறன் கொண்ட மற்றும் புதுமை வாய்ந்ததொரு விமானப் போக்குவரத்துத் துறை 178

4. கண்ணியமானதொரு வாழ்க்கை – உறுதியானதொரு நாடு 180

4.1. புதியதொரு அரசியலமைப்பு – ஐக்கியமானதொரு இலங்கை தேசம் 183

4.2. வினைத்திறன் மிக்கதொரு அரசாங்க சேவை – திறன் அடிப்படையிலான தொழில்முறை 184

4.3 சட்டத்தின் ஆட்சி – சமமான அணுகலுடனானதொரு நீதிமுறை 188

4.4 மக்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் - நட்புறவான சேவை 192

4.5. மனிதாபிமானதொரு சிறை - சட்டபூர்வமானதொரு சிறை 196

4.6. போதைப்பொருட்களற்றதொரு நாடு – ஆரோக்கியமான பிரஜைகளின் வாழ்க்கை 198

4.7 கண்ணியமானதொரு இராஜதந்திரம் - இறையாண்மையுள்ளதொரு அரசு 201

4.8 உயர் மட்டத்திலான தேசிய பாதுகாப்பு – பாதுகாக்கப்பட்டதொரு ஒரு அரசு 214

4.9 இலங்கை தேசம் - பிரபஞ்ச பிரஜை 221

## அத்தியாயம் 1

## 1. நிறைவானதொரு வாழ்க்கை - வசதியானதொரு நாடு

### அறிமுகம் : இலங்கையின் சமூக அபிவிருத்தியின் சவால்களும் வாய்ப்புக்களும்

***கல்வி*** முறையானது, முக்கிய கட்டங்களாக அதாவது, ஆரம்ப கால குழந்தைப் பருவ நிலை, ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலை, உயர் நிலை மற்றும் தொழிற்கல்வி என ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. கல்வி முறையில் உள்ள சவால்கள் நாட்டின் மனித மூலதன உருவாக்கத்தை பாதிக்கின்றன. இச்சவால்கள் அணுகல், தரம், தாங்கும் திறன் மற்றும் பொருத்தத் தன்மை உள்ளிட்ட பல்வேறு பரிமாணங்களில் பரவியுள்ளன. ஆரம்ப குழந்தைப் பருவக் கல்வி நிலையில் குறைந்த அளவிலான மாணவர்களின் சேர்க்கை, ஆரம்பக் கல்வி நிலையில் உயர்ந்த அளவிலான மாணவர்களின் சேர்க்கை ஆனால், இரண்டாம் நிலைக் கல்வியின் சேர்க்கையில் காணப்படும் வேறுபாட்டு நிலைமைகள் மற்றும் பல்கலைக்கழக கல்வி‘ நிலையில் அதிக அளவிலான கேள்வி காணப்பட்டாலும் கூட, தகுதியுள்ள அனைத்து மாணவர்களையும் பல்கலைக்கழக கல்வி முறைமைக்குள் சேர்த்துக் கொள்வதற்கான கொள்ளளவு வரையறுக்கப்பட்டிருத்தல், மற்றும் தொழிற்கல்விக்கான கேள்வி அதிகமாக இருந்தாலும் கூட, தொழிற்சந்தையின் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்ய முடியாத நிலைமை என்பன கல்வித் துறையில் உள்ள பிரதான சவால்களாக விளங்குகின்றன. எனவே, இப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் பதிலளிக்கக் கூடிய கல்வி முறைமை ஒன்றை உறுதிப்படுத்துவதற்கு கல்வித் துறையில் சீர்திருத்தங்களை ஏற்படுத்த வேண்டியுது அவசியமாக உள்ளது.

இலங்கையின் ***சுகாதாரத் துறையானது.*** அந்நாட்டு மக்களுக்கு சமமான, வினைத்திறனான, உயர் தரத்திலான சுகாதாரப் பராமரிப்பினை வழங்கும் இயலுமையில் தாக்கத்தைச் செலுத்தும் பல சவால்களை எதிர்நோக்குகின்றது. ஆரம்ப, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை பராமரிப்பு முறைமைகளில் வினைத்திறன், வெளிப்படைத்தன்மை, மற்றும் புத்தாக்கம் போன்றனவற்றை விருத்தி செய்வதன் மூலம் சுகாதார விருத்தி, நோய்த்தடுப்பு, மற்றும் டிஜிடல் மாற்றம் ஆகியவற்றில் உள்ள சவால்களை தீர்க்கும் அதே வேளை, பொறுப்புணர்வு, பாதுகாப்பான தர நிர்ணயங்கள், மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய சேவை விநியோகம் என்பனவற்றை பலப்படுத்துகின்றது.

***வீடமைப்பானது*** குறிப்பாக நகர்ப்புறங்களில் அடிப்படை வசதிகளில்லாத குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு மற்றுமொரு பிரதான பிரச்சினையாக உள்ளது. **கி**ராமப் புற வீடுகள் தெளிவற்ற நில உரிமை மற்றும் அதிக அளவிலான நிர்மாணச் செலவுகள் உள்ளிட்ட இதே போன்ற சவால்களை எதிர்கொள்கின்றன. பல தொடர்மாடிக் கட்டடத் தொகுதிகளை நிர்மாணிப்பதன் மூலம் இத்தகைய பிரச்சினைகளை சமாளிப்பதை

அரசாங்கம் நோக்கமாகக் கொண்டிருந்தாலும் கூட, குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் உள்ள குடும்பங்களின் வீட்டுச் சுமைகளைக் குறைக்க நிறைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

சமூக அபிவிருத்திக்கு ***விளையாட்டும், கலாச்சாரமும்*** இன்றியமையாதவைகளாக விளங்குகின்றன; இருப்பினும் குறிப்பிட்ட பிரதான தீர்மானங்களை எடுக்கும் பகுதிகள் முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளன. எனவே, நேர்மறையான சமூக பங்களிப்புக்களை விருத்தி செய்வதற்கு இரு துறைகளுக்கும் புத்துயிர் அளிப்பது அவசியமாக உள்ளது.

இதற்கிடையில், ***சுற்றுச்சூழலின்*** தவறான முகாமைத்துவம் நீண்ட காலமாக ஒரு அழுத்தமான சவாலாக இருந்து வருகின்றது. இது நிலச் சீர்கேடுகள் மற்றும் நீர் பற்றாக்குறைக்கு வழிவகுத்ததோடு, நிலைபேறான அபிவிருத்தி, மற்றும் வள முகாமைத்துவத்துக்கும் முன்னுரிமை அளிக்க வேண்டிய அரசாங்கத்தின் அவசரத் தேவையை எடுத்துக் காட்டுகின்றது.

**கொள்கைக் கூற்று**

நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வள முகாமைத்துவத்துவத்துடன் அபிவிருத்தியடைந்த, மனித நேயமுள்ள, மற்றும் பொறுப்பான சமூகமொன்றினை உருவாக்கக் கூடிய தரமான கல்வியொன்றினை வழங்குவதனை உறுதி செய்தல்.

## 1.1 நாகரீகமடைந்ததொரு பிரஜை - முன்னேற்றமடைந்ததொரு மனித வளம்

### கொள்கை கோட்பாடுகள்

- ■ இலவசக் கல்வியும், சமமான அணுகலும்
- ■ மனித அபிவிருத்திக்கும், வேலைவாய்ப்பிற்குமான பொருத்தத்தன்மை
- ■ அனைவருக்கும் ஏற்றுக்கொள்ளக் கூடியது
- ■ சமூகத்திற்குப் பொறுப்பான பொறுப்புள்ள பிரஜைகள்
- ■ நிலைபேறான தன்மை, மற்றும் புத்தாக்கம்
- ■வாழ்நாள் முழுதும் கற்றல்

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாயத் திசை | பிரதான செயற்பாடுகள் |
|---|---|---|
| ஆரம்ப குழந்தைப் பருவ அபிவிருத்திக் கல்வி | 3 முதல் 5 வயது வரையிலான அனைத்துக் குழந்தைகளுக்கும் உயர் தரத்திலான தரமான கல்வி ஒன்றிற்கான அணுகல் இருப்பதை உறுதி செய்தல்<br><br>5 வயதை விடக் கூடிய சிறுவர்கள் பாடசாலை வாழ்க்கைக்கு வெற்றிகரமாக ஒருங்கிணைப்பதை உறுதி செய்தல்.<br><br>பன்முகக் கலாச்சார பன்முகத் தன்மையை ஏற்றுக் கொள்ளக் கூடிய பூர்வாங்க முயற்சியை உறுதி செய்தல்.<br><br>ஆரோக்கியமான எதிர்கால சந்ததியை உறுதி செய்தல்.<br>ஆரம்ப குழந்தைப் பருவ அபிவிருத்தியை ஒழுங்குமுறைப்படுத்தல்<br><br>கல்வியியலாளர்களுக்கு குறைந்த பட்ச தகுதி மற்றும் சம்பளத்துடன் கூடிய தொழில்முறை பயிற்சியினை கட்டாயமாக்குதல் | ▪ 3 முதல் 5 வயது வரையிலான அனைத்துக் குழந்தைகளுக்கும் முறையான ஆரம்ப குழந்தைப் பருவ அபிவிருத்திக் கல்வியை வழங்குதல்<br>▪ ஒவ்வொரு குழந்தைக்கும் அவர்களின் வீட்டிலிருந்து அல்லது பெற்றோர் பணிபுரியும் இடத்திலிருந்து 2 கி. மீ தூரத்திற்குள் ஆரம்ப குழந்தைப் பருவ அபிவிருத்திக் கல்வி நிலையமொன்றினை ஸ்தாபித்தல்.<br>▪ குழந்தைகளின் உடல் மற்றும் மன நிலைமைகளுக்கு ஏற்றவாறு மற்றும் சமூக வாழ்க்கைக்குள் பிரவேவசிப்பதற்கு தேவையான நல்ல பழக்க வழக்கங்கள், அணுகு முறைகள், மற்றும் நெறிமுறைகளின் அபிவிருத்தியை வளர்ச்சியுறச் செயயும் செயற்பாடுகளை உள்ளடக்கிய நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.<br>▪ தாய் மொழிக்கு மேலதிகமாக தொடர்பாடல் மொழிகளாக ஆங்கிலம் மற்றும் ஏனைய தேசிய மொழிகளை உள்ளடக்கிய தேசிய நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.<br>▪ பன்முகக் கலாச்சார பன்முகத் தன்மையுடன் செயற்படுவதற்கான பழக்கத்தை ஏற்படுத்தக் கூடிய நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல். குழந்தைகளின் ஆரோக்கியம் மற்றும் போஷாக்கு நிலையை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தல்.<br>▪ ஆரம்ப குழந்தைப் பருவ அபிவிருத்தி நிலையங்களை ஒழுங்கு முறைப்படுத்துவதற்கான ஆரம்ப குழந்தைப் பருவ அபிவிருத்தி ஒழங்குமுறைப்படுத்தல் நிறுவனமொன்றினை ஸ்தாபித்தல்.<br>▪ குறைந்த கல்வித் தகைமைகளுடன் கட்டாயத் தொழில்முறை பயிற்சிகளை வழங்குதல் மற்றும் ஆரம்ப குழந்தைப் பருவ அபிவிருத்தி நிலையங்களின் பாதுகாவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான குறைந்த சம்பளத்தினை அறிமுகாப்படுத்தலும். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாயத் திசை | பிரதான செயற்பாடுகள் |
|---|---|---|
| | | ▪ ஆரம்ப குழந்தைப் பருவ அபிவிருத்தி நிலையத்தின் பணியாளர்களுக்கு பயிற்சியளிப்பதற்கு முறையான தேசிய நிறவனமொன்றினையும், கிளை அமைப்பு முறையொன்றினையும் ஸ்தாபித்தல். |
| **ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைக் கல்வி** | ஒழுக்கமான மற்றும் வசதியான கல்விச் சூழலை உறுதி செய்தல்<br><br>சமமான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய கல்வியை உறுதி செய்தல்<br><br>கல்வி வாய்ப்புக்களுக்கான அணுகலை உறுதி செய்தல்<br><br>கல்வியின் தரத்தினை உறுதிப்படுத்தல்<br><br>மாணவர்களின் அறிவு மற்றும் திறன்களை தொடர்ச்சியாக வளர்ச்சியுறச் செய்வதை உறுதி செய்தல்<br><br>மாணவர்களின் திறன்கள் மற்றும் விருப்பத்தை அடிப்படையாகக் கொண்டு சாதாரண மற்றும் தொழில்நுட்ப அல்லது தொழிற்கல்விப் பாடநெறிகளை தெரிவு செய்வதற்கு மாணவர்களை ஈடுபடுத்துவதை உறுதி செய்தல். | ▪ தமது வீட்டிலிருந்து அல்லது பெற்றோர் தொழில்புரியும் நிறுவனங்கள் அமைந்துள்ள இடத்திலிருந்து 3 கி. மீ இற்குள் ஆரம்பக் கல்விக்கான அரசாங்க பாடசாலை முறைமையொன்றினை உருவாக்குதல்.<br>▪ குழந்தைப் பருவத்திற்கு தடையாக இருக்காதவாறு அறிவு சார்ந்த ஆர்வம் மற்றும் அறிவு வளர்ச்சியை மேம்படுத்தும் மாணவர்களை மையமாகக் கொண்ட கல்வி முறைமையொன்றினை அறிமுகம் செய்தல்.<br>▪ குறைந்த வசதிகளை பேணுவதற்காக பாடசாலைகளுக்கு பௌதீக மற்றும் மனித வளங்களை வழங்குதல்.<br>▪ சனத்தொகை மற்றும் புவியியல் இருப்பிடத்தினை கருத்தில் கொண்டு 2 அல்லது 3 ஆரம்பப் பாடசாலைகளை உள்ளடக்கிய கனிஷ்ட மற்றும் இரண்டாம் நிலை பாடசாலை முறைமையொன்றினையும் மற்றும் சிரேஷ்ட இரண்டாம் நிலை பாடசாலை முறைமையொன்றினையும் ஸ்தாபித்தல்.<br>▪ ஒன்பதாம் ஆண்டில் நடாத்தப்பட்ட தேசிய மட்ட தேர்வுப் பரீட்சைப் பெறுபேறுகளையும் மற்றும் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட தொடர்ச்சியான அறிக்கைகளையும் அடிப்படையாகக் கொண்டு விஞ்ஞானம், கலை, வர்த்தகம், மற்றும் தொழில்நுட்பம், அல்லது தொழில்சார் கல்வி (ஒரு தொழிலுக்கு நேரடியாகப் பொருந்தக் கூடிய) போன்ற பொதுப் பிரிவுகளுக்கு இடையே மாணவர்களைத் தேர்வு செய்வதற்கான வாய்ப்புகளை வழங்கல்.<br>▪ தேவைகளுக்கு ஏற்ப அங்கீகரிக்கப்பட்ட தர நிர்ணயங்களுக்கு ஏற்ப பாடசாலை போக்குவரத்து முறைமையொன்றினை உருவாக்குதல்.<br>▪ சமூக விழுமியங்கள், மற்றும் குடிமைப் பொறுப்பை வளர்ப்பதற்கு மேலதிகப் பாடங்களையும் மற்றும் நடவடிக்கைகளையும் அறிமுகப்படுத்தல் |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாயத் திசை | பிரதான செயற்பாடுகள் |
|---|---|---|
| | கலாச்சாரம், இயற்கை மற்றும் மனிதாபிமானம் தொடர்பான அனுதாபமுள்ள மாணவர்களை உருவாக்குவதனை உறுதிப்படுத்துதல்.<br><br>மாணவர்களை மையமாகக் கொண்ட கல்வியை ஊக்குவிப்பதை உறுதி செய்தல். | ▪ மாணவர்கள் தங்கள் திறன்கள் மற்றும் சிறப்புத் திறன்களுக்கு ஏற்ப உயர் கல்வியை அல்லது தொழில் சார் கல்வியை தேர்வு செய்ய உதவும் முக்கியமான பாடங்களை அறிமுகம் செய்தல்.<br>▪ மாணவர்கள் தமது சிரேஷ்ட இரண்டாம் நிலை (குறைந்த) கல்வியின் போது ஒரு பிரிவிலிருந்து மற்றுமொரு பிரிவுக்கு மாறுவதற்கு நெகிழ்வான பாட விதானத்தை அறிமுகம் செய்தல்.<br>▪ சொந்த மதம் பற்றிய அறிவை பெற்றுக் கொள்வதற்கு மேலதிகமாக இலங்கையில் உள்ள பிரதான மதங்கள் தொடர்பான கல்வி சார் நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்தல்.<br>▪ வயதுக்கு ஏற்ற பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதாரக் கல்வியை அறிமுகப்படுத்தல்.<br>▪ கலாச்சாரம், சுற்றுச்சூழல், மற்றும் இயற்கைப் பாதுகாப்பு என்பன மீதான அணுகுமுறையை வளர்த்தல்.<br>▪ புத்தாக்கங்கள், வாழ்க்கைத் திறன்கள் சமூக திறன்கள், மற்றும் சமூக பங்களிப்பு ஆகியனவற்றிற்கான அறிவு மற்றும் பிரயோகத் திறன்களை அபிவிருத்தி செய்தல்.<br>▪ கல்வி பாட நெறிகளுக்கு விஷேடமான பாடங்களோடு, திறன்களை மேம்படுத்தல், மற்றும் தொழில்நுட்ப எழுத்தறிவு, மொழிகள், வாழ்க்கைத் திறன்கள். இலக்கியம், மற்றும் அடிப்படைச் சட்டம் போன்ற பொதுத் திறன்களை வளர்க்கும் பொதுப்பாடங்களை தெரிவு செய்வதற்கும் வாய்ப்புக்களை வழங்குதல். .<br>▪ சிறுவர்களின் உடல் மற்றும் உணர்ச்சி பூர்வமான சமனிலையை பேணுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.<br>▪ பிரிவேணாக்கள் உள்ளடங்கலாக அரசாங்க ஆதரவைப் பெற்றுக் கொள்ளும் பாடசாலைகளுக்கு நிதி மற்றும் ஏனைய வசதிகளை வழங்கி கல்வியை விருத்தி செய்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாயத் திசை | பிரதான செயற்பாடுகள் |
|---|---|---|
| | பரீட்சை சுழற்சியில் துல்லியம் மற்றும் வினைத்திறன் செயன்முறையை மேம்படுத்தல். | ▪ அனைத்து தொழில்நுட்ப மற்றும் பௌதீக வசதிகளுடனான தேசிய பரீட்சை மதிப்பீட்டு நிலையமொன்றினை ஸ்தாபித்தல்.<br>▪ தேசிய பரீட்சை மதிப்பீட்டு நடவடிக்கைகள் ஒரு மாத காலத்திற்குள் நடாத்தப்பட்டு இரண்டு மாதங்களுக்குள் பெறுபேறுகளை வழங்கக் கூடிய வகையில் வருடாந்த பாடசாலை நாட்காட்டி ஒன்றினை நடைமுறைப்படுத்துதல்.<br>▪ பரீட்சை மதிப்பீட்டுச் செயன்முறையில் ஈடுபடும் பரிசோதகர்களின் அறிவு சார் பங்களிப்பினை பிரதிபலிக்கும் பொடுப்பனவு முறைமையொன்றினை அறிமுகப்படுத்தல்.<br>▪ பாட விதான அபிவிருத்தி, ஆசிரியர்களுக்கான தொழில்சார் அபிவிருத்தி மற்றும் கல்வி ஆராய்ச்சி மற்றும் கொள்கை தயாரிப்புக்கள் தொடர்பான தேசிய கல்வி நிறுவனத்தின் தொழிற்பாடுகளை ஒழுங்குமுறைப்படுத்தல்.<br>▪ தேசிய கல்வி நிறுவனத்திற்குள் பாட விதான அபிவிருத்திக்கான முழுமையாக வசதிகள் உள்ளடக்கப்பட்ட பாட விதான அபிவிருத்திப் பிரிவு ஒன்றினை ஸ்தாபித்தல். |
| மனித வளங்களை அபிவிருத்தி செய்தலும் மற்றும் பராமரித்தலும் | சாதாரண கல்வி முறையின் தொழிற்படைக்கு சாதகமான பணிபுரியும் சூழலொன்றினை உறுதிப்படுத்தல். | ▪ ஆசிரியர்களினதும் மற்றும் அதிபர்களினதும் சம்பள வேறுபாட்டை உடனடினாக நீக்குதல்.<br>▪ ஆசிரிய சேவை கூட்ட அறிக்கை மற்றும் ஆசிரியர்களுக்கான சபையொன்றினையும் ஸ்தாபித்தல்.<br>▪ ஆசிரியர் தொழிலை அதிக ஊதியம் பெறும் 10 தொழில்களுக்கு இடையில் நிலைநிறுத்துதல்.<br>▪ ஆசிரியர் தொழிலுக்கு நுழையும் முன்னர் ஆசிரிய கற்கை செயன்முறையில் ஒரு வருட தொழில்சார் பயிற்சியொன்றை வழங்குதல்.<br>▪ கல்விக் கல்லூரிகளையும் மற்றும் ஆசியரியா் பயிற்சிக் கல்லூரிகளையும் இணைப்பதன் மூலம் தேசிய கல்விப் பல்கலைக்கழகம் ஒன்றினை ஸ்தாபித்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாயத் திசை | பிரதான செயற்பாடுகள் |
|---|---|---|
| | | ▪ ஆசிரியர்களுக்கான மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.<br>▪ பாட விதான அபிவிருத்தி, பாடப்புத்தக அபிவிருத்தி மற்றும் மதிப்பீட்டுச் செயன்முறைகள் இணைக்கப்பட்டு பேணப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு அனைத்து நிறுவனங்களுக்கும் இடையில் ஒருங்கிணைப்புக் கட்டமைப்பு ஒன்றினை உருவாக்குதல்.<br>▪ அனைத்து சமூகங்களினாலும் எதிர்நோக்கப்படும் பாலியல் மற்றும் பிற வடிவங்களிலான வன்முறைகளுக்கு தீர்வு காண்பதற்கு பாடசாலை முறைமைக்குள் வலுவான ஒரு கட்டமைப்பை ஸ்தாபித்தல். |
| **தொழில்சார் கல்வி** | குறிப்பிட்ட வேலைவாய்ப்புத் துறைகளை நோக்கி மாணவர்களை வழிநடாத்தும் தொழில்சார் கல்விச் செயன்முறையை உறுதிப்படுத்தல். | ▪ பொதுவான தொழில்நிலை துறைகளில் நடைமுறைப் பிரயோக அறிவைப் பெறுவதன் மூலம் குறிப்பிட்ட வேலைவாய்ப்புத் துறைகளை நோக்கி மாணவர்களை வழிநடாத்தும் தொழிற்கல்விச் செயன்முறையை அறிமுகப்படுத்துதல்.<br>▪ பொதுக்கல்விப் பிரிவுக்கு நிகராக 10 ஆம் ஆண்டு முதல் 13 ஆம் ஆண்டு வரை நிர்மாணமும் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளும் ஆக்கபூர்வமான கைத்தொழில்கள், முதன்மைக் கைத்தொழில்கள், சேவைக் கைத்தொழில்கள், சமூக சேவைகள் மற்றும் தயாரிப்பு மற்றும் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் ஈடுபடுவதற்கு மாணவர்களைத் தயார்படுத்துவதற்காக தொழில்சார் பாடநெறியொன்றினை அறிமுகப்படுத்தல்.<br>▪ தொழிற்சந்தைக் கேள்விகள் மற்றும் உலகளாவிய போக்குகள் என்பனவற்றைக் கருத்திற் கொண்டு தொழில்சார் கல்வித் துறைக்கு அவசியமான தரம் மற்றும் அளவு சார்ந்த மாற்றங்கள் தொடர்பான ஆலோசனைகளை வழங்குவதற்கு உத்தியோக பூர்வ நிபுணர்களை உள்ளடக்கிய தொழில்சார் கல்வி ஒழுங்குமுறைப்படுத்தல் திணைக்களமொன்றினை ஸ்தாபித்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாயத் திசை | பிரதான செயற்பாடுகள் |
|---|---|---|
| **உயர் நிலைக் கல்வி** | அரச மற்றும் அரச சார்பற்ற பல்கலைக்கழக முறைமைகளுக்குள் தர உத்தரவாதத்தினை (Quality Assurance) உறுதிப்படுத்தல்<br><br>தொழில்களை .இலக்காகக் கொண்ட உயர் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான அணுகலை பலப்படுத்துதல் மற்றும் விரிவாக்கல்.<br><br>பல்கலைக்கழக கல்வி முறைமைக்குள் வேலைவாய்ப்பு மற்றும் தொழில்முயற்சித் திறன்களை வளர்ச்சியுறச் செய்வதை உறுதிப்படுத்தல்.<br><br>பல்கலைக்கழக கல்வி முறைமைக்குள் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கக் கலாச்சாரத்தினை உறுதிப்படுத்துதல்.<br><br>உயர் கல்வி முறைமையின் நிர்வாக நிறுவனங்களின் தீர்மானம் மற்றும் கௌரவத்திற்குரிய சுதந்திரத்தை உறுதிப்படுத்தல்.<br>. | ▪ பல்கலைக்கழக கௌரவத்தை சுதந்திரத்தை மதிப்பதன் மூலம் தேசிய கொள்கைகளுக்கு ஏற்ப, கல்விப் பாடநெறிகளுக்கு தயார் செய்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வழிகாட்டுதல்.<br>▪ சமூக பன்முகத்தன்மையை பிரதிபலிப்பதனை உறுதிப்படுத்துவதன் மூலம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரையும் மற்றும் ஏனைய அங்கத்தவர்களையும் நியமித்தல்.<br>▪ பல்கலைக்கழகங்களின் கௌரவத்தை நிலைநாட்டும் வகையில் உப வேந்தர்களை நியமித்தல்.<br>▪ பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பல்கலைக்கழகங்களின் வெளிவாரியான ஆளுனர் சபை அங்கத்தவர்களாக சுயாதீன தனி நபர்களை நியமித்தல்.<br>▪ பல்கலைக்கழகங்களில் அனைத்து ஆளுனர் சபைகளிலும் பல்வேறு உத்தியோகத் துறைகள், மற்றும் பாலின பிரதிநிதித்துவத்தினை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் அங்கத்தவர்களை நியமித்தல்.<br>▪ பல்கலைக்கழக ஆளுனர் சபையில் அங்கத்தவர்களை நியமிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட தொழில்நிலை நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பொதுவாக பரிந்துரைக்கப்பட்ட பெயர்களை உள்ளடக்கிய குழாமொன்றினை உருவாக்குதல்.<br>▪ ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து ஓய்வு பெற்ற ஒருவரை பல்கலைக்கழக ஆளுனர் சபைக்கு அங்கத்தவராக நியமிக்கும் போது குறைந்தது ஐந்து வருடங்களுக்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களை மாத்திரம் நியமித்தல்.<br>▪ பொது நலன்கள் மற்றும் ஏனைய மாணவர் விவகாரங்களுக்கு இருக்கும் மட்டுப்படுத்தப்பட்ட இடத்திற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அந்தந்த பல்கலைக்கழக மாணவர்களின் தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர் பிரதிநிதிகளை நிர்வாக மன்றக் குழுவுக்கு நியமித்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாயத் திசை | பிரதான செயற்பாடுகள் |
|---|---|---|
| | | ▪ ஆளுனர் ஒரு சபை அங்கத்தவர்களின் பதவிக் காலத்தை அதிக பட்சம் இரண்டு தொடர்ச்சியான பதவிக்காலங்களுக்கு மட்டுப்படுத்தல்.<br>▪ கல்விப் பீடங்களின் பீடாதிபதிகளை நியமிக்கும் போது திணைக்களத் தலைவராக அல்லது குறைந்தது மூன்று வருட அனுபவமுள்ள விரிவுரையாளர் தகைமையுடைய பீட அங்கத்தவர்கள் பீடாதிபதியாக நியமிக்கப்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.<br>▪ ஒரு பீடாதிபதியின் பதவிக்காலத்தை அதிக பட்சம் இரண்டு தொடர்ச்சியான பதவிக்காலங்களுக்கு மட்டுப்படுத்துதல்.<br>▪ பொறுப்பான அமைச்சரின் பரிந்துரையின் பேரில் கல்வி சாரா பணியாளர்களை நியமிப்பதை ஒழித்தல்.<br>▪ அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் கல்வி சார், கல்வி சாரா மற்றும் மாணவ சமுதாயத்தின் மனக்குறைகளை கண்டு பிடித்து தீர்ப்பதற்கும் பொருத்தமான பரிந்துரைகளை வழங்குவதற்கும் பீடங்கள் மட்டத்திலும் மற்றும் பல்கலைக்கழக மட்டங்களிலும் பொறிமுறைகளை நடைமுறைப்படுத்தல்.<br>▪ பல்கலைக்கழகங்களில் மாணவர்களைச் சேர்ப்பதில் உள்ள தாமதத்தை நீக்குதல்.<br>▪ ஒவ்வொரு பாடத்திட்டத்திற்கும் குறைந்த பட்ச கல்வித் தகைமைமைகளைக் கண்டறிந்து அத்தகைமைகளைப் பூர்த்தி செய்யும் அனைவர்களுக்கும் வாய்ப்புகள் கிடைக்கக் கூடிய வகையில் படிப்படியாக மூன்றாம் நிலைக் கல்வி முறைமையை விரிவுபடுத்துதல்.<br>▪ மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்கள், விரிவுரை மண்டபங்கள், ஆய்வு கூடங்கள், நூலகங்கள், மற்றும் உணவகங்களில் பொருத்தமான தரங்களுக்கு ஏற்ப இணையத்தள வசதிகளை தயாரிப்பதற்கு அவசியமான ஏற்பாடுகளை வழங்குதல்.<br>▪ சர்வதேச பல்கலைக்கழகங்களில் பட்டப்பின் படிப்புப் பட்டத்தினைப் பெறுவதற்குத் தேவையான ஆங்கில மொழித்திறன் உள்ளிட்ட |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாயத் திசை | பிரதான செயற்பாடுகள் |
|---|---|---|
| | | அடிப்படைத் தகைமைகளை வழங்குவதற்கு ஒவ்வொரு மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனத்திலும் விஷேட அலகுகளை நிறுவுதல் மற்றும் இவ்வலகுகளின் ஊடாக மாணவர்கள் பட்டப்பின் படிப்புப் பட்டங்களுக்கான வாய்ப்புக்களைப் பெற ஏதுவாக சர்வதேச உறவுகளை பலப்படுத்தல்.<br>▪ உயர் தரப் பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்கள் சர்வதேச ரீதியிலான தர வரிசையினைக் கொண்ட பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பினை மேற்கொள்வதற்கு வருடாந்தம் 200 புலமைப்பரிசில்களை வழங்குதல்.<br>▪ மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களில் நிகழும் அன்புத் தொல்லைகள், பாலியல் அல்லது ஏனைய வடிவிலான துன்புறுத்தல்களைத் தடுக்க ஒருங்கிணைக்கப்பட்ட பொறிமுறை ஒன்றினை நடைமுறைப்படுத்தல்.<br>▪ அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச தரங்களில் கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கு மாற்றுத் திறனுடனான மாணவர்களுககான வசதிகளை வழங்குதல்.<br>▪ வாழ்க்கைச் செலவிற்கு ஏற்ப மகாபொல மற்றும் ஏனைய உதவு தொகைகளை அதிகரித்தல்.<br>▪ பட்டப்பின் படிப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான ஒரு பல்கலைக்கழகத்தினை ஸ்தாபித்தல்.<br>▪ பட்டப்பின் படிப்பு மற்றும் ஆராய்ச்சியினை வலுப்படுத்த தேவையான நிதி மற்றும் பௌதீக வளங்களை வழங்குதல்.<br>▪ கைத்தொழில்கள் மற்றும் சேவைத் துறைகள் தொடர்பான ஆராய்ச்சியை வலுப்படுத்த தனியார் துறை பங்களிப்புக்களை ஊக்குவித்தல்.<br>▪ சிரேஷ்ட இரண்டாம் நிலைக் கல்வியினை பூர்த்தி செய்ததன் பின்னர் மூன்றாம் நிலைக் கல்வி நுழைவுப் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்காக தொழிற்கல்வி பல்கலைக்கழக முறைமையின் கொள்ளளவை விருத்தி செய்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாயத் திசை | பிரதான செயற்பாடுகள் |
|---|---|---|
| | | ▪ தாதிகள் கல்லூரிகளை ஒன்றிணைத்து தேசிய தாதிகள் பல்கலைக்கழமொன்றினை ஸ்தாபித்தல். |
| **தனியார் கல்வி** | தனியார் கல்வியின் தரத்தையும் அதற்கான செலவினை தாங்கும் திறனை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் தனியார் கல்வியை ஒழுங்குமுறைப்படுத்தல் | ▪ நடைமுறையிலுள்ள தனியார் கல்வி நிறுவனங்களின் நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு கல்வி அமைச்சின் கீழ் ஒரு சுயாதீன ஒழுங்குமுறை அலகு ஒன்றை ஸ்தாபித்தல். |

## 1.2 சுறுசுறுப்பானதொரு வாழ்க்கை – ஆரோக்கியமான மக்கள்

**கொள்கை கோட்பாடுகள் –**

- சுகாதார பராமரிப்பு முறைமையின் நன்மைகளை கௌரவத்துடனும், கண்ணியத்துடனும் பெற்றுக் கொள்வதற்கான தனிநபர்களின் உரிமை.
- பாகுபாடின்றி பிரஜைகளுக்கு நோய்த்தடுப்பு, மற்றும் சிகிச்சை சுகாதார சேவைகளை வழங்குவதில் அரசின் பொறுப்பு..
- சுகாதாரம், நோய்த்தடுப்பு மற்றும் சுகாதாரப் பராமரிப்பு சேவைகளை மேம்படுத்தல்.
- உலகத் தரத்திற்கு ஏற்ப சுகாதார சேவைகளை வழங்குதல்.
- நோயாளர்களின் உரிமைகளை பாதுகாத்தலும், பாதுகாப்பும்

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான செயற்பாடுகள் |
|---|---|---|
| வினைத்திறனான சுகாதார சேவை முகாமைத்துவம் | சுகாதார பராமரிப்பு விநியோக முறையில் வினைத்திறன், பயனுறுதிறன், மற்றும் சமத்துவம் ஆகியவற்றை மேம்படுத்தல் | ▪ சுகாதாரச் சேவைக்காக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் செலவீனத்தை குறைந்தது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3 சதவீதத்தினை இலக்காகக் கொண்டு படிப்படியாக அதிகரித்தல்<br>▪ சுகாதாரத் துறையில் உள்ள ஊழலை தீவிரமான முறையில் எதிர்த்துப் போராடும் அதே வேளை, நிதியை வினைத்திறனான முறையிலும், வெளிப்படையான முறையிலும் பயன்படுத்தல். |
| டிஜிடல் சுகாதாரம் | சுகாதாரத் துறையின் நன்மைகளை பயன்படுத்துவதற்காக சுகாதாரத்துறையை மாற்றியமைத்தல். | ▪ சுகாதார சேவைகளின் வினைத்திறனையும் மற்றும் பயனுறு விளைவையும் மேம்படுத்துவதற்காக நோயாளிகளின் பதிவுகளையும், மற்றும் தகவல்களையும் டிஜிடல்மயமாக்கல்.<br>▪ சுகாதார சேவை நிறுவனங்களில் காத்திருப்பு நேரத்தினைக் குறைப்பதற்காக மருத்துவ ஆலோசனைகளுக்கான சந்திப்புக்களுக்கு நிகழ்நிலை பதிவை நடைமுறைப்படுத்தல். |
| சுகாதாரத்தை மேம்படுத்தலும், நோய்த்தடுப்பும் | சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களில் காத்திரமான சமூக ஈடுபாட்டை உறுதிப்படுத்தல் | ▪ நாட்பட்ட தொற்றாத நோய்களைக் கண்டறிவதற்கும், நிர்வகிப்பதற்கும் மற்றும் சிகிச்சையளிப்பதற்கும் சமூகங்களை அடிப்படையாகக் கொண்ட பொறிமுறைகளைக் நடைமுறைப்படுத்தல்.<br>▪ 40 வயதுக்கு மேற்பட்ட அனைத்து நபர்களுக்கும் வருடாந்தம் சுகாதார பரிசோதனைகளை நடாத்துதல்.<br>▪ உடற்பயிற்சி, நடை, சைக்கிள் ஓட்டுதல், உள்ளிட்ட ஆரோக்கியமான வாழ்க்கை முறைமைகளை ஊக்குவித்தல்.<br>▪ சமூக விரோத செயல்களுக்கு வழிவகுக்கும் மற்றும் இடர்களுக்கு உள்ளாகக் கூடிய பாடசாலை மாணவர்களின் நடத்தைகளை இனங்கண்டு அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதல்.<br>▪ கடுமையான மற்றும் நீண்ட கால போஷாக்கின்மை குறைபாடு மற்றும் உடற்பருமனைக் கட்டுப்படுத்த சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதல். |
| உணவுப் பாதுகாப்பு | உணவுப் பாதுகாப்பு சட்டங்கள், ஒழுங்கு விதிகள் மற்றும் வழிகாட்டல்களை | ▪ உணவு தொடர்பான விளம்பரங்களை ஒழுங்குபடுத்த ஒரு நிறுவனத்தை ஸ்தாபித்தலும், மற்றும் விளம்பரங்கள் நுகர்வோருக்கு துல்லியமான தகவல்களை வழங்குவதை உறுதி செய்ய நெறிமுறை ஒழுக்கக் கோட்பாடுகளை தயாரித்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான செயற்பாடுகள் |
|---|---|---|
| | வினைத்திறனான முறையில் அமுல்படுத்துவதை உறுதிப்படுத்தல் | ▪ தரமற்ற உணவு மற்றும் பானங்களின் உற்பத்தி, இறக்குமதி, விநியோகம், மற்றும் விற்பனை ஆகியனவற்றைக் கட்டுப்படுத்தல்.<br>▪ அனைத்து உணவுப் பொருட்களிலும் சேர்க்கப்பட்டுள்ள பொருட்களை குறிப்பிட்டு உணவுப் பொருட்களை பொருத்தமான முறையில் முத்திரை குத்துவதை கட்டாயப்படுத்தல். |
| தொழில்சார் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு | தொழிலாளர்களுக்கு சாதகமான ஒரு சுற்றுச்சூழலை உறுதிப்படுத்தல் | ▪ இனங்காணப்பட்ட வேலைத்தளங்களுக்கான பணியின் தன்மையின் அடிப்படையில் தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு மதிப்பீடுகளை நடாத்தி அதற்கேற்ப, சான்றிதழ்களை வழங்குதல்.<br>▪ பணியில் ஈடுபட்டிருக்கும் போது விபத்துக்குள்ளாகும் ஊழியர்களுக்கு அவர்கள் தங்கள் பணிக்குத் திரும்பி வரும் வரை மருத்துவ செலவு மற்றும் பொருத்தமான கொடுப்பனவொன்றை வழங்குவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றினை தயாரித்தல். |
| முதியோர் பராமரிப்பு | பொருளாதாரத்திற்கான நேரடிப் பங்களிப்பொன்றினைச் செலுத்தக் கூடிய ஆரோக்கியமான மற்றும் சுறுசுறுப்பான முதியோர் சமூகத்தை உறுதிப்படுத்தல் | ▪ முதியோர் சமூகத்தின் ஆரோக்கியமான வாழ்க்கையை உறுதி செய்து, உடல் மற்றும் மன நலத்தை மேம்படுத்துவதற்கான ஒரு முழுமையான செயற்பாடுகளின் பொதியை நடைமுறைப்படுத்தல்.<br>▪ உடல் மற்றும் மன நல ஆரோக்கியத்தைப் பேணுவதற்கு வேலையிலிருந்து ஓய்வு பெறுவதற்கு முன்னர் வழிகாட்டுதல்களை வழங்கலும் மற்றும் ஆலோசனை நிகழ்ச்சிகளை நடாத்தலும்.<br>▪ முதியோர் பராமரிப்புக்காக நோய்த்தடுப்பு நிறுவனங்களில் விஷேட முதியோர் வைத்தியசாலைகளை அறிமுகப்படுத்துதல். |
| முதன்மை நிலை பராமரிப்பு | முதன்மை பராமரிப்பு நிறுவனங்களில் தரமான பராமரிப்புப் பொதி வழங்கப்படுவதனை உறுதி செய்தல் | ▪ ,5000 முதல் 10,000 வரையிலான சனத்தொகைக்கு ஒரு குடும்ப மருத்துவர் மற்றும் சுகாதார ஊழியர்களை நியமித்தல்.<br>▪ பயன்விளைவுள்ள மற்றும் தொடர்ச்சியான பராமரிப்பை உறுதிப்படுத்துவதற்காக கொத்தணி சுகாதார நிறுவனங்களை முதன்மை நிலை பராமரிப்பு நிறுவனங்களாகவும் (PMCU) மற்றும் பிரதேச வைத்தியசாலைகள்), இரண்டாம் நிலை பராமரிப்பு நிறுவனங்களாகவும் (அடிப்படை வைத்தியசாலைகள்), (பொது வைத்தியசாலைகள்), மற்றும் மூன்றாம் நிலை பராமரிப்பு நிறுவனங்களாகவும் (மாவட்ட பொது மற்றும் போதனா வைத்தியசாலைகள்) மாற்றுதல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான செயற்பாடுகள் |
|---|---|---|
| | | ▪ குடும்ப மருத்துவ பிரிவுப் பகுதிகளில் சிறப்பியல்பு பெற்ற சுகாதார சேவைகளை (நிபுணத்துவ ஆலோசகர்களின் வருகை உட்பட) வழங்குவதற்கு செயற்கைக்கோள் மருத்துவ நிலையங்களை நடைமுறைப்படுத்தல்.<br>▪ மனம் சார்ந்த, பேச்சு, செவிப்புலன், தொழில் மற்றும் சமூக உடல் மருத்துவ சிகிச்சைக்கான வசதிகளை தேவைக்கேற்ப ஏற்படுத்தல். |
| இரண்டாம் நிலை பராமரிப்பு | இரண்டாம் நிலை பராமரிப்பு நிறுவனங்களில் அங்கீகரிக்கப்பட்ட பராமரிப்புப் பொதிகளின் விநியோகத்தினை உறுதிப்படுத்தல். | ▪ வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் அனைத்து நோயளிகளுக்கும் படுக்கை மற்றும் தேவையான வசதிகள் இருப்பதை உறுதிப்படுத்தல்.<br>▪ வார்டு முகாமைத்துவம் மற்றும் தாதிமார் பராமரிப்புத் திட்டங்களை தொடர்ந்து மேம்படுத்தலும், ஒவ்வொரு வார்டிலும் உள்ள அனைத்து நோயாளிகளுக்கும் தாதிமார் பராமரிப்பினை மேம்படுத்தலும்.<br>▪ ஒவ்வொரு வைத்தியசாலையிலும் நாளாந்த சிகிச்சை (ஒரு நாள் அறுவை சிகிச்சை) நிலையங்களை நிறுவுதல்.<br>▪ சர்வதேச தர நிர்ணய நிறுவனத்தின் தர நிர்ணயங்களுக்கு ஏற்ப அரசாங்க சுகாதார நிறுவனங்களின் அனைத்து ஆய்வகப் பரிசோதனைகள் மற்றும் நடைமுறைகளுக்கு சான்றளித்தல்.<br>▪ தொழில்வல்லுனர்கள் மற்றும் அனைத்து சமூக குழுக்களும் ஈடுபடக் கூடிய வைத்தியசாலை அபிவிருத்திக் குழுக்களை மறுசீரமைத்தல். |
| மூன்றாம் நிலை மற்றும் சிறப்புப் பராமரிப்பு | சிறப்புப் பராமரிப்புச் சேவை அவசியமான அனைத்து நோயாளர்களுக்கும் இச்சேவை கிடைப்பதை உறுதி செய்தல். | ▪ ஒவ்வொரு மாவட்டம் / மாகாணத்திலும் வசதிகளுடன் கூடிய விரிவாக்கப்பட்ட இருதயவியல் பிரிவு, புற்றுநோயியல் பிரிவு, கண் மருத்துவப்பிரிவு, மற்றும் சிறுநீரகப் பிரிவு என்பனவற்றை ஸ்தாபித்தல். |
| நோயாளிகளின் பாதுகாப்பு | சுகாதாரப் பராமரிப்பு ஊழியர்களின் பொறுப்புணர்வை உறுதிப்படுத்தல் | ▪ சுகாதார ஊழியர்களின் பொறுப்புணர்வை உறுதிப்படுத்துவதற்கும் மற்றும் நோயாளிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் நோயாளிகளின் சாசனம் ஒன்றினை அறிமுகம் செய்தல்.<br>▪ “ தடுக்கக்கூடிய மரணங்களை பூச்சியமாக்குதல்” எனும் குறிக்கோளை அடைவதற்கான தரமான சுகாதார சேவைகளை உறுதிப்படுத்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான செயற்பாடுகள் |
|---|---|---|
| | | ▪ நோயாளிகள் மற்றும் பராமரிப்பாளர்களிடமிருந்து வரும் புகார்களை சுயாதீனமாக விசாரணை செய்ய சேவை பின்னூட்டல் பிரிவு ஒன்றினை ஸ்தாபித்தல். |
| அவசர சிகிச்சை | அவசர வைத்திய சிகிச்சையின் தரத்தினை மேம்படுத்தல் | ▪ சுவசரிய உள்ளிட்ட ஆம்பியுலன்ஸ் சேவைகளுக்கான பயிற்சியளிக்கப்பட்ட அவசர மருத்துவ பதிலளிப்புக் குழுக்களை ஈடுபடுத்தல். |
| அத்தியாவசிய மருந்துப் பொருட்களை வழங்கல் | மருந்துப் பொருட்களின் நிரம்பல் சங்கிலியின் தரத்தினை விருத்தி செய்தல். | ▪ மருந்துப் பொருட்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு வினைத்திறனான மருந்துப் பெர்ருட்களின் பரிசோதனை ஆய்வு கூடமொன்றினை ஸ்தாபித்தல்.<br>▪ உள்ளூர் மருத்துவ உற்பத்தியை விரிவாக்குதல்.<br>▪ மருந்துப் பொருட்களின் இறக்குமதி மற்றும் விநியோகத்தின் போது ஊழல் மற்றும் மோசடிகளை ஒழித்தல்.<br>▪ பொது சுகாதார நிறுவனங்களுக்கு அனைத்து அத்தியாவசிய மருந்துப் பொருட்களும் தொடர்ச்சியாக வழங்கப்படுவதனை உறுதிப்படுத்தல்.<br>▪ மருந்துப் பொருட்களின் தரம் மற்றும் நியாயமான விலையை உறுதி செய்தல்.<br>▪ போதிய அளவிலான கையிருப்புகளை பேணுவதன் மூலம் மருந்து பற்றாக்குறையை தடுத்தல்.<br>▪ ஒவ்வொரு நகரத்திலும் அரசுக்குச் சொந்தமான மருந்தகங்களை நிறுவுதல். |
| மனநல சுகாதார பராமரிப்பு | மன நல சிகிச்சைக்கான அணுகலை விருத்தி செய்தல். | ▪ ஒவ்வொரு மாவட்டத்திலும் மன நலக் கோளாறுகளை முன் கூட்டியே கண்டறிவதற்கான ஒரு பொறிமுறையை நிறுவுதல் மற்றும் விஷேட பராமரிப்புக்கான பொறிமுறையொன்றினை உருவாக்குதல்.<br>▪ ஒவ்வொரு சுகாதார மருத்துவப் பிரதேசங்களிலும் ஆரம்ப மனநல ஆலோசனை நிலையங்களை அமைத்தல்.<br>▪ குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினரிடையே மன ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தலும், மற்றும் போதைப்பொருள் துஷ்பிரயோகம் மற்றும் வன்முறையைத் தடுப்பதில் கவனம் செலுத்துதல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான செயற்பாடுகள் |
|---|---|---|
| | | ▪ மன நல குறைபாடுள்ள நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்தல், பின்னூட்டல்களை மேற்கொள்ளல், மற்றும் குடும்ப சிகிச்சைக்கான சமூக அடிப்படையிலான நிகழ்ச்சித்திட்டங்களை மேம்படுத்தல். |
| புனர்வாழ்வு சிகிச்சையும் மற்றும் மன ஆறுதல் சிகிச்சையும் (சஹன சத்கார சேவை ) | சமூக ஈடுபாட்டுடன் புனர்வாழ்வு சேவைகளிலும், மன ஆறுதல் வழங்கக் கூடிய சிகிச்சை முறைகளையும் பலப்படுத்துதல். | ▪ ஒவ்வொரு மாவட்டத்திலும் புனர்வாழ்வு நிலையங்களை உருவாக்குதல்.<br>▪ நோயாளிகளின் சொந்த சூழலில் அல்லது சிறப்பியல்பு பெற்ற நிலையங்களில் சமூகம் சார்ந்த புனர்வாழ்வு சேவைகளை வழங்குதல்.<br>▪ புற்று நோய் மற்றும் பக்க வாதம் உட்பட குணப்படுத்த முடியாத நோய்களால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு வீடு மற்றும் நிறுவன அடிப்படையிலான மன ஆறுதல் சிகிச்சை சேவைகளை வழங்குதல். |
| வாய்வழி சுகாதார சேவைகள் | வாய் வழி ஆரோக்கியத்தை விருத்தி செய்தல். | ▪ விஷேட வாய்வழி சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல். |
| தோட்டத்துறை சுகாதார சேவைகள் | தோட்டத்துறையில் நோய்த்தடுப்பு மற்றும் குணப்படுத்தும் சுகாதார பராமரிப்பு சேவைகளுக்கான அணுகலை அதிகரித்தல். | ▪ பெருந்தோட்ட சமூகங்களிலுள்ள சுகாதார மேம்பாட்டுடன் போஷாக்கு, வாய்வழி ஆரோக்கியம், காச நோய் கட்டுப்பாடு, மற்றும் மது, புகையிலை மற்றும் ஏனைய போதைப் பொருள் பாவனையைத் தடுப்பதை இலக்காகக் கொண்ட விஷேட நிகழ்ச்சித்திட்டங்களை அபிவிருத்தி செய்தல். |
| சுதேச மருத்துவ பராமரிப்பு சேவைகள் | தேசிய மற்றும் சர்வதேச தேவைகளை பூர்த்தி செய்ய பாரம்பரிய மருத்துவ சேவைகளின் கொள்திறனை விருத்தி செய்தல். | ▪ ஆயுர்வேதம், சித்த ஆயுர்வேதம் மற்றும் யூனானி மருத்துவ சிகிச்சைகளை விரிவுபடுத்துவதற்கு ஆயர்வேத மருத்து மனைகளின் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவத்தினை வலுப்படுத்தல்.<br>▪ தடையற்ற மருந்துப் பொருட்களின் உற்பத்தியை உறுதி செய்ய ஆயர்வேத/ யூனானி / சித்த ஆயுர்வேத ஆய்வகங்களை மேம்படுத்தல்.<br>▪ ஆயுர்வேத வைத்தியசாலைகளில் படுக்கைகளின் எண்ணிக்கை உள்ளிட்ட சிகிச்சை கொள்திறனை அதிகரித்தல்.<br>▪ ஆயுர்வேத வைத்தியசாலைகளுடன் இணைக்கப்பட்ட பயிற்சி முறைமையினை விரிவுபடுத்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான செயற்பாடுகள் |
|---|---|---|
| | | ▪ சுதேச மருந்துப் பொருட்களின் உற்பத்திக்கு ஆதரவளிப்பதற்காக பயிர்ச்செய்கை மற்றும் ஆராய்ச்சி என்பனவற்றை ஊக்குவித்தல்.<br>▪ பாரம்பரிய சிகிச்சை முறைமைகள் மற்றும் மருந்துகள் தொடர்பான புதிய ஆராய்ச்சிகளுக்கான அரச ஆதரவை வழங்குதல். |
| இலங்கையில் வைத்திய சுற்றுலா | வைத்திய மற்றும் ஆரோக்கிய சுற்றுலாவிற்குத் தேவையான வசதிகளை விருத்தி செய்தல். | ▪ தேர்ந்தெடுக்கப்பட்ட பொது வைத்தியசாலைகளில் அதி நவீன வசதிகள் மற்றும் நன்கு பயிற்சி பெற்ற (மேற்கத்தேய மற்றும் ஆயுர்வேதம்) மருத்துவ நிபுணர்களுடன் விதிவிலக்கான சுகாதார சேவைகளை வழங்குதல்.<br>▪ ஆயுர்வேத சிகிச்சை உட்பட முழு அளவிலான மருத்துவப் பராமரிப்பு மற்றும் சிகிச்சைகளை வழங்குதல். |
| தனியார் வைத்திய சேவை | தனியார் மருத்துவ சேவையின் தரம் மற்றும் தாங்கு திறனையும் உறுதிப்படுத்தல். | ▪ நோயாளிகளுக்கான உயர் தர சுகாதார பராமரிப்பு சேவைகளை வழங்குவதை உறுதி செய்வதற்காக தனியார் மருத்துவ சேவைகள் உள்ளிட்ட அனைத்து சுகாதார சேவைகளையும் ஒழுங்குமுறைப்படுத்தல். |

## 1.3 வசதியானதொரு வீடு – ஆரோக்கியமானதொரு வாழ்க்கை

**கொள்கை கோட்பாடுகள் –**

- ஒவ்வொரு நபருக்கும் ஆரோக்கியமான ஒரு வீடு
- வினைத்திறன் வாய்ந்த காணி முகாமைத்துவம்
- முழுமையான வீட்டுக் கட்டடத்தொகுதிகள்

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| நகர்ப்புற வீடமைப்பு | நடைமுறையில் காணப்படும் காணிகளை வினைத்திறனான முறையில் பயன்படுத்துவதன் ஊடாக ஆரோக்கியமான வாழ்க்கைக்கான வசதியான வீடுகளின் கிடைப்பனவை உறுதிப்படுத்தல். | ▪ நகர்ப்புறங்களில் தாங்குதிறனுள்ள பல மாடி வீடமைப்புக் கருத்திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கு தனியார் துறையை ஊக்குவித்தலும், மற்றும் இம்முன்னெடுப்புக்களுக்கு பொருத்தமான நிலங்களை வழங்குதல்.<br>▪ நகர்ப்புறங்களில் தாங்கு திறனுள்ள பல் மாடி வீடமைப்புக் கருத்திட்டங்களுக்கு வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களிடமிருந்தான முதலீடுகளை ஊக்குவித்தல்.<br>▪ அரச அலுவலர்களுக்கு அவர்களின் பணியிடங்களுக்கு அருகாமையில் உத்தியோகபூர்வ வதிவிடங்களை வழங்குவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.<br>▪ அரச தலையீட்டின் ஊடாக கொழும்பில் குறைந்த வருமானம் கொண்ட குடியேற்றங்களுக்கான வதிவிடங்களுக்கான தாங்கு திறனுள்ள வீடுகளை வழங்குவதற்கான வசதிகளை அளித்தல்.<br>▪ சுகாதாரப் பராமரிப்பு, கல்வி, விளையாட்டுக்கள், போக்குவரத்து, மற்றும் பூங்காக்கள் போன்ற அத்தியாவசிய வசதிகள் உள்ளடங்கலாக நகர மற்றும் அரை நகர்ப்பகுதிகளில் முழுமையான வீடமைப்புக் கருத்திட்டங்களை அபிவிருத்தி செய்தல். |
| கிராமிய வீடமைப்பு | | ▪ வீடமைப்பு அபிவிருத்திக்கான நிலங்களின் உரிமை தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பது தொடர்பான சட்டங்களை மீள் பார்வை செய்தல்.<br>▪ குடியிருப்புப் பிரதேசங்களுக்கான அணுகல் வீதிகளை விரிவாக்குதல்.<br>▪ வீடமைப்பு வசதிகளுக்கு பொருத்தமான வீடமைப்புக் கடன் திட்டங்களை உருவாக்குதல். |
| தோட்டத்துறை வீடமைப்பு | | ▪ மலையகம் மற்றும் ஏனைய தோட்டத்துறை சமூகத்திற்கான வீடமைப்பு, நீர், மின்சாரம், துப்புரவாக்கல் வசதிகள் என்பனவற்றை மேம்படுத்துவதற்கான நிதி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.<br>▪ நிரந்தர வீடுகளை நிர்மாணிப்பதற்காக மலையக சமூகத்திற்கான காணிகளை ஒதுக்கீடு செய்தல்.<br>▪ தோட்டப் பகுதியை சூழவுள்ள பகுதிகளில் தாங்கு திறனுள்ள கட்டுப்படியான வீடமைப்புத் திட்டங்களை அபிவிருத்தி செய்தல். |
| ,isQu;fSf;fhd tPlikg;G | | ▪ புதிதாக திருமணம் செய்த தம்பதிகளுக்கு வீடுகளை கொள்வனவு செய்வதற்கு அல்லது நிர்மாணிப்பதற்கு நிதி வசதிகளை வழங்குதல |

## 1.4 வலிமையுடன் செயலாற்றும் ஒரு பிரஜை - வெற்றி பெற்ற மக்கள்

**கொள்கை கோட்பாடுகள் –**

- பங்கேற்பு, ஒழுக்கம், தன்னம்பிக்கை, மற்றும் போட்டித்தன்மை
- சர்வதேச மட்டத்தில் தொழில்சார் திறன் மற்றும் விஷேட திறமை
- போதிய அளவிலான உட்கட்டமைப்பு
- சமமான அணுகல்
- சர்வதேச ஒருங்கிணைப்பு
- அரசாங்கம், தனியார் துறை, மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கிடையிலான இணைவாக்கம்

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| விளையாட்டுக் கொள்கை, சட்டவாக்கம், மற்றும் ஒழுங்கான நிர்வாகம் | வெளிப்படைத்தன்மை, மற்றும் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்கு விளையாட்டுக் கொள்கை, சட்டவாக்கம் மற்றும் நிர்வாகம் என்பனவற்றை சீர்திருத்தலும் மற்றும் பலப்படுத்தலும். | ▪ விளையாட்டுச் சட்டத்தைத் திருத்தம் செய்தலும், விளையாட்டுக் குறியீடுகள் மற்றும் சட்டங்களை புதுப்பித்தலும்<br>▪ கொள்கை அபிவிருத்திக்கான தேசிய விளையாட்டு ஆணைக்குழுவொன்றை ஸ்தாபித்தல்.<br>▪ தேசிய விளையாட்டு ஒழுங்குபடுத்தல் அதிகார சபையை ஸ்தாபித்தல்.<br>▪ விளையாட்டு அமைப்புகளில் இடம் பெறும் ஊழல் மற்றும் முறைகேடுகளை விசாரணை செய்தல்.<br>▪ சட்ட விரோத போதைப்பொருள் பயன்பாடு, ஆட்ட நிர்ணயம், மற்றும் ஏனைய முறைகேடுகள் உள்ளிட்ட விளையாட்டுகளில் உள்ள ஊழல் மற்றும் மோசடிகளை ஒழிப்பதற்காக பொறிமுறைகளை உருவாக்குதல்.<br>▪ அரசியல் கட்டுப்பாட்டில் உள்ள விளையாட்டு நிறுவனங்களை சுதந்திர அமைப்புகளாக மாற்றுதல்.<br>▪ இலங்கைக் கிரிக்கெட்டுக்கான யாப்பினை அமுலாக்கத்தை துரிதப்படுத்தல். |
| உட்கட்டமைப்பு அபிவிருத்தி | விளையாட்டு வசதிகள் மற்றும் வளங்களுக்கான சமமான அணுகலை உறுதி செய்தல். | ▪ பொருத்தமான ஒழுங்குமுறைகளை உறுதி செய்வதன் மூலம் நாடு முழுவதும் விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு வசதிகளை ஆதரிக்கவும் மற்றும் மேம்படுத்தவும் ஒரு மூலோபாய முதலீட்டுத் திட்டத்தை தயாரித்தல்..<br>▪ விளையாட்டு வசதிகள் தொடர்பான தேசிய தரவு அடிப்படையொன்றை உருவாக்குதலும் மற்றும் பராமரித்தலும்.<br>▪ அனைத்து பாடசாலைகளுக்கும் சமமான முறையில் விளையாட்டு உபகரணங்களையும் மற்றும் வசதிகளையும் விநியோகம் செய்தல்.<br>▪ ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் விளையாட்டு மைதானமொன்றை நிர்மாணித்தல்.<br>▪ ஒவ்வொரு மாகாணத்திலும் மாற்றுத் திறனாளிகளுக்கான அணுகலுடனான குடியிருப்பு வசதிகள் மற்றும் அணுகலுடனான நவீன விளையாட்டுக் கட்டடத் தொகுதிகளை நிறுவுதல். |
| திறனை இனங்காணல், விருத்தி செய்தல் மற்றும் பயிற்சியளித்தல் | பாடசாலை முதல் தேசிய மட்டம் வரை திறமையான நபர்களுக்கான | ▪ முன்னேற்றத்திற்காக திறமையான சிறுவர்களை இனங்கண்டு ஆதரித்தல்.<br>▪ விதிவிலக்கான திறன்களைக் கொண்ட விளையாட்டு வீரர்களுக்கு பொருளாதார ஆதரவு, போஷாக்கு, மற்றும் பயிற்சிகளை வழங்க பாடசாலை |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | வாய்ப்புக்களை உறுதி செய்தல். | மற்றும் மாவட்ட மட்டங்களில் விஷேட நிகழ்ச்சித்திட்டங்களை அபிவிருத்தி செய்தல்.<br>▪ அனைத்து அரசாங்க பாடசாலைகளுக்கும் விளையாட்டு ஆசிரியர்கள் மற்றும் பயிற்சியாளர்களை வழங்குதல்.<br>▪ அடிமட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரை ஒருங்கிணைந்த விளையாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றினை அபிவிருத்தி செய்தல்.<br>▪ மாற்றுத் திறனுள்ள மாணவர்களுக்கு மாகாண மற்றும் மாவட்ட மட்டங்களில் விளையாட்டுச் செயற்பாடுகளை விரிவாக்குதலும் மற்றும் அவர்களுக்கு விளையாட்டு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தலும். |
| விளையாட்டு ஒரு தொழிலாக | விளையாட்டுக்களை ஒரு தொழில்துறையாக மாற்றுதல், மற்றும் விளையாட்டு வீரர்கள் மற்றும் விளையாட்டுத்துறை அலுவலர்களுக்கு ஆதரவளித்தல். | ▪ நியாயமான சம்பளங்களையும் மற்றும் பயன்பாடுகளையும் உறுதிப்படுத்துவதன் மூலம் பயிற்சியாளர்கள் மற்றும் முகாமைத்துவ ஆளணிக்கான சான்றுப்படுத்தல் மற்றும் அனுமதிப்பத்திரம் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றினை அமுல்படுத்தல்.<br>▪ தேசிய விளையாட்டுக்களின் குழுவில் பதிவு செய்த விளையாட்டு வீரர்கள், அலுவலர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் மற்றம் தொழில்நுட்ப ஊழியர்களுக்கான ஓய்வூதியம் மற்றும் காப்புறுதித் திட்டங்களை அமுல்படுத்தல்.<br>▪ தேசிய விளையாட்டுப் பயிற்சிப் பாடசாலையை மையமாகக் கொண்டு அனைத்து மாகாணங்களிலும் நவீன விளையாட்டு வலையமைப்பொன்றினை ஸ்தாபித்தல்.<br>▪ சர்வதேச மட்ட நிபுணர்களுடன் உடற்கல்விக்கான நிபுணர்களை உருவாக்குவதற்கு பல்கலைக்கழக பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அதிகரித்தல்.<br>▪ விளையாட்டு ஊடக உத்தியோகத்தர்களுக்கான கட்டமைக்கப்பட்ட கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை அபிவிருத்தி செய்தல். |
| சர்வதேச சிறப்பு மற்றும் போட்டித்தன்மை | விளையாட்டுக்களில் தொழில்துறை நிபுணத்துவம் மற்றும் சர்வதேச வெற்றியை அடைதல். | ▪ விளையாட்டு ஆராய்ச்சிக்கான சர்வதேச சிறப்பு நிலையமொன்றினை நிறுவுதல்.<br>▪ சர்வதேச போட்டிகளுக்கு மாற்றுத் திறனுடைய விளையாட்டு வீரர்களுக்கு ஆதரவளித்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | ▪ அறிவுப் பகிர்வு மற்றும் விளையாட்டு முகாமைத்துவத்தில் நிபுணத்துவம் பெற சர்வதேச அமைப்புகளுடன் ஒத்துழைத்தல். |
| விளையாட்டுக்களின் ஊடாக சுகாதாரம் மற்றும் உடல் ஆரோக்கியம் | பொது சுகாதாரத்தில் விளையாட்டுக்களை ஒருங்கிணைத்து உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தல். | ▪ விளையாட்டுக்களை பொது சுகாதார கொள்கைக்குள் ஒருங்கிணைத்தல்.<br>▪ அனைத்து பாடசாலை மாணவர்களும் குறைந்தது ஒரு விளையாட்டிலாவது பங்கேற்பதை உறுதி செய்தல்.<br>▪ 1,000 சமூக உடல்நல நிலையங்களை உருவாக்குதல். |
| விளையாட்டை ஒரு கைத்தொழிலாக அபிவிருத்தி செய்தல் | விளையாட்டுக்களை ஒரு கைத்தொழிலாக அபிவிருத்தி செய்வதற்காக அரச துறைக்கும் மற்றும் தனியார் துறைக்கும் இடையில் ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறையொன்றினை உருவாக்குதல். | ▪ அரச துறைக்கும் தனியார் துறைக்கும் இடையில் ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறையொன்றின் ஊடாக விளையாட்டை ஒரு கைத்தொழிலாக அபிவிருத்தி செய்தல்.<br>▪ விளையாட்டுக்களில் முதலிடுவோருக்கும் மற்றும் உள்ளூர் விளையாட்டு உபகரணங்களின் தயாரிப்பாளர்களுக்கும் விஷேட ஊக்குவிப்புக்களை வழங்குதல்.<br>▪ விளையாட்டுச் சுற்றுலாவை பிரதான பொருளாதாரத் துறையாக அபிவிருத்தி செய்தல் மற்றும் தனியார் துறையின் ஒத்துழைப்புடன் சர்வதேச விளையாட்டு நிகழ்ச்சிகளை நடாத்துவதை ஊக்குவித்தல். |

## 1. 5 வளமானதொரு கலாச்சார வாழ்க்கை - இரக்கமுள்ளதொரு சமூகம்

**கொள்கை கோட்பாடுகள் –**

- ஒவ்வொரு சமூகத்தினதும் கலாச்சார அடையாளத்தை பாதுகாத்து வளர்க்கும் உரிமை
- கலாச்சாரத்தின் அபிவிருத்தியில் தலையிட ஒவ்வொரு சமூகத்திற்கும் மற்றும் தனிமனிதனுக்கும் உள்ள உரிமை
- கலாச்சாரங்களுக்கு இடையில் செறிவூட்டலும் மற்றும் பரிணாமமும்.
- உள்ளூர் மற்றும் உலகளாவிய கலாச்சார அறிவைக் கொண்ட அறிவு சார், ஆன்மீக மற்றும் அழகியல் திறன்களைக் கொண்ட இரக்கமுள்ள தனிநபரின் அபிவிருத்தி
- கலாச்சார பன்முகத்தன்மை, மற்றும் கலாச்சார விமர்சனத்தை ஏற்றுக்கொள்ளல்
- அரசியல் தலையீடு இல்லாத கலாச்சார உற்பத்திப் பொருட்கள்
- கலாச்சார ரீதியாக செறிவூட்டப்பட்ட சமூகமொன்றினை வளர்ப்பதில் அரச ஆதரவு

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| பன்முகப்படுத்தப்பட்ட கலாச்சாரம் | கலாச்சாரத்துக்கு உகந்த சுற்றுச் சூழலொன்றை உருவாக்குவதன் ஊடாக கலாச்சார ரீதியாக செறிவூட்டப்பட்ட சமூகமொன்றினை உறுதி செய்தல். | ▪ பரந்த மற்றும் சக்தி வாய்ந்த களமொன்றாக கலாச்சாரத்தை முன்னிலைப்படுத்தும் கல்விக் கொள்கையை அமுல்படுத்தல்.<br>▪ தேசிய மற்றும் உலக இலக்கியம், கேட்பொலி காட்சிகள், நாடகம், நடனம், காட்சிக் கலைகள், சிற்பம், புகைப்படம் எடுத்தல், மற்றும் பாடல் இலக்கியம் ஆகியவற்றை உள்ளடக்கிய பாடசாலை பாடவிதானங்களை நவீன தர நிர்ணயங்களுக்கு ஏற்ப தரமுயர்த்துதல்.<br>▪ கல்வி முறை என்பது பண்பாட்டு விழிப்புணர்வு சமூகமொன்றை கட்டியெழுப்புதல் என்பதை அடித்தளமாகக் கருதி ஒரு ஒழுங்கான கல்வி முறையொன்றிற்கு கலை மற்றும் கலாச்சாரப் பாடங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் இப்பாடங்களை ஆசிரியர்களுக்கு மிகவும் கவர்ச்சிகரமானதாகவும், மற்றும் மாணவர்களை அறிவார்ந்த முறையில் தூண்டக் கூடியதாகவும் மாற்றுவதற்கான முறையான பயிற்சிகளை வழங்குதல்.<br>▪ அரச மற்றும் தனியார் துறையின் தொடர்ச்சியான பங்களிப்புடன் இலக்கியம், சினிமா, நாடகம், மற்றும் ஏனைய கலைகளுக்கான ஒரு தேசிய நிதியத்தை ஸ்தாபித்தல்.<br>▪ ஊடகம் மற்றும் சமூக வலையமைப்புக்களை பயன்படுத்துவதன் மூலம் கலைகளை ரசிப்பதை ஊக்குவித்தலும் மற்றும் 21 ஆம் நூற்றாண்டில கலாச்சார ரீதியாக செறிவூட்டப்பட்ட சமூகமொன்றினை உருவாக்குதல்.<br>▪ இளைஞர்கள் கலாச்சாரத்துடன் நெருங்கும் வகையில் ஆக்கபூர்மான நடவடிக்கைகளை வடிவமைப்பதன் மூலமும் மற்றும் நடைமுறைப்படுத்துவதன் மூலமும் புதிய கலாச்சார பிரஜையை உருவாக்குதல்.<br>▪ தகுதியுடைய நபர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்குதலும் மற்றும் அனைத்துக் கலைத்துறைகளிலும் புதிய அறிவையும் மற்றும் பயிற்சியையும் பெற சர்வதேச நிறுவனங்களுக்கு அவர்களை அனுப்பி வைத்தலும்.<br>▪ அனைத்து பிரதான நகரங்களிலும் கலை மற்றும் கலாச்சார நிறுவனங்களுடனான கலாச்சார வலயங்களை நிறுவுதலும் மற்றும் தொடர்ந்து இந்த வலயங்களுக்கு பிரஜைகளை தொடர்ச்சியாக ஈர்க்கும் நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | ▪ கலைஞர்களின் படைப்பாற்றல்களின் உரிமைகள் உள்ளிட்ட புலமைச்சொத்துக்கள் தொடர்பான உரிமைகளைப் பாதுகாக்க உலக புலமைச் சொத்துக்கள் நிறுவனத்துக்கு இணங்க உறுதியான ஒரு புலமைச்சொத்துச் சட்டத்தினை அமுல்படுத்தல்.<br>▪ உலக இலக்கியம், மற்றும் நாடக எழுத்துப்படி என்பனவற்றை தேசிய மொழிகளில் மொழி பெயர்ப்பதை ஊக்குவித்தலும், மற்றும் சர்வதேச மொழி பெயர்ப்பு உரிமைகளை முறையாகப் பெறுதலும்.<br>▪ கலைக்கான தற்போதைய அரச விருது வழங்கும் விழாக்களிலுள்ள பலவீனங்களை மீளாய்வு செய்தலும், மற்றும் அனைத்துக் கலைத் துறைகளையும் உள்ளடக்கிய முழுமையான தேசிய விருது விழாவொன்றை ஏற்பாடு செய்தல்.<br>▪ கடதாசி போன்ற தெரிவு செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் உபகரணங்கள் மீது பல்வேறு கலைத்துறைகளுக்கும் வரி விடுதலைகளை வழங்குதல்.<br>▪ கலைத்தொழிலிலிருந்து ஓய்வு பெற்றோரின் நல்வாழ்வுக்காக சமூக பாதுகாப்பு முறைமை ஒன்றை உருவாக்குதல்.<br>▪ கலை, கலாச்சார துறைகள் தொடர்பான மாநாட்டு மண்டபங்கள், திரையரங்குகள், திறந்த வெளி அரங்குகள், மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் போன்ற பௌதீக வளங்களை கிடைக்கச் செய்வதற்கான தரவுத் தளத்தையும் மற்றும் முழுமையான ஒரு திட்டத்தையும் உருவாக்குதல்.<br>▪ பிரதேச செயலக மட்டத்தில் உள்ள கலாச்சார நிலையங்களை, மேடைகள், பயிற்சி, ஒளியமைப்பு, மற்றும் ஒலி ஆகிய வசதிகளுடன் கூடிய பல் செயற்பாட்டு கலாச்சார மையங்களாக மாற்றுதல் மற்றும் இம்மையங்களை மையமாகக் கொண்டு புத்தக வாசிப்பு, செயலமர்வுகள், கலந்துரையாடல்கள், மற்றும் கண்காட்சிகள் போன்ற கலாச்சார அனுபவங்களை ஏற்பாடு செய்தல். |
| இலக்கியம் | பாரம்பரிய மற்றும் நவீன கற்கை முறைமைகளை பயன்படுத்தி சமூகத்தில் இலக்கியத்தில் | ▪ தேசிய மட்டத்தில் பாராட்டப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட விமர்சன ரீதியாக வரவேற்களிக்கப்பட்ட வெளியீடுகளை பாடசாலைகள் மற்றும் பொது நூலகங்களுக்கு விநியோகித்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | எழுத்தறிவு மட்டத்தை வலுப்படுத்தல். | ▪ சுறுசுறுப்பான வாசிப்பு சமூகமொன்றினை வள்ர்ப்பதற்காக அனைத்து நகரங்களிலும் மற்றும் புற நகர் பகுதிகளிலும் நன்கு அபிவிருத்தியடைந்த நூலகங்களை நிறுவுதல்.<br>▪ இலக்கிய விமர்சனம் மற்றும் பாராட்டுக்களுக்கொன ஒதுக்கப்பட்ட இலக்கிய இதழ் கலாச்சாரத்தை மீண்டும் ஆரம்பித்தல்.<br>▪ தேசிய மற்றும் பிராந்திய புத்தகக் கண்காட்சிகளை ஏற்பாடு செய்வும் மற்றும் முக்கியமான சர்வதேச புத்தகக் கண்காட்சியில் பங்கேற்கவும் எழுத்தாளர்கள் மற்றும் வெளியீட்டாளர்களை ஊக்குவித்தல்.<br>▪ பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான இலக்கிய பாராட்டு செயலமர்வுகளை ஏற்பாடு செய்வதன் மூலம் புதிய தலைமுறை வாசகர்களை அதிகரித்தல்.<br>▪ உலகின் சிறந்த இலக்கியங்களை சிங்களம் மற்றும் தமிழில் மொழி பெயர்ப்பதை ஊக்குவித்தலும் மற்றும் அத்தகைய மொழி பெயர்ப்புகளில் ஈடுபடுபவர்களுக்கு ஆதரவளித்தல்.<br>▪ சமீப கால தொழில்நுட்ப முன்னேற்றங்களை வழங்குவதன் மூலம் தேசிய ஆவணக்காப்பகங்களை நவீனமயமாக்குதலும், மற்றும் மறுசீரமைத்தலும்.<br>▪ கல்வி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களுடன் இணைக்கப்பட்ட இ- வெளியீடுகள் மற்றும் டிஜிடல் நூலகங்களுக்கான டிஜிடல் அறிவுக் களஞ்சியங்களின் முகாமைத்துவத்திற்கு ஆதரவளித்தல். இலக்கியக் கலைத்துறைக்கான ஆராய்ச்சி நிதியமொன்றினை நிறுவுதலும் மற்றும் ஆராய்ச்சிக்கான வளங்களை முறையாக வழங்கலும் மற்றும் ஆராய்ச்சி மற்றும் வருடாந்த சர்வதேச ஆராய்ச்சித் அமர்வுகளை ஏற்பாடு செய்வதற்கான வளங்களை முறையாக வழங்குதலும். |
| திரைப்படங்களும் மற்றும் தொலைக்காட்சி நாடகங்களும் | வினைத்திறனான மற்றும் பயனுறு விளைவுள்ள வளங்களின் ஒதுக்கீடு மற்றும் பொருத்தமான கட்டமைப்பு அளவீடுகளின் ஊடாக | ▪ தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தை மறுசீரமைத்தலும் மற்றும் தேசிய திரைப்பட நிறுவனமொன்றினை ஸ்தாபித்தலும்.<br>▪ ஒழுங்கமைக்கப்பட்ட திட்டமொன்றுடன் திரையரங்குகளை நவீனமயப்படுத்தல் மற்றும் ஒவ்வொரு மாவட்டத்திலும் மூன்று திரையரங்குகளை ஏற்படுத்துதல்.<br>▪ திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நாடக தயாரிப்புக்கான கடன்கள் மற்றும் ஏனைய உதவிகளை தரப்படுத்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நாடகங்களின் அபிவிருத்தியை உறுதி செய்தல். | ▪ ஒரு முறையான வகைப்படுத்தலைப் பின்பற்றுவதன் மூலம் ஒவ்வொரு சினிமாப் பணியையும் நியாயமான மற்றும் ஒழுங்குபடுத்தப்பட்ட விநியோகத்தினை உறுதிப்படுத்தல்.<br>▪ உள்ளடக்கத்தை தரப்படுத்துவதற்கு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பணிகளுக்கான வகையீட்டுச் சபையொன்றினை ஸ்தாபித்தல்.<br>▪ வருடாந்த சர்வதேச திரைப்பட விழாவொன்றை நடாத்தலும் மற்றும் சர்வதேச விழாக்களுக்கான சமர்ப்பிப்புக்களை ஆதரித்தலும்.<br>▪ பல்நோக்கு கலாச்சார நிலையங்களைப் பயன்படுத்துவதன் மூலம் சிறந்த திரைப்படங்களை திரையிடலும் மற்றும் இத்திரையிடல்களை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தலும்.<br>▪ வளர்ந்து வரும் திரைப்பட தயாரிப்பாளர்களுக்கான தேசிய திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி கற்கை நிறுவனம் ஒன்றினை ஸ்தாபித்தலும், மற்றும் தேசிய திரைப்பட காப்பகமொன்றினை உருவாக்குதலும்.<br>▪ நடைமுறையிலுள்ள தனியார் திரைப்பட காப்பகங்களை தேசிய காப்பக வலையமைப்பிற்குள் மறுசீரமைத்து ஒருங்கிணைக்க வசதியளித்தல்.<br>▪ பாடசாலை மட்டத்தில் திரைப்பட மற்றும் தொலைக்காட்சிச் சமூகங்களை தொடங்குதல்.<br>▪ சர்வதேச தர நிர்ணயங்களுக்கு ஏற்ப திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிகளுடன் தொடர்புடைய புலமைச் சொத்துச் சட்டங்களை புதுப்பித்தல்.<br>▪ வருடாந்த குறுந்திரைப்படங்களையும் மற்றும் கைத்தொலைபேசி திரைப்பட விழாக்களையும் ஏற்பாடு செய்தலும், மற்றும் சர்வதேச விழாக்களிலிருந்து அறிவையும் மற்றும் அனுபவத்தையும் பெற்றுக் கொள்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதலும். |
| அரங்கம் | பொருத்தமான மறுசீரமைப்புக்கள் மற்றும் கட்டமைப்பு நடவடிக்கைகளின் ஊடாக கலாச்சார | ▪ சமகால அரங்கக் கலைகளின் ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான தேசிய நிறுவனமொன்றினை நிறுவுதல்.<br>▪ பழைய மற்றும் புதிய அரங்கத் தயாரிப்புகளுடன் தொடர்புடைய எழுத்துப் பிரதி, நாடக அரங்கப் பொருட்கள், நினைவில் வைக்கத்தக்கவைகள் மற்றும் பதிவுகளை முறையாகச் சேகரிக்கவும் மற்றும் பாதுகாக்கவும் தேசிய அரசங்கக் காப்பகம் ஒன்றினை பராமரித்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | பன்முகப்படுத்தலை உறுதிப்படுத்தல். | ▪ அரங்க தயாரிப்புகள் மற்றும் கண்காட்சிகளுக்கான நன்கொடைகள், மற்றும் வரி நிவாரணங்களை ஏற்பாடு செய்தல்.<br>▪ பல்நோக்கு கலாச்சார நிலையங்களின் வலையமைப்பொன்றின் ஊடாக அரங்குகளை அடிமட்ட நிலையிலிருந்து தேசிய மட்டத்துக்கு மேம்படுத்துவதற்கு கட்டமைக்கப்பட்ட திட்டமொன்றினை உருவாக்குதல்.<br>▪ ஒவ்வொரு பிரதான நகரத்திலும் பூரண வசதிகளுடனான நவீன அரங்குகளை நிர்மாணித்தலும் மற்றும் இவ்வலையமைப்பின் ஒரு பகுதியாக ஏற்கனவே உள்ள அரங்குகளை தரமுயர்த்தலும்.<br>▪ அரங்கக் கலைகள் தொடர்பான சர்வதேச புலமைப்பரிசில்களை ஊக்குவித்தலும், மற்றும் அவற்றின் விநியோகத்தை பிராந்திய மற்றும் தேசிய மட்டங்களில் ஏற்பாடு செய்தல்.<br>▪ அரங்குகளின் மதிப்பை அதிகரிக்கவும், மற்றும் திறந்த வெளி அரங்குகளின் எண்ணக்கருவை மேம்படுத்தவும் நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குதல்.<br>▪ மாற்று அரங்க இடங்களுக்கான வசதிகளை வழங்குதல். |
| நடனம் | நடனத்தின் பாதுகாப்பையும், மற்றும் தரத்தையும் உறுதிப்படுத்தல். | ▪ நடனக் கலை தொடர்பான சீர்திருத்தங்களை மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களில் நடனத்தில் ஈடுபடும் நிறுவனங்கள், பாரம்பரிய நடனப் பாடசாலைகள், ஆசிரியர்கள், மற்றும் நடனக் கலை நிபுணர்களை ஒருங்கிணைத்தல்.<br>▪ நடனத்தைப் பாதுகாத்தல், மற்றும் ஊக்குவித்தல், மற்றும் பல்நோக்குக் கலாச்சார நிலையங்களுடன் ஒருங்கிணைப்பதற்கான பிரத்தியேகமான ஒரு தேசிய நிறுவனத்தை ஸ்தாபித்தல்.<br>▪ இலங்கையின் நாட்டுப்புற நடனங்கள் பற்றிய ஆராய்ச்சியையும், மற்றும் சர்வதேச ஆய்வுகளை நோக்கிய நேரடி ஆய்வுகளை ஊக்குவித்தல்.<br>▪ பாரம்பரிய நடன வடிவங்களை ஊக்குவித்தல்.<br>▪ பதிவு செய்த நடன நிறுவனங்களின் வலையமைப்பொன்றை உருவாக்குதல்.<br>▪ நடனம் தொடர்பான சர்வதேச கற்கை வாய்ப்புக்களுக்கு வசதியளித்தலும், புலமைப்பரிசில்களை ஏற்பாடு செய்தலும். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | ▪ கிராமிய மட்டத்திலிருந்து சர்வதேச அரங்கிற்கு திறமை வாய்ந்த நடனக் கலைஞர்களை இனங்கண்டு ஊக்குவித்தல்.<br>▪ நடனம் தொடர்பான மும்மொழி கல்வி நூல்களை அச்சிடுதல் மற்றும், சர்வதேச அறிவை ஊக்குவித்தலும்.<br>▪ சம கால மற்றும் பாரம்பரிய நடன வடிவங்களை கற்றல், ஆய்வு செய்தல் மற்றும் பாதுகாத்தல் போன்றவற்றிற்கான வசதிகளை வழங்குதல். |
| காட்சிக் கலை, சிற்பம் மற்றும் புகைப்படம் எடுத்தல். | இசை மற்றும் பாடல் தொழிலை ஒழுங்குமுறைப்படுத்தலை உறுதிப்படுத்தல். | ▪ காட்சிக்கலை, மற்றும் புகைப்படம் எடுத்தல் தொடர்பாக பாதுகாத்தல், மேலதிக ஆய்வு மற்றும் கடந்த கால மற்றும் தற்போதைய தேசிய மற்றும் சர்வதேச ஆய்வுகளை மேற்கொள்வதனை கண்காணிப்பதற்கான தேசிய நிறுவனமொன்றினை ஸ்தாபித்தல்<br>▪ சர்வதேச மாநாடுகள் மற்றும் கண்காட்சிகளில் கலைஞர்கள் பங்கேற்பதற்கான வசதியளித்தல்,<br>▪ பிராந்திய பயிற்சி நிலையங்களை உருவாக்குதலும் மற்றும் அவ்விடைவெளியை தொழில் முறை உத்தியோக வாய்ப்புகளை நோக்கிய வழிகாட்டுதல்.<br>▪ காட்சிக் கலைக்கான தேசிய மற்றும் சர்வதேச சந்தைகளை ஊக்குவித்தலும் மற்றும் அவற்றை சுற்றுலாக் கைத்தொழிலுடன் ஒன்றிணைத்தலும்.<br>▪ பாடசாலை மட்டத்திலிருந்து கலைச் சமூகங்களை உருவாக்குதலும், மற்றும் போட்டிகளை ஏற்பாடு செய்தலும். |
| இசையும், பாடலும் | இசை மற்றும் பாடல் தொழிலை ஒழுங்குமுறைப்படுத்தலை உறுதிப்படுத்தல். | ▪ இசைப் பாரம்பரியங்களை பாதுகாத்தல் மற்றும் ஊக்குவிப்பதற்கான தேசிய நிறுவனமொன்றினை நிறுவுதல்.<br>▪ இலங்கையின் கிராமப்புற பாடல்கள் தொடர்பான ஆராய்ச்சிகளை ஊக்குவித்தலும், பாதுகாத்தலும்.<br>▪ பாதுகாக்கப்பட்ட அறிவின் முறையான ஆய்வு மற்றும் ஆராய்ச்சிக்கான வாய்ப்புக்களை வழங்குதல்.<br>▪ பதிவு செய்த இசை நிறுவனங்களுக்கு வலையமைப்பு ஒன்றை உருவாக்குதல்.<br>▪ இசை மற்றும் பாடல் இயற்றல் தொடர்பான புலமைச் சொத்துச் சட்டங்களை மீளாய்வு செய்தலும், மற்றும் புதுப்பித்தலும். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | ▪ இசையில் சர்வதேச ஆய்வு மற்றும் ஆராய்ச்சி வாய்ப்புக்களுக்கு வசதியளித்தலும் மற்றும் புலமைப்பரிசில்களை ஏற்பாடு செய்தலும்.<br>▪ பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு பாடல்களினதும், மற்றும் இசை உருவாக்கத்தினதும் மூலப் பிரதிகளைப் பாதுகாப்பதற்கான டிஜிடல் அலகு ஒன்றினை பராமரித்தல்.<br>▪ இசைத் துறையில் கூட்டு முகாமைத்துவ நிறுவனங்களில் அங்கத்துவத்தைப் பெறுவதன் மூலம் எழுத்தாளர்களினதும் மற்றும் இசையமைப்பாளர்களினதும் புலமைச் சொத்து உரிமைகளைப் பாதுகாத்தல் |
| தொட்டுணர முடியாத அருவ கலாச்சாரப் பாரம்பரியங்கள் மற்றும் பாரம்பரிய கலைகள | எதிர்காலச் சந்ததிகளுக்காக கலாச்சாரப் பாரம்பரியங்களை பாதுகாத்தல், பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவத்திற்கான நடவடிக்கைகளை உறுதிப்படுத்துல். | ▪ தொட்டுணர முடியாத மரபு மற்றும் பாரம்பரிய கலைகளுக்கான தேசிய ஆராய்ச்சி நிறுவனமொன்றை ஸ்தாபித்தலும் மற்றும் நடைமுறையிலுள்ள மரபுகளை இனங்காணலும், பாதுகாத்தலும்.<br>▪ பிராந்திய அறிவு, கருவிகள், குருகுலம், மரபுகள், மற்றும் மனித வளங்களை பிராந்திய மட்டத்திலிருந்து தேசிய மட்டத்துக்கும், மற்றும் சர்வதேச மட்டத்துக்கும் தொடர்ச்சியாக மறுசீரமைத்தலும், மற்றும் மேம்படுத்தலும்.<br>▪ கலாச்சாரப் பாரம்பரியங்கள் சுற்றுலாக் கைத்தொழிலின் முக்கிய ஒரு பகுதியாக மாறியுள்ளதை உறுதிப்படுத்துவதற்கு இத்துறையுடன் சுற்றுலாத் துறையை ஒருங்கிணைப்பதற்கு நிகழ்ச்சித்திட்டங்களை அபிவிருத்தி செய்தல்.<br>▪ பாரம்பரிய மருத்துவம், சுற்றுச்சூழலுக்கு உகந்த உற்பத்திப் பொருட்கள், பொழுதுபோக்குக் கைத்தொழில்கள், மற்றும் மன நல ஊக்குவிப்புக்கள் போன்ற தொட்டுணர முடியாத பாரம்பரியங்களுடன் தொடர்புடைய துணைத் துறைகளை ஊக்குவித்தல்.<br>▪ இத்துறையுடன் தொடர்புடைய சர்வதேச பல்கலைக்கழகங்கள், மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுடனான தொடர்புகளை வளர்த்தலும், மற்றும் பட்டப்பின் படிப்புக்களுக்கு வசதியளித்தலும்.<br>▪ பாரம்பரிய கலைஞர்கள், குருகுலங்கள், மற்றும் கைவினை நிறுவனங்களை அவற்றின் தொடர்ச்சியான தொடர்புத் தன்மையையும், மற்றும் உயிர்ச்சக்தியையும் உறுதி செய்வதற்கு அவற்றை இனங்கண்டு வலையமைப்புக்களை உருவாக்கலும் மற்றும் புதுப்பித்தலும். . |

## 1.6 பாதுகாக்கப்பட்டதொரு வரலாறு – பாரம்பரியம் முழுதும் புதுமையை புகுத்துதல்

**கொள்கை கோட்பாடுகள் –**

- ■ கலாச்சார வளங்களை பாதுகாத்தல்
- ■ கலாச்சார மரபுரிமைகள் மற்றும் வரலாற்றின் மதிப்பு
- ■ சமூக புத்தாக்கம்

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| கலாச்சாரத்தின் நிலைபேறான தன்மை, மரபுரிமை மற்றும் வரலாறு | ஆராய்ச்சி, பங்கேற்பு மற்றும் கல்வி என்பவற்றின் ஊடாக கலாச்சாரத்தின் நிலைபேறான தன்மை, மரபுரிமை மற்றும் வரலாறு என்பனவற்றை உறுதிப்படுத்தல். | • சமூக மற்றும் பொருளாதாரத் துறைகளின் வரலாறு, கலாச்சாரம், மற்றும் பாரம்பரியத்தின் தாக்கம் தொடர்பான ஆராய்ச்சி.<br>• வரலாறு, கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை தேசிய அபிவிருத்தி திட்டங்களுக்கு ஒருங்கிணைக்கப்பட்ட வெற்றிகரமான சர்வதேச நடைமுறைகளின் பகுப்பாய்வு.<br>• சமூக புத்தாக்கம். தொழில்முயற்சி, வேலை உருவாக்கம், கல்வி மற்றும் சர்வதேச உறவுகள் ஆகியவற்றிற்கான தேசிய பாரம்பரிய விழுமியங்களில் முதலீடு செய்வதன் பெறுமதியை மதிப்பீடு செய்தல்.<br>• வரலாறு, கலாச்சாரம் மற்றும் பாரம்பரியம் ஆகிய துறைகளில் அரசாங்க நிறுவனங்கள், தனியார் துறை, கல்விச் சமூகம், மற்றும் உள்ளூர் மக்களிடையே ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு செயலமர்வுகளையும் மற்றும் மாநாடுகளையும் ஏற்பாடு செய்தல்.<br>• கலாச்சார வளங்களை பாதுகாத்தலிலும் மற்றும் நிர்வகிப்பதிலும் பங்குதாரர்கள் அவர்களின் தற்போதைய வகிபாகங்களுக்கு அப்பால் கலாச்சார பாரம்பரியம் மற்றும் வரலாற்று விழுமியங்கள் பற்றிய புரிந்து கொள்ளலை மேம்படுத்தல்.<br>• வரலாறு, கலாச்சாரம், மற்றும் பாரம்பரியம் தொடர்பான விழுமியங்கள் பற்றிய பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதற்கு கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தலும் மற்றும் அறிவுறுத்தல் பொருட்களை விநியோகித்தலும்<br>• வரலாறு, கலாச்சாரம், மற்றும் பாரம்பரியம் தொடர்பான தலைப்புகளை பாடசாலை பாட விதானம். மற்றும் சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்ட கல்வி நிகழ்ச்சித்திட்டங்களிலும் இணைத்தல். |

## 1.7 நிலைபேறானதொரு உயிரியல் உலகம் - பசுமையானதொரு வாழ்க்கை

**கொள்கை கோட்பாடுகள் –**

- ■ சுற்றுச்சூழல் நீதி மற்றும் நியாயாம்
- ■சுற்றுச்சூழலுக்கும் அபிவிருத்திக்கும் இடையிலான சமனிலை
- ■வளங்களின் நிலைபேறான பயன்பாடும் மற்றும் முன்னெச்சரிக்கை அணுகுமுறை
- ■ சுற்றுச்சூழல் அமைப்பு அணுகுமுறை
- ■ நிறுவன ரீதியான ஒருங்கிணைப்பும் மற்றும் பொது மக்களின் பங்கேற்பும்
- ■ மாசுபடுத்துபவர் செலுத்தல் கோட்பாடு
- ■ சுற்றுச்சூழல் நல்லாட்சி
- ■ சமூக வலுவூட்டல்
- ■ சுற்றுச்சூழல் பாதுகாப்பு
- ■ தூய்மையான உற்பத்தி

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| பொருத்தமான காணிப்பயன்பாடு | வளங்களை வினைத்திறனான முறையில் பயன்படுத்துவதன் ஊடாக நிலைபேறான மற்றும் சீரான காணிப்பயன்பாட்டு நடைமுறைகளை ஊக்குவித்தல். | • சூழலியல் ரீதியாக உணர்திறன் வாய்ந்த பகுதிகளை அடையாளப்படுத்தலும் பாதுகாத்தலும்.<br>• இயற்கை அனர்த்தங்களுக்கு உள்ளாகும் பகுதிகளை இனங்காணல், முகாமை செய்தல் மற்றும் இடரைக் குறைத்தல்.<br>• விவசாயம், கைத்தொழில், மற்றும் குடியிருப்புப் பயன்பாடுகளில் விஞ்ஞான ரீதியாக அபிவிருத்தி செய்யப்பட்ட நிலைபேறான காணிப்பயன்பாட்டுத் திட்டங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.<br>• நிலைபேறான பொருளாதார செயற்பாடுகளுக்கான கனிய வளங்களைக் கொண்ட பகுதிகளை பாதுகாத்தல்.<br>• மண் பாதுகாப்பு தொடர்பான தற்போது நடைமுறையில் உள்ள வழிகாட்டல்களை நடைமுறைப்படுத்தலும், மற்றும் புதிய பரிந்துரைகளை அபிவிருத்தி செய்தலும். |
| கடல் மற்றும் கரையோர வலயங்களின் நிலைபேறான தன்மை | ஒன்றிணைக்கப்பட்ட முகாமைத்துவம் மற்றும் கொள்கைகளின் ஊடாக கடல் மற்றும் கரையோர சுற்றுச்சூழல் அமைப்புகளின் நிலைபேறான தன்மையை பாதுகாத்து மேம்படுத்தல். | • கடல் மற்றும் கரையோர சுற்றுச்சூழலில் நேரடியாகவும் மறைமுகமாகவும் அகற்றப்பட்ட மாசுகளை பூரணமாக நீக்குதல்.<br>• கரையோர வலயங்களில் உணர்திறன் வாய்ந்த சுற்றுச்சூழல் முறைமைகளை இனங்காணலும் மற்றும் பாதுகாத்தலும் மற்றும் நீர் தொடர்பான தர நிர்ணய அளவீடுகளை பராமரிப்பதனை உறுதி செய்தல்.<br>• கடற்கரையோரங்கள் மற்றும் களப்பு பாதுகாப்பு வலயங்களை விஞ்ஞான ரீதியாக தீர்மானித்தலும் மற்றும் பாதுகாத்தலும்.<br>• தற்செயலான கடல் சுற்றுச்சூழல் சேதங்களைக் குறைப்பதற்காக நிறுவன ரீதியான தலைமைத்துவம் மற்றும் சமூக ஈடுபாடு என்பவற்றுடன் அவசரகால தயார்நிலை திட்டங்களை தயாரித்தல்.<br>• கடல் மாசடைதலினால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புக்களை மதிப்பிடுவதற்கும் மற்றும் இழப்பீடுகளை வழங்குவதற்குமான சட்டக் கட்டமைப்புக்களையும் மற்றும் நடைமுறைகளையும் அபிவிருத்தி செய்தல்.<br>• மீன் உள்ளடங்கலாக கடல் வளங்களின் நிலைபேறான பயன்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு சர்வதேச சம்மேளனங்கள் மற்றும் பொருத்தனைகளுக்கு ஏற்ப சட்டங்களை அமுலாக்கலும் மற்றும் கடல் நீரை பாதுகாத்தலும். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | • கடலோரப் பகுதிகள் மற்றும் கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலாத் தளங்களை நன்கு அபிவிருத்தியடைந்த அழகிய சுற்றுச்சூழல் மண்டலங்களாக அபிவிருத்தி செய்தல்.<br>• கடல் வாழ்க்கை இயற்கையாகவே கைவிடப்பட்ட பகுதிகளை இனங்காணலும் மற்றம் பாதுகாத்தலும் மற்றும் நீரின் தர நிர்ணய பரிமாணங்களை பேணுவதை உறுதிப்படுத்தலும். |
| சுத்தமான காற்றின் இருப்பு | நிலைபேறான தழுவல் மற்றும் தணிப்பு நடைமுறைகளின் ஊடாக அனைவருக்கும் சுத்தமானதும் மற்றும் ஆரோக்கியமானதுமான காற்றின் கிடைப்பனவை உறுதி செய்தல். | • வளிமண்டல சமநிலையை பேணுவதற்கு பொருத்தமான மற்றும் விரைவாக வளரக் கூடிய மர வகைகளை அறிமுகம் செய்தல்.<br>• காபன் சுரப்புக்கு பங்களிப்புச் செய்வதற்காக மரங்களை நடுதல், நுகர்தல், மற்றும் மீள் நடுகை செய்தல்.<br>• காற்று மாசுபடலை குறைப்பதற்கு கைத்தொழில் மற்றும் போக்குவரத்துத் துறைகளில் மாற்று எரிசக்தி மூலங்களை ஊக்குவித்தலும் ஒழுங்குமுறைப்படுத்தலும்.<br>• எல்லை தாண்டிய காற்று மாசுபடலைத் தவிர்க்க அல்லது தணிக்க இராஜ தந்திர தலையீடு.<br>• காற்று மாசுபடலைக் குறைப்பதற்கு பொது மக்களின் விழிப்புணர்வையும் மற்றும் அறிவையும் அதிகரிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களையும் அறிமுகப்படுத்தல். |
| சுற்றுச்சூழல் மரபுகள், மற்றும் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கான சட்ட மற்றும் நெறி முறை கட்டமைப்பு | தற்போதுள்ள சுற்றுச்சூழல் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் மற்றும் சர்வதேச சுற்றுச்சூழல் சம்மேளனங்களை செயற்படுத்தும் வலுவான சட்ட மற்றும் நெறிமுறை கட்டமைப்பை வலுப்படுத்தல். | • சர்வதேச உடன்படிக்கைகள் மற்றும் உள்ளூர் சுற்றுச்சூழல் சட்டங்களுக்கு ஏற்ப, சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்காக நடைமுறையிலுள்ள சுற்றுச்சூழல் ஒழுங்குவிதிகளில் உள்ள பலவீனங்கள், குறைபாடுகள், மற்றும் இடைவெளிகளை மீளாய்வு செய்து நிவர்த்தி செய்தல்.<br>• அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கான சாத்திய வள ஆய்வுகளை நடாத்துவதில் பொது மக்களின் ஆலோசனை கட்டாயமாக்கப்படல்.<br>• கருத்திட்டங்களுக்கான சுற்றுச்சூழல் மதிப்பீட்டு அறிக்கைகளை வழங்கும் செயன்முறையில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யும் சுற்றுச்சூழல் மதிப்பீடுகளுக்கான அளவுகோள்களைப் புதுப்பித்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | • மூலோபாய சுற்றுச்சூழல் மதிப்பீடுகளை (SEAs) நடைமுறைப்படுத்தல்..<br>• சுற்றுச்சூழல் கொள்கைகள் மற்றும் சுற்றுச்சூழல் சட்டங்கள் பற்றிய பொது மக்களின் விழிப்புணர்வை அதிகரித்தல். |
| பல்வேறு சுற்றுச் சூழல் முறைமைகளின் பாதுகாப்பு | ஒருங்கிணைக்கப்பட்ட பாதுகாப்பு மூலோபாயங்கள், நிலைபேறான வள முகாமைத்துவம், மற்றும் சமுதாய ஈடுபாடு ஆகியவற்றின் ஊடாக பல்வேறு சுற்றுச்சூழல் முறைமைகளை பாதுகாத்தலும், மற்றும் மீட்டெடுத்தலும். | **மலைப்பாங்கான பகுதிகள்**<br>• கடுமையான கட்டுப்பாட்டுடன் மலை முகடுகள் / செங்குத்தான சரிவுகள் மீதான காடுகளின் முகாமைத்துவம்.<br>• சுற்றச்சூழல் முறைமைகளை மீளாய்வு செய்தல் மற்றும் அவற்றின் சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதார முக்கியத்துவத்தை முன்னிலைப்படுத்த ஒரு ஒருங்கிணைந்த தரவு முறைமையினை உருவாக்குதல்.<br>• மலைப்பாங்கான பகுதிகளில் பெருந்தோட்டங்களை பராமரிப்பதா?, மாற்றுவதா அல்லது மீட்டெடுப்பதா என்பதை தீர்மானிக்க கிரயப் பயன் பகுப்பாய்வு மற்றும் சுற்றுச்சூழல் மதிப்பீட்டினை நடாத்துதல். |
| | | **தாழ்நிலங்கள்**<br>• காணிப்பயன்பாட்டுக் கொள்கைகள் மற்றும் கோட்பாடுகளுக்கு இணங்க அனைத்து நிலங்களையும் நிர்வகித்தலும், பாதுகாத்தலும்.<br>• சமூக அடிப்படையிலான விவசாயக் காடுகளையும் மற்றும் விவசாய பெருந்தோட்ட நடைமுறைகளையும் ஊக்குவித்தல்.<br>• இயற்கை அனர்த்தங்களுக்கான முன்கூட்டிய எச்சரிக்கை முறைகளை அறிமுகப்படுத்தல், மனித நடவடிக்கைகளை முகாமை செய்தல், மற்றும் இழப்பீடுகள் மற்றும் காப்புறுதிப் பொறிமுறைகளை நடைமுறைப்படுத்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | **ஈர நிலங்கள்**<br>• இலங்கையில் உள்ள ஈர நிலங்களை இனங்காணல், ஆவணப்படுத்தல் மற்றும் பாதுகாத்தல்.<br>• நடைமுறையிலுள்ள மற்றும் எதிர்கால ராம்சர் ஈரக் காணிகளைப் பாதுகாப்பதை உறுதிப்படுத்தல் மற்றும் அவற்றில் சுற்றுலா ஈர்ப்புகளை மேம்படுத்தல்.<br>• பல பங்குதாரர்களின் ஈடுபாடு மற்றும் சமுதாயத்தின் பங்கேற்பு என்பவற்றின் ஊடாக அழிவுற்ற ஈரக் காணிகளை மீட்டெடுத்தல்.<br>• ஒருங்கிணைந்த ஈரக் காணி முகாமைத்துவ நடவடிக்கைகளுக்காக நிறுவனங்களுக்கிடையே ஒருங்கிணைப்பை வலுப்படுத்தல். |
| | | **சதுப்பு நில முட்செடிகள் கண்டல் தாவரங்கள்**<br>• சதுப்பு நில சுற்றுச்சூழல் அமைப்புகள் தொடர்பான தேசிய கொள்கைகளை மீளாய்வு செய்தலும், நடைமுறைப்படுத்தலும்.<br>• சதுப்பு நில சுற்றுச்சூழல் முறைமைகளை பாதுகாப்பதற்கான சட்ட நடவடிக்கைகளை எடுத்தல். |
| | | **வனங்களும் வனசீவராசிகளும்**<br>• ஒருங்கிணைந்த வன மற்றும் வனசீவராசிகளின் பாதுகாப்பு வலயங்களை இனங்காணல் மற்றும் புதிய பாதுகாப்புப் பிரதேசங்களை உருவாக்குதல்.<br>• யானைத்தந்தங்கள், முத்துக்கள், இழைகள் மற்றும் பிற விலங்குகளின் பாகங்களுக்கு வழங்கப்படும் கட்டுக் கதைகள் மற்றும் தேவையற்ற நிதிப் பெறுமதிகளை நீக்க பொது மக்களுக்கான விழிப்புணர்வை வழங்குதல்.<br>• கிராமங்களுக்குள் வன விலங்குகள் ஊடுருவதைக் குறைக்க உணவு மற்றும் நீரை வழங்குவதற்காக அவற்றின் இயற்கை வாழ்விடங்களை விருத்தி செய்தல்.<br>• கிராமங்களுக்குள் காட்டு யானைகளின் நடமாட்டத்தைத் தடுப்பதற்காக மின்சார வேலிகளை அறிமுகப்படுத்தலும், மற்றும் பராமரித்தலும்.<br>• பொருத்தமான தொழில்நுட்ப முறைமைகள், மற்றும் பொது மக்களின் ஈடுபாட்டுடன் மனித - வனசீவராசிகளுக்கிடையிலான மோதல்களை ஆய்வு செய்தலும் மற்றும் முகாமை செய்தலும். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | • குரங்குகள், காட்டுப்பன்றிகள் போன்ற தீங்கு விளைவிக்கும் வன விலங்குகள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளல் மற்றும் தேவையான உயிரியல் கட்டுப்பாட்டு முறைமைகளை நடைமுறைப்படுத்தல்.<br>• தாவர மற்றும் விலங்கினங்களுக்கு அவற்றின் இருப்பிடத்துக்கு வெளியே பாதுகாப்புக்கான வசதிகளை மேம்படுத்தல்.<br>• தாவர மற்றும் விலங்கினங்களுக்கு அவற்றின் இருப்பிடத்திலேயே பாதுகாப்புக்கான வசதிகளை மேம்படுத்தல்<br>• சுற்றுச்சூழல் சேவைகளை பராமரிக்க இயற்கை வனப்பகுதியை முகாமை செய்தலும் மற்றும் பாதுகாத்தலும்.<br>• ஆக்கிரமிப்பு இனங்கள் பரவுவதைக் கட்டுப்படுத்துதலும், தடுத்தலும். |
| நிலைபேறான திடக்கழிவு முகாமைத்துவம் | புதுமையான தீர்வுகள் மற்றும் தொழில்நுட்பங்களின் ஊடாக வினைத்திறனான மற்றும் நிலைபேறான திடக் கழிவு முகாமைத்துவத்தினை ஊக்குவித்தல். | • பூஜ்ஜிய கழிவு மூன்று ஆர் (R ) கொள்கைகள் மற்றும் வட்டப் பொருளாதார எண்ணக்கருவை அடிப்படையாகக் கொண்டு குடியிருப்பு, விவசாயம், கைத்தொழில், மற்றும் சேவைத் துறைகளில் உற்பத்தியாகும் திடக் கழிவுகளின் முகாமைத்துவத்திற்கான சட்டக் கட்டமைப்புகளை மேம்படுத்தலும உட்கட்டமைப்பை மேம்படுத்தலும்.<br>• தற்போதைய திடக் கழிவு முகாமைத்துவத் திட்டங்களை மீளாய்வு செய்தல் மற்றும் தேசிய திடக் கழிவு முகாமைத்துவ செயற்திட்டங்களை தயாரித்தல்.<br>• குடியிருப்புக்கள், உயரமான சேவை, மற்றும் கைத்தொழில் கட்டடங்கள்/ துறை அபிவிருத்திக்கான கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டமொன்றை ஏற்பதை கட்டாயப்படுத்தல்.<br>• விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்புத் திட்டங்களின் ஊடாக பிளாஸ்டிக் மற்றும் பொலிதீன் பாவனைகளை குறைத்தல்.<br>• அபாயகரமான மற்றும் இலத்திரனியல் கழிவுகளின் பொருத்தமான முறைமையில் முகாமை செய்தலும் மற்றும் பாதுகாப்பான முறையில் அகற்றலும். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | • துப்புரவாக்கல் நிலப்பரப்புக்கள், கழிவுகளிலிருந்து எரிசக்தி மற்றும் வள மீட்பு வசதிகள் போன்ற நவீன இறுதிக் கழிவு அகற்றல் முறைமைகளை பின்பற்றுவதற்கான உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்தல்.<br>• பூஜ்ஜிய கழிவு முறைமையினை பின்பற்ற கைத்தொழில்களை ஊக்குவித்தலும், மற்றும் முடியுமான வரை கைத்தொழில் வலயங்களுக்குள் ஒவ்வொரு கைத்தொழிலையும் கண்டறிதல். |
| வீட்டுத் தோட்டம் தொடர்பான வளங்களின் முகாமைத்துவம் | வீட்டுத்தோட்ட வளங்களின் நிலைபேறான முகாமைத்துவத்தினை மேம்படுத்துதல். | • மேலதிக நிலங்களை இட ஒழிப்பு செய்தல், வீட்டு நிர்மாணத்திற்கான அடித்தளத்தை நிர்மாணிப்பதற்கு மண்ணைப் பெற்றுக் கொள்ளல் போன்ற வர்த்தக ரீதியற்ற நடவடிக்கைகளுக்கான அனுமதிகளை வழங்குதல்.<br>• பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு உட்பட்டு மரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு வீட்டுத் தோட்டத்தில் உள்ள மரங்களை அகற்றுவதற்கும், கொண்டு செல்வதற்கும் அனுமதித்தல்.<br>• வீட்டுக் கால்நடை வளர்ப்பிற்கான சூழலுக்கு உகந்த அளவுகோள்களை அறிமுகப்படுத்தல். |
| சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கிடையிலான உறவுகளும் , விழுமியங்களும் | ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகளை ஊக்குவிப்பதன் மூலம் சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கிடையில் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்ட உறவுகளை அங்கீககரித்தல், பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தல். | • சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கும் மற்றும் மனிதர்களுடனான அதன் உறவுகளுக்கும் இடையிலான நேர்மாறானதும் மற்றும் தலை கீழானதுமான உறவுகளை வெளிப்படுத்த ஆராய்ச்சிகளையும், மற்றும் ஆய்வுகளையும் நடாத்தல்.<br>• சுற்றுச்சூழல் கல்வியின் முறை சார் மற்றும் முறை சாரா முறைமைகளை நடைமுறைப்படுத்தல்.<br>• சுற்றுச்சூழல் அமைப்புகள் குறித்து ஆராய்ச்சிகளை நடாத்துதல், ஆராய்ச்சிகளின் முடிவுகளை வெளியிடுதல், மற்றும் காப்புரிமை உரிமைகளைப் பெற்றுக் கொள்ளல், மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகளின் மரபணு தரவுத் தளத்தைப் பராமரித்தல், மற்றும் மரபணு திருட்டைத் தடுக்க வேலை செய்தல்.<br>• சுற்றுலாக் கைத்தொழிலுக்கான கவர்ச்சிகரமான சுற்றுச்சூழல் அமைப்புகளை பாதுகாத்தல். |
| அதிக நெகிழ்திறன் மிக்க சமூகமொன்றினை நோக்கி | அனர்த்த இடர் நிர்வாகத்தினை | • இயற்கை அனர்த்தங்களினால் பாதிப்புக்குள்ளாகக் கூடிய பகுதிகளை இனங்காணல், நிர்வகித்தல் மற்றும் இடரைக் குறைத்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| அனர்த்த இடர் குறைப்பை ஒழுங்குபடுத்தல். | வலுப்படுத்துதல், அனர்த்த இடர் குறைப்பு மற்றும் அனர்த்த தயார் நிலையை வலுப்படுத்துவதில் முதலீடு செய்தல், என்பவற்றின் ஊடாக நெகிழ்திறன் கொண்ட சமூகம் ஒன்றை உறுதி செய்தல். | • வெள்ளம் ஏற்படக் கூடிய பிரதேசங்களை வரைபடமாக்குதல், அவசர மற்றும் நீண்ட காலம் நிகழக் கூடிய வெள்ளங்களுக்கு மனிதனால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளில் மற்றும் தொடர்புகளை விமர்சித்து தரவுகளை அடிப்படையாகக் கொண்ட ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் மற்றும் அபிவிருத்தித் தீர்வுகளை வழங்கல்.<br>• பொது மக்களுக்கு வெள்ளம், சுனாமி, மண் சரிவு, போன்ற பல்வேறு முறைகளில் இயற்கை அனர்த்தங்கள் தொடர்பான முன்னெச்சரிக்கைகளை வழங்கக் கூடிய முறையில் உயர் தொழில்நுட்ப வானிலை பிரயோகங்களை அபிவிருத்தி செய்தல்.<br>• விவசாய, கைத்தொழில் மற்றும் குடியிருப்பு பயன்பாடுகளில் விஞ்ஞான ரீதியாக அபிவிருத்தி செய்யப்பட்ட நிலைபேறான காணிப்பயன்பாட்டுத் திட்டங்களை உருவாக்கலும், நடைமுறைப்படுத்தலும்.<br>• பொருளாதார மற்றும் சமூக நோக்கங்களுக்காக மலை முகடுகள்/ செங்குத்தான சரிவுகளில் உள்ள காடுகளை பயன்படுத்துவதில் கடுமையான கட்டுப்பாட்டுடன் முகாமை செய்தல் / ஒழுங்குமுறைப்படுத்தல்.<br>• நிலச்சரிவுகளை தடுப்பதற்காக உயர்வான மற்றும் செங்குத்தான சரிவுகளில் ஏற்படக் கூடிய நிலச் சரிவுகள் தொடர்பாக அளவை ஆய்வுகளையும் மற்றும் ஆராய்ச்சிகளையும் நடாத்துதல், மற்றும் மண்ணின் செழிப்பு அதிகரிப்பது தொடர்பாகவும் மற்றும் நிலச் சரிவுகளை தடுப்பதற்கான கட்டமைப்பு தொடர்பாகவும் ஆராய்ச்சிகளை நடாத்துதல்.<br>• இயற்கை அனர்த்தங்களுக்கான முன்னெச்சரிக்கை முறைமைகளை அறிமுகம் செய்தல், மனித நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்தல் மற்றும் இழப்பீடு மற்றும் காப்புறுதி பொறிமுறைமைகளை நடைமுறைப்படுத்தல்.<br>• கைத்தொழில், மற்றும் சுற்றுச்சூழல், மாசுபடல், இயற்கை அனர்த்தங்கள், தீப்பற்றல், மற்றும் வறட்சிகள் போன்ற அனர்த்தங்களிலிருந்து உயிர்களை பாதுகாப்பதற்கு சுகாதார மற்றும் பொருளாதார தாக்கங்களை குறைப்பதற்கு அனர்த்த முகாமைத்துவ கட்டமைப்பை முறைப்படுத்தல்.<br>• இழப்புக்களை குறைப்பதற்கு காலநிலை மாற்றங்களின் காரணமாக ஏற்படக் கூடிய |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | இயற்கை அனர்த்தங்கள் தொடர்பாக உயர் தொழில்நுட்ப பிரயோகங்களைப் பயன்படுத்தி பரிசோதனைளை மேற்கொள்ளல்.<br>• கைத்தொழில் மற்றும் பொதுப் பேரவைகளின் ஒத்துழைப்புடன் எதிர்பார்க்கப்பட்ட தீவிர காலநிலை நிகழ்வுகளுக்கு காப்புறுதித்திட்டங்கள், அனர்த்த தயார்நிலைக்கான விஷேட நிதி அளிப்பு மற்றும் பதில் உள்ளடங்கலாக அடுத்த தசாப்தத்தில் குறிப்பாக தயாரிக்கப்பட்ட “ இயற்கை அனர்த்த முகாமைத்துவ மூலோபாயம்” ஒன்றினை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல். |
| பாதுகாப்பான நீரின் நுகர்வு | நீரின் பாதுகாப்பையும் மற்றும் நீர் மாசுபடலைக் கட்டுப்படுத்தலையும் உறுதிப்படுத்தல். | • அனைத்து நீர் மூலங்களின் இரசாயன மற்றும் பௌதீகப் பரிமாணங்கள் மூலம் சேகரிக்கப்பட்ட தரவுகளை ஆராய்வதன் மூலம் அடிப்படை நீர் வரைபடத்தை தயாரித்தல்.<br>• நீர் மாசடைவதற்கான காரணங்களை இனங்கண்டு அவற்றை குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.<br>• விவசாய, வீட்டு, கைத்தொழில் மற்றும் சேவை நடவடிக்கைகளிலிருந்தான கழிவு நீர் சுத்திகரிப்புக்கு விஞ்ஞான முறைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தல். |
| | நீர் மூலங்களின் பாதுகாப்பை பலப்படுத்தல். | • இலங்கையில் உள்ள அனைத்து வகையான நீர் மூலங்களை ஆய்வு செய்தல் மற்றும் உணர் திறன் மதிப்பீட்டை மேற்கொள்ளல், அவ்வுணர் திறனுள்ள நீர் மூலங்களை வர்த்தமானியில் பிரசுரித்து பாதுகாத்தல். |

## 1.8 சுதந்திரமான ஊடகத்தொழில் - புறநிலை தகவலறிந்ததொரு சமூக ஊடகம்

**கொள்கை கோட்பாடுகள் –**

- உண்மையான மற்றும் துல்லியமான தகவல்களை அணுகுவதற்கான மக்களின் உரிமை
- பொறுப்பானதும் மற்றும் மனிதாபிமானம் கொண்ட ஒரு ஊடகத் துறை
- ஊடகத்துறையின் சுதந்திரமும், அதன் சுயாதீனமும்
- பொதுச்சொத்தொன்றாக ஊடகம்.

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| ஊடக சுதந்திரம் மற்றும் நெறிமுறையான தர நிலைகளை வலுப்படுத்தல். | ஊடக சுதந்திரம் மற்றும் நெறிமுறையான தர நிலைகளை உறுதிப்படுத்தல். | • செய்திகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் தரம் மற்றும் பிரபலத்தினை அடிப்படையாகக் கொண்டு வெகுசன ஊடக தரப்படுத்தல் முறைமையினை நெறிப்படுத்துவதில் பல்கலைக்கழக ஊடகப் பிரிவுகளுக்கும் மற்றும் ஏனைய தரப்படுத்தல் நிறுவனங்களுக்கும் வசதியளித்தல்.<br>• வெளிப்படுத்தல் சுதந்திரத்திலுள்ள தடைகளை நீக்குவதன் மூலம் 2024 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டத்தினை திருத்தம் செய்தல்.<br>• மொழிப்பயன்பாடு, கலாச்சாரம் மற்றும் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை மேம்படுத்தல், கல்வி மற்றும் விஞ்ஞான ஊக்குவிப்பு உள்ளிட்ட புதிய மதிப்பீட்டு அளவுகோள்களை அறிமுகம் செய்தல்.<br>• உகந்த ஊடகக் கொள்கையொன்றினை உருவாக்குவதற்கு ஊடக சுதந்திரத்தை மையமாகக் கொண்டு தற்போது நடைமுறையிலுள்ள ஊடக சட்டங்கள், ஒழுங்கு விதிகள், உடன்படிக்கைகள், மற்றும் நெறிமுறைகளை மீளாய்வு செய்தல்.<br>• சர்வதேச தர நிலைகள், மற்றும் உள்ளூர் சமூக சூழ்நிலைகளுடன் இணங்கும் ஊடக நிறுவனங்கள்' மற்றும் ஊடகவியலாளர்களுக்கான நெறிமுறைகளை அறிமுகம் செய்தல்.<br>• அனைத்துத் துறைகளிலும் உள்ள ஊடக நிபுணர்களை இனங்கண்டு விருதுகளை வழங்கும் ஒரு விழாவை ஏற்பாடு செய்தல்.<br>• செய்தித்தாள்கள், வானொலி, மற்றும் தொலைக்காட்சி அலைவரிசைகள், ஊடக ஆளுமைகள், நிகழ்ச்சித்திட்டங்கள், கட்டுரைகள் மற்றும் புகைப்படங்களை கணிப்பீடு செய்வதன் மூலம் ஊடகத் துறையில் சுதந்திரமான மற்றும் ஆரோக்கியமான போட்டியை வளர்ப்பதற்காக நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகம் செய்தல்.<br>• அனைத்துத் துறைகளிலும் ஊடக தொழில்துறையினரை இனங்காண்பதற்கு விருது வழங்கும் விழாவொன்றினை ஏற்பாடு செய்தல்.<br>• புகைப்படக் கருவி போன்ற அத்தியாவசியமான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ஊடகவிளலாளர்களுக்கு குறைந்த வட்டியிலான கடன்களை வழங்குதல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | • ஊடக நெறிமுறைகள் மற்றும் சிறப்பின் உயர் தரங்களை நிலை நிறுத்துவதில் அரச ஊடக நிறுவனங்களுக்கு வழிகாட்டுதல்.<br>• பொது மக்களுக்கு ஊடக அபிவிருத்தி, தொடர்பாடல்கள், மற்றும் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை ஊக்குவித்தல்.<br>• சினிமா, தொலைக்காட்சி, மற்றும் இசை ஆகிய துறைகளில் சர்வதேச அங்கீகாரத்தினை அடைவதில் கலைஞர்கள் மற்றும் தயாரிப்பாளர்களுக்கு ஆதரவளித்தல்.<br>• உள்ளூர் கம்பனிகளும், மற்றும் தயாரிப்பாளர்களும் உயர் தரம் வாய்ந்த விளம்பரங்கள், மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சர்வதேச சந்தைகளுக்குள் நுழைதல் போன்றவற்றை ஊக்குவித்தல்.<br>• ஊடக படைப்பாளிகள் மற்றும் அவர்களது பணிகளுக்கான முறையான ஒரு காப்பக செயன்முறையொன்றினை நடைமுறைப்படுத்தல்.<br>• தகவலறிந்த பார்வையாளர்களை வளர்ப்பதற்காக ஊடக அறிவு நிகழ்ச்சித்திட்டங்களை ஊக்குவித்தல்.<br>• ஊடக செயன்முறையின் உகந்த தொழிற்பாட்டை மேற்பார்வையிட சுயாதீன ஊடக ஆணைக்குழு ஒன்றை ஸ்தாபித்தல். |

# 2 ஆம் ஆத்தியாயம்

## 2. கௌரவமானதொரு வாழ்க்கை – பாதுகாப்பானதொரு நாடு

### அறிமுகம்: இலங்கையில் வறுமை மற்றும் சமத்துவமின்மைக்குத் தீர்வு காணுதல்

இலங்கையில் அண்ணளவாக 5.7 மில்லியன் மக்கள் தேசிய வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வதோடு, அவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் பல பரிமாணங்களைக் கொண்ட வறுமையை அனுபவித்து வருகின்றனர். சுதந்திரம் கிடைக்கப் பெற்றதிலிருந்து சமூக பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும் கூட, வினைத்திறனற்ற நிலைமைகளும் மற்றும் அரசியல் தலையீடுகளும் அவற்றின் செயற்திறனை பலவீனப்படுத்தியுள்ளன. எனவே, இந்நிலைமையானது, வறிய மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கும், மற்றும் பொருளாதாரப் பங்கேற்பை ஊக்குவிப்பதற்கும் உலகளாவிய சமூக பாதுகாப்பு முறைமையொன்றிற்கான அவசியத்தை வலியுறுத்திக் காட்டுகின்றது.

பெரும்பாலும் மனித உழைப்பானது, அடிக்கடி குறைத்து மதிப்பிடப்படுவதோடு, இதனால், பல தொழிலாளர்கள் குறைந்த பட்ச ஊதியத்திற்குக் கீழேயே சம்பாதிக்கிறார்கள். பெண்கள் முறையான ஓரங்கட்டலை எதிர்நோக்குவதோடு, இந்த ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்வதற்கும் மற்றும் அனைத்து ஓரங்கட்டப்பட்ட குழுக்களுக்கும் ஆதரவளிப்பதற்கும் ஒரு குறுக்கு வெட்டு அணுகுமுறையொன்று தேவைப்படுகிறது.

மேம்படுத்தப்பட்ட வளங்கள் மற்றும் சட்ட சீர்திருத்தங்களுக்கான தேவையை எடுத்துக்காட்டுவதன் மூலம், போதிய அளவிலான பாதுகாப்பொன்றும் மற்றும் கல்வி வாய்ப்புக்கள் இன்மை, போன்ற குறிப்பிடத்தக்க சவால்களுக்கு சிறுவர்கள் முகங்கொடுக்கின்றனர். சனத்தொகையில் 38 சதவீதத்தினை பிரதிபலிக்கும் இளைஞர்கள் பெரும்பாலும் மட்டுப்படுத்தப்பட்ட வாய்ப்புக்களை எதிர்கொள்வதோடு, தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்பாளர்களாக அவர்களை வலுப்படுத்துவதற்கான முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றனர்.

மொத்தச் சனத்தொகையில் 17.2 சதவீதத்தை உள்ளடக்கும் முதியோர்களுக்கு போதுமான பராமரிப்பும் மற்றும் ஆதரவும் தேவைப்படுகின்றது. மேலும், மொத்தச் சனத்தொகையில், 8.7 சதவீதத்தை மாற்றுத் திறனாளிகள் உள்ளடக்குவதோடு, அவர்களின் உரிமைகளை உறுதி செய்வதற்கும், மற்றும் அவர்களை உறுதிப்படுத்துவதற்கும் மற்றும் சமூகத்தில் அவர்களை உட்சேர்ப்பதனை ஊக்குவிப்பதற்கான முயற்சிகள் தேவைப்படுகின்றன.

**கொள்கை கூற்று**

நலன்புரி சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்குத் தகுதியான நபர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துதல் மற்றும் பொருளாதாரத்தில் அவர்கள் செயலூக்கமுள்ள பங்கேற்பாளர்களாக விரைவாக ஈடுபட அவர்களை வலுவூட்டல்.

## 2.1 பாதுகாப்பானதொரு சமூகம் - வளமானதொரு தேசம்

**கொள்கை கோட்பாடுகள் –**

- ■ சமூக ஒற்றுமை
- ■ சமூக வலுவூட்டல்
- ■ தேவைப்படுபவர்களுக்கு நிதி நன்கொடைகள்
- ■ அமைச்சுக்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு
- ■ அனைவருக்கும் வாழ்க்கைச் சுழற்சி அடிப்படையிலான சமூக பாதுகாப்பு
- ■ எவரையும் விட்டு விடாத சமூக நீதியை உறுதி செய்தல்
- ■ பயனாளிகளை தெரிவு செய்வதில் அனைத்துத் தொடர்புடைய பங்குதாரர்களின் வினைத்திறனானதும் மற்றும் அர்த்தமுள்ள பங்கேற்பு

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| சமூக பாதுகாப்பு, மற்றும் நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள்<br>**பிரஜாசக்தி** : குறைந்த வருமானம் உழைப்போருக்கான வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம் | விஞ்ஞான ரீதியான அளவுகோள்களைப் பயன்படுத்தி சமூக பாதுகாப்பு மற்றும் நலன்புரி நிகழ்ச்சித்திட்டத்துக்கான தகுதியுடைய குடும்பங்களையும் மற்றும் தனி நபர்களையும் தெரிவு செய்வதை உறுதி செய்தல். | • குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு குறைந்த பட்ச மாதாந்த நிதி நன்கொடையாக 10,000 ரூபா வரை வழங்குதல்.<br>• பங்கேற்புடைய, வெளிப்படையான, மற்றும் வினைத்திறனான பயனாளிகளைத் தெரிவு செய்வதற்கான ஒரு செயன்முறையை அறிமுகம் செய்தல்.<br>• ஒரு வருடத்திற்குள் புதிய அளவுகோள்களைப் பயன்படுத்தி தகுதியான பயனாளிகளை இனங்காண்பதற்கான டிஜிடல் தளத்தை மீளாய்வு செய்தலும் மற்றும் அனைத்து தகுதி பெற்ற தனி நபர்களுக்கும் நிதி உதவியை வழங்குதல். |
| பிரதான வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வலுவூட்டல்<br>அத்தியாவசியப் பணிகளை அரசாங்கம் மேற்கொள்ளும். | முழுமையான பட்டப்படிப்பு மற்றும் வலுவூட்டல் முன்னெடுப்புக்களை நிறைவேற்றுவதை உறுதிப்படுத்தல். | • குறைந்த வருமானம் உடைய குடும்பங்களில் வறுமையின் காரணங்கள் மற்றும் குடும்ப இயங்கியல் பற்றிய முழுமையான பங்கேற்பு ஆய்வு ஒன்றினை நடாத்துதல்.<br>• சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட கருத்திட்டங்களின் ஊடாக குடும்ப மட்டத்தில் வறுமை மற்றும் நலிவடைதல்களுக்கான தீர்வுகளை இனங்காணுதல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல்.<br>• அரச தனியார் பங்கேற்புக்கள் மற்றும் கூட்டுறவுத் துறையின் ஈடுபாட்டின் ஊடாக இக்கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வசதிகளை அளித்தல்.<br>• வருமானம் ஈட்டுதல், மற்றும் வாழ்வாதார கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கான பயிற்சி, தொழில்நுட்ப உதவி, மற்றும் நிதி உதவி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.<br>• வறிய குடும்பங்களை வலுவூட்டுவதற்காக சமூர்த்தி வங்கி முறைமை மற்றும் பணியாளர்களை வினைத்திறனான முறையில் பயன்படுத்துதல்.<br>• கண்காணிப்பதற்கும் மற்றும் தொடர்ச்சியான ஆதரவை வழங்குவதற்கும் ஒரு கள அலுவலரை நியமித்தல். |
| சிரேஷ்ட பிரஜைகளுக்கான ஆரோக்கியமான மற்றும் | வெள்ளிப் பங்கிலாபத்தின் பலன்களைப் | • உதவி தேவைப்படும் சிரேஷ்ட பிரஜைகளுக்கு மாதாந்த உதவித் தொகையாக 5,000 ரூபாவினை வழங்குதல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| மகிழ்ச்சியான ஓய்வினை உறுதி செய்தல். | பெறுவதற்காக ஆரோக்கியமான ஆயுட்காலமொன்றை மேம்படுத்தல். | • பிரதேச செயலக மட்டத்தில் புதிய முதியோர் பராமரிப்பு நிலையங்களை ஸ்தாபித்தல்.<br>• தனியார் பராமரிப்பு .நிலையங்களுக்கான அரசாங்க ஆதரவை வழங்கி அவற்றை ஒழுங்குமுறைப்படுத்தல்..<br>• பராமரிப்புப் பணியாளர்களுக்கான உத்தியோக பூர்வ பயிற்சி மற்றும் முதியோர் பராமரிப்பில் ஈடுபடும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான ஊக்குவிப்புக்களை வழங்குதல்.<br>• ஊழியர் சேமலாப நிதி மற்றும் பாதுகாப்பான அதிக வருவாயை .ஈட்டித் தரக் கூடிய முதலீடுகள் போன்ற ஓய்வூதிய நிதியங்களில் முதலீடு.செய்தல்.<br>• ஓய்வூதிய நிதியங்களின் பாதுகாப்பையும் மற்றும் தொடர்ச்சியான நன்மைகளையும் உறுதிப்படுத்துவதற்கு நிதி மற்றும் காப்புறுதிச் சேவைகளுக்கான ஊக்குவிப்புக்களை வழங்குதல்.<br>• சிரேஷ்ட பிரஜைகளின் நிலையான வைப்புக்களுக்கு சாதாரண வங்கி வட்டி வீதத்தை விட அதிகமான வட்டி வீதத்தை வழங்குதல். |
| மாற்றுத் திறனுடைய நபர்களுக்கு அர்த்தமுள்ள மற்றும் திருப்திகரமான வாழ்க்கை | மாற்றுத் திறனுடைய நபர்களுக்கான சமூக பொருளாதார நடவடிக்கைகளில் அதிக வாய்ப்புக்களை உறுதிப்படுத்தல்.<br>. | • மாற்றுத் திறனாளிகள் தொடர்பாக நிபுணர்களால் தயாரிக்கப்பட்ட முழுமையான தரவு அடிப்படையொன்றினை உருவாக்குதல்.<br>• குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு மாதாந்தம் 10,000 ரூபா நிதி உதவியை வழங்குதல்.<br>• மாாற்றுத் திறனுடைய நபர்களுக்கு கல்வி, பயிற்சி, தொழில்வாய்ப்பு மற்றும் வாழ்வாதார வாய்ப்புக்களுக்கு வசதியளித்தல்<br>• சர்வதேச தர நிலைகளுக்கு ஏற்றவாறு மாற்றுத் திறனாளிகளை பாதுகாப்பதற்கும் மற்றும் வலுவூட்டலுக்கும் நடைமுறையிலுள்ள சட்டங்களை திருத்தம் செய்தல் மற்றும் புதிய சட்டங்களை இயற்றுதல்.<br>• மாற்றுத் திறனுள்ள நபர்கள் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கு உதவுவதற்கான விழிப்பூட்டலை ஊக்குவித்தல், பயிற்சிகளை வழங்குதல் மற்றும் வளங்களுக்கும் மற்றும் வாய்ப்புக்களுக்குமான அணுகலை விருத்தி செய்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | • உள்ளடக்கத்தை உறுதி செய்வதன் மூலம் உற்பத்திப் பொருட்களை அபிவிருத்தி செய்வதில் மாற்றுத் திறனுள்ள நபர்களுடன் பணிபுரிவதற்கு தொழில்நுட்பக் கம்பனிகளை ஊக்குவித்தல்.<br>• மாற்றுத் திறனுள்ள மாணவர்களுக்குரிய ஆதரவுடன் துன்புறுத்தலிலிருந்து விடுபட்ட பாடசாலைச் சுற்றுச்சூழலொன்றை வழங்குவதை உறுதிப்படுத்தல்.<br>• மாற்றுத் திறனுள்ள மாணவர்களின் கல்விக்கு ஆதரவளிப்பதற்காக தொடர்பாடல், மற்றும் தகவல் தொழில்நுட்பங்களை பாடசாலைகளை ஆரம்பித்தல்.<br>• மாற்றுத் திறனுள்ள நபர்களுக்கான வேலை வாய்ப்புக்கள், வியாபார உடமைகள் மற்றம் சுய தொழில் வாய்ப்புக்களை மேம்படுத்தல்.<br>• புனர் வாழ்வு மற்றும் ஆலோசனைகளுடன் மாற்றுத் திறனுள்ளவர்களை முன் கூட்டியே இனங்காணுதல், நோய்களை அறிதல், மற்றும் சிகிச்சை போன்றவற்றிற்கான அணுகலை உறுதிப்படுத்தல்.<br>• மாற்றுத் திறனாளிகளுக்கு அணுகக் கூடிய வகையில் உதவி சாதனங்களை தயாரிப்பதற்கும், மற்றும் இறக்குமதி செய்வதற்கும் அரசாங்க ஆதரவை வழங்குதல். |
| பெண்கள் தலைமையிலான குடும்பங்கள், ஒற்றைப் பெற்றோர் குடும்பங்கள், பாலின அடிப்படையிலான / நெருக்கமான பங்காளியின் வன்முறையினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சமூக பாதுகாப்பு | பெண்கள் தலைமையிலான குடும்பங்கள், ஒற்றைப் பெற்றோர் குடும்பங்கள், பாலின அடிப்படையிலான / நெருக்கமான பங்காளியின் வன்முறையினால் பாதிக்கப்பட்ட பெண்களின் நலனை உறுதி செய்தல். | • தேவைகள் மற்றும் வருமான மட்டத்தை அடிப்படையாகக் கொண்டு பாதிக்கப்பட்ட நபர்களுக்கான (மேலே உள்ள வகையீடுகளில்) நிதி உதவி வழங்கல்.<br>• தேவைகள் மற்றும் கோரிக்கைகளின் அடிப்படையில் சட்ட உதவி மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குதல்.<br>• தேவைப்படும் போது மாற்று வீடுகள் மற்றும் வேலை ஆதரவுகளை வழங்குதல்.<br>• வன்முறை மற்றும் துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான சமூக மற்றும் உளவியல் ஆதரவுக்கான பொறிமுறைகளை ஏற்படுத்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| நாட்பட்ட நோய்கள் உள்ள நபர்களுக்கான சமூக பாதுகாப்பு | நாட்பட்ட நோய்கள் உள்ள நபர்களின் ஆரோக்கியமான வாழ்க்கையை ஊக்குவித்தலும் மற்றும் அவர்களை வலுவூட்டலும். | • புற்று நோய் மற்றும் சிறு நீரக நோய் போன்ற நாட்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்ட நபர்களின் டிஜிட்டல் தரவுக் களஞ்சியத்தை உருவாக்குதல்.<br>• தேவைகளை அடிப்படையாகக் கொண்டு நாட்பட்ட நோய்களினால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு மாதாந்தம் குறைந்தது 10,000 ரூபா நிதி நன்கொடையை வழங்குதல்.<br>• தொழில்முறை ஆதரவையும் மற்றும் சமூக வலுவூட்டலையும் வழங்கல். |
| போஷாக்குள்ள வருங்கால சந்ததியினர்: போஷாக்கின்மையைக் குறைத்தல் | சிறுவர்களுக்கிடையில் போஷாக்கின்மையைக் குறைத்தல் . | • போஷாக்கற்ற சிறுவர்களைக் கொண்ட குறைந்த வருமானம் உழைக்கும் குடும்பங்களை இனங்காணல்.<br>• போஷாக்கின்மையை எதிர்த்துப் போராடுவதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக பெற்றோருக்குக் கற்பித்தல்.<br>• அவசர தேவைகளைக் கொண்ட குடும்பங்களுக்கு போஷாக்குள்ள உணவைப் பெற்றுக் கொள்வதற்காக கள உத்தியோகத்தர்களின் ஊடாக ஊடாக நிதி உதவியை வழங்குதல். |
| கர்ப்பிணிப் பெண்களுக்கான போஷாக்கு நிகழ்ச்சித்திட்டம் | கர்ப்பிணிப் பெண்களின் போஷாக்கு மட்டத்தை விருத்தி செய்தல். | • சமூக சுகாதார சேவைகளின் ஊடாக மேலதிக போஷாக்கு தேவையான கர்ப்பிணிப் பெண்களை இனங்காணுதல்.<br>• குறைந்த வருமானம் உள்ள குடும்பங்களுக்கு கர்ப்ப காலத்திலும் மற்றும் பிரசவத்தின் முதல் வருடத்திலும் போஷாக்கான உணவுப் பொதிகளுக்கான நிதி உதவியை வழங்குதல்.<br>• குடும்ப நல அலுவலர்களால் தொடர்ச்சியான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்பை மேற்கொள்ளல். |
| பாதுகாப்பு: சிறுவர்களுக்கு போதிய அளவிலான பாதுகாப்பு | சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல். | • தேவைகள் மற்றும் கோரிக்கைகளின் அடிப்படையில் அரச மற்றும் தனியார் பங்கேற்புடன் கிராம அலுவலர் மட்டத்தில் சிறுவர் பராமரிப்பு நிலையங்களை ஸ்தாபித்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | • சிறுவர் பாராமரிப்புக்கான நடைமுறையில் இருக்கும் போதிய தகுதிகளைக் கொண்ட நிறுவனங்களை பதிவு செய்தல்.<br>• சிறுவர் பராமரிப்பு நிலையங்களின் வினைத்திறனான முகாமைத்துவத்துக்கு பணியாளர்களுக்கு பயிற்சியளித்தல் மற்றும் அவர்களின் செயலாற்றுகையை கண்காணித்தல்.<br>• தொழில்சார் சேவைகளை வழங்குவதற்கு சமூக சேவை / அபிவிருத்தி அலுவலர்களை நியமித்தல் மற்றும் அத்தகைய சேவைகளை வழங்குவதற்காக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கு ஊக்குவிப்புக்களை வழங்குதல். |
| அனைத்து பிரஜைகளுக்குமான ஓய்வூதியத் திட்டம் | அனைத்து பிரஜைகளினதும் சமூக பாதுகாப்பை உறுதிப்படுத்தல். | • நாட்டில் உள்ள அனைத்து தொழிலாளர்களுக்கும் பொருந்தக் கூடிய விரிவான ஓய்வூதியக் கொள்கையை உருவாககல் மற்றும் அமுல்படுத்தல்.<br>• ஓய்வூதியத் திணைக்களம் மற்றும் மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் அரசாங்கத்தால் சான்றளிக்கப்பட்ட ஓய்வூதிய நிதியத்தை உருவாக்குதல்.<br>• விவசாயிகள், மீனவர்கள் மற்றும் ஏனையோர் போன்ற அரசாங்க அல்லது கூட்டுறவுத் துறையில் தற்போது வேலை செய்யாத அனைத்து பிரஜைகளையும் ஓய்வூதியத் திட்டத்தில் இணைய ஊக்குவித்தல்.<br>• அவசர கால நிலைமையின் / இயலாமையின் போது காப்புறுதித் திட்டமொன்றாக ஓய்வூதிய நிதியமொன்றினை பயன்படுத்தல். |

## 2.2 வினைத்திறனானதொரு தொழிற்படை – கௌரவமானதொரு தொழில்முறை வாழ்க்கை

**கொள்கை கோட்பாடுகள் -**

- தொழிலின் கௌரவத்தையும் மற்றும் விழுமியத்தையும் பாதுகாத்தல்.
- தொழிலில் பன்முகத்தன்மையை ஏற்றுக் கொண்டு சமமான முறையில் அனைவரையும் கவனித்தல்.
- பாகுபாடுகளுக்கு உட்படாத சமமான வாய்ப்புக்கள்

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| தொழிலின் கௌரவம் மற்றும் விழுமியம். | அங்கீகாரம் மற்றும் சம உரிமைகளின் ஊடாக தொழிலின் கௌரவத்தை உறுதி செய்தல். | • தொழில் கொள்கையொன்றை தயாரித்தல் மற்றும் அமுல்படுத்தல்.<br>• சேவை ஒப்பந்தங்களில் உள்ள சிக்கல்களை தீர்த்து வைத்தல் மற்றும் அதற்கேற்ப அவற்றை திருத்தம் செய்தல்<br>• வினைத்திறனான ஒரு தொழிற்படையை உருவாக்குவதற்காக நடைமுறையிலுள்ள தொழில்சட்டங்களையும் மற்றும் ஒழுங்கு விதிகளையும் புதுப்பித்தல் மற்றும் புதிய சட்டங்களையும் மற்றும் புதிய ஒழுங்கு விதிகளையும் அறிமுகம் செய்தல்.<br>• சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் (ILO) கோட்பாடுகளுக்கு இணங்க நியாயமான கவனிப்பு, நியாயமான ஊதியம் மற்றும் பாதுகாப்பான தொழில் நிபந்தனைகள் உள்ளிட்ட ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்.<br>• சமமான வேலை வாய்ப்புக்களை உறுதிப்படுத்தல்.<br>• வேலை வாய்ப்புக்களின் போது பாரபட்சமற்ற முறையில் தெரிவு செய்தல் மற்றும் அனைவருக்கும் சமமான வாய்ப்புக்கள் வழங்கலை உறுதி செய்தல்.<br>• ஆட்சேர்ப்புக்களின் மூலம் பட்டப்படிப்பு மட்டம் வரை நீடிக்கப்பட்ட பாடசாலைகளில் தொழில்சார் கல்வியை வழங்குதல்.<br>• ஊதிய ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பதற்கு தேசிய சம்பள கட்டமைப்பொன்றை உருவாக்கல் மற்றும் ஊழியர்களை ஊக்குவித்தல்.<br>• ஆளணி ஊழியர்களுக்கான நியாயமான சம்பளத்தையும் மற்றும் தொழில் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தல்.<br>• அரச தலையீடுகள் எதுவுமின்றி தகைமைகளையும் மற்றும் தறன்களையும் அடிப்படையாக வைத்து அரச துறையின் ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வு மற்றும் மாற்றல்களை மேற்கொள்ளல். |
| சமூக பாதுகாப்பும் மற்றும் நன்மைகளும் பொருத்தமான பொறிமுறைகளின் ஊடாக | பொருத்தமான பொறிமுறைகளின் ஊடாக சமூக பாதுகாப்பை உறுதிப்படுத்தல். | • தனியார் துறை ஊழியர்களுக்கான சுகாதார /ஆயுள் காப்புறுதியை உருவாக்குதல்.<br>• தற்போதைய ஓய்வூதியத் திட்டங்களிலுள்ள ஏற்றத்தாழ்வுகளை நீக்குதல்.<br>• ஐந்து (5) வயதுக்குக் குறைந்த குழந்தைகளை பராமரிப்போருக்கு அல்லது எண்பது (80) வயதுக்குக் கூடிய நோய்வாய்ப்பட்ட பெற்றோரை |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | பராமரிப்போருக்கு அடிப்படைச் சம்பளத்தில் 25 சதவீத ஊதியத்துடன் அதிக பட்சம் ஒரு வருட விடுமுறையை வழங்குதல்.<br>• விஷேட காரணங்களினால் வேலை செய்ய முடியாதவர்களுக்கு இடைக்காலக் கொடுப்பனவுகளை வழங்குதல்.<br>• வாழ்க்கைத் துணையின் மரணத்திற்கு இரண்டு வார விடுமுறை வழங்கல்.<br>• உழைக்கும் போது செலுத்தும் வரியை (PAYE) திருத்தம் செய்தல்.<br>• பணிக்கொடை காப்புறுதியின் (அக்ரஹார) பலன்களை பலப்படுத்தல். |
| பாரபட்சத்துக்கு உட்படாத சமமான வாய்ப்புக்கள் | தொழிற்படையின் உள்ளடக்கத்தை அதிகரிப்பதன் ஊடாக சமமான வாய்ப்புக்களை உறுதிப்படுத்தல். | • நிறைவேற்றுப் பதவிகளிலும் மற்றும் முகாமைத்துவத்திலும் வினைத் திறனான முறையில் ஈடுபடுவதில் பெண்களுக்குள்ள தடைகளை நீக்குதல்.<br>• தொழில்சந்தையில் நுழைவதில் உள்ள நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கும் அல்லது அக்கறையில்லாத பெண்களுக்கும் மற்றும் மாற்றுத் திறனாளிகள் அவர்களது விருப்பத்திற்கு ஏற்ப பணிபுரிவதற்கு ஏற்ற வேலை வாய்ப்புக்களை வழங்குதல். |
| தொழிலின் பன்முகத்தன்மை | தொழில் சந்தையில் வாய்ப்புக்களின் கிடைப்பனவை விருத்தி செய்வதன் ஊடாக தொழிலின் பன்முகத்தன்மையை உறுதிப்படுத்தல். | • நவீன தொழில்நுட்பத்தின் உதவியுடன் படிப்படியாக வேலை நேரத்தைக் குறைத்தலும், மற்றும் வீட்டிலிருந்தே பணி புரிவதற்கு அதிக வாய்ப்புக்களை உருவாக்குதல்.<br>• பயிற்சியளிக்கப்படாத ஊழியர்களுக்குப் பதிலாக திறனுள்ள மற்றும் பயிற்சியளிக்கப்பட்ட ஊழியர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புதல்.<br>• பொருத்தமான பொறிமுறைகளின் ஊடாக கற்பித்தல், தகவல் தொழில்நுட்பத்துறை, இறைவரி, சுங்கம், வெளிநாட்டுச் சேவை, மற்றும் சுற்றுலாக் கைத்தொழில் உள்ளிட்ட பகுதிகளில் பட்டதாரிகளுக்கு வாய்ப்புக்களை உருவாக்குதல். |

## 2.3 பாரபட்சமற்ற மனித அடையாளம் - சமூக வாழ்வில் பாலின சமத்துவம்

**கொள்கை கோட்பாடுகள்** –

■ பாலின சமத்துவத்தை அடைவதற்கான மைல் கல்லாக பொருளாதார நீதி.

■தேசிய பொருளாதாரத்தில் ஊதியம் பெறாத பராமரிப்புப் பணியின் பெறுமதியை அங்கீகரிக்கும் அரச கொள்கைகள்.

■ அனைத்து ஓரங்கட்டப்பட்ட குழுக்களும் நியாயமான மற்றும் சமமாக நடாத்தப்படலை உறுதி செய்யும் சட்டம்.

■ சமூகத்தில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம், பங்கேற்பு, மற்றும் வகிபாகத்தை மேம்படுத்துதல்.

■ அனைத்து அமைப்புகளிலும் முறையான வன்முறைகள் உள்ளடங்கலாக சகல வடிவங்களிலுமான வன்முறைகளை கண்டித்தல்.

■பெண்கள் மீதான அழுத்தங்களைப் போக்க கொள்கை அபிவிருத்தியில் பொதுச் சேவைகளுக்கு முன்னுரிமை அளித்தல்.

■ நிலைபேறான சுற்றுச்சூழல் பாதுகாப்பு மூலோபாயங்களை உருவாக்குவதில் பெண்களின் ஈடுபாடு

■ சமூக நிறுவனங்கள் மற்றும் நடைமுறைகளால் நிலைநிறுத்தப்படும் பிற்போக்குத்தனமான நிலைப்பாடுகளிலிருந்து விடுபட்ட ஒரு சமூகம்.

■ பெண்கள் உள்ளிட்ட அனைத்து இனங்காணப்பட்ட குழுக்களுக்கும் அரச சேவைகள், உரிமைகள், மற்றும் நீதிக்கான சமமான அணுகல்.

■ பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான சம்மேளனம் (CEDAW) மற்றும் சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான சம்மேளனம் (CRC) ஆகியவற்றால் நிர்ணயிக்கப்பட்ட தர நிலைகளுடன் உள்ளூர் சட்டங்களை உருவாக்குதல்.

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| பாலின சமத்துவம் | நன்கு நிறுவப்பட்ட ஆண்கள் மற்றும் பெண்களை வலுவூட்டும் பொறிமுறைகளின் ஊடாக பாலின சமத்துவம் மற்றும் சம பங்கினை உறுதிப்படுத்தல். | • தொழிற்படையில் பாலின அடிப்படையில் ஆணுக்கும் பெண்ணுக்கும் வழங்கப்படும் சம்பளங்களுக்கு இடையிலுள்ள இடைவெளி ஏற்படும் சந்தர்ப்பங்களை இனங்கண்டு தீர்த்தல்.<br>• பெண்களின் காணி உரிமைகளை மோசமான முறையில் பாதிக்கும் சட்ட மற்றும் பிரயோக தடைகளை தீர்த்து வைத்தல்.<br>• பணி புரியும் பெண்கள் எதிர்நோக்கும் குறிப்பிட்ட சவால்களை எதிர்கொள்வதற்கும் வேலை பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் ஏற்கனவே நடைமுறையிலுள்ள தொழில் சட்டங்களைத் திருத்தம் செய்தலும் மற்றும் புதிய ஒழுங்கு விதிமுறைகளை அறிமுகப்படுத்தலும்.<br>• பெண்களை பாதிப்புக்குள்ளாக்கியுள்ள அதிக வட்டி அறவிடும் நியாயமற்ற நுண்நிதி கடன் சுமையிலிருந்து அவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.<br>• பெண்களின் தொழில்முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்காக வங்கி மற்றும் நிதிச் சேவைகளுக்கான அணுகலை மேம்படுத்தல்.<br>• பெண்கள் எதிர்கொள்ளும் சவால்களை எளிதாக்க கல்வி, சுகாதாரப் பராமரிப்பு, போக்குவரத்து, மற்றும் ஏனைய பொதுச் சேவைகளை மேம்படுத்தல்.<br>• கர்ப்பத்தை பாதுகாப்பாக முடிப்பதனை உறுதிப்படுத்துவதற்கு 2012 இல் சட்ட ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல்.<br>• அந்தந்த வயதினருக்குப் பொருந்தக் கூடிய வகையில் முழுமையான பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதாரக் கல்வி தொடர்பான அறிவையும் மற்றும் அது தொடர்பான சேவைகளையும் வழங்குதல்.<br>• பருவ வறுமையை எதிர்த்துப் போராடுவதற்காக பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான வரி நிவாரணம், நிதி ஆதரவு மற்றும் ஏனைய அத்தியாவசிய வளங்களை வழங்குதல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | • பெண்கள் தொடர்பான ஊதியம் வழங்கப்படாத பராமரிப்பு வேலைகளின் சுமையைக் குறைத்தல்.<br>• அரசியல் கல்வி மற்றும் ஒழுங்குபடுத்தலின் ஊடாக பெண்களின் அரசியல் பங்கேற்பை அதிகரித்தல்.<br>• அரசியல் நிறுவனங்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை படிப்படியாக குறைந்த பட்சம் 50 சதவீதமாக உறுதி செய்வதற்கான சட்டங்கள் மற்றும் கொள்கைகளை இயற்றுதல்.<br>• சிறுவர் பராமரிப்பு, முதியோர் பராமரிப்பு, மாற்றுத் திறனுள்ளவர்களுக்கான ஆதரவு உள்ளடங்கலாக ஊதியம் பெறாத பராமரிப்புப் பணிகளை இனங்கண்டு கணக்கில் எடுப்பதற்காக தேசிய தொழிற்படை அளவை ஆய்வுகளை நிறுவனமயமாக்குதல்.<br>• தொழில் தளங்கள், பொதுப்போக்குவரத்து, மற்றும் ஏனைய இடங்களில் பாலினத்தை அடிப்படையாகக் கொண்ட வன்முறைகள், மற்றும் வன்கொடுமைகளைத் தடுப்பதற்கான சட்டங்களையும் மற்றும் செயன்முறைகளையும் திருத்தம் செய்தல்.<br>• பெண்கள், சிறுவர்கள், மற்றும் ஓரங்கட்டப்பட்ட குழுக்களை ஒடுக்கும் தண்டனைச் சட்டக் கோவையின் 365, 365 (அ) உள்ளிட்ட பாரபட்சமான சட்டங்களை திருத்தம் செய்தல்.<br>• பாலின அடையாளம் காணல், மற்றும் பாலியல் நோக்கு நிலையை அடிப்படையாகக் கொண்ட பாரபட்சங்கள் இல்லையென்பதை உறுதி செய்வதற்கு அரசியலமைப்பின் ஊடாக வழங்கப்படும் பாதுகாப்பை விரிவாக்குதல்.<br>• பாலின சிறுபான்மையின் சமூகங்களுக்கான சுகாதாரப் பராமரிப்பு, சட்ட உதவி, சமூக பாதுகாப்பு, மற்றும் நீதி என்பவற்றை மேம்படுத்துவதன் மூலம் சேவைகளுக்கான அணுகலை விருத்தி செய்தல்.<br>• பாலின ஓரங்கட்டப்பட்ட சமூகங்களை கண்காணிப்பதற்கும், மற்றும் பாதுகாப்பதற்கும் பிரத்தியேகமான செயலகமொன்றினை அறிமுகம் செய்தல். |

## 2.4 சிறுவர்களுக்கான பாதுகாப்பானதொரு உலகம் - ஆக்கபூர்வமானதொரு எதிர்கால சந்ததி

### கொள்கை கோட்பாடுகள் –

- சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சம்மேளனம் (UNCRC) போன்ற சர்வதேச சம்மேளனங்களுக்கு ஏற்ப சிறுவர்களுக்கான சுதந்திரத்தையும் மற்றும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் ஒரு சட்ட முறைமை
- சிறுவர்களுக்கான சரியான பராமரிப்பும், மற்றும் போஷாக்கும்.
- அனைத்துச் சிறுவர்களினதும் நல்வாழ்வும் வளர்ச்சியும்
- துஷ்பிரயோகம் மற்றும் அனைத்து வடிவங்களிலுமான வன்முறைகளிலிருந்து சிறுவர்களைப் பாதுகாத்தல்.

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| சிறுவர்களுக்கான பாதுகாப்பானதொரு உலகம் | பொருத்தமான சீர்திருத்தங்கள் மற்றும் சிறுவர்களுக்கு உகந்த சுற்றுச்சூழலொன்றை உருவாக்குவதன் ஊடாக சிறுவர்களைப் பாதுகாத்தல் மற்றும் சிறுவர்களின் நலனை உறுதி செய்தல். | • சிறுவர்கள் மற்றும் இளம் நபர்களுக்கான கட்டளைச்சட்டம், மற்றும் சிறுவர் தத்தெடுப்பு கட்டளைச்சட்டம் அலைந்து திரிபவர்கள் கட்டளைச் சட்டம் மற்றும் அனாதை இல்லங்கள் கட்டளைச் சட்டம் போன்ற காலாவதியான சட்டங்களை மீளாய்வு செய்தல், திருத்தம் செய்தல் மற்றும் ரத்து செய்தல்.<br>• சிறுவர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளைக் கையாள்வதற்காக மாத்திரம் பிரத்தியேகமான விஷேட உயர் நீதிமன்றங்களை ஸ்தாபித்தல்.<br>• பாதிக்கப்பட்ட சிறுவர்களின் சாட்சிகளை சேகரிப்பதற்கு மிகவும் வினைத்திறனான பொறிமுறையொன்றை உருவாக்குதல் மற்றும் அவர்கள் மீண்டும் பாதிக்கப்படுவதைக் குறைக்க தற்போதைய விசாரணை செயன்முறையை விருத்தி செய்தல்.<br>• சிறு குற்றங்களுக்கு குற்றம் சாட்டப்பட்ட சிறுவர்களை நீதிமன்ற முறைமைகளுக்குப் பதிலாக தலையீடு மற்றும் சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட புனர் வாழ்வு நிகழ்ச்சித்திட்டங்களில் ஈடுபடுத்தல்.<br>• ஆபத்தில் இருக்கும் சிறுவர்களை இனங்காணவும், அவர்களது குடும்பங்களிலிருந்து தேவையற்ற பிரிவினையைத் தடுக்கவும் குடும்பத்தை அடிப்படையாகக் கொண்ட பராமரிப்பு மற்றும் ஆதரவை வழங்குதல்.<br>• சட்ட நோக்கங்களுக்காக சிறுவர்களின் பாதுகாப்பான மற்றும் கௌரவமான போக்குவரத்தை உறுதி செய்வதற்காக சிறுவர்களுக்கு உகந்த போக்குவரத்து முறைமை ஒன்றை நடைமுறைப்படுத்தல்.<br>• தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கும் மற்றும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் போன்ற நிறுவனங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பை ஒழுங்குபடுத்தல் மற்றும் அந்நிறுவனங்களின் இயலளவைக் கட்டியெழுப்பல்.<br>• சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பாக புகாரளிப்பதற்கும், பொருத்தமான பின் தொடர்தலையும் உறுதிப்படுத்துவதற்கு வினைத்திறனானதும் மற்றும் பதிலளிக்கக் கூடியதுமான சேவையை நிறுவுதல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | • ஓரங்கட்டப்பட்ட மற்றும் பாதிக்கப்பட்ட குழுக்களை விஷேட கவனம் செலுத்துவதன் மூலம் கல்வி, சுகாதாரம், சமூக சேவைகள் மற்றும் ஏனைய அத்தியாவசிய சிறுவர் நலன்புரி துறைகள் உள்ளிட்ட முக்கியமான பகுதிகளுக்கான வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டினை அதிகரித்தல்.<br>• போஷாக்கான உணவை வழங்குதல் உள்ளிட்ட ஒட்டு மொத்த சிறுவர் ஆரோக்கியத்தை விருத்தி செய்வதற்கு சர்வதேச மற்றும் உள்நாட்டு நிறுவனங்களின் ஆதரவுடன் சமூக, குடும்ப மற்றும் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.<br>• பிரதேச செயலகங்களில் சிறுவர் விவகாரங்கள் தொடர்பான கள உத்தியோகத்தர்களை பயிற்றுவித்தல், மற்றும் ஆபத்தான நிலைமையிலுள்ள சிறுவர்கள் உள்ள குடும்பங்களுக்கு நேரடிச் சேவைகளை வழங்குமாறு அவர்களை வழிநடாத்தல்.<br>• மாற்றுத்திறனுள்ள சிறுவர்கள், தெருவோரச் சிறுவர்கள், பாடசாலை செல்லாத சிறுவர்கள் உட்பட ஆபத்தில் உள்ள சிறுவர்களை முன் கூட்டியே இனங்கண்டு தலையிடுவதற்கான வலுவான பொறிமுறையொன்றினை உருவாக்குதல்.<br>• சிறுவர்களுக்கு உகந்த நட்புறவான சுற்றுச்சூழலொன்றில் வாழ்க்கைத் திறன்கள் மற்றும் அறிவை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்ட சர்வதேச தர நிர்ணயங்களுக்கு ஏற்ப கல்வி சீர்திருத்தங்களை மேற்கொள்ளல்.<br>• மாற்றுப் பராமரிப்பு தேவைப்படும் ஒவ்வொரு குழந்தையும் குடும்பத்தை அடிப்படையாகக் கொண்ட சூழலொன்றில் பராமரிப்பையும் மற்றும் ஸ்திரத்தன்மையையும் பெற்றுக் கொள்வதை உறுதி செய்வதற்காக வளர்ப்புப் பராமரிப்பு முறைக்கு விரிவான சீர்திருத்தங்களை மேற்கொள்ளல்.<br>• சிறுவர்களின் உளவியல் மற்றும் மன நல பிரச்சினைகளை முன் கூட்டியே கண்டறிந்து தடுப்பதற்காக பாடசாலை மற்றும் சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல். |

## 2.5 மன நிறைவு கொண்டதொரு இளமைப்பருவம் - நாகரீக நயமுடைய சுதந்திரமான சிந்தனையாளர்கள்

**கொள்கை கோட்பாடுகள் –**

- பொருளாதாரச் செயன்முறையில் தீவிரமாக ஈடுபடும் இளைஞர்கள்
- அடக்கு முறை, சுரண்டல், பாரபட்சமான நடைமுறைகளிலிருந்து விடுதலை
- சமூக அபிவிருத்திக்கான பங்களிப்பு
- சமூக சவால்களை வெற்றி கொள்வதற்கான விருப்பத்துடன் விஞ்ஞானம், மற்றும் நவீன தொழில்நுட்பம் என்பவற்றில் முன்னேற்றம்
- அரசியல், சமூக, மற்றும் பொருளாதார செயன்முறைகளில் திறன் கொண்ட இளைஞர்கள்
- ஒரு துடிப்பான நாகரீக நயமுடைய வாழ்க்கை மற்றும் சுதந்திரமான சிந்தனை
- தேசிய மற்றும் சர்வதேச தலைமையை ஏற்கும் திறன் கொண்ட திறமையான இளைஞர்கள்
- சமூக அநீதிக்கு எதிராக நிற்கும் இளைஞர்கள்

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| ஒரு வளமான இளமைப்பருவம் | பொருத்தமான வேலை வாய்ப்பு மற்றும் தொழில்முயற்சிகளுக்கான வாய்ப்புக்களைப் பாதுகாத்தல். | ▪ வேலையற்ற இளைஞர்களின் தரவுகளைச் சேகரித்தல் மற்றும் இளைஞர்களின் வேலைவாய்ப்புக்களுக்காக நிகழ்நிலை தளம் ஒன்றின் ஊடாக வேலை வாய்ப்புக்களை நிர்வகிப்பதற்கு வேலை வங்கியொன்றினை ஸ்தாபித்தல்.<br>▪ அரச வேலை வாய்ப்புக்களுக்கான தேர்வுச் செயன்முறை மற்றும் போட்டிப் பரீட்சைகளை புதுப்பித்தல்.<br>▪ அரச பல்கலைக்கழகங்களில் அனுமதி கிடைக்கப் பெறாத இளைஞர்களுக்கு தொழில்சார் மற்றும் தொழில்நுட்ப கல்வியை வழங்குதல்.<br>▪ முன் மொழியப்பட்ட அபிவிருத்தி வங்கிகளின் ஊடாக இளம் தொழில்முயற்சியாளர்களுக்கு நிதி உதவி வழங்கல்.<br>▪ தொழில்முயற்சிகளை ஆரம்பிப்பதற்கும் மற்றும் பொருத்தமான சந்தைகளை கண்டறிவதற்கும் விஷேட திறன்களைக் கொண்ட வேலையற்ற இளைஞர்களுக்கு ஆரம்ப மூலதனத்தை வழங்கல்.<br>▪ "We for the Renaissance (V4R)" டிஜிட்டல் தளத்தைப் பயன்படுத்தி, இளம் கண்டுபிடிப்பாளர்களின் புதிய எண்ணங்கள் மற்றும் எண்ணக்கருக்களை சந்தைப்படுத்தக் கூடிய உற்பத்திப் பொருட்களாக மாற்றுதல்.<br>▪ உலகளாவிய நிகழ்நிலை தொழில் சந்தையை அணுகுவதற்கு தேவையான தொழில்நுட்பத் திறன்கள் மற்றும் வளங்களுடன் இளைஞர்களை தயார்படுத்தல் மற்றும் நிகழ்நிலை தளங்களின் ஊடாக அந்நியச் செலாவணியை உழைக்கும் இளம் சுதந்திரமாக தொழில்புரிவோருக்குள்ள (Freelancers) தடைகளை நீக்குதல்.<br>▪ வெளிநாடுகளிலிருந்து திரும்பும் இளைஞர்களுக்கு அவர்கள் ஆர்வமுள்ள பல்வேறு முதலீட்டுக் கருத்திட்டங்களில் ஈடுபடுவதற்கு வழிகாட்டல்களையும் ஆதரவையும் வழங்கல். |
| எதிர்காலத்திற்கான எதிர்பார்ப்புக்கள் (கல்வி, விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம்) | நவீன கல்வி மற்றும் தொழில்நுட்பத் திறன்களின் ஊடாக இளைஞர்களுக்கான வாய்ப்புக்களை உறுதிப்படுத்தல். | ▪ கைத்தொழில் மற்றும் தொழில்நுட்பப் பாடநெறிகளை பட்டப்படிப்பு மற்றும் பட்டப்பின் படிப்பு மட்ட நிலைகளுக்கு ஏற்றவாறு திருத்தம் செய்தல்.<br>▪ புதிய கல்வி மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கான முன்மொழிவுகளை "வீ போ ஆர் டிஜிட்டல் தளத்தின் (V4R Digital platform) ஊடாக இளைஞர்கள் நேரடியாக அரசாங்கத்திடம் முன்வைக்க அனுமதித்தல்.<br>▪ தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கில நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக தொழில்நுட்பத் திறன்களை மேம்படுத்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | ▪ இளைஞர்களின் திறன் மேம்பாட்டுக்காக பல்-மாதிரி நிலையங்களை (MMC) உருவாக்குதல்.<br>▪ பல்வேறு பட்ட இனங்கள் மற்றும் மதத்தினரிடையே புரிந்துணர்வை வளர்ப்பதற்கு இளைஞர் பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதல். |
| உணர்திறன் கொண்ட இளமைப்பருவம் (கலை, கலாச்சாரம் மற்றும் ஓய்வு). | படைப்பாற்றல் மற்றும் கலைசார்ந்த வெளிப்பாடுகளை வளர்த்தல் | ▪ பாடசாலை மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரை இளைஞர்களின் கலைசார் திறன்களை மதிப்பிடுவதற்கான முறையொன்றை நடைமுறைப்படுத்தல்.<br>▪ ஆக்கபூர்வமான கருத்திட்டங்களுக்கு நிதி உதவி வழங்குதல்.<br>▪ இளம் படைப்பாளிகளுக்கு வருடாந்த விருது வழங்கும் விழாவை ஏற்பாடு செய்தல். |
| ஒரு ஆரோக்கியமான இளமைப்பருவம் (உடல் நலம் மற்றும் மனநலம் , போதைப்பொருள் துஷ்பிரயோகம், மற்றும் பாலியல் கல்வி) | ஆரோக்கியத்தையும் நல்வாழ்வையும் மேம்படுத்துவதன் ஊடாக இளைஞர்களின் ஆரோக்கியத்தை உறுதிப்படுத்தல். | ▪ போதைப்பொருள் துஷ்பிரயோகம் குறித்து இளைஞர்களுக்கு அறிவூட்டல்.<br>▪ புனர்வாழ்வு நிகழ்ச்சித்திட்டங்களை மேம்படுத்தல்.<br>▪ 24 மணிநேர இரகசிய ஆலோசனை மற்றும் மன நல ஆதரவிற்கான "Youth App" ஒன்றினை உருவாக்குதல். |
| உலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள இளமைப்பருவம் (இணைய உலகம் (Cyber Space) மற்றும் தகவல் தொழில்நுட்பம்) | தகவல் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்களுக்கான அணுகலின் ஊடாக டிஜிட்டல் எழுத்தறிவை உறுதிப்படுத்தல். | ▪ தரவு சுதந்திரம் மற்றும் தரவு பிரத்தியேகத்தன்மையை உறுதிப்படுத்தல்.<br>▪ அனைத்து அரச பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள், பாடசாலைகள், மற்றும் நூலகங்கள் ஆகியவற்றில் இலவச இணையத்தள அணுகலை வழங்குதல்.<br>▪ உள்நாட்டு நூலகங்களுக்கு உலகளாவிய இ-நூலக வலையமைப்புக்களை இணைத்தல்.<br>▪ கல்வி, பொருளாதாரம் மற்றும் நாளாந்த வாழ்க்கைக்கான மென்பொருள் மற்றும் எப் (App) ஐ உருவாக்குவதற்கான ஆதரவை வழங்குதல். |
| தலைமைத்தின் எதிர்காலம் | போதிய அளவில் திறன்களையும் மற்றும் இயலளவையும் விருத்தி செய்வதன் ஊடாக படைப்பாற்றல் உள்ள தலைவர்களை உறுதிப்படுத்தல். | ▪ பொருத்தமான கோட்டாக்களின் ஊடாக அரசியல் நிறுவனங்களில் இளைஞர்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தல்.<br>▪ திறமையுள்ள இளம் தலைவர்களை உருவாக்க தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களை மீள்கட்டமைத்தல்.<br>▪ உள்ளூர் மட்டங்களில் இளைஞர் வட்டங்களை நிறுவுதல்.<br>▪ அமைச்சுக்களின் ஆலோசனை சபைகளில் இளைஞர்களின் பிரதிநிதித்துவம்.<br>▪ தேசிய அரசியல் கல்வி நிறுவனம் ஒன்றினை ஸ்தாபித்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | ▪ 2022 போராட்டங்களுடன் தொடர்புடைய தீர்க்கப்படாத, மற்றும் வழக்குத் தொடரப்படாத வழக்குகளுக்கான பொருத்தமான நெறிமுறைகளுடன் சட்ட நடவடிக்கைகளை விரைவுபடுத்துதல். |
| இயற்கையோடு இணைந்திருக்கும் இளமைப்பருவம் | அறிவு மற்றும் பிரயோக அளவீடுகளின் ஊடாக சுற்றுச்சூழல் உணர் திறனுடைய இளமைப்பருவத்தினை உறுதிப்படுத்தல். | ▪ ஒரு தேசிய சுற்றுச்சூழல் செயல்நிலையத்தையும் மற்றும் உள்நாட்டு இளைஞர் சுற்றுச்சூழல் குழுக்களையும் உருவாக்குதல்.<br>▪ சேதமடைந்த சுற்றுச்சூழல் அமைப்புகளை மீட்டெடுப்பதற்கு உதவுவதற்கு திறமை வாய்ந்த தன்னார்வாளர் குழுக்களை உருவாக்குதல்.<br>▪ அறிவு மற்றும் அனுபவ பரிமாற்றத்துக்காக சர்வதேச சுற்றுச்சூழல் நிறுவனங்களுடன் ஒத்துழைத்தல்.<br>▪ மனித - வனவிலங்குகளின் மோதல்களை நிர்வகிப்பதில் இளைஞர்களை ஈடுபடுத்துதல். |
| பாலின அடையாளம் மற்றும் பாலியல் நோக்குநிலைகள்) (வேறுபட்டது ஆனால் சமமானது) | அனைத்து பாலின அடையாளங்கள் மற்றும் பாலியல் நோக்குநிலைகளுக்கு சமத்துவத்தை ஊக்குவித்தல். | ▪ பாலின அடையாளம் மற்றும் பாலியல் நோக்குநிலை தொடர்பான தீங்கு விளைவிக்கும் ஒரே மாதிரியான உணர்வுகளை நீக்குதல். |

## 2.6 கௌரவத்திற்குரியதொரு சிரேஷ்ட பிரஜை - அர்த்தமுள்ளதொரு ஓய்வு வாழ்க்கை

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| கௌரவத்திற்குரியதொரு சிரேஷ்ட பிரஜை - அர்த்தமுள்ளதொரு ஓய்வு | வசதியளிப்புக்களை மேம்படுத்தல் மற்றும் முதியோர் பாதுகாப்பு பொறிமுறையின் ஊடாக சிரேஷ்ட பிரஜைகளின் சிறந்த வாழ்க்கைத் தரத்தை உறுதிப்படுத்தல். | • வீடுகளுக்குள் முதியோர்களை பராமரிக்கத் தேவையான அடிப்படை வசதிகளை வழங்குதல்.<br>• முதியோர்களுக்கான சுகாதார பரிசோதனைகளை நடாத்துவதற்கு முதியோர்களின் சுகாதார பராமரிப்புக் குழுக்களை ஈடுபடுத்தல்.<br>• சர்வதேச தர நிர்ணயங்களை பூர்த்தி செய்யும் முதியோர் பராமரிப்பு நிலையங்களின் அமைப்பொன்றினை உருவாக்குதல்.<br>• முதியவர்களை அவர்களின் மன ஆரோக்கியத்தை பேணுவதற்காக ஆக்கபூர்வமான பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுத்தும் நிகழ்ச்சித்திட்டமொன்றினை அபிவிருத்தி செய்தல்.<br>• விவசாயிகள் மற்றும் மீனவர்கள் உள்ளடங்கலாக தனியார் மற்றும் முறைசாரா துறைகளில் பணி புரிபவர்களுக்கு சமூக பாதுகாப்பு திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தல்.<br>• அனைத்து சிரேஷ்ட பிரஜைகளுக்கும் பாதுகாப்பை உறுதி செய்யும் காப்புறுதி உள்ளடக்க முறைமையொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு நிதியத்தை ஸ்தாபித்தல்.<br>• மத வழிபாட்டுத் தளங்களுக்கு அருகில் நடை பாதைகள் மற்றும் ஓய்வு இல்லங்களை நிர்மாணிப்பதை ஊக்குவித்தலும், மற்றும் சிரேஷ்ட பிரஜைகள் தங்களது அன்றாட வாழ்க்கையை அமைதியாகவும் மற்றும் மகிழ்ச்சியான சுற்றுச்சூழலில் அனுபவிக்க முடியும் என்பதை உறுதி செய்வதற்கு அரசு தலையிடுதல்.<br>• பொது சேவை இடங்களில் சிரேஷ்ட பிரஜைகளுக்காக முன்னுரிமை நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.<br>• நிதி நெருக்கடிகளை எதிர்நோக்கும் முதியோர்களுக்கு நிதி உதவி வழங்குதல். |

## 2.7 தடையற்றதொரு சமூக வாழ்க்கை - நியாயமான மற்றும் சமத்துவமானதொரு அணுகுமுறை

**கொள்கை கோட்பாடுகள் –**

- உகந்த சேவைகளை வழங்குதல்
- அனைத்தையும் உள்ளடக்கிய கல்வி
- பொருளாதார சுதந்திரம்
- பாதுகாப்பும், உரிமைகளும்
- ஆரோக்கியமும், நல்வாழ்வும்
- ஒன்றிணைக்கப்பட்ட அரச சேவைகளும், மற்றும் சமமான அணுகலும்

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| உகந்த சேவை முகாமைத்துவமும், மற்றும் நிர்வாகமும் | மாற்றுத் திறனுள்ளவர்களை சமமாக நடாத்தும் ஒன்றிணைந்த சமூகமொன்றினை உறுதிப்படுத்தல். | ▪ மாற்றுத் திறனாளிகள் தொடர்பான சட்டங்களை திருத்தம் செய்து புதிய சட்டங்களை அறிமுகம் செய்தல், மற்றும் மாற்றுத் திறனாளிகளின் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் சம்மேளனம் (UNCRDP) போன்ற சர்வதேச சம்மேளனங்களை அமுல்படுத்துதல்.<br>▪ மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய திட்டமொன்றினை அபிவிருத்தி செய்தல்.<br>▪ மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்ட சேவைகளின் வினைத்திறனை அளவிடுவதற்கு கணிப்பீட்டுக் கட்டமைப்பொன்றினை ஸ்தாபித்தல்.<br>▪ அரச கொள்கைகள் பற்றிய வளங்கள் மற்றும் தகவல்களுக்கான அணுகலை மாற்றுத் திறனாளிகளின் குடும்பங்களுக்கு வழங்குவதற்கு நிகழ்நிலை தகவல் நிலையமொன்றினை உருவாக்குதல்.<br>▪ நவீன தொழில்நுட்பத்தை வினைத் திறனான முறையில் பயன்படுத்துவதற்கு மாற்றுத் திறனாளிகளுக்கான அறிவையும், பயிற்சியையும் மற்றம் ஆதரவையும் அதிகரித்தல். |
| கல்வி | | ▪ உயர் தரத்திலான, தாங்கு திறனுடைய, சகலதையும் உள்ளடக்கிய மற்றும் அணுகக் கூடிய முன் குழந்தைப் பருவ கல்வியை வழங்குதல்.<br>▪ மாற்றுத் திறனுடைய பாடசாலை மாணவர்களுக்கு சகலதையும் உள்ளடக்கிய கல்வியை உறுதிப்படுத்தல்.<br>▪ பாடசாலை ஆசிரியர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களுககு மத்தியில் சகலதையும் உள்ளடக்கிய கல்வி பற்றிய அறிவையும் மற்றும் விழிப்புணர்வையும் விரிவுபடுத்தல்.<br>▪ பாடசாலைகளில் சைகை மொழியில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைச் சேர்ப்பதை எளிதாக்குதல்.<br>▪ அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் சைகை மொழி மொழி பெயர்ப்பாளர்களுக்கான வசதிகளை வழங்குதல்.<br>▪ அனைத்து கல்வி வலயங்களிலும் விஷேட கல்வி மற்றும் சிறுவர் அபிவிருத்தி வள நிலையங்களை ஸ்தாபித்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | ▪ மாற்றுத் திறனுள்ள மாணவர்களுக்கான ஆரம்ப மற்றும் இரண்டாந்தர பாடசாலைகளில் தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்ப வசதிகளை உறுதிப்படுத்தல்.<br>▪ மாற்றுத் திறனுள்ள மாணவர்களுக்கு மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் விளையாட்டுக்களையும் மற்றும் பாட விதானத்திற்கு புறம்பான நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.<br>▪ மாற்றுத் திறனாளிகளுக்கான இலாபமற்ற பராமரிப்பு நிறுவனங்களுக்கு வரி வெகுமதிகளை வழங்குதல்.<br>▪ மாற்றுத் திறனாளிகளுக்கு தொழில்சார் வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குதல். |
| பொருளாதார சுதந்திரம் | | ▪ மாற்றுத் திறனாளிகளுக்கு அரச மற்றும் தனியார் துறைகளில் 3 சதவீத ஒதுக்கப்படுவதை அமுல்படுத்தல் மற்றும் படிப்படியாக இக்கோட்டவை 5 சதவீதம் வரை அதிகரித்தல்.<br>▪ மாற்றுத் திறனுள்ளவர்களுக்கு வேலை வாய்ப்புக்கள், வர்த்தக உடமை, அபிவிருத்தி மற்றும் சுய தொழில்வாய்ப்பு மற்றும் தொழில்முயற்சிகளை ஊக்குவித்தல்.<br>▪ மாற்றுத் திறனாளிகள் ஒவ்வொருவரும் அவரவர் சவால்களை தொடர்பாடக் கூடிய வகையில் ஒன்றிணைப்பை ஊக்குவிப்பதற்கு வேலைத்தளங்களில் மாற்றுத் திறனாளிகளின் வலையமைப்பை பலப்படுத்தல்.<br>▪ குறைந்த வருமானம் பெறும் மாற்றுத் திறனாளிகளின் குடும்பங்களுக்கு சுய தொழில்வாய்ப்புக்களில் ஈடுபடுவதற்கான நிதி உதவியை விரிவாக்கல். |
| ஆரோக்கியமும், மற்றும் நல்வாழ்வும் | | ▪ மாற்றுத் திறனாளிகளுக்கு தேவைப்படும் சுகாதாரப் பராமரிப்பு தேவைகளை பூர்த்தி செய்வதற்கு சுகாதாரப் பராமரிப்பு வழங்குவோருக்கு உத்தியோகபூர்வ திறன்களையும் மற்றும் மனப்பான்மைகளையும் வழங்குதல்.<br>▪ பொது இடங்களுக்கும் மற்றும் சேவைகளுக்குமான அணுகலை விருத்தி செய்தல்.<br>▪ மன இறுக்கம் உள்ள சனத்தொகையையும், மற்றும் ஏனைய மாற்றுத் திறனாளிகளை முன் கூட்டியே இனங்காண்பதற்கும் சுகாதார வசதிகளை |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | அறிமுகப்படுத்தல் மற்றும் மன இறுக்கமுள்ள சனத்தொகையை குறைப்பதில் தலையீடு செய்தல்.<br>▪ இனங்காணலை எளிதாக்குவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்ட அனுமதி அட்டைகளையும் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான சேவைகளையும் வழங்குதல்.<br>▪ சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் மட்டத்திலும், மற்றும் மாவட்ட மட்டத்திலும் புனர்வாழ்வு வைத்தியசாலைகளின் ஊடாக சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட புனர்வாழ்வு சேவைகளை ஊக்குவித்தல். |
| பாதுகாப்பு, உரிமைகள், மற்றும் நீதி | | ▪ அரச பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் போது மாற்றுத் திறனாளிகளுக்கு உதவுதல்.<br>▪ போக்குவரத்து ஊழியர்களுக்கு மத்தியிலும் மற்றும் நேர் மறையான மனப்பாங்கிளை மேம்படுத்தலும் மற்றும் பொதுப் போக்குவரத்தில் மாற்றுத் திறனாளிகளை நோக்கிய பொது மக்களினதும் நேர்மறையான மனப்பாங்கினை மேம்படுத்தலும்.<br>▪ சட்ட ஆதரவை வழங்கலும் மற்றும் நீதி மன்றங்களுக்கான அணுகலையும் உறுதிப்படுத்தல். |
| அரச சேவைகளும் மற்றும் சமூக ஆதரவும். | | ▪ கட்டடங்களை வடிவமைக்கும் போது மாற்றுத் திறனாளிகளின் பாதுகாப்பையும் மற்றும் அணுகலையும் உறுதிப்படுத்தல்.<br>▪ சமூக, சமய, கலாச்சார நடவடிக்கைகள் மற்றும் பொழுது பொக்கு விளையாட்டுக்களில் பங்கேற்பதற்கு மாற்றுத் திறனாளிகளுக்கான வாய்ப்புக்களை விரிவாக்கல்.<br>▪ மாற்றுத் திறனாளிகள் அரச மற்றும் தனியார் போக்குவரத்தை பயன்படுத்துவதை எளிதாக்குவதற்கு விஷேட போக்குவரத்து சேவைகளை வழங்கலும் மற்றும் அவற்றின் தர நிலைகளை அமுல்படுத்தல்.<br>▪ மாற்றுத் திறனாளிகளுக்கான நிகழ்நிலை சேவைகளுக்கான அணுகலை விருத்தி செய்தல், மாற்றுத் திறனாளிகளுக்கு நன்மை அளிக்கக் கூடிய நவீன கண்டு பிடிப்புக்களை ஊக்குவித்தல்.<br>▪ மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்தும் உதவிச் சாதனங்களை இறக்குமதி செய்வதற்கு வரி விடுதலைகளை வழங்குதல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | ▪ செவித்திறன் குறைபாடுள்ள நபர்களுக்கு தொடர்பாடல் மொழியாக சைகை மொழியை அங்கீகரித்தல்.<br>▪ மாற்றுத் திறனாளிகளின் கலை மற்றும் கலாச்சார பங்கேற்பை மேம்படுத்துவதற்கு சகலதையும் உள்ளடக்கிய அரங்குகள் மற்றும் விளையாட்டு வசதிகளையும் உருவாக்குதல். |

## அத்தியாயம் 3

## 3. நவீனமயமானதொரு வாழ்க்கை – செழிப்பானதொரு தேசம்

### அறிமுகம்: இலங்கையின் பொருளாதார சவால்கள் மற்றும் மறுசீரமைப்பு மூலோபாயங்கள்

சுதந்திரத்திற்குப் பின்னர் எதிர்நோக்கிய ஆழமான மற்றும் சிக்கலான சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளின் காரணமாக, இந்நாட்டின் தற்போதைய பொருளாதார வளர்ச்சியானது வீழ்ச்சியடைந்துள்ளதோடு, உண்மையான குடும்ப வருமானமானது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூட முடியாத அளவுக்கு குறைவடைந்துள்ளது. அந்நியச் செலாவணி ஒதுக்குகளினதும் மற்றும் அந்நியச் செலாவணி வீதத்தினதும் பலவீனமான முகாமைத்துவம், நாட்டின் கடனின் தரப்படுத்தலானது தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து வந்துள்ளமை, குறைவான வெளிநாட்டு முதலீடு, மற்றும் உயர்வான இறக்குமதிச் செலவுகள், மற்றும் வளர்ச்சியுறாத ஏற்றுமதி வருவாய்கள் என்பனவற்றின் காரணமாக நாட்டின் பொருளாதாரத்தின் வெளிநாட்டுத் துறையானது நாளுக்கு நாள் பலவீனமடைந்து வருகின்றது. வினைத்திறனின்மை, ஊழல் மோசடி, மற்றும் வரி புறக்கணிப்பு, என்பனவற்றின் காரணமாக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சதவீதமாக நாட்டின் வரி வருவாயானது வீழ்ச்சியடைந்துள்ளது. பலவீனமான அரசிறை முகாமைத்துவமானது, தேசிய படுகடன் சுமையை 1990 ஆம் ஆண்டில் ரூபா 310 பில்லியனிலிருந்து 2024 ஆம் ஆண்டில் ரூபா 28 டிரில்லியனாக அதிகரிப்பதற்கு வழிவகுத்துள்ளது. இந்நாட்டின் பொருளாதார நன்மைகளின் விநியோகத்திலும் கடுமையான ஒரு வேறுபாட்டைக் காணக்கூடியதாக உள்ளது. நாட்டின் தேசிய வருமானத்தில் 50 சதவீதமான உச்ச வருமானமானது 20 சதவீதமான மக்களாலே அனுபவிக்கப்படும் அதே வேளை, 26 சதவீதமான சனத்தொகையானது, வறுமையில் வாழ்கின்றது.

விவசாயத்துறையானது, காலாவதியான நடைமுறைகள் மற்றும் கொள்கைகளால் சவால்களை எதிர்கொள்வதோடு. இந்நிலையானது, அதிக உற்பத்திச் செலவுக்கும் மற்றும் குறைந்த விவசாய வருமானத்திற்கும் வழிவகுத்துள்ளது. புதிய கொள்கைகள் உற்பத்தித் திறனையும் மற்றும் நிலைபேறான தன்மையையும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. இதே போல, கால்நடைத்துறையானது, போஷாக்கிற்கு இன்றியமையாததாக இருந்தாலும் கூட, தீவனப் பற்றாக்குறை, நோய்கள் மற்றும் போதிய சேவைகள் இல்லாமை ஆகியவற்றினால், போராடிக் கொண்டிருக்கின்றது. .

மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான மீன்பிடித்துறையின் பங்களிப்பு மற்றும் மீன் நுகர்வானது, வீழ்ச்சிப் போக்கொன்றை காட்டுவதோடு. இது பொது சுகாதாரத்தை பாதித்துள்ள அதே வேளை, அதிக செலவுகள் மற்றும் சட்ட விரோத மீன் பிடித்தல் ஆகியன நிலைறோன நிலைமையை உருவவாக்குவதற்காக எடுக்கப்படுகின்ற முயற்சிகளை சிக்கலான நிலைமைக்கு உள்ளாக்கியுள்ளது.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்துறையில் திறமை வாய்ந்த தொழிற்படை இருந்த போதிலும் கூட, திறன் இடைவெளி மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியிலான வரையறுக்கப்பட்ட முதலீடுகள் என்பன வளர்ச்சியைத் தடுக்கின்றன.

இலங்கை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.12 சதவீதத்தை மாத்திரமே ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியில் முதலீடு செய்கிறது. இது ஒப்பிடக் கூடிய நாடுகளை விட மிகக் குறைவாக உள்ளதோடு, புத்தாக்காத்துக்கான சாத்தியப்பாட்டினை வரையறுக்கின்றது. கைத்தொழில் வளர்ச்சியானது, வங்காளதேசம், வியட்நாம் போன்ற நாடுகளையும் விட பின் தங்கிய நிலையில் உள்ளது. இதனால், உள்ளூர் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் மற்றும் முதலீட்டை ஈர்ப்பதற்கும் ஒரு திட்டம் வகுக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

கனிய வளங்களின் குறைந்த பயன்பாடும் மற்றும் இரத்தினக்கல் கைத்தொழிலில் தற்போது உள்ள காலாவதியான ஒழுங்கு விதிகளும் வளர்ச்சிக்கான வாய்ப்புக்களை தவற விட்டுள்ளன.

எரிசக்தித் துரறையின் அதிக செலவிற்குக் காரணம் முதன்மையாக எண்ணெய்யை நம்பியிருத்தலாகும். இது தூய எரிசக்தியை நோக்கி மாற வேண்டியதன் அவசியத்தை எடுத்துக் காட்டுகிறது.

போக்குவரத்தின் வினைத்திறனற்ற நிலைமையானது, விபத்துக்ளின் விகிதாசாரத்தை அதிகரிப்பதற்கு பங்களித்துள்ளமையை காணக்கூடியதாக உள்ளது. இலங்கையின் மூலோபாய கடல்சார் அமைவிடமானது பிரதான துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்கான வாய்ப்பினை வழங்குகின்றது. காலணித்துவச் சட்டங்களினால் வேருன்றிய நில முகாமைத்துவ பிரச்சினைகள் சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வை நிலைநிறுத்துகின்றன. நிர்மாணத்துறைக் கைத்தொழிலானது, வினைத்திறனற்ற நிலைமையையும் மற்றும் ஊழலையும் எதிர்கொள்வதோடு, பொருளாதார முன்னேற்றத்தை மேம்படுத்துவதற்கு துறைகளுக்கு இடையில் முழுமையான சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

**கொள்கை கூற்று**

இலங்கையில் அனைத்து பிரஜைகளையும் மேம்படுத்தும் ஒரு நெகிழ்திறனைக் கொண்ட, சகலதையும் உள்ளடக்கிய மற்றும் நிலைபேறான பொருளாதாரமொன்றை உருவாக்குதல்.

## 3.1 ஒரு ஜனநாயக பொருளாதாரம் - செல்வம் மிகுந்ததொரு நாடு

### கொள்கை கொட்பாடுகள் –

- மனித குலத்திற்கான முன்னுரிமை
- பொருளாதார சனநாயகம்
- மக்கள் பங்கேற்பு, சமத்துவமான மற்றும் உள்ளடக்கிய சமூகம்
- உணவுப் பாதுகாப்பு
- பொருளாதார நன்மைகளில் நியாயமான பங்கு
- நிலைபேறான வளப்பயன்பாடு
- வர்த்தகமயமாக்கப்படாத பொதுச் சேவைகள் மற்றும் சமூக பாதுகாப்பு
- சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் ஒற்றுமை
- ஊதியம் பெறாத தொழிலாளர் பங்களிப்பை பராமரிப்புப் பொருளாதாரமொன்றாக அங்கீகரித்தல்
- முற்போக்கான மற்றும் நியாயமான வரி விதிப்பு

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| அரசிறைத் துறை | வரி நிர்வாகத்தில் வினைத்திறனையும் நியாயத்தையும் மேம்படுத்தல். | • சர்வதேச கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விஷேட பிரிவொன்றைக் கொண்டு வரிக்கொள்கைகளை வடிவமைத்தல் மற்றும் அமுல்படுத்துவதற்கான ஒரு புதிய பிரத்தியேக பிரிவை நிறுவுதல்.<br>• வரி நிர்வாகத்தில் வினைத்திறனை மேம்படுத்துவதற்கு தேவையான சட்ட சீர்திருத்தங்களை மேற்கொள்ளல்.<br>• உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி வழங்கல் மற்றும் இயலளவை மேம்படுத்தல்.<br>• நிலுவையில் உள்ள வரிகளை விரைவாக வசூலிப்பதற்கான நடவடிக்கைகளை அமுல்படுத்தல்.<br>• நியாயமான அடிப்படையில் வரி விகிதங்களையும் மற்றும் வரிக் குழுக்களையும் திருத்தம் செய்தல்.<br>• பெறுமதிச் சேர்க்கை வரி விதிப்பிற்குப் பொருத்தமான பொருட்களை வகைப்படுத்தலும் மற்றும் ஒவ்வொரு வகையீட்டுக்கும் வேறுபட்ட வரி விகிதத்தை அறிமுகப்படுத்தல்.<br>• ஏற்றுமதியாளர்களுக்கான உள்ளீட்டு பெறுமதிச் சேர்க்கை வரி மீதான ஏற்றமதி அபிவிருத்தி வரி தள்ளுபடியை வழங்குவதனை துரிதப்படுத்தல்.<br>• தற்போதைய விருப்புரிமை வரிக் கணக்காய்வுகளிலிருந்து இடரை அடிப்படையாகக் கொண்ட கணக்காய்வுகளுக்கு மாறுதல்.<br>• இறக்குமதி / ஏற்றுமதி செயற்பாடுகளை நெறிப்படுத்துவதற்காக ஏனைய அரச நிறுவனங்களை இலங்கை சுங்கத் திணைக்களத்துடன் ஒருங்கிணைத்து ஒற்றைச் சாளர சேவையை நிறுவுதல்.<br>• நியாயமான அடிப்படையில் சுங்க வருவாயை அதிகரிப்பதற்கு சிக்கலான கட்டணக் கட்டமைப்பை எளிதாக்குதல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | • மிகவும் வினைத்திறனான மற்றும் கிரய விளைவுள்ள சேவைகளை வழங்குவதற்கு இலங்கை சுங்கத்திணைக்களத்தின் செயற்பாடுகளை பரவலாக்குதல்.<br>• ஏற்றுமதி தயாரிப்பில் உள்ள நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு உதவுவதற்கு TIEP திட்டத்தின் கீழ் மூலப்பொருட்கள், மற்றும் இயந்திரங்களுக்கான தற்காலிக இறக்குமதி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல<br>• சர்வதேச பொருத்தனைகள் மற்றம் வழிகாட்டல்கள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான உலகளாவிய குறைந்த வரியொன்றினை விதிப்பதற்கான பொறிமுறையொன்றினை அபிவிருத்தி செய்தல்<br>• வரி வினைத்திறன் மற்றும் நியாயத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக கலால் திணைக்களம், இலங்கை சுங்கத்திணைக்களம், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம், மற்றும் காணிப்பதிவு அலுவலகம் என்பனவற்றின் செயற்பாடுகளை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் ஒருங்கிணைத்தல்.<br>• பெறுமதிச் சேர்க்கை வரியை நெறிப்படுத்துவதற்காக விற்பனைப் புள்ளிகள் (POS) முறைமைகளையும், மற்றும் டிஜிடல் பட்டியலிடலையும் அறிமுகம் செய்தல்.<br>• வரி மதிப்பீடு, கோவைப்படுத்தல், செலுத்துதல், மேலதிக வரியைத் திரும்பச் செலுத்தல் என்பனவற்றுக்கான கைத்தொலைபேசி பயன்பாட்டுடன் இணைக்கப்பட்ட நிகழ்நிலை முறை ஒன்றை அறிமுகப்படுத்தல்.<br>• சர்வதேச கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான கசிவுகள் மற்றும் வரி புறக்கணிப்புக்கள் என்பனவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் நாடுகளிடையே |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
| --- | --- | --- |
| | | விலையிடல் மற்றும் தானியங்கி தகவல் பரிமாற்றம் (AEoI) ஆகியவற்றை மாற்றுதல். |
| | பொது நிதியின் முகாமைத்துவம், வினைத்திறன், வெளிப்படைத்தன்மை, பொறுப்புணர்வு மற்றும் நிதி ஒழுக்காற்று என்பனவற்றை விருத்தி செய்தல். | • .அரசுடமை தொழில்முயற்சிகளின் மூலோபாய முக்கியத்துவம், பொருளாதார வளர்ச்சிக்கான சாத்தியப்பாடு, உற்பத்திப் பொருளாதாரத்தை ஊக்குவிப்பதற்கான கொள்ளளவு, நிதி ஸ்திரத் தன்மையின் மீதான தாக்கம், மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான தொடர்புத் தன்மை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான மூலோபாய தீர்மானங்களை எடுத்தல்.<br>• வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக அரசுடமை தொழில்முயற்சிகளின் செயற்பாடுகள் தொடர்பான முழுமையான தகவல்களுக்கான அணுகலை பெற்றுக் கொள்வதற்கு பொது மக்களுக்கு வசதியளித்தல்.<br>• படுகடனின் நிலைபேறான தன்மையை பேணுதல், மற்றும் தாங்கக்கூடிய மட்டத்துக்கு படுகடனுக்கான வட்டி வீதத்தை பேணும் நோக்குடன் தேவைக்கேற்ப, படுகடன் மீள்கட்டமைப்பில் ஈடுபடும் போது பயன்படுத்துவதற்காக மாற்று படுகடன் நிலைபேறான தன்மை ஆய்வு (DSA) ஒன்றினை தயாரித்தல்.<br>• பொது நிதி முகாமைத்துவத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள் தொடர்பாக விரிவான படுகடன் கணக்காய்வு ஒன்றினை நடாத்துதல் மற்றும் அத்தகைய கடன்களை மோசடி செய்தவர்களுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுத்தல்.<br>• நாட்டின் கடன் தரப்படுத்தல் மற்றும் வங்கி முறைமையினை தரமுயர்த்துவதற்காக பொது நிதி முகாமைத்துவம் மற்றும் நிதி ஒழுக்காற்றையும் விருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.<br>• இ- கொள்முதலை மேம்படுத்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| நாணயத்துறை | பொருளாதார நடவடிக்கைகளுக்கு சிறந்த நிதி ஆதரவையும், மற்றும் நிதி முறை ஸ்திரத்தன்மையை மேம்படுத்தலையும் உறுதிப்பபடுத்தல். | • நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளின் பொருளாதார நடவடிக்கைகளை மீட்டெடுக்கவும், நிலுவையிலுள்ள கடன்களுக்கு நிவாரணம் வழங்கவும் “ நிவாரண வங்கி” ஒன்றினை நிறுவுதல்.<br>• தொழில்முயற்சியாளர்களுக்கு புதிய வியாபாரம் ஒன்றினை ஆரம்பிப்பதற்கும், ஏற்கனவே உள்ள வியாபாரத்தை விரிவாக்குவதற்குமான நீண்ட கால நிதியை வழங்குவதற்கு புதிய தேசிய அபிவிருத்தி வங்கியொன்றினை ஸ்தாபித்தல்.<br>• சிறிய அளவிலான விவசாயிகள், தொழில்முயற்சியாளர்கள், மற்றும் முதலீட்டாளர்களுக்கான நிதி வசதிகளை வினைத்திறனான முறையில் வழங்குவதற்கு கூட்டுறவு வங்கிகள் சமூர்த்தி வங்கிகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கிகளை வழிநடாத்தல்.<br>• அந்நியச்செலாவணி சந்தை உள்ளிட்ட நிதிச் சந்தைகளின் ஸ்திரத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு கொள்கை வட்டி வீதங்களை நிலை நிறுத்தல்.<br>• வங்கிப் பணம் மற்றும் சேமிப்புக்களை உற்பத்திப் பொருளாதார செயற்பாடுகளில் முறையாக முதலிட புதிய நிதித் திட்டங்களை அறிமுகப்படுத்தல்.<br>• ஸ்திரத்தன்மை மற்றும் வினைத்திறனை மேம்படுத்த அரச வங்கிகளுக்கு மீள்மூலதனமிடல். |
| | நுண்நிதிச் செயற்பாடுகளின் கண்காணிப்பு, மற்றும் தரப்படுத்தலை மேம்படுத்துவதை உறுதி செய்தல், சிறந்த சேவை வழங்கலை உறுதி செய்தல்,<br>. | • சட்ட ஏற்பாடுகள் மற்றும் வழங்கப்பட்ட வழிகாட்டல்களுக்கு முரணான முறையில் வழங்கப்பட்ட நுண்நிதிக்கடன்களை மீளாய்வு செய்ததன் பின் தள்ளப்பட்ட தரப்பினருக்கு நிவாரணங்களை வழங்குதல்.<br>• நுண்நிதி வழங்குவோரை இலங்கை மத்திய வங்கியில் பதிவ செய்வதற்கு ஊக்குவித்தலும், அந்நிறுவனங்களை கண்காணிப்பை தரப்படுத்தலும் |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | நிதிக் குற்றங்களைக் கண்டறிதல் மற்றும் தடுக்கும் செயன்முறையை பலப்படுத்தல். | • அரச நிறுவனங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பை முறைப்படுத்துவதன் மூலம் இலங்கை மத்திய வங்கியின் நிதிப் புலனாய்வுப் பிரிவை (FIU) வலுப்படுத்தல். |
| வெளிநாட்டுத் துறை | தேசிய முன்னுரிமைகள் மற்றும் உலகளாவிய நிலைபேறான நிகழ்ச்சி நிரல்களுடன் சீரமைப்பை உறுதி செய்யும் அதே வேளை, நீண்ட கால பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதை உறுதிப்படுத்தல். | • வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களின் பிணை முறிகள் (Expatriate Bonds) உள்ளிட்ட புதிய சேமிப்புக்கள் மற்றும் முதலீட்டுத் திட்டங்களை அறிமுகம் செய்தல்.<br>• நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் பிரதேச அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு நிதியளிக்க புதிய அபிவிருத்திப் பிணை முறிகளை வழங்குதல்.<br>• உலகளாவிய நீல பசுமை நிகழ்ச்சி நிரல்கள் மூலம் நிலைபேறான அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கான நிதி அணுகலுக்கான பிணை முறிகளை வழங்குதல்.<br>• தேசிய முன்னுரிமைகளுடனும் மற்றும் அபிவிருத்தி மூலோபாயங்களுக்குப் பொருத்தமான முன்மொழியப்பட்ட மற்றும் தற்போது நிறுத்தப்பட்டுள்ள வெளிநாட்டு நேரடி முதலீடுகளை (FDI) துரிதப்படுத்தல்.<br>• ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் மூலம் வெளிநாட்டு வர்த்தகத்தின் பங்கை அதிகரிப்பதற்கு நடைமுறையிலுள்ள வர்த்தக உடன்படிக்கைகளை மீளாய்வு செய்தலும் மற்றும் புதிய உடன்படிக்கைகளை மேற்கொள்ளலும்.<br>• சுற்றுலா மற்றும் தகவல் தொழில்நுட்ப கைத்தொழில்களிலிருந்தான அந்நியச் செலாவணி வருவாயை அதிகரிப்பதற்கும் துரிதப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டமொன்றினை நிறைவேற்றுதல்.<br>• பணவனுப்பல் உட்பாய்ச்சல்களை ஒத்திசைத்தல் மற்றும் செயற்பாட்டு வினைத்திறனை விருத்தி செய்தல் என்பனவற்றிற்காக அந்நியச் செலாவணி சட்டத்தை திருத்தம் செய்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| முதலீட்டு ஊக்குவிப்பு | முதலீட்டுக்கு பொருளாதார ஜனநாயகத்துடன் உகந்த சூழலொன்றை உருவாக்குதல, | • முதலீடுகளை ஒருங்கிணைத்து ஊக்குவிக்கும் இலங்கை முதலீட்டுச் சபை உள்ளிட்ட நடைமுறையிலுள்ள அரச நிறுவனங்களை ஒருங்கிணைப்பதன் மூலம் ஒற்றை அதிகாரம் பெற்ற நிறுவனத்தை ஸ்தாபித்தல்.<br>• முதலீடுகளை ஏற்றுக் கொள்வதற்கும் மற்றும் தக்க வைத்துக் கொள்வதற்கும் சர்வதேச மட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கோட்பாடுகள், மற்றும் நடைமுறைகளுக்கு ஏற்ப வெளிப்படைத்தன்மை மற்றும் நியாயத்தை உறுதி செய்வதற்கான சட்டக் கட்டமைப்பொன்றை அறிமுகப்படுத்தல்.<br>• புதிய வியாபாரங்களுக்குள் எளிதாக நுழைதல், முதலீட்டு வாய்ப்புக்களை தேடுவதில் சம வாய்ப்பு, பயன்பாடுகளை இலகுவாக பெற்றுக் கொள்வதற்கான எளிதான அணுகல், தேவையான திறன் வாய்ந்த தொழில், வினைத்திறனான நிதிச் சேவைகள், சர்வதேச வர்த்தகத்தில் நுழைவதற்கான திறன், நியாயமான மற்றும் வெளிப்படைத்தன்மை வாய்ந்த வரி விதிப்பு, வினைத்திறனான முறையில் சர்ச்சைகளை தீர்த்தல், நடுத்தீர்ப்புப் பொறிமுறை, மற்றும் சந்தைப் போட்டித் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.<br>• வர்த்தகப் பதிவு, அனுமதிப்பத்திரங்களை வழங்கல், காணிப் பயன்பாட்டிற்கான அனுமதிப்பத்திரங்கள், மற்றும் சான்றுப்பத்திரங்களை வழங்கல் மற்றும் அனுமதியை வழங்கல், போன்றவற்றை மற்றும் ஒன்றிணைக்கப்பட்ட முறையொன்றின் ஊடாக மின்சாரம், நீர் மற்றும் தொடர்பாடல் சேவைகள், மற்றும் ஏனைய வசதிகளை எளிதாக்குவதற்காக ஒற்றைச் சாளர முறையொன்றினை நிறுவுதல்.<br>• முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்காக உலகளாவிய போட்டிச் சுட்டெண்ணில் இலங்கையின் தர வரிசையை உயர்த்த நடவடிக்கை எடுத்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | • புதிய முதலீட்டு வாய்ப்புக்களுக்கான துணிகர மூலதன நிதியை ஊக்குவித்தல்.<br>• மூலதனச் சந்தையை வினைத்திறன் வாய்ந்ததாகவும், உற்பத்தித் திறன் வாய்ந்ததாகவும் பேணுவதற்கும், முதலீட்டாளர்களின் தன்னம்பிக்கையை கட்டியெழுப்பவும் மற்றும் உள்வாரியான வர்த்தகம் மற்றும் ஊழலையும் மோசடிகளையும் தடுக்கவும் அரச நிறுவன அமைப்பை மீள்கட்டமைத்தல்.<br>• மூலோபாய ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த துறைகளை முன்னுரிமைப்படுத்துவதன் மூலம் அரச – தனியார் - மக்கள் - பங்கேற்பில் (PPPP) நீண்ட கால வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்தல்.<br>• இலங்கை வெளிநாட்டவர்கள் அவர்களது வருவாய்களை முதலிடுவதற்காக விஷேட நன்மைகளுடனான முதலீட்டுத் திட்டங்களை அறிமுகப்படுத்தல்.<br>• மூலதன உருவாக்கத்திற்கான ஆரம்ப பொது சலுகைகளுக்கு (IPOs) பொருத்தமான வரிச் சலுகைகளை வழங்குதல்.<br>• சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளின் பட்டியலிடலை எளிதாக்குதல், பொறுப்பான, தகவல்களை அறிக்கையிடல், இணக்கமுள்ள, வெளிப்படைத் தன்மையுள்ள நிர்வாகத்தை எளிதாக்கும் வினைத்திறனுடைய மற்றும் அபிவிருத்தியுற்ற பாதுகாப்புப் பரிமாற்ற நிலையமொன்றாக மூலதனச் சந்தையை மேம்படுத்தி விரிவுபடுத்தல்.<br>• இது சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் (ILO) கோட்பாடுகளுக்கு இணங்க நியாயமான நடாத்தல், நியாயமான ஊதியம், மற்றும் பாதுகாப்பான தொழில் நிபந்தனைகள் என்பவை உள்ளடங்கலாக ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | • ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பின் மூலம் ஊழியர்களை வலுவூட்டல், உற்பத்தித் திறனை அதிகரித்தல், மற்றும் ஒவ்வொரு தரப்பினருக்கும் ஜனநாயக ரீதியாக பொறுப்புக்களை ஒப்படைத்தல், மற்றும், கூட்டு முயற்சிகளின் ஊடாக தொழிலாளர் மற்றும் உற்பத்தி உறவுகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.<br>• பங்குதாரர்களின் ஈடுபாட்டின் ஊடாக கைத்தொழில் உறவுகளின் உள்ள முரண்பாடுகள் மற்றும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான ஒரு பொறிமுறையை உருவாக்குதல். |
| உள்நாட்டு வர்த்தகம் | பன்முகப்படுத்தப்பட்ட அணுகுமுறைகளின் ஊடாக போது மக்களுக்கு உயர் தரத்திலான பொருட்களையும் மற்றும் சேவைகளையும் தொடர்ச்சியாக வழங்குவதை உறுதிப்படுத்தல். | • மாவட்ட மட்டத்தில் பெரிய அளவிலான பொருளாதார மற்றும் பரிமாற்ற நிலையங்களை ஸ்தாபித்தல்.<br>• நியாயமான மற்றும் உயர்ந்த தரமான முறையில் பொருட்கள் மற்றும் சேவைகளின் வர்த்தகத்தின் தொடர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கும், மற்றும் நுகர்வோர் உரிமைகளை பாதுகாப்பதற்கும், மற்றும் வர்த்தகம் தொடர்பான தகவல்களின் வெளிப்படைத்தன்மை என்பனவற்றை உறுதிப்படுத்துவதற்கும் கண்காணிப்பு பொறிமுறையொன்றையும், மற்றும் நிகழ்நிலையிலான தகவல் முகாமைத்துவ முறை ஒன்றினையும் உருவாக்குதல்.<br>• வர்த்தகம் மற்றும் விநியோகத்தின் சீரான செயற்பாட்டிற்காக நிதி, வங்கியியல், போக்குவரத்து, காப்புறுதி, தகவல் தொடர்பு, பொதியிடல், களஞ்சியப்படுத்தல், போன்ற துணை சேவைகளை வழங்குவதற்கு ஒருங்கிணைக்கப்பட்ட சேவை முகாமைத்துவ பொறிமுறை ஒன்றை நடைமுறைப்படுத்தல்.<br>• உற்பத்திக்கும் மற்றும் நுகர்வுக்கும் இடையிலான வர்த்தகத்தில் பெறுமதி சேர்க்காத தேவையற்ற இடைத்தரகர்களை நீக்கி அவர்களை செயலூக்கமுள்ள பெறுமதி படைப்பாளர்களாக மாற்றுவதற்கு வசதியளித்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | • சந்தையில் நிலவும் சமச்சீரற்ற தகவல்களை அகற்ற அவசியமான சட்ட சீர்திருத்தங்கள் மற்றும் புதிய சட்டங்களை அறிமுகப்படுத்தல்.<br>• வெளிநாட்டு கொள்வனவாளர்களை இலக்காகக் கொண்டு இரத்தினக்கற்கள், நகைகள், விலையுயர்ந்த கற்கள், துணிகள் மற்றும் கைவினைப் பொருட்கள் உள்ளிட்ட சாத்தியமான பொருட்களுக்கான சந்தைகளை நிறுவுதல், மேம்படுத்தல் மற்றும் நவீனமயப்படுத்தல்.<br>• நுண், சிறிய மற்றும், நடுத்தர அளவிலான வர்த்தக சமூகங்கள் எதிர்நோக்கும் வர்த்தகம் தொடர்பான பிரச்சினைகளை விசாரணை செய்வதன் மூலம் தீர்ப்பதற்கு பொறிமுறையொன்றை நடைமுறைப்படுத்தல்.<br>• விலையேற்றத்தை தடுத்தல், சந்தையில் பொருட்களின் பற்றாக்குறையை உருவாக்கலைத் தடுத்தல், சந்தையில் ஏக போக உரிமை மற்றும் சிலர் ஆதிக்கம், மற்றும் கார்டெல்ஸ் கூட்டு அமைப்புக்கள் உருவாவதைத் தடுத்தல்.<br>• மையப்படுத்தப்பட்ட தகவல் முறைமையொன்றின் ஊடாக விநியோகிக்கப்பட்ட பொதுச் சேவைகளின் தரத்தை கண்காணிப்பதற்கும் மற்றும் நிர்வகிப்பதற்கும் ஒஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு முறைமையொன்றை ஸ்தாபித்தல். |
| வெளிநாட்டு வர்த்தகம் | ஏற்றுமதிப் பொருட்களினதும், மற்றும் சேவைகளினதும் பன்முகப்படுத்தலை ஊக்குவித்தலை உறுதிப்படுத்தல் மற்றும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல். | • ஏற்றுமதிப் பொருட்கள் மற்றும் சேவைகளின் பன்முகப்படுத்தலை ஊக்குவித்தல் மற்றும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கல்.<br>• ஏற்றுமதிக் கடன் வசதிகள், சான்றுப்படுத்தல் சேவைகள், காப்புறுதி, புதிய சந்தை , கேள்விப் போக்குகள், புதிய சந்தை கண்டு பிடிப்புகள், மற்றும் உலகளாவிய பெறுமதிச் சங்கிலிகள் தொடர்பான தகவல்களை வழங்குவதன் மூலம் உற்பத்தியாளர்களுக்கும் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கும் தேவையான வசதிகளை வழங்குதல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
| --- | --- | --- |
| | | • இந்தியா, சீனா, துணை – சஹாரா ஆபிரிக்கா, மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பா ஆகிய நாடுகளில் விஷேடமாக உலகளாவிய நிரம்பல் மற்றும் பெறுமதிச் சங்கிலிகளில் கவனம் செலுத்துவதன் மூலம் பொருட்களினதும் மற்றும் சேவைகளினதும் வர்த்தகத்தை மேம்படுத்துதல்.<br>• கடல் சார் பாதுகாப்பு, வர்த்தகம் - மசகெண்ணெய், எரிபொருள், எரிவாயு, கனிய வளங்கள் மற்றும் வாசனைத் திரவியங்கள் உள்ளிட்ட பொருட்களை வர்த்தகம் செய்வதற்கு வாணிபர்களுக்கான பொருட்கள் சேவைகளின் பரிவர்த்தனைச் செலவைக் குறைப்பதற்கும் மற்றும் செயற்பாட்டு வினைத்திறனை அதிகரிப்பதற்கும் வசதியளிக்கக் கூடிய சர்வதேச வர்த்தக மையமொன்றினை நிறுவுதல்.<br>• பாரம்பரியமற்ற மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திப் பொருட்களையும் உற்பத்திப் பொருட்களையும் மற்றும் ஏற்றுமதிகளையும் ஊக்குவித்தல்.<br>• உள்ளூர் உற்பத்திப் பொருட்களைப் பாதுகாத்தல், உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல், உற்பத்திக்கான மூலப்பொருட்களை எளிதாக அணுகுதல், அத்தியாவசிய பொருட்கள் மற்றும் முதலீட்டுப் பொருட்களுக்கான முன்னுரிமை மற்றும் இறக்குமதிகளுக்கான போட்டி ரீதியான அணுகல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு உற்பத்திப் பொருட்கள் மற்றும் இறக்குமதிக் கொள்கையை திருத்தம் செய்தல்.<br>• பொருட் குவிப்புச் சட்டங்களை ( anti-dumping laws) வலுப்படுத்தல், புதிய நியாயமான வர்த்தகச் சட்டங்களை அறிமுகப்படுத்தல், மற்றும் ஏற்கனவே உள்ள ஒழுங்குமுறைகளைப் புதுப்பித்தல்.<br>• இலங்கையின் உற்பத்திப் பொருட்களின் வர்த்தக நாமம் மற்றும் நன்மதிப்பை சேதப்படுத்தாத வகையில் பெறுமதி சேர்க்கப்பட்ட மீள் ஏற்றுமதிகள் மற்றும் மறுவியப்பு மைய (entrepot) வர்த்தக |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | நடவடிக்கைகளுக்கு அவசியமான வசதிகளை ஊக்குவித்தலும், வழங்கலும்<br>• சான்றுப்படுத்தல் மற்றும் தர கண்காணிப்பின் ஊடாக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் தரத்தை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.<br>• மூலோபாய வர்த்தக உடன்படிக்கைகள், ஏற்றுமதி ஊக்குவிப்பு முயற்சிகள், மற்றும் வலையமைப்பு வாய்ப்புக்கள் என்பனவற்றின் ஊடாக உள்ளூர் மற்றும் சர்வதேச மட்டங்கள் இரண்டிலும் சந்தை அணுகலை இயக்குதல். |

## 3.2 உயர்வான உற்பத்தித் திறன் - உணவுப் பாதுகாப்புள்ளதொரு தேசம்

**கொள்கை கோட்பாடுகள் –**

- தேசிய உணவும் மற்றும் போஷாக்குப் பாதுகாப்பும்
- விவசாய முறைகளில் உயர் உற்பத்தித் திறனும் மற்றும் வினைத்திறனும்
- உறுதியான விவசாய தொழில்முயற்சிகளும் மற்றும் நிலைபேறான சந்தைகளும்
- சரியான நில முகாமைத்துவம்
- விவசாய நடைமுறைகளில் பொருத்தமான முகாமைத்துவம்
- சுற்றுச்சூழல் ரீதியாக உகந்த செயற்பாடுகள்
- விவசாய உற்பத்தியாளர்களை வலுவூட்டல்
- காலநிலை தணிப்பும் மற்றும் ஏனைய இடர்களும்
- விவசாய ஆராய்ச்சி, விரிவாக்கம் மற்றும் அறிவு முகாமைத்துவம்
- வினைத்திறன் முகாமைத்துவமும் மற்றும் விவசாயச் செயற்பாடுகளின் கட்டுப்பாடும்

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| தேசிய உணவுப் பாதுகாப்பு | உணவு முறைகளில் உற்பத்தித் திறனையும் மற்றும் நெகிழ்திறனையும் ஏற்பாட்டியலில் வினைத்திறனையும் அதிகரித்தல். | • அனைத்து சாத்தியமான உணவுப் பொருட்களினதும் உள்ளூர் உற்பத்தியை ஊக்குவித்தல் மற்றும் நாட்டிற்குள் இறக்குமதி செய்யப்பட்ட பயிர்களுக்கு பொருத்தமான மாற்றுப் பயிர்களை பயிரிடுதல்.<br>• நாட்டில் தற்போதுள்ள உணவுக் கையிருப்புக்களுக்கான மெய்நேர தரவுத்தளத்துடன் குறைந்த பட்சம் மூன்று மாதங்களுக்கு அத்தியாவசியமான உணவுப் பொருட்களை போதுமான அளவு இருப்பைப் பராமரித்தல்.<br>• அரச, தனியார் பங்கேற்பு ஏற்பாட்டின் கீழ் விவசாய உற்பத்திப் பொருட்களுக்கான குளிர் சங்கிலி முகாமைத்துவ தொழில்நுட்பம், களஞ்சியங்கள், குளிர்பதனக் களஞ்சியங்கள், மற்றும் பதனிடல் அலகு வசதிகள் என்பவற்றைப் பயன்படுத்தக் கூடிய போக்குவரத்து முறைமையொன்றினை நிறுவுதல். |
| உயர்வான உற்பத்தித் திறன் மற்றும் விருத்தியுற்ற முகாமைத்துவம். | விவசாய முறைகளில் உயர்வான உற்பத்தித் திறன் மற்றும் வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்கு சாதகமான சுற்றுச் சூழலுடன் வழங்கப்பட்ட விவசாய நடைமுறைகளில் பொருத்தமான முகாமைத்துவத்தை ஊக்குவித்தல். | • புதுப்பிக்கப்பட்ட மெய்நேர தேசிய விவசாய தரவுத் தளத்தை நிறுவுதல்.<br>• நில உடமையை பேணும் அதே வேளை, சிறிய அளவிலான விவசாய நிறுவனங்களை நடுத்தர மற்றும் பெரிய அளவிலான விவசாய அலகுகளாக மாற்றுவதை ஊக்குவித்தல்.<br>• வன விலங்குகளிலிருந்து பயிர் சேதமடைவதைக் குறைத்தல்.<br>• தொட்டிகள், கால்வாய்கள், மற்றும் ஆறுகளின் திருப்பங்கள் போன்ற பெரிய நீர்ப்பாசன திட்டங்களை சரியான நேரத்தில் புனருத்தாரணம் செய்தல்.<br>• அருவிகளை மீள செயற்படுத்தக் கூடிய ஆற்றுப் படுக்கைகளை மீட்டெடுத்தல், மற்றும் பண்டைய நீர்ப்பாசன முறைமைகள், பாரம்பரிய நீர் முகாமைத்துவம், மற்றும் பாதுகாப்பு நடைமுறைகளை காட்சிப்படுத்த ஒரு நீர்ப்பாசன அருங்காட்சியகத்தை உருவாக்குதல்.<br>• தொழில்நுட்ப மற்றும் நிதி வசதிகளின் ஊடாக மழை நீர் பாதுகாப்பு மற்றும் நுண் நீர்ப்பாசனம் போன்ற நீர் பாதுகாப்பு தொழில்நுட்பங்களை மேம்படுத்தல்.<br>• மூன்று ஆண்டுகளுக்குள் தேயிலை உற்பத்தியை இரட்டிப்பாக்குவதற்கு தொழில்நுட்பம், நிதி மற்றும் ஏனைய வசதிகளை அளித்தல்.<br>• கந்தளாய் சீனித் தொழிற்சாலையை மீள ஆரம்பித்தலும், மற்றும் கரும்புச் செய்கையை விருத்தி செய்தலும். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | • விவசாய உற்பத்திப் பொருட்களை பதப்படுத்தல், மற்றும் கொண்டு செல்வதற்கான தொழில்நுட்பம், மற்றும் நிதி வசதிகளை வழங்குதல்.<br>• ஒப்பீட்டு மற்றும் போட்டி ரீதியான நன்மைகளின் அடிப்படையில் பாரம்பரியமற்ற பகுதிகளில் தென்னை, இறப்பர் மற்றும் கறுவா பொன்ற வர்த்தகப் பயிர்களை முறையாகப் பயிரிட விவசாயிகளுக்கு வழிகாட்டுதல்.<br>• இயற்கை மூலப்பொருட்கள் மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட கழிவுகளைப் பயன்படுத்தி சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் இரசாயன உரங்கள், சேதன உரங்கள், மற்றும் பிற விவசாய இரசாயனங்களை உற்பத்தி செய்தல்.<br>• அரச, மற்றும் தனியார் துறையின் ஆதரவின் ஊடாக விதைகளை உற்பத்தி செய்தல், பதப்படுத்தல் மற்றும் விதைகளையும் மற்றும் நாற்றுப் பொருட்களை சந்தைப்படுத்தலையும் ஊக்குவித்தல்.<br>• சலுகை அடிப்படையிலான விகிதங்களில் விவசாய இயந்திரங்களை வழங்குவதற்கு உள்ளூர் மட்டத்தில் விவசாய இயந்திர வழங்கும் நிலையங்களை ஸ்தாபித்தல்.<br>• நியாய விலைகளில் உரங்கள் உள்ளிட்ட விவசாய உள்ளீடுகளின் கிடைப்பனவுக்கு வசதியளித்தல். |
| | நிலைபேறான விவசாய உற்பத்திக்கு உகந்த நில முகாமைத்துவத்தை உறுதி செய்தல் | • பொருத்தமான காணிப்பயன்பட்டிற்கான நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதன் மூலம் விவசாய தரவு முறைமை ஒன்றுடனான டிஜிட்டல் நில வரைபடத்தை அறிமுகம் செய்தல்.<br>• நிலத்தின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு பயிர்- விலங்கு வளர்ப்பு முறைகளாக ஒன்றிணைக்கப்பட்ட விவசாய முறைகளை ஊக்குவித்தல்.<br>• புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதன் மூலம் விவசாய உற்பத்திக்காக பூரணமாகப் பயன்படுத்தப்படாத மற்றும் குறு நிலங்களை பயன்படுத்தல்.<br>• விவசாயமல்லாத நோக்கங்களுக்கு வளமான காணிகளைப் பயன்படுத்துவதை தடுத்தல். |
| விவசாய தொழில்முயற்சியின் அபிவிருத்தி | விவசாய தொழில்முயற்சி மற்றும் நிலைபேறான | • சந்தை சக்திகளை ஒழுங்குபடுத்துவதன் ஊடாக விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு நியாயமான விலைகளை உறுதிப்படுத்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | சந்தைகளை ஊக்குவித்தலும், மேம்படுத்தலும் | • ஐந்தாண்டுகளுக்குள் 50,000 விவசாய தொழில்முயற்சியாளர்களை உருவாக்குவதற்கு நிதி உதவி வழங்கல்.<br>• ஏற்பாடு செய்யப்பட்ட விவசாய நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை பங்களிப்புக்களின் ஊடாக விவசாய கைத்தொழில் வலயங்களை அபிவிருத்தி செய்தல்.<br>• விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான வாய்ப்புக்களை விரிவாக்கல்.<br>• வியாபார இலச்சினைகளைக் கொண்ட ஏற்றுமதி உற்பத்திப் பொருட்களுக்கு விவசாயப் பயிர்களின் ஏற்றுமதியுடன் தொடர்புடைய பெறுமதி சேர்க்கப்பட்ட தயாரிப்புக் கைத்தொழில்களை ஊக்குவித்தல்.<br>• சிறிய மற்றும் நடுத்தர அளவிலான விவசாய ஏற்றுமதியாளர்களுக்கான தொழில்நுட்பம், நிதி வசதிகள் மற்றும் சந்தை வாய்ப்புக்களை வழங்குதல்.<br>• விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட சுற்றுலாவின் அபிவிருத்திக்கு வசதியளித்தல்.<br>• அரசாங்கத்தின் தலையீட்டின் ஊடாக இலங்கையின் தேயிலை வர்த்தகச் சின்னத்தை (சிலோன் தேயிலை, தூய கறுவா, போன்ற) மேம்படுத்தல் மற்றும் பெருந்தோட்டப் பண்டங்களுக்கு உயர் மதிப்புள்ள சந்தைகளையும் கண்டு பிடித்தல்.<br>• 1,000 ஏற்றுமதி விவசாயக் கிராமங்களை உருவாக்குதல். |
| சுற்றுச்சூழலுக்கு உகந்த விவசாய செயற்பாடுகள் | நிலைபேறான உணவு உற்பத்திக்கான சுற்றுச் சூழலுக்கு உகந்த செயற்பாடுகளை ஊக்குவித்தல். | • தளம் குறித்த பரிந்துரைகளின் அடிப்படையில் உரங்கள் மற்றும் ஏனைய உள்ளீடுகளை பயன்படுத்த விவசாயிகளை ஊக்குவித்தல்.<br>• சான்றளிக்கப்பட்ட சேதன விவசாயப் பிரதேசங்களை அதிகரித்தல்.<br>• “சிறந்த விவசாய நடைமுறைகளை” படிப்படியாக பின்பற்ற பண்ணைகளை மாற்றுதல்.<br>• சிறந்த விவசாய நடைமுறைகளை அடிப்படையாகக் கொண்டு இரசாயன மற்றும் சேதன மற்றும் விவசாய உள்ளீடுகளைப் பயன்படுத்துவதனை ஊக்குவித்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| காலநிலை இடர் முகாமைத்துவம் | தொடர்ச்சியான உணவு உற்பத்தியை உறுதிப்படுத்துவதற்காக காலநிலை இடர்களுக்கான நெகிழ்திறனை மேம்படுத்தல். | • காலநிலை மாறுபாட்டிற்கான பயர்ச்செய்கை மற்றும் நீர்ப்பாசன தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதன் மூலம் காலநிலை நெகிழ்திறன் கொண்ட பயிர்களின் வகைகளை அபிவிருத்தி செய்தல்,<br>• பயிர்ச்செய்கை மற்றும் நீர் முகாமைத்துவத்திற்கு வழிகாட்டுவதற்கு விருத்தியுற்ற வானிலை எதிர்வுகூறல் முறைமை ஒன்றை ஸ்தாபித்தல். |
| உற்பத்தியாளர்களை வலுவூட்டல் | கௌரவமான வாழ்க்கைக்காக விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க சாதகமான சூழலை உருவாக்குதல். | • விவசாயிகளால் நிர்வகிக்கப்படும் கூட்டுறவுகள் மற்றும் விவசாய கம்பனிகளை ஊக்குவித்தல்.<br>• ஊடு பயிரிடல் மற்றும் நிலைக்குட்பயிர்களில் தேயிலை, இறப்பர், மற்றும் தென்னை போன்றவற்றிற்கு தொழில்நுட்ப, நிதி, மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல்.<br>• இறப்பர் தோட்டங்களுக்கு மழைக்காடுகளைப் பயன்படுத்துவதனை ஊக்குவிப்பதற்கு நிதி வசதிகளை அளித்தல் மற்றும் தற்போது இறப்பர் சேகரிப்பதற்குப் பயன்படுத்தப்படாத இறப்பர் நிலங்களை இனங்கண்டு மீள அவற்றில் இறப்பர் பால் சேகரிப்பதற்கு வழிகாட்டுதல்.<br>• .நுண் நீர்ப்பாசனத்துடன் நிலைக்குட்பயிர் அல்லது அரை நிலைக்குட்பயிர்களில் அதிக விளைச்சலைத் தரக்குகூடிய வகைகளை பயிரிடுவதற்காக ஒரு ஹெக்டேயருக்கு ரூபா 1 மில்லியன் வரை கடன் திட்ட வசதியொன்றினை வழங்குதல்.<br>• விவசாயிகளுக்கு முறையான விவசாய காப்புறுதி முறைமை ஒன்றினை ஸ்தாபித்தல்.<br>• அதிக நன்மைகளுடன் கூடிய முழுமையான விவசாயிகளின் ஓய்வூதியத் திட்டமொன்றினை ஏற்படுத்துதல். |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | உற்பத்தித் திறன் மற்றும் தரத்தினை மேம்படுத்துவதற்கான வினைத்திறனான ஆலோசனை | • வினைத்திறனுடைய நீட்டிப்பு சேவைகளை வழங்குவதற்கு அறிவு மற்றும் அவசியமான வளங்களைக் கொண்ட நீட்டிப்பு முகவர் நிறுவனங்களை ஆயத்தப்படுத்தல்.<br>• ஏறத்தாழ 350 விவசாய குடும்பங்களுக்கு ஒரு நீட்டிப்பு அலுவலருடன் வினைத்திறன் மிக்க விவசாய நீட்டிப்பு சேவைகளை வழங்குதல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | சேவைகளுடன் விவசாய ஆராய்ச்சி மற்றும் அறிவு முகாமைத்துவத்தை மேம்படுத்துதல். | • கிராமப்புற சமூகங்கள் மற்றும் பொருளாதார ரீதியாக நலிவடைந்த குழுக்களின் வறுமையை ஒழிப்பதற்காக இலக்குக் குழுக்களுக்கு அல்லது குடும்பங்களுக்கு தொழில்முறை பயிற்சிகளை அளித்து அவர்களை வேலை வாய்ப்புக்களுக்கு வழிநடாத்துதல்.<br>• விவசாய நீட்டிப்பு அலுவலர்களுக்கு செயலாற்றுகையை அடிப்படையாகக் கொண்ட ஊக்குவிப்புத் தொகைகளை வழங்குதல்.<br>• விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான நிதியளிப்பை அதிகரித்தல்.<br>• விவசாயத்தை மிகவும் கௌரவமானதும் மற்றும் கவர்ச்சிகரமானதுமான ஒரு தொழிலாக மாற்றுவதற்கு விவசாய தொழிலாளர்களுக்கு கட்டமைக்கப்பட்ட தொழில்சார் கல்வி வாய்ப்புக்களை வழங்குதல். |
| நிர்வாகமும் செயற்பாட்டு முகாமைத்துவமும் | வினைத்திறனான முகாமைத்துவத்தையும் மற்றும் விவசாய செயற்பாடுகளின் கட்டுப்பாடுகளையும் உறுதிப்படுத்தல். | • அனைத்துத் தொடர்புடைய அரச நிறுவனங்கள், தனியார் துறை நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களின் பிரதிநிதித்துவங்களுடன் தேசிய விவசாய அபிவிருத்தி சபையை ஸ்தாபித்தல்.<br>• குறிப்பிட்ட நிரல் அமைச்சின் (விவசாய மற்றும் பெருந்தோட்ட அமைச்சு) மூலம் அனைத்து விவசாயக் கருத்திட்டங்களும் ஒழுங்குமுறைப்படுத்தப்படலும், மற்றும் கண்காணிக்கப்படலும். |

## 3.3 உயர் தரத்திலான கால்நடை உற்பத்தி – ஒரு தொழில்முயற்சி அணுகுமுறை

### கொள்கை கோட்பாடுகள் –

- உயர் தரத்திலான, தூய்மையான கால் நடை உற்பத்தி
- நியாயாமான விலையிடல் மற்றும் நிலைபேறான சந்தை
- முதலீட்டு ஊக்குவிப்புத் தொகைகள்
- கால்நடைத் தொழில்முயற்சியில் இளைஞர்கள் மற்றும் பெண்களின் பங்கேற்பு
- கால்நடை அபிவிருத்தியில் அரச, தனியார், மற்றும் சமூக, பங்கேற்பு
- கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள பங்குதாரர்களின் மேம்படுத்தப்பட்ட வாழ்க்கைத் தரம்.

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| நவீன மற்றும் நிலைபேறான கால்நடை உற்பத்தி | கால்நடை உற்பத்தியில் நெகிழ்திறனை அதிகரிப்பதற்கு உகந்த சூழலை உருவாக்குதல். | • பண்ணைகளை நவீனமயப்படுத்துவதன் ஊடாக உற்பத்திக் கொள்திறனை உச்சப்படுத்தல்.<br>• பண்ணை உரிமையாளர்கள் இத்துறையின் திட்டமிடல், மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபடக் கூடிய கால்நடை அபிவிருத்தி சங்கங்களை நிறுவுதல்.<br>• கால்நடை போசணை, இனப்பெருக்கம், மற்றும் சுகாதாரத் துறைகளுக்கான விஷேட செயற்பாட்டு பிரிவொன்றை நிறுவுதல்.<br>• அதிக அளவில் பரவியுள்ள விலங்கு நோய்களைக் கட்டுப்படுத்ததுவதற்கும் மற்றும் தடுப்பதற்குமான தேசிய நிகழ்ச்சித்திட்டமொன்றினை நடாத்துதல்.<br>• விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்கு பரவக் கூடிய நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கும் மற்றும் கால்நடை உற்பத்திப் பொருட்களின் உணவுப் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்கு ஒரு பொது மக்களுக்கான கால்நடை சுகாதாரப் பிரிவு ஒன்றினை நிறுவுதல்.<br>• கால் நடைத்துறையில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைளை விரிவாக்குதல்.<br>• கால்நடைத் துறை ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் மாவட்ட கால்நடை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனங்களை நவீனமயப்படுத்தல். |
| பால் உற்பத்திப் பொருட்களை அதிகரித்தல் | உள்ளூர் பால் உற்பத்திப் பொருட்களை அதிகரிப்பதற்கு பாற்பண்ணைகளின் உற்பத்தித் திறனை விருத்தி செய்தல் | • இயந்திரமயமாக்கலின் ஊடாக சிறிய அளவிலான பண்ணைகளை பொருளாதார ரீதியாக இலாபகரமான நடுத்தர அளவிலான வணிக அலகுகளாக மாற்றுதல்.<br>• பால் உற்பத்திப் பொருட்களை ஊக்குவிப்பதற்காக பெரிய அளவிலான பாற்பண்ணை முறைமைகளை / கொத்தணிகளை அபிவிருத்தி செய்தல்.<br>• குறைந்த வருமானம் கொண்ட பெண்களை வலுவூட்ட 7500 பாற்பண்ணைகளை நிறுவுதல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | • இளைஞர்களின் தொழில்முயற்சிகளை வலுப்படுத்துவதற்கு 7,500 பாற்பண்ணைகளை நிறுவுதல்.<br>• மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களின் ஊடாக தற்போதைய செயற்கை கருவூட்டல் விகிதத்தை இரட்டிப்பாக்குதல் மற்றும் பல்வேறு பட்ட தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதன் மூலம் பாற்பண்ணை விலங்குகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்.<br>• பிரதேச கால்நடை மருத்துவ பிரிவுகளை வலுப்படுத்துவதன் ஊடாக பாற்பண்ணை முறைமைகளின் வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல்.<br>• பிரதான தொற்று நோய்களை ஒழிக்க வெற்றிகரமான தடுப்பூசி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.<br>• பதிவு செய்யப்பட்ட கறவை மாடுகளுக்கு சுகாதார காப்புறுதி உள்ளடக்கத்தை வழங்குதல். |
| பால் உற்பத்திப் பொருட்களின் சந்தைப்படுத்தலை முறைப்படுத்தல். | முறைப்படுத்தப்பட்ட சந்தைப்படுத்தல் வலையமைப்பின் ஊடாக பால் நுகர்வை ஊக்குவித்தல். | • பேஸ்டுரைஸ் பண்ணப்பட்ட மற்றும் பச்சை பாலுக்கான பிரதேச விநியோக நிலையங்களின் வலையமைப்பை விரிவுபடுத்துதல்.<br>• பொருத்தமான தர நிர்ணயங்களை அடிப்படையாகக் கொண்டு பாற்பண்ணை விவசாயிகளுக்கு கொடுப்பனவு முறைமையொன்றினை நடைமுறைப்படுத்தல். |
| ஏற்றுமதியை மையமாகக் கொண்ட கோழிப்பண்ணை உற்பத்திப் பொருட்கள் | உயர் தரத்திலான கோழி இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தியை மேம்படுத்தல். | • முட்டை மற்றும் கோழி இறைச்சிக்கு நியாயமான விலையை உறுதிப்படுத்துவதற்கு கால்நடை மற்றும் ஏனைய மூலப்பொருட்களுக்கான வரி நிவாரணத்தை வழங்குதல்.<br>• முட்டை மற்றும் கோழி இறைச்சி உற்பத்திக்கான ஏற்றுமதிச் செயன்முறைகளை பலப்படுத்தல்.<br>• குறைந்த வருமானம் கொண்ட பெண்களை வலுவூட்டுவதற்காக 5,000 சிறிய அளவிலான கோழிப்பண்ணைகளை உருவாக்குதல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தியும் மற்றும் முகாமைத்துவமும் | நிலைபேறான முறையிலும் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையிலும் மீன் மற்றும் நீரியல் வளங்களை அபிவிருத்தி செய்தலும் மற்றும் முகாமை செய்தலும். | ▪ மீன்பிடித் துறை தொடர்பான அனைத்துத் தரவுகளையும் மற்றும் தகவல்களையும் கைப்பற்றல், களஞ்சியப்படுத்தல், பகுப்பாய்வு செய்தல், மற்றும் விநியோகித்தல் போன்ற நடவடிக்கைகளுக்காக மெய்-நேர தகவல் முறையை பேணுதல்.<br>▪ மீன்பிடித் துறை தொடர்பான அனுமதி மற்றும் உரிமப் பத்திரங்களை பெற்றுக் கொள்வதற்கும் மற்றும் பதிவுகளை செய்வதற்கும் வினைத்திறனான நிகழ்நிலை பொறிமுறையொன்றினை அறிமுகம் செய்தல்.<br>▪ மீன்பிடி மற்றும் நீரியல் நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்கு ஆலோசனை சபையொன்றை ஸ்தாபித்தல்.<br>▪ சர்வதேச சம்மேளனங்கள், உடன்படிக்கைகள், மற்றும் தர நிர்ணயங்களுக்கு ஏற்ப, சட்டங்களையும், ஒழுங்குமுறைகளையும் மற்றும் கைத்தொழிலுக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் செயன்முறைகளை திருத்தம் செய்தல்.<br>▪ கடல்சார் மீன் வளங்களையும் மற்றும் கடல் நீரினதும் மற்றும் நன்னீர் வாழ் முறைமைகளின் அதிக பட்ச கொள்திறன்களையும் மதிப்பீடு செய்தல், மற்றும் அம்மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டு இக்கைத்தொழிலை அபிவிருத்தி செய்தலும்.<br>▪ மீன் இனப்பெருக்கம் செய்யும் பகுதிகளை கண்டறிதலும். மற்றும் அவற்றின் பரவலை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தலும், மற்றும் அழிந்து வரும் நீர் வாழ் உயிரினங்களின் இனப்பெருக்கம் செய்யும் பகுதிகளை கண்டறிந்து பாதுகாத்தல்.<br>▪ உயர் தரத்திலான, சுற்றுச் சூழலுக்கு உகந்த பாதுகாப்பான உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு மீனவ சமூகத்தை ஊக்குவித்தல்.<br>▪ புதுப்பிக்கத்தக்க மற்றும் கலப்பின எரிசக்தியை பயன்படுத்துவதற்கும் மற்றும் அத்தகைய உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கும் நிதி, மற்றும் தொழில்நுட்ப உதவியை வழங்குதல்.<br>▪ சட்ட விரோத மீன்பிடி நடவடிக்கைகளை அதைரியப்படுத்தல், கடல் மாசுபடலை குறைத்தல், அவசரகால பதில்கள் மற்றும் கடல் அனர்த்தங்களை குறைத்தல் போன்றவற்றிற்கான பொறிமுறையொன்றினை நிறுவுதல்.<br>▪ மீன்பிடித்தல் மற்றும் சந்தை நடவடிக்கைகள் தொடர்பான ஆராய்ச்சிகளின் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கான நிதியமொன்றினை ஸ்தாபித்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | ▪ கடல்மீன் வளங்களின் இருப்புகளை மதிப்பீடு செய்வதற்கு ஆராய்ச்சி செய்தல், முன் கணிப்பு மாதிரி அபிவிருத்தி மற்றும் பயன்பாட்டினை தொடர்தல் மற்றும் நன்னீர் மற்றும் உவர் நீர் முறைமைகளின் சுமந்து செல்லும் கொள்திறன் பற்றிய துல்லியமான மதிப்பீட்டை மேற்கொள்ளல |
| கடல் நீர் மீன்பிடி | கடல் மீன் வளங்களின் நிலைபேறான அபிவிருத்தியும் மற்றும் முகாமையும். | ▪ வெவ்வேறு வெப்பநிலைகளிலும் மற்றும் ஆழங்களிலும் மீன் வளங்களை அறுவடை செய்வதற்கு மீனவர்களுக்கு தொழில்நுட்ப உதவியை அளித்தல்.<br>▪ மீன்பிடித்தல், மற்றும் இனப்பெருக்கம் செய்தல் என்பனவற்றுக்கு வசதியளிப்பதற்கு மீன்களை திரட்டும் சாதனங்கள் (FAD) போன்ற செயற்கை மீன் வாழ்விடங்களையும் முறைகளையும் விரிவாக்குதல்.<br>▪ மீன்பிடித் துறைமுகங்கள், கண்ணித் துறைமுகங்கள், உள்ளடங்கலாக பாரம்பரிய மீன்பிடித் தளங்களுக்கான அணுகலை உறுதிப்படுத்தலும், மற்றும் அவற்றின் உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்தலும்.<br>▪ தற்போது பெரும் சரிவை எதிர்கொண்டுள்ள கடல் மீன்வளத்தை புத்துயிர் பெறச் செய்வதற்கு நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவை வழங்குதல்.<br>▪ உற்பத்திச் செலவைக் குறைப்பதன் மூலம் வீழ்ச்சியடைந்துள்ள மீன்வளத்தை மேம்படுத்தும் வகையில் மீனவ சமூகத்திற்கு எரிபொருள் மானியமொன்றினை வழங்குதல்.<br>▪ ட்ரோன்கள் மற்றும் செயற்கைக் கொள்கலன்கள், தாய்க்கப்பல்கள், கலப்பின கப்பல்கள் மற்றும் செயலூக்கமுள்ள விற்பனை என்பனவற்றின் ஊடாக, கப்பல் கண்காணிப்பு, அடையாள முறைமைகள், இலத்திரனியல், மடிக்கணணிகள், மற்றும்மீன் தளங்களை அடையாளம் காணல், போன்ற நவீன, சுற்றுச்சூழலுக்கு உகந்த, வினைத்திறன் மிக்க மீன்பிடித் தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்தல்.<br>▪ உள்ளூர் மீன்பிடிக்கப்பல்கள் மற்ற நாடுகளின் கடல் எல்லைக்குள் நுழைவதைத் தடுக்க ஜீபீஎஸ் (GPS) அடிப்படையிலான எச்சரிக்கை முறையினை அறிமுகம் செய்தல்.<br>▪ மீன்பிடிப்படகுகள் மற்றும் கப்பல்கள் வெளிநாட்டுக் கடற்பரப்பில் சிக்கல்களை எதிர்நோக்கும் அவசர நிலைகளில் வினைத்திறனான மற்றும் முறையான இராஜதந்திர தலையீடுகளை உறுதி செய்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| கடல் மற்றும் உவர் நீர் மீன் உற்பத்திகள் | கடல் மற்றும் உவர் நீர் மீன் உற்பத்தியை ஊக்குவித்தல். | ▪ கடல் வெள்ளரி, நண்டு, பாராமுண்டி, சிப்பி, இறால், இரட்டை நொடி, நீரியல் தாவரங்கள் போன்ற உயர் சந்தை மதிப்புள்ள இனங்களை அறுவடை செய்வதற்கும் மற்றும் இனப்பெருக்கம் செய்வதற்கும் நவீன தொழில்நுட்பத்தை வழங்குதல்.<br>▪ கடல் மற்றும் உவர் நீர் மீன் வளர்ப்புக்கு ஏற்ற புதிய மீன் தளங்கள் மற்றும் இனங்களை அடையாளங் கண்டு சுற்றுச்சூழலுக்கு உகந்த மீன் வளர்ப்பை ஊக்குவித்தல்.<br>▪ இறால் பண்ணைகளுக்கான செயன்முறைகளை தரப்படுத்துவதன் மூலம் உயர்வான பெறுமதிகளை பெறுவதற்கும் மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் பங்கு பெறுவதற்கும் நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தல்.<br>▪ தொழில்நுட்பம் உள்ளிட்ட தேவையான வசதிகளை வழங்குவதன் மூலம் வருடாந்த இறால் உற்பத்தியை அதிகரித்தல்.<br>▪ இறால் தொழிலில் உள்ள நோய்களைத் தடுப்பதற்கும் மற்றும் கட்டுப்படுத்துவதற்கும் முறையான திட்டமொன்றினை நிறுவுதல்.<br>▪ அதிக கேள்வியும் மற்றும் நுகர்வு குறைவாக உள்ள கடல் தாவரங்களின் உற்பத்தியை பல்வகைப்படுத்த தொழில்நுட்ப உதவிகளை வழங்கலும் மற்றும் இவ்வுற்பத்திப் பொருட்களுக்கான சந்தைகளை கண்டறியவும் மத்தியஸ்தம் வகித்தல்.<br>▪ கடல் தாவரங்கள் மற்றும் நீர்வாழ் வளங்களை பயன்படுத்தும் வீட்டு அடிப்படையிலான உற்பத்திப் பொருட்களை ஊக்குவிப்பதன் மூலம் பெண்களின் பங்கேற்பை அதிகரித்தல். |
| நன்னீர் மீன்பிடியும் மற்றும், நீரியல் வளங்களும் | நன்னீர் மீன்பிடித்தலையும் மற்றும் நீரியல் வளங்களையும் நிலைபேறான முறையில் அபிவிருத்தி செய்தல். | • நன்னீர் ஏரிகளைச் சுற்றி நீரியல் வளங்களை இணைப்பதன் மூலமும் விரலிக குஞ்சுகளை இனப்பெருக்கம் செய்வதன் மூலமும் நன்னீர் மீன் பிடியை அதிகரித்தல், மற்றும் அபிவிருத்தியுற்ற முகாமைத்துவ அமைப்பில் இனப்பெருக்க நிலையங்களை நிறுவுதல்.<br>• பல்வேறு மீன் வளர்ப்பு முறைகளின் ஊடாக வழக்கமான நீர்த்தேக்கங்கள், பருவ கால நீர்த்தேக்கங்கள், தோட்ட நீர்த்தேக்கங்கள் மற்றும் குளங்களில் விரலி குஞ்சுகளின் இருப்பை அதிகரிக்க பொருத்தமான நிகழ்ச்சித்திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தல்.<br>• உள்ளூர் அல்லது புதிய விஷேட இனப்பெருக்க முறைகளை அறிமுகம் செய்தல் மற்றும் இனப்பெருக்க நிலையங்களில் மனித வளங்கள், தொழில்நுட்பம் மற்றும் உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | • வழக்கமான நீர்த்தேக்கங்கள், பருவகால நீர்த்தேக்கங்கள், மற்றும் தோட்ட நீர்த்தேக்கங்களில் போதுமான கொள்ளளவில் பராமரிக்க தேவையான அளவு சேமித்து வைத்தல்.<br>• நுகர்வுக்காக வழக்கமான நீர்த்தேக்கங்களுடன் தொடர்புடைய கூண்டுகளில் மீன்களை வளர்த்தல்.<br>▪ வர்த்தக ரீதியான நன்னீர் மீன்களை அறுவடை செய்வதற்காக நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய பெரிய அளவிலான பண்ணைகளை நிறுவ தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கு நிதி உதவியை வழங்கல். |
| அலங்கார மீன் மற்றும் அலங்கார நீழ்வாழ் தாவரக் கைத்தொழில் | அலங்கார மீன் மற்றும் அலங்கார நீர்வாழ் தாவரங்களை அபிவிருத்தி செய்வதை உறுதி செய்தல். | • அலங்கார மீன் மற்றும் நீர் வாழ் தாவரங்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருமானத்தை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டு இலங்கை வர்த்தக இலச்சினையொன்றினை கட்டியெழுப்பல். .<br>• அலங்கார மீன் அறுவடையை ஊக்குவிப்பதற்கு நிதி மற்றும் தொழில்நுட்ப வசதிகளை வழங்குதல்.<br>• அலங்கார மீன் உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்கான குறைந்த பட்ச விற்பனை விலையை நிர்ணயம் செய்ய வெளிப்படையான பொறிமுறையொன்றினை ஏற்படுத்துதல்.<br>• மீன்கள் தொடர்பான நோய்கள், மற்றும் தொற்று நோய்களை அடையாளம் காணவும், தடுக்கவும் மற்றும் தளம் சார்ந்த சோதனைகளை நடாத்தவும் பிரதேச கால்நடை மருத்துவ நிலையங்களையும் மற்றும் பரிசோனை கூடங்கள் போன்ற நிறுவனங்களை ஒருங்கிணைக்கவும் நிகழ்ச்சித்திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தல்.<br>• ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கு பிரதேச சேகரிப்பு நிலையங்களை நிறுவுதல்.<br>• நுண்கீழ் வளக்கலை, பசுமை இல்லங்கள், செங்குத்து நடுகை, மற்றும் மண்ணற்ற நடுகை போன்ற அலங்கார நீர்வாழ் தாவர உற்பத்தி முறைகளுக்கு தொழில்நுட்ப மற்றும் நிதி உதவியை வழங்குதல்.<br>• அலங்கார மீன் மற்றும் தாவரங்களுக்கான வருடாந்த சர்வதேச கண்காட்சிகளை ஏற்பாடு செய்தல்.<br>• இறந்த தாவரங்கள் வேர்கள் மற்றும் கற்களின் துண்டுகள், போன்ற உயிரற்ற அலங்கார நீர்வாழ் பொருட்களை உற்பத்தி செய்வதற்கும் சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கும் நவீன |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி உள்ளூர் அலங்கார மீன்களை இனப்பெருக்கம் செய்வதற்கும் வசதிகளை வழங்குதல்.<br>• முக்குளிக்கும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலம் அலங்கார மீன்களை சேகரிப்பவர்களுக்கு முக்குளிப்பதற்கான உபகரணங்களைப் பயன்படுத்துதல், நிலைபேறான அறுவடை முறைகள், அறுவடைக்குப் பின்னரான சேதங்களைக் குறைத்தல், மற்றும் முதலுதவி செய்தல், மீன் இனப்பெருக்க நிலையங்களை அமைத்தல் மற்றும் முக்குளிக்கும் வழிகாட்டிகளாக மாறுதல் போன்ற மாற்று வாழ்வாதாரங்களை அறிமுகம் செய்தல் என்பன தொடர்பாக கல்வி கற்பதற்கு வசதிகளை வழஙகுதல்.<br>▪ நிலைபேறான வருவாயை உருவாக்குவதற்கும், நன்னீர் மீன் பிடியை அதிகரித்தல் மற்றும் போட்டித்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும், சர்வதேச சந்தைகளில் அலங்கார நீர்வாழ் வளங்கள் மூலம் முக்கிய ஒரு சந்தையாக நீடித்து நிலைத்து நிற்பதற்கும் தீர்வுகளை கண்டறிதல் தொடர்பாக ஆராய்ச்சி செய்தல். |
| மீனவ சமூகத்திற்கான சமூக நலன் | மீனவ சமூகத்தை வலுப்படுத்தலை உறுதிப்படுத்தல். | • மீனவ சமூகத்தின் குடும்பங்கள், மீன்பிடிக் கைத்தொழிலில் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் மற்றும் கருவிகள் என்பவற்றை உள்ளடக்கிய மீனவ சமூகத்திற்கான காப்புறுதித் திட்டமொன்றினை அறிமுகம் செய்தல்.<br>• முக்குளிப்பவர்களினால் எதிர்நோக்கப்படும் அழுத்தக் குறைபாடு நோய்க்கான சிகிச்சை நிலையங்களை நிறுவுதல்.<br>• மீனவரின் நாட்டுப்புற ஓய்வூதியத் திட்டத்தினை மீண்டும் செயற்படுத்தலல்.<br>• தொழில்முறை மீன் பிடித்தல், மற்றும் கடல்சார் துறையில் கவனம் செலுத்துவதன் மூலம் இளம் மீனவ சமூகத்திற்கான பயிற்சி மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டல்களை வழங்குதல்.<br>• குறித்த துறையில் தொழில் சார் நிபுணர்களை உருவாக்குவதற்காக ஓசன் பல்கலைக்கழகம், பீடங்கள், கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளின் பரந்த பங்களிப்பை பயன்படுத்தல்.<br>• மீனவ சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய சுகாதார சேவைகள், வீடமைப்பு, அவர்களின் சிறுவர்கள், மற்றும் முதியோர்களுக்கான பராமரிப்பு நிலையங்கள், மற்றும் கலாச்சார நிகழ்வுகள் போன்றனவற்றிற்கான விரிவான வசதிகளை வழங்குதல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | • மீனவ கிராமங்கள் மற்றும் துறைமுகங்களைச் சூழ அமைந்துள்ள கூட்டுறவுகள் மற்றும் வங்கிகளை சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட நிறுவனங்களாக கட்டியெழுப்ப வசதியளித்தல்.<br>• மீனவர்கள் மற்றும் மீன்வளர்ப்பு உற்பத்தியாளர்கள் ஆகியோரின் நிதி தொடர்பான எழுத்தறிவை விருத்தி செய்ய அவர்களை தொழில்முறை நிலைக்கு உயர்த்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.<br>• தொழில்நுட்ப ஆலோசனை சேவைகள், வெளிநாட்டுப் பயணங்கள், மற்றும் கள அலுவலகர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை வழங்குவதற்கான முறையான செயன்முறையொன்றை உருவாக்குதல்.<br>▪ மீனவப் பெண்கள், மற்றும் ஏனைய நலிவடையக் கூடிய குடும்ப அங்கத்தவர்களுக்கான வாழ்வாதார மேம்பாடு மற்றும் தொழில்நுட்ப திறன் அபிவிருத்தி என்பவற்றை நோக்கமாகக் கொண்டு நிகழ்ச்சித்திட்டங்களை அபிவிருத்தி செய்தல். |
| கருவிகள் மற்றும் உபகரணங்களின் தயாரிப்பினை ஊக்குவித்தல். | மீன்பிடிக் கைத்தொழிலில் புதிய தொழில்நுட்பங்களை தழுவலை உறுதிப்படுத்தல் மற்றும் நவீன கண்டுபிடிப்புக்களை அபிவிருத்தி செய்தல். | • உயிருள்ள மற்றும் உயிரற்ற உணவு, கப்பல்கள் மற்றும் வலைகள், கூண்டு உபகரணங்கள், மற்றும் நீர்வாழ் உயிரினங்களை அறுவடை செய்வதற்குத் தேவையான இயந்திரங்கள் உள்ளடங்கலாக மீன்பிடிக் கைத்தொழிலில் பயன்படுத்தப்படும் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு வசதியளித்தல்.<br>▪ போதுமான அளவிற்கு உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் கள் அபிவிருத்தி செய்யப்படும் வரை இறக்குமதி செய்யப்படும் கருவிகளுக்கு வரி நிவாரணத்தை வழங்குதல். |
| பின் அறுவடைக்கான முகாமைத்துவம் மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திப் பொருட்கள் | பின் அறுவடை இழப்புக்களைக் குறைப்பதையும் மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட மீன் உற்பத்திப் பொருட்களை ஊக்குவிப்பதனையும் உறுதிப்படுத்தல். | • உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான தொழில்நுட்ப உதவியை வழங்குதல், அறுவடை செய்தல், கையாள்தல், களஞ்சியப்படுத்தல், குறைந்த பின் அறுவடை சேதங்களுடன் மீன்களை விற்பனை செய்தல் என்பவற்றிகான விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.<br>• மீன் கூண்டுகள், மீன் தீவனம், திரவ உரம், மற்றும் ஏனைய மீன் கழிவுகளை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும்ஏ ஏனைய உற்பத்திப் பொருட்கள் என்பவற்றை ஊக்குவித்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | • முறையான விநியோக முறைமைகள் மூலம் நியாயமான விலையில தரமான மீன் உற்பத்திப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு மக்களுக்கு பொறிமுறை ஒன்றை ஏற்படுத்துதல்.<br>▪ மீன்பிடிக் கப்பல்களை பழுது பார்த்தல், உயர் தரத்திலான பனிக்கட்டிகளை உற்பத்தி செய்தல், மூடப்பட்ட கொள்கலன்களைப் பயன்படுத்தல், மற்றும் நிகழ்நிலையிலான பொறிமுறையொன்றினை உருவாக்குதல் போன்ற முயற்சிகளின் ஊடாக பின் அறுவடை சேதங்களைக் குறைத்தல். |
| ஏற்றுமதிச் சாத்தியப்பாடும் மற்றும் அந்நியச் செலாவணியை ஈட்டலும். | ஏற்றுமதிச் சந்தைகளையும் உற்பத்திப் பொருட்களையும் பன்முகப்படுத்தலும், மற்றும் ஏற்றுமதி உட்கட்டமைப்பை மேம்படுத்தலும். | • எதிர்காலத்தில் தோற்றம் பெறக்கூடிய புதிய வெளிநாட்டு சந்தைகளை இனங்காண்பதன் மூலம் உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.<br>• இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை மற்றும் தூதரகங்கள் உள்ளிட்ட தொடர்புடைய நிறுவனங்களோடு இணைந்து ஒத்துழைப்பதன் மூலம் ஏற்றுமதிகளை ஊக்குவித்தல் மற்றும் சந்தைகளை மேம்படுத்தல்.<br>• உயர் தர உள்ளூர் உற்பத்திப் பொருட்களை ஊக்குவித்தல் மற்றும் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் அந்நியச் செலாவணியை பாதுகாத்தல்.<br>• அதிக ஏற்றுமதித் திறன் கொண்ட உற்பத்தித் துறைகளில் முதலிடுவதற்கு வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஊக்குவித்தல்.<br>▪ மீன் உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதில் உள்ள தடைகளை நீக்குவதற்கு வினைத்திறனான மற்றும் நெறிப்படுத்தப்பட்ட செயன்முறையை நிறுவுதல். |
| மீன் பிடித் துறைமுகத்தை சுற்றி நிதி வருமானத்தை அதிகரித்தல்<br><br>மற்றும் மீன்பிடித் துறைமுகங்களை அபிவிருத்தி செய்தல் | சர்வதேச தரத்திற்கு ஏற்ப மீன்பிடித் துறையில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல். | • மீன்பிடித் துறைமுகங்களைச் சுற்றியுள்ள சேவை அடிப்படையிலான பிரதேசங்களில் கப்பல்களை நங்கூரமிடுவதற்கு ஒதுக்கீடு செய்தல்.<br>• எரிபொருள் பற்றாக்குறை மற்றும் மீன்பிடித் துறைமுகங்களைச் சுற்றிய விநியோகம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தல்.<br>• முன்னுரிமைப்படுத்தப்பட்ட திட்டமொன்றினை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச தரங்களுக்கு ஏற்ப அனைத்து பிரதான மீன்பிடித் துறைமுகங்களையும் தரமுயர்த்துதல்.<br>• வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வசிப்பவர்களை இலக்காகக் கொண்டு இழுவை மீன்பிடிப் படகுகளை ஊக்குவிப்பதற்கு துறைமுகங்களை விரிவுபடுத்தல், மற்றும் வசதிகளை மேம்படுத்துதல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | • பசுமை துறைமுக எண்ணக்கருவை அடிப்படையாகக் கொண்டு மீன்பிடித் துறைமுகங்களையும் மற்றும் முகாமைத்துவ முறைகளையும் அபிவிருத்தி செய்தல்.<br>• மீன் வளம் நிறைந்த பகுதிகளை அடையாளம் காண பயன்படுத்தப்படும் முறைகளின் துல்லியத்தை அதிகரித்தல், சூரிய ஒளி மற்றும் திரவீகமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு என்பவற்றினால் இயங்கும் கப்பல்களைப் பயன்படுத்தல், களஞ்சிய வசதிகளுடனான பெரிய கப்பல்களை வழங்குதல், கப்பல்களையும் மீன்பிடி உபகரணங்களையும் நவீனமயப்படுத்தல் .<br>▪ தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட மீன்பிடி முறைகள், மற்றும் மீன் பிடி உபகரணங்கள் மற்றும் கப்பல்களின் தயாரிப்புக்கள் போன்றவற்றை ஒன்றிணைப்பதன் மூலம் மீன்பிடித் துறையை குறிப்பாக மீன் வளர்ப்பை முன்னேற்ற ஒரு ஒருங்கிணைந்த அணுகுமுறையை உருவாக்குதல். |
| நீலப் பொருளாதாரம் | சமுத்திர வளங்களை நிலைபேறான முறையில் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல | ▪ உயிர் வாழும் மற்றும் உயிரற்ற சமுத்திர வளங்களின் நிலைபேறான பயன்பாடு, மற்றும் நீலப் பொருளாதார அணுகுமுறையொன்றின் ஊடாக நவீன சமுத்திரம் சார் கைத்தொழில்களை நிறுவுதலை ஊக்குவித்தல்.<br>▪ நீல காபன் நிதித்துறையில் நுழைவதற்கு மீன் வளர்ப்பு நீரியல் வாழ் வளங்களை வினைத்திறனான முறையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துதல். |

## 3.4 நிலைபேறானதொரு முகாமைத்துவம் - தரமானதொரு கடல் வளம்

**கொள்கை கோட்பாடுகள் –**

- உணவு மற்றும் போஷாக்கு பாதுகாப்பு
- பங்கேற்பு அணுகுமுறை மற்றும் நிலைபேறான முகாமைத்துவம்
- தர நிர்ணயங்களுக்கும் மற்றும் சர்வதேச உடன்படிக்கைகளுக்கும் இணக்கமான உறுதியான சட்டக் கட்டமைப்பு
- தரப்படுத்தல் மற்றும் வெகுமதிகளின் ஊடாக பாதுகாப்பான மற்றும் நிலைபேறான நடைமுறைகள்
- சுற்றுச்சூழல் மாசுபடலைத் தடுத்தல் மற்றும் கடலைப் பாதுகாத்தல்.
- மீன் மற்றும் தொடர்புடைய உற்பத்திப் பொருட்களுக்கான நியாயமான சந்தைக்கான அணுகல்.
- மீனவ சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தல் மற்றும் சமூக பாதுகாப்பை மேம்படுத்தல்.
- ஒரு தொழில்முறை மீனவ சமூகம்

## 3.5 டிஜிடல்மயமாக்கப்பட்டதொரு அரசு – ஒரு சர்வதேச பங்கேற்பு

**கொள்கை கோட்பாடுகள் –**

- புத்தாக்கத்தால் தூண்டப்பட்ட நிலைபேறாக்கப்பட்ட வளர்ச்சி
- அரச சேவைகளின் டிஜிடல் மாற்றம்
- இலங்கையின் சந்தை அடையாளத்தை மீள இலச்சினையிடல்.
- டிஜிடல் பொருளாதாரத்தின் நன்மைகளை பயன்படுத்துதல்.
- மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பம், சிறந்த நடைமுறைகள், மற்றும் சந்தை அணுகல் என்பவற்றிற்கான சர்வதேச ஒத்துழைப்புக்கள்
- சர்வதேச தர நிலைகளுக்கு ஏற்ப உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்தல்.

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | நடவடிக்கைகள் |
|---|---|---|
| அரசின் டிஜிடல்மயமாக்கம் | பொதுத் துறையை டிஜிடல்மயமாக்குதல் மற்றும் தேவையான உட்கட்டமைப்பை உருவாக்குவதன் ஊடாக வெளிப்படைத்தன்மை மற்றும் வினைத்திறனான நிர்வாகமொன்றினை தழுவுதல். | • உயர் பெறுமதியிலான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உற்பத்திப் பொருட்கள் மற்றும் தீர்வுகளுக்கான ஒரு மையமாக இலங்கையை நிலைப்படுத்துவதற்கு உலகளாவிய சந்தைப்படுத்தல் பிரச்சாரத்தை ஆரம்பித்தல்.<br>• கணனிகள் மற்றும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மென்பொருள் உள்ளிட்ட தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் தொடர்பான பூஜ்ஜிய பெறுமதி சேர்க்கை வரி வீதத்தை அமுல்படுத்தல்.<br>• ஒவ்வொரு தூதரகமும் குறித்த இலக்குகளுடன் சர்வதேச வாடிக்கையாளர்களுக்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கைத்தொழிலை தீவிரமாக ஊக்குவிப்பதற்கு இலங்கையின் வெளிநாட்டுத் தூதரகங்களைப் பயன்படுத்தல்.<br>• புதிய தொழில்முயற்சிகள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான நிதியமொன்றினை ஸ்தாபித்தல் மற்றும் உள்ளூர் புத்தாக்கங்கள் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறையில் தொழில்முயற்சிகளை அபிவிருத்தி செய்தல்.<br>• நாட்டின் பிரஜைகளுக்கு வெளிப்படையான மற்றும் வினைத்திறனான சேவைகளை வழங்கும் பொறுப்புள்ள அரசாங்கத் துறையொன்றை உருவாக்குவதற்கு அரச நிறுவனங்களை டிஜிடல்மயமாக்குதல்.<br>• வெளிநாட்டு நேரடி முதலீட்டினை ஈர்ப்பதற்கும் மற்றும் புலமைச் சொத்துக்களின் உரிமைகள், தரவு தனியுரிமை, மற்றும் தொழில்சட்டங்கள் மற்றும் வங்குரோத்து நிலை உள்ளிட்ட தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறைக்குள் பிரதான பகுதிகளுக்கு தீர்வு காண்பதற்கு சட்டக் கட்டமைப்புக்களை அறிமுகம் செய்தலும் மற்றும் பலப்படுத்தலும்.<br>• நெறிமுறை செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு, தரவு தனியுரிமை, அனைத்து மொழிகளிலும், அரச சேவைகளை அணுகுதலோடு அரச துறைகளுக்கிடையில் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பங்களை ஒன்றிணைத்தலுக்கு செயற்கை நுண்ணறிவுக் கொள்கை ஒன்றை உருவாக்கலும் மற்றும் நடைமுறைப்படுத்தலும். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | நடவடிக்கைகள் |
|---|---|---|
| டிஜிடல் கைத்தொழில் | புதிய கண்டுபிடிப்புக்கள் மற்றும் உலகளாவிய ஒத்துழைப்புக்கள் என்பனவற்றின் ஊடாக டிஜிடல் கைத்தொழில் மற்றும் டிஜிடல் சேவைக் கைத்தொழிலை வளப்படுத்தல். | • புதிய கண்டு பிடிப்புக்கள், மற்றும் நிலைபேறான முதலீடுகளை உலகளாவிய அங்கீகரிக்கப்பட்ட கம்பனிகளை உருவாக்குவதன் ஊடாக தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப யூனிகார்ன்களின் அபிவிருத்தியை வளர்த்தல்.<br>• இலங்கைக்கு முன்னேற்றமடைந்த தொழில்நுட்பங்களையும் மற்றும் சிறந்த நடைமுறைகளையும் கொண்டு வருவதற்காக உலகளாவிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கம்பனிகளுடனும் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுடனும் பங்கேற்புகளை கட்டியெழுப்பல் |
| டிஜிடல் திறன்கள் | டிஜிடல் திறன் வாய்ந்த குழாம் ஒன்றினை உருவாக்குதல். | • 2030 ஆம் ஆண்டளவில் 200,000 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வேலைப்படைகளை விரிவாக்க பயிற்சிகளையும், கல்வி நிகழ்ச்சித் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தல்.<br>• வெளிநாட்டு நிபுணர்களின் ஒத்துழைப்புடன் பொறியியலாளர்களுக்கான விஷேட பயிற்சி ஒன்றினை வழங்கல்.<br>• தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முதலீடுகளுக்கும் மற்றும் தொழில்வாய்ப்புக்களுக்குமான கவர்ச்சிகரமான இடமொன்றாக இலங்கையை உருவாக்குவதற்கு வரி நிவாரணங்கள், மானியங்கள் மற்றும் ஏனைய வெகுமதித் தொகைகளை வழங்குதல். |
| ஏனைய பொருளாதாரத் துறைகளை டிஜிடல்மயமாக்கல் | நிலைபேறான அபிவிருத்திக்கு ஆதரிக்கும் ஒரு வலுவான டிஜிடல் பொருளாதாரத்தை உருவாக்குதல். | • பிராந்திய அபிவிருத்தி மற்றும் புத்தாக்கத்தை மேம்படுத்துவதற்கு மேல், வடக்கு, கிழக்கு மற்றும் தென் மாகாணங்களில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையங்கள் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பூங்காக்களை நிறுவுதல்.<br>• மேல், வடக்கு, தென், மற்றும் கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள நான்கு பிரதான பல்கலைக்கழகங்களில் நவீன தொழில்நுட்பம் மற்றும் திறன்வாய்ந்த பணியாளர்களுடனான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையங்களை அமைத்தல்.<br>• அதி வேக இணையத்தளம், தரவு நிலையங்கள், நம்பகமான மற்றும் தாங்கு திறனுள்ள எரிசக்தி வழங்கல், பொதுப் போக்குவரத்து, மற்றும் செயலூக்கமுள்ள |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | கிராமங்கள் உள்ளிட்ட கைத்தொழில் வளர்ச்சி மற்றும் போட்டித்தன்மைக்கு ஆதரவளிப்பதற்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பை தொடர்ச்சியாக மேம்படுத்தல்.<br>• அதி நவீன டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் தன்னியக்க முறைகளை ஒருங்கிணைப்பதன் மூலம் கைத்தொழிலிருந்து கைத்தொழிலுக்கு 4.5/5.0 முன்னேற்றுவதற்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் தழுவலை முறைப்படுத்தல். |

## 3.6 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அணுகுமுறை- சமூகத்திற்கான விஞ்ஞான ரீதியான தீர்வுகள்

**கொள்கை கோட்பாடுகள் –**

- உற்பத்திப் பொருளாதாரத்தை நோக்கிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியிலிருந்தான நேரடி ஆதரவு.
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நன்மைகளை பொது மக்களுக்கிடையில் நியாயமான முறையில் விநியோகித்தல்.
- ஆராய்ச்சி சுதந்திரத்தை உறுதி செய்தல், பொருத்தமான கண்காணிப்பு மற்றும் ஆராய்ச்சித் துறைகளை ஒழுங்கு முறைப்படுத்தல் என்பனவற்றை நடைமுறைப்படுத்தல்.
- வெளிப்படைத்தன்மை, வினைத்திறன், பங்கு, பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்கம்
- நன்கொடை நிதிகளுக்கான பாரபட்சமற்ற தேர்வு, மற்றும் நியாயமான வாய்ப்புக்கள்
- உள்நாட்டிலும், மற்றும் சர்வதேச மட்டத்திலும் அங்கீகரிக்கப்பட்ட நெறிமுறைகள், நடைமுறைகள் மற்றும் உடன்படிக்கைகள் போன்றவற்றின் படி ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்.
- காப்புரிமைகள் மூலம் புதிய உற்பத்திப் பொருட்கள் மற்றும் சேவைகளைப் பாதுகாத்தல், மற்றும் புதிய கண்டுபிடிப்பாளர்களுக்கு உரிய அங்கீகாரம்.
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியில் அரச, தனியார் மற்றும் பொது மக்களின் ஈடுபாடு.

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| விவசாயம், மீன்பிடி, கால்நடை உணவுப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்புத் துறைகள் | விவசாய உற்பத்தித்திறன், மற்றும் காலநிலை மாற்றத்திற்கான நெகிழ்திறனை மேம்படுத்துவதன் ஊடாக உணவுப் பாதுகாப்பு, மற்றும் பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்தல் | • வளங்கள் மற்றும் உகந்த பயன்பாடுகளை அடையாளம் காணவும், விவசாய உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்யவும், மற்றும் நிலைபேறான சந்தைப்படுத்தல் மூலோபாயங்களுக்காக தீர்வுகளை கண்டு பிடிக்கவும் சமூக பொருளாதார ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்.<br>• காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப பயிர்களின் நெகிழும் திறனை விருத்தி செய்தல், பிரதான பயிர்களின் நிலைபேறான தன்மையையும் மற்றும் பொருளாதார சாத்தியப்பாட்டினையும் விருத்தி செய்தல், அதிக பொருளாதார நன்மைகளுக்காக உணவுப் பாதுகாப்பை மேம்படுத்தல், மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியின் ஊடாக பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திப் பொருட்களை உருவாக்குதல்.<br>• நிலைபேறான வருமானத்தை உருவாக்குவதற்கும், போட்டித்தன்மையை உறுதிப்படுத்தவதற்கும், சர்வதேச சந்தைகளில் அலங்கார நீர்வாழ் வளங்கள், அலங்கார தோட்டக் கலை பயிர்கள், மற்றும் சேதன விவசாயம் ஆகியவற்றின் ஊடாக ஒரு பிரதான சந்தையாக நிலை நிறுத்துவதற்கும் தீர்வுகளை கண்டறிவதற்கான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்.<br>• உள்ளூர் மற்றும் ஏற்றுமதிப் பயிர்கள், உற்பத்தித் திறனை விருத்தி செய்வதற்கான கால் நடைத்துறைகள் தொடர்பான புதிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்.<br>• பயிர்களின் பன்முகப்படுத்தல், விருத்தியுற்ற முகாமைத்துவ நடைமுறைகள் ஒன்றிணைக்கப்பட்ட உள்ளூர் நவீன தொழில்நுட்பம் ( மரபணு பொறியியில், மற்றும் உயிரியல் பாதுகாப்பு சான்றிதழ்), வினைத்திறனான விவசாய உள்ளீடுகள், ( நீர், சேதன மற்றும் அசேதன உரம், மற்றும் ஏனைய விவசாய இரசாயனங்கள் போன்ற) பொருத்தமான இடங்களில் / பிராந்தியங்களில் பசுமை இல்லம் மற்றும் செங்குத்து நடுகை திட்டமிடல் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்,.<br>• அதிக மகசூலைத் தரும் கால்நடை இனங்களை அபிவிருத்தி செய்தல், உயர் தரத்திலான தீவனங்களை உற்பத்தி செய்தல், குறைந்த செலவிலான மாற்று வீடுகள் மற்றும் அவர்களது முகாமைத்துவம் தொடர்பான பரிசோதனைகள், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கால்நடைப் பண்ணைகளுக்கான ( பால், கோழி மற்றும் பன்றி) காணிகளை தெரிவு செய்தல் / பயன்படுத்தல் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | • அதிக விளைச்சலைத் தரக்கூடிய, அழுத்தங்களை தாங்கக் கூடிய பயிர்கள் மற்றம் தீவன வகைகளை இனங்காணல் (காலநிலைக்கு ஏற்ற விவசாயம்), மற்றும் உள்ளூர் விவசாய முகாமைத்துவநடைமுறைகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் என்பன தொடர்பாக ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்.<br>• நடைமுறைகள், எளிதாகக் கிடைக்கக் கூடிய மற்றும் குறைந்த செலவிலான விதைகள், மற்றும் நடுகைப் பொருட்கள் என்பனவற்றை உற்பத்தி செய்தல், பல்வேறு விவசாய சுற்றுச்சூழல் பிரதேசங்களுக்குப் பொருத்தமான பயிர்கள் மற்றும் தீளை வகைகளை தேர்ந்தெடுத்து ஒரங்கிணைப்பதன் மூலம் வினைத்திறன் மற்றம் உற்பத்தித் திறனையும் அதிகரித்தல்.<br>• விற்பனைகள், நவீன சந்தைகள், அவற்றின் எதிர்வு கூறல்கள், சமூக நலன், நீட்டிப்புச் செவைகள் மற்றும் அவற்றின் தேவைகளை என்பன தொடர்பாக ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்.<br>• மீன் வளங்கள் நிறைந்த பகுதிகளை அடையாளம் காணவும், சூரிய எரிசக்தி மற்றும் திரவீகமாக்கப்பட்ட இயற்கை வாயுவால் இயங்கும் கப்பல்களைப் பயன்படுத்தல், களஞ்சிய வசதிகளுடனான பெரிய கப்பல்களை வழங்கல், மற்றும் கப்பல்கள் மற்றும் மீன்பிடி உபகரணங்களை நவீனமயப்படுத்தல் ஆகிய முறைகளின் துல்லியத் தன்மையை அதிகரித்தல்.<br>• கையிருப்பபை மதிப்பீடு செய்வதற்காக ஆராய்ச்சியை மேற்கொள்ளல், முன் கூட்டிய கணிப்பீட்டு மாதிரி அபிவிருத்தி மற்றும் பயன்பாட்டினை தொடர்தல், நன்னீர் மற்றும் உவர் நீர் முறைமைகளின் சுமந்து செல்லும் கொள்ளவு பற்றிய துல்லியமான மதிப்பீடு என்பவை தொடர்பான ஆராய்ச்சியை மேற்கொள்ளல்.<br>▪ |
| சுகாதாரம், கல்வி, மற்றும் விஞ்ஞானம் | அபிவிருத்தியின் ஊடாக தேசிய சுகாதாரம், கல்வி, மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளை முன்னேற்றுதல். | • டெங்கு, சீறுநீரக நோய், தொற்று நோய், மற்றும் இலங்கையுடன் தொடர்புடைய ஏனைய விஷேட சுகாதார பிரச்சினைகள், போன்றவற்றிற்கு திர்வு காண்பதற்கு மரபியல், வளர் சிதை மாற்றம், புரோட்டியோமிக்ஸ், உயிர் வேதியியல், நனோ தொழில்நுட்பம், மற்றும் செயற்கை நுண்ணறிவியல் போன்ற நவீன விஞ்ஞான தொழில்நுட்பங்களை பிரயோகித்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | • ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியின் ஊடாக நாட்டுக்குத் தேவையான மருந்துப் பொருட்களை உற்பத்தி செய்தல்.<br>• சிறுவர்களின் போஷாக்கு மட்டத்தை அதிகரிப்பதற்கு மாற்று உள்ளூர் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்வதை அதிகரித்தல்.<br>• நீண்ட கால சிகிச்சைகளுக்கான சுகாதாரப் பராமரிப்புக்கான செலவுகளைக் குறைப்பதற்காக புற்று நோய், நீரிழிவு நோய், இருதய நோய், போன்ற நோய்களை முன் கூட்டியே கண்டு பிடிப்பதற்கான நவீன விஞ்ஞான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்.<br>• பாடசாலைகளுக்கிடையிலான தரம் மற்றும் வளங்களின் வேறுபாடுகளைக் கண்டறிந்து நாடு பூராவும் ஆராய்ச்சிகளையும் மற்றும் பகுப்பாய்வுகளையும் மேற்கொள்ளலும் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அடிப்படையிலான தீர்வுகளை பரிந்துரை செய்தல்.<br>• பாடசாலைக் கல்வியில் விசாரணைகளை அடிப்படையாகக் கொண்ட கற்கை முறையினை ஊக்குவிப்பதற்கு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட தீர்வுகளை நடைமுறைப்படுத்தல்.<br>• ஆசிரியர் பயிற்சி மற்றும் தொழில்சார் அபிவிருத்தி ஆகியவற்றிற்கு செயற்கை நுண்ணறிவு கருவிகள் (AI tools) மற்றும் நிகழ்நிலை பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை அபிவிருத்தி செய்தல்.<br>• அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் பங்கேற்புடன் உயர் கல்வி நிறுவனங்களில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவுகளை விரிவுபடுத்துதல்.<br>• சுதேச மருத்துவம் தொடர்பான பொருத்தமான ஆராய்ச்சிகளையும் மற்றும் அபிவிருத்தி செய்வதையும் நிர்வகிப்பதற்கும் மற்றும் நடாத்துவதற்கும் தேசிய ஆணைக்குழு ஒன்றினை நிறுவுதல்.<br>• உள்நாட்டு மற்றும் சர்வதேச சநதைகளை இலக்காகக் கொண்டு மருந்து மூலிகைகளின் பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதன் மூலமும், திசு ் கலாச்சாரம் மரபணு பொறியியல் நிலையங்கள் மற்றும் ஆய்வு கூடங்களையும் ஸ்தாபிப்பதன் மூலமும், மூலிகை மருந்துகள், போஷாக்கு மருந்துகள், உணவு கூட்டு நிரப்பிகள், |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
| --- | --- | --- |
| | | அழகு சாதனப் பொருட்கள், போன்ற உயர் தரத்திலான சந்தைப்படுத்தக் கூடிய உற்பத்திப் பொருட்களின் தயாரிப்பினை அபிவிருத்தி செய்தல்.<br>▪ சூரிய மின்கலங்கள், இலத்திரனியல் உற்பத்திப் பொருட்கள், மருந்துப் பொருட்கள், எரிசக்தி வனைத்திறன் கொண்ட புதிய கண்டு பிடிப்புக்கள், சுற்றுச் சூழல் தீர்வுக் கூறுகள், எதிர்கால வாகனங்கள் மற்றும் உதிரிப் பாகங்களை உற்பத்தி செய்வதற்கும் தயாரிப்பதற்கும் நனோ தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியைப் பயன்படுத்தல். |
| தகவல் தொழில்நுட்பம், தொடர்பாடல், பொறியியல், எரிசக்தி, கடல்சார் போக்குவரத்து மற்றும் ஏனைய தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய துறைகள் | நிலைபேறான சேவை விநியோகத்திற்கான தொழில்நுட்பம் மற்றும் புதிய கண்டுபிடிப்புகளை பயன்படுத்தல். | • இலங்கையில் உள்ள பல்வேறு இனக்குழுக்களுக்கிடையே மொழித் தடைகளைக் குறைப்பதற்காக அரச நிறுவனங்களிலும் மற்றும் பொது இடங்களிலும் செயற்கை நுண்ணறிவு ( AI) மூலம் இயங்கும் பன்மொழித் தொடர்பாடல் முறைகளை ,நிறுவுவது குறித்த ஆய்வுகளை மேற்கொள்ளல்.<br>• இயற்கை அனர்த்தங்களுக்கு (உதாரணமாக வெள்ளம், காட்டுத் தீ, மற்றும் நிலச்சரிவுகள்) எதிராக முன்னெச்சரிக்கையாக செயலாற்றும் மற்றும் மெய் நேர எச்சரிக்கை முறைமைகளை அபிவிருத்தி செய்தல்.<br>• தாமதங்களைக் குறைப்பதற்கும் மற்றும் பயணிகளின் பாதுகாப்பு மற்றம் வசதிகளை விருத்தி செய்வதற்கும் IoT & GPS தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம் வினைத்திறனான பொதுப் போக்குவரத்து முகாமைத்துவ முறை ( பேருந்துகள் மற்றும் புகையிரதங்கள்) ஒன்றினை ஸ்தாபிப்பது தொடர்பாக ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்.<br>• காற்று மாசுபடுதலைக் குறைப்பதற்காகவும், வாகன வெளியேற்றங்கள் மற்றும் கைத்தொழில் வெளியேற்றங்கள் என்பனவற்றை கட்டுப்படுத்துவதற்காகவும் பிரதான நகரங்களில் காற்று மாசுபடல் கண்காணிப்பு முறைமைகளை ஏற்படுத்துவது தொடர்பான ஆராய்ச்சிகளை நடாத்துதல்.<br>• வளங்களின் பயன்பாட்டை அதிகப்படுத்துவதற்கும் மற்றும் கழிவுகளைக் குறைப்பதற்கும் குடியிருப்பு வீடுகள், கட்டடங்கள், மற்றும் பொது இடங்களில் ‘‘ஸ்மார்ட் மீட்டர்’’ முறைமைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல். உதாரணமாக மின்சார மீட்டர்கள், வாகன |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | தரிப்பிட மீட்டர்கள் மற்றம் நீர் மீட்டர்கள் போன்றனவற்றை நிறுவுவதற்கான ஆராய்ச்சியும் அபிவிருத்தியும்.<br>• சமீபத்திய செயற்கைக் கோள் தொழில்நுட்பம் மற்றும் உபகரணங்களைப் பயன்படுத்தி துல்லியமாக வானிலை முன்னறிவித்தல் மற்றும் நாட்டிற்காக எரிசக்திக்கான கேள்வியை கணிப்பீடு செய்தல் மற்றும் நீர் மின்சாரம், காற்று மற்றும் சூரிய சக்திகளினால் உற்பத்தி செய்யப்பட்ட மின்சக்தியை அதிக பட்சம் பயன்படுத்தல்.<br>• இ- கழிவு மூலம் சுற்றுச் சூழல் மாசடைவதைக் குறைத்தலும் மற்றும் அவற்றை மீள் சுழற்சி செய்வதனை ஊக்குவிப்பதற்காக பொருத்தமான கழிவகற்றல் வாழிகள் மற்றும் வசதிகளை வழங்குதல் தொடர்பான ஆராய்ச்சிகளை நடாத்துதல்.<br>• உள்ளூரில் தயாரிக்கப்பட்ட கூரை மீது பொருத்தப்பட்ட சூரிய எரிசக்தி முறைமை மற்றும் உபகரணங்கள் போன்றவற்றையும் மற்றும் தேசிய மின்கட்டத்துடன் அச்சாதனங்களை இணைப்பதையும் ஊக்குவிப்பதற்கு ஆராய்ச்சிகளை நடாத்தலும் அபிவிருத்தி செய்தலும்.<br>• ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி வசதிகளையும் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி வசதிகளையும் மற்றும் எமது நாட்டுக்கு அவசியமான நவீன குறைந்த செலவிவான இயந்திரங்கள் மற்றும் கருவிகளை நிர்மாணிப்பதற்கு உள்ளூர் தயாரிப்பாளர்களுக்கு அவசியமான திறன்களையும் வழங்குதல்.<br>• நிர்மாணச் செலவைக் குறைக்கும் நோக்குடன் மண், மணல், கல், செங்கல், தார், மற்றும் ஏனையவைகள் போன்ற கட்டட நிர்மாணப் பொருட்களுக்கான உள்நாட்டு தர நிலைகளை விருத்தி செய்வதற்கு / புதுப்பிப்பதற்கு ஆராய்ச்சிகளை நடாத்தி அபிவிருத்தியை மேற்கொள்ளல்.<br>• நிர்மாணக் கைத்தொழிலுக்கான கடல் மணலை வினைத்திறனான முறையில் சுத்திகரித்தல் மற்றும் பயன்படுத்தல் தொடர்பான ஆராய்ச்சி நடவடிக்கைகளை துரிதப்படுத்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | • சூரிய எரிசக்தி முறைமைகள், உபகரணங்கள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ( நீர் மின்சாரம், சூரிய மற்றும் காற்று) தொடர்பான ஆராய்ச்சிகளை விரிவுபடுத்துதல் மற்றும் புதைபடிவ எரிபொருள் நுகர்வில் மீதான சார்பு நிலையைக் குறைப்பதற்கும் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி இலக்குகளை அடைவதற்கும் அக்வெரல காற்றாலை மின் கருத்திட்டத்திற்கு முன்னுரிமை அளித்தல்.<br>• உள்ளூர் மற்றும் தேசிய தேவைகளுக்கான தொழில்நுட்ப தீர்வுகளை உருவாக்குவதற்கு உள்ளூர் கண்டுபிடிப்பாளர்களை ஊக்குவிப்பதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் ‘‘தொழில்நுட்ப அபிவிருத்தி நிலையங்களை’’ ஸ்தாபித்தல்.<br>• நுகர்வோர் பொருட்கள், அலுவலக பொருட்கள், வைத்தியசாலைகளின் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் ( படுக்கைகள், நாற்காலிகள், நீர்க்காத்திகள் போன்றவை) தயாரிப்பதற்கு உள்ளூர் திறமைசாலிகள், தயாரிப்பாளர்க்ள, மற்றும் கண்டுபிடிப்பாளர்களை பயன்படுத்தல்.<br>• தேயிலை, இறப்பர், தென்னை மற்றும் நெல் போன்ற விவசாய உற்பத்திப் பொருட்களின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கும் மற்றும் தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் உள்நாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப தீர்வுகளை ஊக்குவிப்பது தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்.<br>• முதியோர் சமூகம் மற்றும் மாற்றுத் திறனாளிகளையும் தேசிய வேலைப்படைக்குள் ஒன்றிணைப்பதற்கு அவசியமான முறைமைகள், பொறிமுறைகள், மற்றும் கருவிகளை உருவாக்குதல்.<br>• உள்ளூர் தொழில்முயற்சியாளர்களையும் மற்றும் புத்தாக்கங்களின் படைப்பாளிகளையும் ஆராய்வதற்கும் மற்றும் அணுகுவதற்கும் சிறந்த அறிவுடன் தகவல் தொழில்நுட்பம் (IT), Big Data, Machine Learning, செயற்கை நுண்ணறிவு (AI), தொடர்பாடல் மற்றும் பிணைய அமைப்பியல் மற்றும் சமூக ஊடகங்களில் தொழில்நுட்ப செயலணி ஒன்றினை ஸ்தாபிப்பதோடு, உள்நாட்டில் தொழில்முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு அவர்களை ஊக்குவித்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | • அவசர கால அனர்த்த பதில்கள் மற்றும் எதிர்கால தொலைநோக்கினை முன்னுரிமைப்படுத்தலும் உள்ளிட்ட கடல்சார் பிரதேசங்களில் கொள்திறன் இடைவெளிகளை கண்டறிய ஆராய்ச்சிகளை நடாத்துதல்.<br>• சுற்றுலாத் துறையில் பெறுமதி செர்க்கப்பட்ட வாய்ப்புக்களை இனங்காணல், மற்றும் நிலைபேறான வளர்ச்சிக்கான உள்ளூர் வளங்களை பயன்படுத்தலதொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல். |
| இயற்கை வளங்கள் | வினைத்திறனான தொழில்நுட்ப முன்னேற்றங்களின் ஊடாக அரச மற்றும் தனியார் துறைகளில் நிலைபேறான முகாமைத்துவத்தை பயன்படுத்தல். | • ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட முன்னோடிக் கருத்திட்டங்கள் மூலம் இனங்காணப்பட்ட மனித – விலங்கு மோதல்களைக் குறைக்க மிகவும் பொருத்தமான முறைகளை நடைமுறைப்படுத்தல்.<br>• பாதுகாப்பு தேவைப்படும் இலங்கையின் பல்லுயிர் 'hot spots' வகைப்படுத்த ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியை வலுப்படுத்தல். நீர்ப்பிடிப்பு, தாவர மெப்பிங் மற்றும் நிலப்பயன்பாட்டு அச்சுறுத்தல்களில் அடிப்படையில் வாழ்விடங்களை வகைப்படுத்தல் ஆகியவை இதில் அடங்கும்.<br>• விவசாயம், கடல்சார், நன்னீர் வளங்களை வினைத்திறனான முறையில் நிர்வகித்தல் மற்றும் அறுவடைக்குப் பின்னருள்ள சேதங்களைக் குறைப்பதற்கும் பொருட்களின் பன்முகப்படுத்தலை அதிகரிப்பதற்கும் தேவையான தொழில்நுட்பங்களை அறிமுகப்பபடுத்தலும்.<br>• மருந்துப் பொருட்கள், அழகுசாதனப் பொருட்கள், கடல் மற்றும் நீரியல் வளங்களைப் பயன்படுத்துவதன் மூலம் தயாரிக்கப்பட்ட போஷாக்கு கூட்டு நிரப்பிகள், போன்ற பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திப் பொருட்களை அபிவிருத்தி செய்தல்.<br>• இலங்கையில் உள்ள அரிய கனிய வளங்கள் (உதாரணம்: பேருவளையில் உள்ள மொனாசைட்), இல்மனைட்டைப் பயன்படுத்தி டைட்டானியம் டி ஒக்சைட்டை அபிவிருத்தி செய்தல், செருவில இரும்புத்தாது வைப்புகளைப் பயன்படுத்தி செம்பு மற்றும் தங்கம் உற்பத்தி செய்தல், போன்றவற்றிற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ச்சி செய்தல் மற்றும் ஆய்வு செய்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | ▪ கடலரிப்பைக் குறைப்பதன் மூலம் கண்டல் காடுகள் மற்றும் கடலோர சுற்றுச்சூழல் அமைப்புகளை பாதுகாப்பதற்கு நவீன பொறியியல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். |
| மனித அபிவிருத்தி, கலை, வரலாறு, கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத் துறைகள | ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்களின் ஊடாக கல்வி, தொழில்நுட்பம் மற்றும் கலாச்சார பாதுகாப்பு என்பவற்றை முன்னேற்றுதல். | • ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட புத்தாக்கங்கள், புதிய அறிவு, மற்றும் சமூகத்துக்கு நன்மைகளை அளிக்கக் கூடிய கலை, மற்றும் தத்துவ சித்தாந்த ஊக்குவிப்புக்களை பகிர்வதற்கான சமூக கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித்தல்.<br>• மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியோர் சமூகத்திற்கு உதவுவதற்கு வீட்டில் வளர்க்கப்படும் ரோபோ நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது ஏற்கனவே கிடைக்கக் கூடிய மனித உருவிலான ரோபோ இயங்கு தளங்களை தனிப்பயனாக்குவது தொடர்பாக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.<br>• நவீன இலத்திரனியல் உதவி சாதனங்கள், தியான நினைவூட்டல் முறைமை, வினைத்திறனான மாத்திரை வழங்கும் சாதனங்கள், டெலிஹெல்த் முறைமைகள், காட்சி மற்றும் தொடர்பாடல் உதவிகள், மற்றும் நினைவக உதவிகள் போன்ற இன்னோரன்னவற்றை அபிவிருத்தி செய்வதன் மூலம் அவர்களது சுதந்திரத்தையும் மற்றும் வசதியையும் மேம்படுத்தல் போன்றவற்றின் மூலம் ஓய்வு பெற்ற மற்றும் முதிய சந்ததியினருக்கு உதவுதல்.<br>• சர்வதேச சந்தையை இலக்காகக் கொண்டு வெவ்வேறு காலநிலைகளைத் தாங்கும் இசைக்கருவிகள், மற்றும் நடன ஆடைகளை தயாரிப்பதற்குகான ஆராய்ச்சியையும், அபிவிருத்தியையும் மேற்கொள்ளல்.<br>• ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட நாவல் கலைப் படைப்புகளை உருவாக்குவதற்கு இசை, பாடல், நடனம், அரங்கம், இசை நாடகம், திரைப்படம், ஆடல், போன்ற செயற்பாட்டு கலை நிகழ்ச்சிகளாக நவீன தொழில்நுட்ப முன்னேற்றங்களை ஒருங்கிணைத்தல்.<br>• வினைத்திறனான காப்பக முறைமை மற்றும் பொது பதிவு முகாமைத்துவம் ஒன்றினை உருவாக்குவதற்கு Block Chain, Cloud மற்றும் செயற்கை நுண்ணறிவு |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
| --- | --- | --- |
| | | போன்ற நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதன் மூலம் தேசிய காப்பகத்தின் இயலளவையும் மற்றும் அணுகும் தன்மையையும் அதிகரித்தல்.<br>• பண்டைய மரபுகள், நம்பிக்கைகள், சடங்குகள், கலாச்சாரங்கள், மற்றும் வாழ்க்கை முறைகளை விவரிக்கும் பனை ஓலை புத்தகங்கள் தொடர்பாக விஞ்ஞான ரீதியான ஆய்வுகளை நடாத்துதுல், பண்டைய தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் நவீன நாட்களின் தேவைகளுக்கு நன்மையளிக்கக் கூடிய நடைமுறைகளையும் அடையாளம் காண தேசிய மட்டத்திலான ஆய்வுகளை ஆரம்பித்தல்.<br>• தரமான இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் உள்ளிட்ட வெகு சன ஊடக மூலங்களுக்கான பொருத்தமான உள்ளடக்க ஆய்வுகள், பகுப்பாய்வு,கள், கவனக் குழு பரிசோதனைகள், மற்றும் பங்கேற்பாளர்களின் அவதானிப்பு என்பனவற்றை நடாத்தலும், மற்றும் அவர்களது தொடர்பாடல் தரங்கள் மற்றும் ஒட்டு மொத்த வினைத்திறனை விருத்தி செய்தல். |

## 3.7 நவீனமயப்படுத்தப்பட்டதொரு சுற்றுலாக் கைத்தொழில் - கவர்ச்சிகரமானதொரு இறுதி செல்லிடம்

**கொள்கை கோட்பாடுகள் –**

■ தொலை நோக்குள்ள தலைமைத்துவம், மூலோபாய அணுகு முறை, முழுமையான பொருளாதார அபிவிருத்தி

■ இயற்கை மற்றும் கலாச்சார வளங்களின் நிலைபேறான பயன்பாடு

■ சுற்றுலாக் கைத்தொழிலுக்கான மனித வளத்தினை அபிவிருத்தி செய்தல்

■ புதிய சுற்றுலா தொடர்பான உற்பத்திப் பொருட்களை தரப்படுத்தலும் மற்றும் அபிவிருத்தி செய்தலும்.

■மூலோபாய இலக்கை சந்தைப்படுத்தல்.

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| தொலைநோக்குள்ள தலைமைத்துவம், மூலோபாய முகாமைத்துவம், மற்றும் முழுமையான பொருளாதார அபிவிருத்தி | சுற்றலாத் துறையில் உறுதியான நிர்வாகம் மற்றும் மூலோபாய வழிகாட்டல். | ▪ சுற்றுலாவுடன் தொடர்புடைய நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் முகாமை செய்வதற்காக தேசிய சுற்றுலா சபையை ஸ்தாபித்தல், மற்றும் இக்கைத்தொழிலுக்கான கொளகைகளை அபிவிருத்தி செய்வதற்கான சுற்றுலாக் கொள்கையை தயாரிபபதற்கான சபையை ((TPFC) ஸ்தாபித்தல்.<br>▪ சுற்றுலா அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டிற்கான மத்திய நிறுவனமாக இலங்கை சுற்றுலா அதிகார சபையை நிறுவுதல்.<br>▪ சுற்றுலாத் துறையின் உற்பத்தித் திறனையும் மற்றும் வினைத்திறனையும் விருத்தி செய்வதற்கு புதிய சுற்றுலாச் சட்டமொன்றை அமுல்படுத்தல்.<br>▪ ஆராய்ச்சிகளின் ஊடாக புதிய இலக்கு நாடுகளையும் மற்றும் உற்பத்திப் பொருட்களையும் இனங்காணல்.<br>▪ சுற்றுலாக் கைத்தொழிலில் உள்ள குற்றங்கள் மற்றும் சட்ட விரோத நடவடிக்கைகளை தடுப்பதற்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையை ஏற்றுக் கொள்ளல்.<br>▪ விமானசேவை நிறுவனங்களை ஈர்த்தல் மற்றும் முக்கிய சுற்றுலா தளங்களிலிருந்து இலங்கைக்கு இணைப்பை ஏற்படுத்துதல் மற்றும் உள்நாட்டு இணைப்பையும் விருத்தி செய்தல்.<br>▪ சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கு ஊக்குவிப்பையும், மற்றும் வசதிகளையும் வழங்குவதோடு, அவர்களின் சேவைகளின் தரத்தை மேம்படுத்தலும்.<br>▪ சுற்றுலா சேவைகளில் உள்ள அனைத்துத் துறைகளுக்குமான சர்வதேச மட்டத்திலான தரப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தல்.<br>▪ முறைசாரா சுற்றுலா இயக்குனர்களை முறை சார் துறைக்கு மாற்றுவதற்கு அவசியமான வசதிகளை வழங்குதல்.<br>▪ உள்நாட்டுச் சுற்றுலாவை முன்னேற்றுவதற்கு தேவையான உட்டகட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் இப்பணியில் தனியார் துறையின் பங்கேற்பை ஊக்குவித்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | ▪ அரச சார்பற்ற நிறுவனங்கள், நன்கொடை நிறுவனங்கள், ஆகிய நிறுவனங்களுடன் சர்வதேச பங்கேற்பை உருவாக்கலும் மற்றும் , சுற்றுலாத் துறையின் அபிவிருத்தியின் பிரதான ஒரு அணுகுமுறையாக நிதி உதவி, மற்றும் தொழில்நுட்ப உதவியைப் பெற்றுக்கொள்ளல்.<br>▪ சுற்றுலாத் துறையில் உள்ள தொழில்முயற்சியாளர்களையும் மற்றும் பங்குதாரர்களையும் ஊக்குவிப்பதற்கும் மற்றும் இனங்காண்பதற்கும் ஒரு வருடாந்த சேசிய சுற்றுலா விருது வழங்கும் விழாவை ஏற்பாடு செய்தல். |
| வளங்களின் நிலைபேறான பயன்பாடு | இயற்கை மற்றும் கலாச்சார வளங்களின் நிலைபேறான பயன்பாட்டை ஊக்குவித்தல். | ▪ சுற்றலாவிற்கான வளப் பயன்பாட்டுத் திட்டத்தினை அபிவிருத்தி செய்தல்.<br>▪ சுற்றுலாத் துறையில் காணி வங்கியொன்றின் ஊடாக டிஜிடல் காணிப்பயன்பாட்டு பொறிமுறையொன்றினை உருவாக்குதல்.<br>▪ விஞ்ஞான முறைமைகளைப் பயன்படுத்தி இயலளவு ஆராய்ச்சியை எடுத்துச் செல்வதன் அடிப்படையில் அளவுக்கதிகமான சுற்றுலாப்பயணிகளின் வருகையிலிருந்து சுற்றுலாத் தளங்களை பாதுகாத்தல்.<br>▪ செயற்பாடுகள் அடிப்படையாகக் கொண்ட மாற்றுச் சுற்றுலா தல வரைபடங்களை உருவாக்குவதன் மூலமும், கடல் சார் சூழல்கள் நிலப்பரப்பு மற்றும் நீர் வாழ் பல்லுயிர் மற்றும் வளங்களின் அழகியல் மதிப்புகளை பயன்படுத்துசதன் மூலமும் நிலையான சுற்றுச் சூழல் சுற்றுலாவை மேம்படுத்த ஆராய்ச்சி நடாத்துதல். |
| மனித வள அபிவிருத்தி | இலங்கையின் சுற்றுலா மற்றும் விருந்துபசார துறைகளில், ன் மனித மூலதனத்தையும் மற்றும் ஆராய்ச்சியை மேம்படுத்தல். | ▪ சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறைகளுக்கான தேசிய மனித வள அபிவிருத்தித் திட்டமொன்றை உருவாக்குதல்.<br>▪ சுற்றுலாக் கைத்தொழிலில் அரச மற்றும் தனியார் இரு துறைகளிலும் பயிற்சி மற்றும் கல்வி நிறுவனங்களுக்கான சுற்றுலா பயிற்சித் தேவைகளை பகுப்பாய்தல்.<br>▪ சுற்றுலாக் கைத்தொழிலுடன் தொடர்புடைய பட்டங்களை வழங்கும் பல்கலைக்கழகங்களுக்கு வசதிகளை வழங்குதல்.<br>▪ நடைமுறை பயிற்சி வாய்ப்புக்களை வழங்குதல் மற்றும் சுற்றுலா கைத்தொழிலில் பட்டப்பின் படிப்பை மேற்கொள்ளும் |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | மாணவர்களுக்கு தொழிலுடன் ஒன்றிணைக்கப்பட்ட கற்கை வாய்ப்புக்களை வழங்குதல்.<br>▪ உலகளாவிய போக்குகளுக்கு பொருந்தக் கூடிய வகையில் சுற்றலாக் கைத்தொழிலில் தல்வி தொடர்பான பாடத்திட்டங்களையும் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை புதுப்பித்தல்.<br>▪ சுற்றுலாக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள சுற்றலா சேவைகளை வழங்குவோர் மற்றும் தொடர்புடைய தொழிலாளர்கள் உள்ளிட்ட அரச, தனியார் மற்றும் அரை அரச துறைகளின் உள்ள தனிநபர்களின் எதிர்காலத்ததைப் பாதுகாப்பதற்காக விஷேட சமூக பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதல்.<br>▪ சுற்றுலாத் துறையிலுள்ள நுண் தொழில்முயற்சியாளர்களுக்கு பயிற்சி வழங்குதல்.<br>▪ அரச தனியார் பங்கேற்பாக சுற்றுலா ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றினை உருவாக்குதல். |
| புதிய சுற்றுலா உற்பத்திப் பொருட்களின் அபிவிருத்தியும் மற்றும் தரப்படுத்தலும் | சுற்றுலா உட்கட்டமைப்பையும் மற்றும் உற்பத்தி பன்முகப்படுத்தலையும் மேம்படுத்தல். | ▪ பிரதான இடங்களில் முக்கியமான உட்கட்டமைப்பை விருத்தி செய்தல்.<br>▪ இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழிலுக்கான புதுமையான சுற்றுலா உற்பத்திப் பொருட்களை அபிவிருத்தி செய்வதற்கு விஷேட் ஒரு பிரிவு /குழுவை உருவாக்குதல்.<br>▪ குறைவான சுற்றுலா பருவ காலங்களின் போதான இடைவெளியை நிரப்புவதற்கு தேர்வு செய்யப்பட்ட சந்தைகளுக்கான விஷேட ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.<br>▪ MICE (கூட்டங்கள், வெகுமதிகள், மாநாடுகள் மற்றும் கண்காட்சிகள்) மற்றும் விளையாட்டுக்களுக்கான சுற்றுலாவை மேம்படுத்தல்.<br>▪ கப்பல் சுற்றுலாவை ஈர்க்க அவசியமான உட்கட்டமைப்பு அபிவிருத்தியை வழங்குவதற்கும் மற்றும் வசதியளிப்பதற்கும் தனியார் துறையுடன் இணைந்து ஈடுபடல்.<br>▪ சுற்றுலாத் துறையுடன் துறைமுக உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் ஏனைய சேவைகளை ஒன்றிணைத்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | ▪ முதியோர் மற்றும் மாற்றுத் திறன் கொண்ட சுற்றுப்பிரயாணிகளுக்கு வசதியளிக்கும் நோக்குடன் உட்கட்டமைப்பு மற்றும் மனித வளங்களை அபிவிருத்தி செய்தல். |
| மூலோபாய பயண இலக்கை சந்தைப்படுத்தல் | இலக்காகக் கொள்ளப்பட்ட சந்தைப்படுத்தல் மற்றும் டிஜிடல் புத்தாக்கங்களின் ஊடாக பயண இலங்கையின் சுற்றுலா இலச்சினையை மறுசீரமைத்தல். | ▪ சுற்றலாத்துறை நோக்கங்களுக்கு ஏற்ற வகையில் தற்போதைய பயண இலக்கை சந்தைப்படுத்தல் முயற்சிகளை திருத்தம் செய்தல்.<br>▪ அனைத்துத் தொடர்புடைய பங்குதாரர்களுடன் நீண்ட கால உலகளாவிய சந்தைப்படுத்தல் பிரச்சாரம் ஒன்றினை ஆரம்பித்தல்.<br>▪ நாட்டிற்கான நுழைவுப் புள்ளிகளிலும் மற்றும் வெளிநாட்டிலுள்ள பிரதான சுற்றுலா சந்தைகளிலும் காட்சிப்படுத்துவதற்காக கவர்ச்சிகரமான ஊக்குவிப்புப் பொருட்களை உருவாக்குதல்.<br>▪ பயண இலக்கு தொடர்பான முக்கியமான சுற்றுலா தகவல்களை வழங்குவதற்கு டிஜிட்டல் அணுகுமுறைகளை ஏற்றக் கொள்ளல்.<br>▪ இலங்கையை உண்மையான, சூழலுக்கு உகந்த சுற்றுலாவுக்கு உகந்த ஒரு இடமாக மேம்படுத்தல்.<br>▪ இலவச சுயாதீன பயணிகளை (FITs) ஈர்க்கவும் மற்றும் கொழும்பு விமான நிலையத்தின் வழியாக செல்லும் போக்குவரத்து பயணிகளை ஈர்க்கவும் சந்தைப்படுத்தல் பிரச்சாரமொன்றை ஆரம்பித்தல்.<br>▪ டிஜிடல்மயப்படுத்தப்பட்ட பணிகளில் ஈடுபடுவோரை இலக்காகக் கொண்ட பிரச்சாரங்களை ஊக்குவித்தல் மற்றும் சுற்றுப் பிரயாணிகளுக்கும் மற்றும் சுற்றுலாக் கைத்தொழிலுக்கும் விஷேட Wi-Fi பொதிகளையும் அறிமுகம் செய்தல்.<br>▪ விஞ்ஞானத்தை ரீதியான ஆராய்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்து வரும் மற்றும் நவீன சந்தைகளில் கவனம் செலுத்தும் விஷேட சந்தைப்படுத்தல் பிரச்சாரமொன்றினை நடைமுறைப்படுத்தல்.<br>▪ வெளிநாட்டுத் தூதுக் குழுக்கள் மற்றும் தூதரகங்கள் இலங்கையின் பயண இலக்கு சந்தைப்படுதத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை உற்பத்தித்திறன் வாய்ந்த முறையிலும் மற்றும் வினைத்திறனான முறையிலும் பயன்படுத்துதல். |

## 3.8 தொழில்முயற்சியின் ஒரு மேம்பாடு – ஒரு சேதன அணுகுமுறை

**கொள்கை கோட்பாடுகள் –**

- கைத்தொழில் அபிவிருத்திக்கு அவசியமான நிறுவன, மூலதன, தொழில்நுட்ப, மற்றும் சந்தை ஆதரவுகளை வழங்குவதற்கு தேசிய கொள்கை கட்டமைப்பொன்றினை நடைமுறைப்படுத்தல்.
- தொழில்முயற்சிகளை விருத்தி செய்வதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு புதிய முதலீடுகளை ஊக்குவித்தல்.
- எரிசக்தி, போக்குவரத்து, தொலைத்தொடர்பு, நிதி மற்றும் ஏனைய அத்தியாவசிய சேவைகள் உள்ளிட்ட தாங்கு திறனுள்ள உட்கட்டமைப்பினை வழங்குதல்.
- நிரம்பல் சங்கிலிகளுக்குள் சந்தை வினைத்திறன் மற்றும் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்தல்.
- உள்நாட்டு கைத்தொழில்களின் வலுவூட்டலுடன் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட சேவைக் கைத்தொழில்களை ஊக்குவித்தல்.
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திகளின் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு உற்பத்திப் பொருட்ககள் மற்றும் சேவைகளின் பன்முகப்படுத்தல்
- நிலைபேறான மற்றும் சுற்றுச்சூழல் ரீதியாக பொறுப்புள்ள நடைமுறைகளை ஏற்றுக் கொள்ளல்.

;

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| தேசிய திட்டமிடலும் மற்றும் அரச தலையீடும். | தேசிய அபிவிருத்தி கொள்கைக் கட்டமைப்புக்கு ஏற்ற படி கைத்தொழில் துறையை நெறிப்படுத்துவதில் அரச தலையீட்டை உறுதிப்படுத்தல். | • மூலோபாய திட்டமிடல் மற்றும் தொலைநோக்கு பகுப்பாய்விற்கு பிரத்தியேகமாக அனைத்து கைத்தொழில்துறைகளுக்கான தேசிய கைத்தொழில் சிந்தனைக் களங்களை ( national industrial think-tanks ) உருவாக்குதல்.<br>• நிலைபேறான தன்மை, தேசிய பொருளாதாரம் மற்றும் ஒட்டு மொத்த ஸ்திரத்தன்மைக்கு ஒவ்வொரு துறையினதும் தனித்துவமான முக்கியத்துவத்திற்கும் உறுதியான வலியுறுத்தலுடன் பிரதான கைத்தொழில்களை இலக்காகக் கொண்ட தலையீடுகளை மேற்கொள்ளல். |
| வரிகள், சட்டம், மற்றும் உற்பத்திறன் அபிவிருத்தி | கைத்தொழில் நிர்வாகத்தை வலுப்படுத்தல் மற்றும் நிலைபேறான வளர்ச்சிக்கான வர்த்தக சுற்றுச்சூழலை உருவாக்குதல். | • குறிப்பிட்ட இடர்கள், மூலோபாய இலக்குகள், மற்றும் ஒவ்வொரு கைத்தொழிலுடனும் தொடர்புடைய அரச முன்னுரிமைகள் ஆகியவற்றின் அடிப்படையில் பல்வேறு கைத்தொழில் துறைகளுக்கு ஏற்ற வரி விதிப்புக் கட்டமைப்புக்களை அறிமுகப்படுத்தல்.<br>• தேசிய தேவைகளில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால் ஏற்படும் சாத்தியமான இழப்புகளை தணிக்க முதலீட்டு பாதுகாப்புச் சட்டத்தை மேம்படுத்துதல்.<br>• தேவையற்ற சந்தை சக்திகளில் செல்வாக்கிலிருந்து உற்பத்தியாளர்களைப் பாதுகாக்க சட்ட பாதுகாப்புகளை ஏற்படுத்துதல்.<br>• நீதி மன்றங்கள் மற்றும் நடுவர் மன்றங்களின் ஊடாக வர்த்தக ரீதியான தகராறுகளைத் தீர்ப்பதனை துரிதப்படுத்துவதற்காக மோதல்களை தீர்ப்பதற்கான கட்டமைப்பை வலுப்படுத்தல்.<br>• உற்பத்தித் திறன், தரம், மற்றும் இலக்குகள், என்பனவற்றுடனான சீரமைப்பை உறுதிப்படுத்துவதற்கு வலுவான தொழில்நுட்ப ஆதரவு |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | முறையொன்றினை அறிமுகப்படுத்துதல்.<br>• தற்போது நடைறையிலுள்ள சட்டங்களின் சீரான மற்றும் சமமான அமுலாக்கத்தை உறுதிப்படுத்துவதன் மூலம் ஒரு சம நிலையிலான சூழலை உருவாக்கல். |
| சர்வதேச மற்றும் உள்நாட்டு சந்தையை விரிவாக்கல் மற்றும் வினைத்திறனை விருத்தி செய்தல். | உலகளாவிய சந்தை ஒன்றிணைப்பு மற்றும் ஏற்றுமதியின் போட்டித் தன்மையை விருத்தி செய்தல். | • உள்ளூர் சந்தையின் வினைத்திறன் மற்றும் வெளிப்படைத் தன்மையினை மேம்படுத்த தேவையான சட்டச் சீர்திருத்தங்களை அமுல்படுத்தல்.<br>• இராஜதந்திர முன்னெடுப்புக்களின் ஊடாக சந்தை வாய்ப்புக்களை விரிவாக்குதல் மற்றும் குறிப்பிட்ட அளவுகோள்களை அடிப்படையாகக் கொண்டு சந்தைகளைப் பெற்றுக் கொள்வதற்குமான செயற்பாடுகளை மூலோபாய ரீதியான வழிநடாத்தல்.<br>• நடைமுறையில் உள்ள வர்த்தக உடன்படிக்கைகளை திருத்தம் செய்தலும் மற்றும் புதிய உடன்படிக்கைகளை உருவாக்குவதற்கும் தீவிரமாக செயற்படல்.<br>• துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களை பிரதான நிரம்பல் சங்கிலி மையங்களாக உருவாக்குவதன் மூலம் சர்வதேச சந்தைகளை அணுகுவதில் கைத்தொழில்களுக்கு ஆதரவளித்தல்.<br>• வளர்ந்து வரும் ஏற்றுமதிக் கைத்தொழில்களுக்கான வர்த்தக பதிவுச் செயன்முறையை நெறிப்படுத்தலும் மற்றும் சான்றுப்படுத்தல் வசதிகளை விரிவாக்கலும்.<br>• ஏற்றுமதி இறக்குமதி வங்கியின் (எக்சிம் - EXIM) சேவைகள், தேவையான நிதிச் சேவைகள் மற்றும் ஏற்றுமதி ஒருங்கிணைப்பு உதவியினை |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | வழங்குவதன் மூலம் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான ஆதரவை வலுப்படுத்தல்.<br>• டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் இ- வர்த்தக தளங்களை ஊக்குவிப்பதன் மூலம் சர்வதேச வர்த்தக வாய்ப்புக்களை மேம்படுத்தல். |
| கைத்தொழில் வலயங்களும் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளும் | உகந்த வலயங்கள், மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தியின் ஊடாக கைத்தொழில் மற்றும் துறை சார் வளர்ச்சியை வலுப்படுத்துதல். | • முன்னர் பூரணமாகப் பயன்படுத்தப்படாத வளங்களைப் பயன்படுத்தி ஏற்கனவே உள்ள கைத்தொழில் வலயங்களை அபிவிருத்தி செய்தல்.<br>• இனங்காணப்பட்ட வளர்ச்சி வாய்ப்புக்களுக்கு ஏற்ப புதிய கைத்தொழில் வலயங்களை உருவாக்கலும், மற்றும் இவ்வலயங்களில் புத்தாக்கங்களையும் மற்றும் கைத்தொழில் பன்முகப்படுத்தலையும் ஊக்குவித்தல்.<br>• இலக்காகக் கொள்ளப்பட்ட பிராந்தியங்களில் மீன் பிடி, விவசாயம், மற்றும் சுற்றுலாத் துறைகளுக்கு ஆதரவளிப்பதற்கு தேவையான உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்தல். |
| நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்கள் | பொருத்தமான வலுவூட்டல் பொறிமுறைகளின் ஊடாக நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளை ஊக்குவித்தல். | • தேசிய மற்றும் பிராந்திய மட்டங்களில் நுண், சிறிய, மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கு ஆதரவளிப்பதற்கு விஷேட பிரிவொன்றை உருவாக்குதல் மற்றும் அவர்களது வர்த்தகத் தேவைகளை வினைத்திறனான முறையில் பூர்த்தி செய்வதற்கும் நெறிப்படுத்தப்பட்ட ஒற்றைச் சாளர சேவைகளை வழங்குதல்.<br>• நுண், சிறிய மற்றம் நடுத்தர் அளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கு முக்கியமான நிதி உதவியை வழங்குவதற்காக நிதித் துறையின் ஊடாக சாத்தியப்பாடு மற்றும் கடன் மதிப்பெண் அடிப்படையில் ரூபா 10 மில்லியன் வரை பிணையில்லா கடன் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | பிரதான துறைகளை முன்னேற்றுதல். | • சமூர்த்தி வங்கிகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கிகள் உள்ளிட்ட கூட்டுறவு வங்கி முறைமையை வலுப்படுத்துவதன் மூலம் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான நிதி உதவியை அதிகரித்தல்.<br>• ஓத்துழைப்பின் சுட்டுச் சக்தியை பயன்படுத்தவும் மற்றும் வலுப்படுத்தவும் கூட்டுறவு வர்த்தக மாதிரிகளை ஊக்குவித்தல்.<br>• நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளின் பொருளாதார நடவடிக்கைகளை மீட்டெடுக்கவும், மற்றும் நிலுவையில் உள்ள கடன்களுக்கு நிவாரணம் அளிக்கவும் புதிய நிவாரண வங்கியொன்றினை ஸ்தாபித்தல்.<br>• தேர்ந்தெடுக்கப்பட்ட தொடக்க நிறுவனங்களின் சந்தை நுழைவிற்கு வசதியளிப்பதற்கு வர்த்தக தொடக்க காப்பீட்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்கான வரி ஊக்குவிப்புக்களை வழங்குதல்.<br>• ஏற்றுமதித் தயாரிப்பில் உள்ள நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு உதவுவதற்கு TIEP திட்டத்தின் கீழ் மூலப்பொருட்கள் மற்றும் இயந்திரங்களுக்கு தற்காலிக இறக்குமதி வசதிகளை எளிதாக்குதல்.<br>• விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பெறுமதி சேர்க்கப்பட்ட, கனிய வளங்களை அடிப்படையாகக் கொண்ட, பொதியிடல், மின் சக்தியும் எரிசக்தியும், ஏற்றுமதி சார்ந்த துறைகள், கடல் சார் சேவைகள், விமான பராமரிப்பு, மற்றும் சேவை விநியோகம், தொலைத் தொடர்பு, தகவல் |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | தொழில்நுட்பம், மற்றும் தொடர்புடைய சேவைகள், நிர்மாணம் மற்றும் போக்குவரத்து போன்ற கைத்தொழில்களை ஊக்குவிப்பதில் கவனம் செலுத்துதல்.<br>● தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு விஷேடமாக மீன் பண்ணைகளில் மீன் பிடி முறைகளை ஒருங்கிணைப்பதன் மூலம் மீன் பிடித்தல், மீன் பிடி உபகரணங்கள் மற்றும் கப்பல்களை தயாரித்தல், மீன் உற்பத்திகளை பாதுகாத்தல், பொதியிடல், மீன்பிடித் துறையை குறிப்பாக மீனவ சமூகத்தின் சமூக பொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் அதே வேளை, உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளை ஆய்வு செய்தல்.<br>● பாற் பண்ணைக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள அனைத்து பங்குதாரர்களையும் ஈடுபடுத்துவதன் மூலம் பால் மற்றும் பாலுடன் தொடர்புடைய உற்பத்தி பொருட்களில் தன்னிறைவை அடைவதற்கு முழுமையான ஒரு நிகழ்ச்சித் திட்டத்தை வடிவமைத்து நிறைவேற்றல்.<br>● வளங்கள், சந்தை வாய்ப்புக்கள், மற்றும் வளர்ச்சி வாய்ப்புக்களின் கிடைப்பனவைக் கருத்திற் கொண்டு மாவட்ட அபிவிருத்தித் திட்டத்தின் ஒரு பகுதியாக மாவட்டங்கள் அல்லது பிராந்தியங்களில் சுதேச உற்பத்திப் பொருட்களின் மெம்பாட்டிற்கு ஆதரவளித்தல்.<br>● விவசாயம், கைத்தொழில், சேவை வெளியீடுகளின் உற்பத்தி, மற்றும் உள்நாட்டு நுகர்வுக்கு அவசியமான கருவிகள், உபகரணங்கள், மற்றும் இயந்திரங்களின் தயாரிப்பு போன்றவற்றை ஊக்குவித்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| பாரம்பரிய கலைகள், மற்றும் கைவினைக் கைத்தொழில் | பாரம்பரிய கைத்தொழில்களை ஊக்ககுவித்தலும் மற்றும் வலுப்படுத்தலும். | • ஒரு ஒருங்கிணைந்த நோக்கத்தை நோக்கி இக்கைத்தொழிலை முன்னேற்றுவதில் அர்ப்பணிக்கப்பட்ட நிறுவனங்களின் வலையமைப்பை வழிநடாத்தலும் மற்றும் சீரமைத்தலும்.<br>• தச்சுத் தொழில் போன்ற பாரம்பரிய கைத்தொழில்களுக்கான மூலப்பொருட்களின் கிடைப்பனவை உறுதிப்படுத்துவதற்கு நிகழ்ச்சித் திட்டமொன்றினை உருவாக்குதலும், மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மர இனங்களை நடுதல்.<br>• தச்சுத் தொழில் எதிர்கொள்ளும் சவால்களுக்கு தீர்வு காண்பதற்காக அரச நிறுவனங்களையும் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களையும் ஒன்றிணைப்பதன் மூலம் விஷேட செயலணி ஒன்றை உருவாக்குதல்.<br>• பதிவு செய்த கைவினைஞர்களுக்கான அத்தியாவசிய தொழில்நுட்பக் கருவிகளை கொள்வனவு செய்வதற்கான வரி ஊக்குவிப்புக்களை வழங்குதல்.<br>• கூட்டுறவுக் கட்டமைப்புகள் மூலம் உற்பத்தியாளர்களை மேம்படுத்தலும், ஆதரவளித்தலும்.<br>• ஓன்றிணைக்கப்பட்ட முறைமையொன்றின் ஊடாக செலவினைக் குறைப்பதன் மூலம் ஏற்றுமதிச் செயன்முறையினை நெறிப்படுத்துவதற்கு நிகழ்ச்சித் திட்டமொன்றினை ஆரம்பித்தல்.<br>• கைவினைஞர்களைப் பாதுகாப்பதற்கும் மற்றும் பாரம்பரிய கைவினைப் பொருட்களைப் பாதுகாப்பதற்கும் பாதுகாப்பு வலை உட்பட தேசிய நிகழ்ச்சித்திட்டமொன்றினை உருவாக்குதல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்குத் தேவையான தலையீடுகள் | நிலைபேறான மற்றும் நியாயமான வர்த்தக நடைமுறைகளை ஊக்குவித்தல் | • நிலைபேறான தன்மையை நோக்கி குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தும் அதே வேளை, உலகளாவிய சந்தைக்குத் தேவையான நியாயமான வர்த்தகத்தின் தர நிலைகள், தொழிலாளர் தரம் மற்றும் வெளிப்படைத் தன்மை ஆகியவற்றை அடைவதற்கு கைத்தொழில்களை வலுவூட்டக் கூடிய முழுமையான நிகழ்ச்சித்திட்டமொன்றினை உருவாக்குதல்.<br>• சுற்றுச்சூழலின் நிலைபேறான தன்மையை உறுதிப்படுத்துதல், காலநிலை மாற்ற சவால்களுக்கு தீர்வு காணல், கைத்தொழில் துறையில் நீண்ட கால் நெகிழ் திறனுக்கும் மற்றும் திறன் அபிவிருத்திக்கும் அவசியமான மைல்கற்களை அடைவதற்குமான மூலோபாய முயற்சியொன்றினை அபிவிருத்தி செய்தல். |
| டிஜிடல்மயமாக்கலும் மற்றும் தொழில்நுட்பப் பயன்பாடும் | எதிர்கால வளர்ச்சிக்கான கைத்தொழில் டிஜிடல் மாற்றமும் மற்றும் புதுமைகளை இயக்குதலும். | • நான்காம் கைத்தொழில் புரட்சியின் நன்மைகளை விரைவாகப் பெறுவதற்கும் மற்றும்வரவிருக்கும் ஐந்தாவது கைத்தொழில் புரட்சிக்கு நமது கைத்தொழில்களை மூலோபாய ரீதியாக நிலைநிறுத்துவதற்கும் கைத்தொழில் 4.0 / 5.0 முதிர்வு சுட்டெண்ணுக்கான கைத்தொழிலுக்கு வசதியளித்தல்.<br>• அதி வேக இணைய இணைப்பு, அதி நவீன தரவு நிலையங்கள், மற்றும் முழுமையான இணைய பாதுகாப்பு முறைமைகளை உள்ளடக்கிய வலுவான டிஜிடல் உட்கட்டமைப்பை உருவாக்குவதற்கு அரச மற்றும் தனியார் துறை முதலீடுகளுக்கு ஆதரவளித்தல்.<br>• கைத்தொழில் கண்டுபிடிப்புக்கள், மற்றும் போட்டித் தன்மையை வழி நடாத்துவதற்கு LoT, செயற்கை நுண்ணறிவு, cloud computing மற்றும் தரவுப் பகுப்பாய்வுகள் போன்ற அடித்தளத்தை அமைத்தல்.<br>• இலங்கையின் கைத்தொழில் தொழில்முயற்சியாளர்கள் மத்தியில் டிஜிடல் மாற்றத்திற்கான அவர்களது இயலளவை மேம்படுத்துவதன் மூலம் கைத்தொழில் 4.0 தொழில்நுட்பங்களை ஏற்றுக் கொள்வதையும் மற்றும் ஒருங்கிணைப்பதையும் ஊக்குவித்தல் மற்றும் டிஜிடல் மாற்றத்திற்கான அவர்களின் திறனை மேம்படுத்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | • கம்பனிகள் தங்கள் செயல்பாட்டுக் கட்டமைப்புக்களை டிஜிடல் தொழில்நுட்பங்களை உட்பொதிப்பதில் கம்பனிகளுக்கு வசதியளிப்பதற்கு தொழில்நுட்ப ஆதரவையும் மற்றும் நிதி ஊக்குவிப்புக்களையும் வழங்குதல்.<br>• பணியாளர்களின் தொழில்நுட்ப நிபுணத்துவத்தையும் மற்றும் டிஜிடல் எழுத்தறிவையும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு திறன் அபிவிருத்தி மற்றும் மீள்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிலும் முதலிடுவதில் உறுதியாக இருத்தல்.<br>• கைத்தொழில் பங்குதாரர்கள், கல்வியியலாளர்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள், மற்றும் வளர்ந்து வரும் தொழில்முயற்சியாளர்கள் ஆகியோருக்கிடையில் ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்கு மாறும் டிஜிடல் தொடக்க சுற்றுச்சூழல் முறையொன்றினை உருவாக்குதல்.<br>• அறிவைப் பகிர்ந்து கொள்ளல், தொழில்நுட்ப ஒத்துழைப்பு மற்றும் தொழில்முயற்சியாளர்களின் வளர்ச்சி என்பவற்றிற்கான தளங்களை வழங்குவதற்கு புத்தாக்க நிலையங்கள, தொழில்நுட்ப பூங்காக்கள் மற்றும் பொறிப்பகங்களை (incubators) நிறுவுதல்.<br>• புத்தாக்கங்களை ஊக்குவிக்கும், புலமைச் சொத்துக்களின் உரிமைகளைப் பாதுகாத்தல், தரவு தனியுரிமைளை உறுதிப்படுத்தல், பாதுகாப்பு மற்றும் சைபர் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முழுமையான சட்டக் கட்டமைப்பு ஒன்றினை நடைமுறைப்படுத்தல்.<br>• ஸ்தாபிக்கப்பட்ட தரங்கள் மற்றும் நோக்கங்களுடன் சீரமைவதை உறுதிப்படுத்தும் அதே வேளை, டிஜிடல் உருமாற்ற முயற்சிகளின் முன்னேற்றத்தை கண்காணிக்கவும் மதிப்பீடு செய்வதற்கும் ஒரு வலுவான பொறிமுறையொன்றினை அபிவிருத்தி செய்தல்.<br>• இ - அரசாங்க முன்னெடுப்புக்களின் ஊடாக கைத்தொழில் செயற்பாடுகளை நெறிப்படுத்துவதற்கும் மற்றும் சேவை வினைத்திறனையும், மற்றும் வெளிப்படைத்தன்மையையும் மேம்படுத்துவதற்கும் அதி நவீன ஒற்றைச் சாளர இயங்கு தளமொன்றை பயன்படுத்துதல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| எளிதாக வர்த்தகம் மற்றும் தொழில்முயற்சிகளை செய்வதை ஊக்குவித்தல். | டிஜிடல் புத்தாக்கம் மநிதி மாதிரிகள், மற்றும் ஆதரவுச் சேவைகள் என்பனவற்றின் ஊடாக தொழில்முயற்சியை ஊக்குவித்தலும் மற்றும் பொருளாதார வளர்ச்சியை உருவாக்கலும்.<br>.<br>. | • துணிகர மூலதனம், வர்த்தக மூலதன நிதி, மற்றும் அபிவிருத்தி வங்கிகளின் ஊடாக முதலீடுகளை ஊக்குவிப்பதன் ஊடாக நிதிக்கான அணுகலுக்கு வசதியளித்தல்.<br>• தொழில்சார் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பாடசாலைப் பாடத்திட்டத்தில் கல்வி மற்றும் பயிற்சியை ஒருங்கிணைப்பதன் மூலம் தொழில்முயற்சியை மேம்படுத்தும் அதே வேளை, டிஜிடல் சுய தொழிலை (freelancing) ஒரு தொழிலாகவும் முறையாக அங்கீகரித்து தேவையான வளங்களையும் வழங்குதல்.<br>• வர்த்தக நடவடிக்கைகளுக்கு ஆதரிக்கவும் மற்றும் தொழில்நுட்ப தழுவல்களை வளர்க்கவும் டிஜிடல் உட்கட்டமைப்பில் முதலீடு செய்தல்.<br>• மூலோபாய வர்த்தக உடன்படிக்கைகள், ஏற்றுமதி ஊக்குவிப்பு முன்னெடுப்புக்கள், மற்றும் கட்டமைப்பு வலையமைப்பு வாய்ப்புக்களின் என்பனவற்றின் ஊடாக உள்ளூர் மற்றும் சர்வதேச மட்டத்தில் சந்தைக்கான அணுகலை ஏற்படுத்தல்.<br>• பொறிப்பகங்கள் (incubator) வளர்ச்சி ஊக்கி (accelerator) ஆக்சிலரேட்டர் நிகழ்ச்சித்திட்டங்களை இணை வேலை செய்யும் இடங்கள், மற்றும் வலையமைப்புத் தளங்களை நிறுவுவதன் மூலம் தொழில்முயற்சியாளர்களுக்கான சுற்றுச்சூழல் அமைப்பொன்றை உருவாக்குதல். |

## 3.9 நிலைபேறான வளங்களின் பயன்பாடு – உயர்வான நன்மைகளின் உருவாக்கம்

**கொள்கை கோட்பாடுகள் –**

- விஞ்ஞான ரீதியான ஆய்வு
- நிலைபேறான அகழ்வாராய்ச்சியும் மற்றும் பயன்பாடும்
- உகந்த பயன்பாடு
- உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சந்தகளில் அதிக பட்ச நன்மைகள்

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| கனியங்களுடன் தொடர்புடைய வளங்கள் | வளங்களை மேம்படுத்தல், புத்தாக்கம், மற்றும் நிலைபேறான அபிவிருத்தியின் ஊடாக கைத்தொழில் வளர்ச்சியை ஊக்குவித்தல் | பின்வரும் கைத்தொழில்களை ஸ்தாபிப்பதற்கு கனிய வளங்கள் தொடர்பான சாத்திய வள ஆய்வுகளை நடாத்தியதன் பின்னர் படிப்படியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளல். :<br><br>• அபிவிருத்தியடைந்த தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதன் மூலம் நாட்டிற்குள்ளும் மற்றும் கடலடிப் பகுதியிலும் உள்ள கனிம தாதுக்கள் மற்றும் அரிய பூமிக் கூறுகளை (REEs) ஆராய்தல்.<br>• கனிமம் தொடர்பான கைத்தொழில்கள் ஆய்வுகள் குறித்த பரிந்துரைகளை வழங்குவதற்கும் சந்தை கணிப்புகளை மேற்கொள்ளவும் ஒரு விஷேட பிரிவை உருவாக்குதல்.<br>• உள்ளூர் சந்தை தேவைகள் மற்றும் சர்வதேச சந்தையை இலக்காகக் கொண்டு தரமான உப்பு உற்பத்தியை விரிவுபடுத்துதல்.<br>• உப்பு அகழ்விலிருந்து உற்பத்தித் தொழில்களைத் தொடங்க தேவையான தொழில்நுட்ப மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள்.<br>• இலங்கையில் சேர்பன்டின் தாதுக்களைப் பயன்படுத்தி நிக்கல் சல்பேட் மற்றும் மெக்னீசியம் தொடர்பான உற்பத்திப் பொருட்கள்.<br>• விவசாயத்தில் குறுகிய கால பயிர்களுக்கு மிகவும் பொருத்தமான ஒற்றை சுப்பர் பொஸ்பேட் உரத்தை உற்பத்தி செய்யும் தொழில்கள் மற்றும் நடுத்தர கால பயிர்களுக்கு பொஸ்பேட் உரத்தை உற்பத்தி செய்யும் தொழில்கள்.<br>• விவசாயத்திற்கு உயர்தர டொலொமைட் உரத்தை உற்பத்தி செய்தல்.<br>• உள்ளூர் சந்தையை இலக்காகக் கொண்டு வண்டல் சுண்ணாம்பு உள்ள பகுதிகளைப் அடிப்படையாகக் கொண்டு ஒரு சீமெந்து உற்பத்தித் தொழிற்சாலையை உருவாக்குதல்.<br>• மருந்து, காகிதம், மற்றும் துணி போன்ற கைத்தொழில்களுக்கு தேவையான வீழ்படிந்த கல்சியம் காபனேட்டை உற்பத்தி செய்தல்.<br>• கனிம மணலை சுத்திகரிக்கும் போது இல்மனைட்டிலிருந்து ரூட்டைல், சிர்கான் போன்றவற்றை பிரித்தெடுப்பதற்குத் தேவையான புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | • இல்மனைட் மற்றும் ரூட்டைலை மூலப்பொருளாக இறக்குமதி செய்வதற்குப் பதிலாக ஒரு டைட்டானியம் ஆக்சைடு உற்பத்தி தொழிற்சாலை.<br>• கனிம மணலை பிரித்தெடுக்கும் போது பெறப்படும் சிர்கானை சுத்தம் செய்யும் தொழிற்சாலை பளபளப்பான பீங்கான் பொருட்களுக்கு பயன்படுத்தல்.<br>• சர்வதேச சட்டங்களின் படி மற்றும் தொடர்புடைய நிறுவனங்களின் உதவியுடன் மோனசைட் மணலில் இருந்து தோரியம் லந்தனம் மற்றும் சீரியத்தை பிரிக்க தொழிற்சாலைகள்.<br>• கார்னெட் மணலைச் சுற்றி பெறுமதி சேர்க்கும் தொழிற்சாலைகள்.<br>• ஆதன் குறைந்த பயன்பாட்டைக் குறைப்பதன் மூலம் குவார்ட்ஸ் மற்றும் சிலிக்காவை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்சாலைகள்.<br>• கிராபைட்டில் கார்பனின் சதவீதத்தை 99.9 சதவீதமாக அதிகரிக்க ஆராய்ச்சி நடாத்துதல், அதைச்சுற்றி புதிய தொழிற்சாலைகளை அமைத்தல்.<br>• கிராபைட்டை பயன்படுத்தி ஆயத்த பொருட்களின் உற்பத்தியை ஊக்குவித்தல்.<br>• மிகவும் வினைத்திறனான பேட்டரிகள், இரும்பு, சீமெந்து மற்றும் டயர்கள் போன்ற உற்பத்திப் பொருட்களின் தரத்தை அதிகரிக்க கிராபெனை பயன்படுத்தும் கைத்தொழில்கள்.<br>• உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி உயர் தொழில்நுட்ப உபகரணங்களைுக்குத் தேவையான பீங்கான் மற்றும் பீங்கான் பாகங்களின் உற்பத்தியை ஊக்குவித்தல்.<br>• மைக்கா மற்றும் பெல்ஸ்பார் தாதுக்களைச் சுற்றியுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்களை ஊக்குவித்தல்.<br>• தற்போது பயன்படுத்தப்படும் நேரியல் முறைக்கு பதிலாக, உலக சந்தையில் கனிதமங்களின் விலை, செய்யப்பட்ட அகழ்வாராய்ச்சியின் அளவு மற்றும் அதற்கான செலவைப் பயன்படுத்தி சிறிய மற்றும் நடுத்தர மற்றும் பெரிய அளவிலான அகழ்வாராய்ச்சிகளுக்கான அரசாங்கப் பங்கை தீர்மானிக்கும் ஒரு முறை. |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | • பிற கைத்தொழில்களுக்கு பயன்படுத்தப்படும் கந்தக அமிலத்தின் உற்பத்தியைத் தொடங்குதல் |
| இரத்தினக்கற்களும் மற்றும் ஆபரணங்களும் | இலங்கையின் இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணக் கைத்தொழில்களின் நிலைபேறான அபிவிருத்தியும் மற்றும் உலகளாவிய போட்டித் தன்மையும் | • இரத்தினக்கல் கனியங்களை இனங்காண்பதற்கான நவீன தொழில்நுட்பங்கள்<br>• இரத்தினக்கற்களுக்கு பெறுமதிகளைச் சேர்ப்பதற்கான நவீன தொழில்நுட்ப ஆதரவுகள்.<br>• சர்வதேச இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணச் சந்தை<br>• இரத்தினபுரி நகரைச் சுற்றி ஒரு சர்வதேச இரத்தினக்கற்கள் நிலையம்.<br>• சுரங்கத் தொழில் மற்றும் இரத்தினக்கல் கைத்தொழிலின் நிலைபேறான அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண அதிகார சபை சட்டத்திற்குத் தேவையான திருத்தங்கள்<br>• சர்வதேச மட்டத்திலான இரத்தினக்கல் ஆய்வு கூடங்கள்<br>• இரத்தினக்கல் கைத்தொழிலில் உள்ள அனைத்து பங்குதாரர்களினதும் முறையான பதிவும் மற்றும் புதுப்பிக்கப்பட்ட தரவு முறையும்.<br>• இரத்தினக்கல் சுரங்கத் தொழில்ாளர்களின் பாதுகாப்புக்கான தர நிர்ணயங்கள்<br>• அனைத்து சுரங்க உடமையாளர்களுக்கும் சர்வதேச இரத்தினக் கற்களின் விலைகள் மற்றும்தர நிர்ணயங்கள் தொடர்பாக தகவல்களை வழங்குவதற்கான ஒரு செயன்முறை.<br>• இரத்தினக்கல் கைத்தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக இரத்தினக்கல் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் பாதுகாப்பு அதிகார சபையை நிறுவுதல்.<br>• இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழிலில் இணைக்கப்பட்டுள்ள அனைத்து அரச நிறுவனங்களையும் சட்ட ரீதியாகவும் மற்றும் டிஜிடல் முறை மூலமாகவும் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தல்.<br>• இரத்தினக்கல் அகழும் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் விபத்துக்களின் காரணமாக எற்படக் கூடிய முழு உடல் |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | முடக்கம் அல்லது இறப்புக்க நிகழும் பொது நியாயமான இழப்பீடு ஒன்றினை வழங்குவதற்கான ஒரு செயன்முறை.<br>• அரசின் தலையீட்டின் ஊடாக தற்போதுள்ள நிதியை முறைப்படுத்துவதன் மூலம் இரத்தினக் கல் மற்றும் ஆபரணக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு ஓய்யூதியத்துடன் ஒரு சமூக பாதுகாப்பு நிகழ்ச்சத் திட்டம்.<br>• இரத்தினக்கல் மற்றும் ஆபரணக்கைத்தொழிலில் மற்றும் தொடர்புடைய துறைகளில் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் கல்வி மற்றும் தொழில் சார்ந்த நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்தல்.<br>• பாரம்பரிய இரத்தினக்கல் அகழ்தல் கைத்தொழிலை பாதுகாப்பதன் மூலம் இரத்தினக்கல் கைத்தொழிலை இயந்திரமயமாக்கல்.<br>• இக்கைத்தொழிலின் அபிவிருத்திக்குச் சாதகமான வரி விதிப்பு முறைமை ஒன்றினை அறிமுகப்படுத்தல். |

## 3.10 பாதுகாக்கப்பட்டதொரு எரிசக்தி நிலையம் - நிலைபேறானதொரு வருவாய் மூலம்

**கொள்கை கொட்பாடுகள் –**

- அத்தியாவசிய தேசிய சேவையொன்றாக எரிசக்தி
- நிலைபேறான மற்றும் பாதுகாப்பான எரிசக்தி வழங்கலும் மற்றும் நுகர்வும்
- வெளிநாட்டு வருமானமொன்றாக எரிசக்திப் பொருளாதாரம்

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| எரிசக்திச் செலவைக் குறைத்தல் | போட்டித் தன்மை கொண்ட குறைந்த காபன் சந்தைப் பொறிமுறைகளின் ஊடாக அனைவரும் அணுகக் கூடிய குறைந்த செலவிலான எரிசக்தினை உறுதிப்படுத்தல். | • புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் தூய எரிசக்தி மூலங்களை முன்னுரிமைப்படுத்துவதன் மூலம் மின்சார உற்பத்திக்கு புதைபடிவ எண்ணெயில் தங்கியிருப்பதைக் குறைத்தல்.<br>• மின்சாரக் கட்டணங்களை புதுப்பித்தலும் மற்றும் போட்டித் தன்மை கொண்ட விலை மாதிரி ஒன்றினை நடைமுறைப்படுத்தலும்.<br>• தெளிவான மற்றும் நியாயமான சரி செய்தல் செயன்முறையை உருவாக்குவதற்கு LPG மற்றும் எண்ணெய் விலையிடல் சூத்திரத்தை மாற்றியமைத்தல்.<br>• வரிக்குவியலைத் தடுக்கவும் மற்றும் நுகர்வோரின் புரிந்துணர்வை மேம்படுத்தவும் சிக்கல் தன்மையையுமம் மற்றும் இடைநிலை எரிசக்தி தொடர்பான வரிகளையும் குறைக்கக் கூடிய நேரடியான வரி முறையொன்றை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல். |
| புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களை பயன்படுத்துவதன் மூலம் மின் உற்பத்தியை அதிகரித்தல். | புதுமையான அணுகுமுறைகளைப் பயன்படுத்துவதன் ஊடாக சுதேச புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களின் மூலம் வாய்ப்பை அதிகரித்தல். | • எரிசக்தி நெருக்கடியை சமாளிப்பதற்காக சூரிய ஒளி மின்னழுத்த கொள்திறனை 2,000 மெவோ ஆக அதிகரிப்பதற்கு ஐந்தாண்டு திட்டமொன்றினை ஆரம்பித்தல்.<br>• செலவுகளைக் குறைப்பதற்காக புதுமையான வர்த்தக மாதிரிகள் மற்றும் கட்டணங்களின் ஊடாக கூரை மீது பொருத்தப்பட்ட சூரிய எரிசக்தி முறைமை மற்றும் மின்கள களஞ்சியங்களை ஊக்குவித்தல்.<br>• இலங்கையில் காற்றாலை எரிசக்தி கருத்திட்ட அபிவிருத்திக்காக போட்டி ரீதியிலான கொள்முதலைப் பயன்படுத்தல்.<br>• சாத்திய வள ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு நீர்மின்சார நீர் பிடிப்புப் பகுதிகளில் காடுகளின் உள்ளடக்கத்தை அதிகரித்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| சூரிய ஒளி மின்னழுத்தத்தை வினைத்திறனான முறையில் பயன்படுத்துவதற்காக மின் திட்ட முறைக்கு நுண் மின் கட்டம் (micro grid) மற்றும் செயலூக்கமுள்ள மின்கட்டம் (smart grid) எண்ணக்கரு | வினைத்திறனான மின்கட்ட முகாமைத்துவத்தின் ஊடாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஒன்றிணைப்பை உறுதிப்படுத்தல் மற்றும் கேள்விக்கான பதிலை செயல்படுத்தல். | • புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உறிஞ்சுதலை மேம்படுத்த செயலூக்கமுள்ள மின்கட்ட உட்கட்டமைப்பை (smart grid) உருவாக்குதல்.<br>• நியாயமான இழப்பீட்டிற்கான கேள்வி பதில் மற்றும் நெகிழ்வுத் தன்மையுள்ள சேவைகளில் வாடிக்கையாளர்களின் பங்கேற்பை செயற்படுத்தல். |
| இலங்கையில் பச்சை ஹைட்ரஜன் தொழில்நுட்பம் | ஒரு கூட்டு கூட்டமைப்பை உருவாக்குவதன் ஊடாக பச்சை ஹைட்ரஜனின் சாத்தியப்பாட்டை பயன்படுத்துதல். | • பச்சை ஹைட்ரஜன் முயற்சிகளை ஊக்குவிப்பதற்கும் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கும் ஒரு பிரத்தியேக அரச நிறுவனத்தை உருவாக்குதல்.<br>• பச்சை ஹைட்ரஜன் துறையில் நிபுணத்துவம் மற்றும் புதுமைகளை மேம்படுத்துவதற்கு கல்வியியல் துறை மற்றும் கைத்தொழில் துறையைச் சேர்ந்த நிபுணர்களை ஈடுபடுத்துதல்.<br>• ஒத்துழைப்பு மற்றும் முதலீட்டை அதிகரிப்பதற்கு பச்சை ஹைட்ரஜனில் சர்வதேச தலைவர்களையும் மற்றும் பங்குதாரர்களையும் ஈர்ப்பதற்குற்கான வேலை.<br>• முன்னோடிக் கருத்திட்டங்களை உருவாக்கலும் மற்றும் தொழில்நட்ப ஒன்றிணைப்புக்கான தயாரிப்பும் |
| எரிசக்தி களஞ்சிய முறைமைகள் | மின் கட்ட நம்பகத் தன்மையை மேம்படுத்தும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் ஒருங்கிணைப்பை ஆதரிக்கும் மற்றும் பொருளாதார நன்மைகளை வழங்கும் எரிசக்தி களஞ்சிய முறைக்கான முறையான பொறிமுறையை உருவாக்குவதை உறுதி செய்தல். | • குழாயிலிடப்பட்ட ஹைட்ரோ களஞ்சியம், மின்கள எரிசக்தி களஞ்சிய முறைமை,புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உள்வாங்கலை மேம்படுத்துவதற்கானகலப்பு முறைமைகளுக்கான சாததியப்பாட்டை மதிப்பிடுவதற்கு சாத்திய வள ஆய்வுகளை பூர்த்தி செய்தல்.<br>• சாத்திய வள ஆய்வுகளில் இனங்காணப்பட்ட குறித்த எரிசக்தி களஞ்சிய கருத்திட்டங்கள் மற்றும் தொழில்நுட்பங்களுக்கு ஏற்ப புதமையான வர்த்தக மாதிரிகளை அபிவிருத்தி செய்தல்.<br>• அபிவிருத்தி செய்யப்பட்ட எரிசக்தி களஞ்சிய கருத்திட்டங்கள் மற்றும் தொழில்நுட்பங்களுக்கு முதலீடுகளை ஈர்ப்பதற்கு முதலீட்டு மூலோபாயங்களை நடைமுறைப்படுத்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| மாறும் எரிபொருளாக திரவீகமாக்கப்பட்ட இயற்கை வாயு | பன்முகப்படுத்தலின் ஊடாக எரிசக்தி பாதுகாப்பை மேம்படுத்தல். | • போட்டி ரீதியாக கொள்முதல் செய்யப்பட்ட முனையமொன்றினை நிறுவுவதன் மூலம் திரவீகமாக்கப்பட்ட இயற்கை வாயுவின் இறக்குமதிக்கு ஆதரவளித்தல்.<br>• திரவீகமாக்கப்பட்ட இயற்கை வாயு வழங்கலுக்கு போட்டித் தன்மையுள்ள கொள்முதலின் ஊடாக எரிபொருள் மூலங்களை இனங்காணலும் மற்றும் பாதுகாத்தலும்.<br>• திரவீகமாக்கப்பட்ட இயற்கை வாயுவின் பயன்பாட்டிற்கு மாற்றுவதற்கு நடைமுறையிலுள்ள 1,500 மெ.வோ கொள்திறன் கொண்ட அனல் மின் நிலையங்களை தயார் செய்தல். |
| சிறு நீர் மின்நிலையங்கள் மற்றும் ஏனைய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மின்நிலையங்களுக்குமான மின்சக்தி கொள்வனவு உடன்படிக்கைகளை புதுப்பித்தல். | சமனிலைப்படுத்தப்பட்ட பயன்களை பகிரும் பொறிமுறைகளின் ஊடாக புதுப்பிக்கத்தக்க பொறிமுறையை உருவாக்குவதனை உறுதிப்படுத்தல். | • உடன்படிக்கைகளை புதுப்பிப்பதற்கான பொறிமுறையொன்றினை உருவாக்குதல், இயற்கை வளங்கள் உள்ள பொது மக்களுக்கு நன்மைகள் பாய்வதை உறுதிப்படுத்தல் மற்றும் நியாயமான செயற்பாட்டு கட்டணத்தை உறுதி செய்வதன் மூலம் கருத்திட்ட அபிவிருத்தியாளர் மூலம் முதலீடு செய்யப்பட்ட மூலதனத்தை பாதகாத்தல் ஆகியவற்றுக்கு இடையே சமனிலையை ஏற்படுத்தல். |
| சிறிய அணு மின்சக்தி தொழில்நுட்பத்தை (SMR Technology) ஏற்றுக்கொள்ளல். | விருத்தியுற்ற அணுசக்தி தொழில்நுட்பங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் பயன்படுத்துவதன் ஊடாக அணுசக்தியை ஒருங்கிணைப்பதை உறுதி செய்தல். | • தேவையான மனித வளங்கள், பௌதீக வசதிகள், தர நிர்ணயங்கள், மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்புக்களை அபிவிருத்தி செய்வதற்கு கூட்டு உடன்படிக்கைகளை முடிவு செய்து கையெழுத்திட தொழில்நுட்பத்தில் முன்னணி வகிக்கும் நாடுகள் மற்றும் நிறுவனங்களுடன் ஈடுபடுதல். |
| பெற்றோலியத் துறை அபிவிருத்தி | எதிர்கால தேவையை பூர்த்தி செய்வதற்கும் மற்றும் எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் மேல் நிலை மற்றும் கீழ் நிலை பெற்றோலிய கைத்தொழிலை | • தற்போதுள்ள சுத்திகரிப்பு நிலையங்களை நவீன மயப்படுத்த அல்லது புதிய ஒரு சுத்திகரிப்பு நிலையத்தை உருவாக்குவதற்கான சாத்திய வள ஆய்வுகளை துரிதப்படுத்தல்.<br>• தயாரிப்புப் பொருளாதாரத்தை எரி பொருளாக சுத்திகரிப்பு துணை பொருட்களை பயன்படுத்துவது தொடர்பாக கவனம் செலுத்துவதன் மூலம் முழுமையான ஒன்றிணைக்கப்பட்ட அணுகுமுறையொன்றை ஏற்றலும், மற்றும் இவ்வாய்வுகளின் |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | மேம்படுத்துவதை உறுதி செய்தல். | ஊடாக சர்வதேச சந்தைகளுக்கான திறமையான பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல்.<br>• திருகோணமலை எண்ணெய் தாங்கி நிலையம் தொடர்பான நடைமுறையிலுள்ள அனைத்து உடன்படிக்கைகளையும் மீளாய்வு செய்தல், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான 24 தாங்கிகள், கூட்டு முயற்சிக் கம்பனிக்குச் சொந்தமான 61 தாங்கிகள் அவற்றின் பயன்பாட்டை உச்சப்படுத்துவதற்காக உடனடியாக பொருளாதாரத்தில் ஒருங்கிணைக்கப்படும். .<br>• களஞ்சிய வலையமைப்பை நவீன மயப்படுத்துவதன் மூலமும் மற்றும் புகையிரதப் போக்குவரத்தைப் பயன்படுத்துவதன் மூலமும் மற்றும் வானிலை அல்லது புவிசார் அரசியல் கொந்தளிப்பால் ஏற்படும் நெருக்கடிகளின் போது கூட எரிபொருளின் தொடர்ச்சியான நிரம்பலுக்கு உத்தரவாதமளித்தல்.<br>• கொழும்புத் துறைமுகத்திற்கும் மற்றும் கொலன்னாவை முனையத்திற்கும் இடையில் பாழடைந்த குழாய் வரிசையை பல்வேறு பெற்றோலிய பொருட்களை ஏற்றி இறக்கும் கொள்திறன் கொண்ட முறையொன்றை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (CPSTL) நிதியின் ஊடாக புதுப்பித்தல்.<br>• தற்போதுள்ள எண்ணெய் முனையங்களின் திருத்தப் பணிகளைத் தொடர்ந்து திருகோணமலையில் ஒரு சர்வதேச எண்ணெய் பரிமாற்ற மற்றும் சரக்குக் களஞ்சிய முனையத்தை நிர்மாணித்தல்.<br>• உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்யும் வகையில் சபுகஸ்கந்தை சுத்திகரிப்பு நிலையத்தை நவீனமயமாக்குதல் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் மற்றும் தொடர்புடைய பொருட்களுக்கான வெளிநாட்டு சந்தையில் குறிப்பிடத்தக்க பங்கைக் கைப்பற்றுதல்.<br>• மன்னார் மற்றும் காவேரிப் படுக்கையில் உள்ள இயற்கை எரிவாயு வளங்களின் வர்த்தக மதிப்பை அடையும் நோக்குடன் சர்வதேச பங்காளர்களுடனான வர்த்தகமயமாக்கல் மற்றும் புதிய ஆய்வு உடன்படிக்கைகள் துரிதப்படுத்தல்.<br>• நீர்த்தேக்கம் மற்றும் எரிபொருள் களஞ்சிய மட்டங்களை எதிர்வு கூற நவீன தொழில்நுட்பம் மற்றும் இடர் முகாமைத்துவக் கருவிகள் ஆகியன அரசாங்கத்தின் தலையீட்டுடன் ஒரு மீட்சிப் பொருளாதாரத்தை நிலைநிறுத்துவதற்காக மின்சாரம் |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | மற்றும் பெற்றோலிய எரிபொருள்களை தொடர்ச்சியாக வழங்குவதனை உறுதிப்படுத்துவதற்கும் பயன்படுத்தல்.<br>• உள்நாட்டிலும் மற்றும் வெளிநாட்டிலும் வாழும் இலங்கை விஞ்ஞானிகளின் ஒத்துழைப்புடன் நிறைவில்லாத குறுகிய கால சுற்றுச்சூழல் இலக்குகள் தொடர்பான உறுப்புரைகளை புதுப்பிப்பதன் மூலம் 2050 இல் இலங்கையின் நிகர பூஜ்ஜிய உமிழ்வு இலக்குகளை அடைவதற்கான உறுதிப்பாட்டை மேலும் வலுப்படுத்தல். |
| அரச தனியார் பங்கேற்புக் கருத்திட்டங்கள் மற்றும் சர்வதேச முதலீடுகளை ஒருங்கிணைப்பதன் மூலம் மின்சக்தித் துறை சீர்திருத்திங்கள் | முறையான மீள்கட்டமைப்பு பொறிமுறைகளின் ஊடாக எரிசக்தி வினைத்திறன், முதலீடுகளைக் கவர்தல், மற்றும் நம்பகமான சேவை விநியோகத்தையும் உறுதி செய்தல். | • முழுமையான பங்குதாரர் ஆலோசனைகள் மற்றும் சாட்சிகளை அடிப்படையாகக் கொண்ட மூலோபாயங்கள் என்பவற்றின் ஊடாக மின்சாரம் மற்றும் பெற்றோலியத் துறைகளை முறையான மீள்கட்டமைப்பை மேற்கொள்ளல்.<br>• நீண்ட கால எரிசக்தி நிரம்பல் திட்டமொன்றுக்கு ஏற்ப அரச, தனியார் மற்றும் சர்வதேச முதலீடுகளை ஈர்ப்பதற்கும் மற்றும் வசதியளிப்பதற்கு பிரத்தியேகமான பணியகம் ஒன்றினை உருவாக்குதல். இப்பணியகம் முன்னேற்றங்களை கண்காணிப்பதோடு, முதலீட்டு இடர்களையும் நிர்வகிக்கும்.<br>• தொழில்நுட்ப இழப்புகளைக் குறைப்பதற்கும், மற்றும் மின் திட்ட முறைகளின் நிறுவன ரீதியான முகாமைத்துவத்தை விருத்தி செய்வதற்கும இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு (PUCSL) மூலம் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தல்.<br>• கைத்தொழில் தர நிர்ணய குறியீடுகளை அடிப்படையாகக் கொண்டு சேவை குறுக்கீடுகளை அனுபவிக்கும் வாடிக்கையாளர்களுக்கு நீண்ட கால இழப்பீட்டு பொறிமுறையொன்றினை உருவாக்குதல். |
| வாடிக்கையாளர் சேவை | நியாயமான நீதித் தீர்வுகளை செயல்படுத்துவதன் மூலம் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் குறிப்பாக குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் மற்றும் | • 2022 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கிடையில் நியாயமற்ற முறையில் அதிக கட்டணம் செலுத்தப்பட வேண்டியிருந்ததன் காரணமாக மின்னிணைப்பு துண்டிக்கப்பட்ட குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சகள் உள்ளிட்ட அனைத்து வாடிக்கையாளர்களை மீண்டும் இணைத்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் சமமான மின்சார அணுகலை உறுதி செய்தல். | • வாடிக்கையாளர்களுக்கு நிலுவையில் உள்ள நிலுவைத் தொகைகளை தீர்ப்பபனவு செய்வதற்கு, நிதி நிவாரணம் ஒன்றினை உறுதி செய்வதன் மூலம் படிப்படியாக திருப்பிச் செலுத்துவதற்கு வசதியளிப்பதற்கும் நியாயமான ஒரு தவணைத் திட்டமொன்றினை வழங்குதல்.<br>• குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான புதிய மின்சார இணைப்புக்களுக்கான தவணைக் கொடுப்பனவுத் தேர்வுகளை வழங்குதல், மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு அத்தியாவசிய மின்சார சேவைகளுக்கான பரந்த அணுகலையும் மேம்படுத்தல். |
| அரச நிறுவனங்களிலும் மற்றும் மத வழிபாட்டிடங்களிலும் எரிசக்தி வினைத்திறன் மற்றும் உரையாடல் நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல். | ஒரு முழுமையான தேசிய நிகழ்ச்சித்திட்டமொன்றின் ஊடாக எரிசக்தி சுயாதீனத்தையும் மற்றும் நிலைபேறான தன்மையையும் உறுதிப்படுத்தல். | • நிறுவனங்களுக்கு (அரசாங்க வைத்தியசாலைகள், பாடசாலைகள், மற்றும் மதம் சார்ந்த வளாகங்கள் ) தங்களது சொந்த மின்சக்தியை உற்பத்தி செய்வதற்கு ஏற்ற வகையில் சூரிய மின்தகடுகள் மற்றும் காற்றாலை விசையாழிகள், மற்றும் ஏனைய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்தல்.<br>• ஒட்டு மொத்த நுகர்வைக் குறைப்பதன் மூலம் எரிசக்தி வினைத்திறன் நடைமுறைகள் மற்றும் தொழில்நுட்பங்கள் என்பனவற்றை ஊக்குவிப்பதற்கு பயிற்சிகளையும் வளங்களையும் அமுல்படுத்தல்.<br>• வெற்றிகரமான அமுல்படுத்தலை உறுதி செய்வதற்கு உள்ளூராட்சி மன்றங்கள், சமூகத் தலைவர்கள், மற்றும் பங்குதாரர்களுடன் நெருக்கமாகப் பணிபுரிதல். |
| போக்குவரத்துக்களில் எரிசக்தி மாற்றம் | போக்குவரத்துத் துறை புதைபடிவ எரிபொருள் மீது தங்கியிருப்பதிலிருந்து இலத்திரனியல் நகர்வு வரை மாற்றம் செய்வதற்கும் மற்றும் தூய எரிசக்தி உற்பத்தி செய்தல், காத்திரமான போக்குவரத்து உட்கட்டமைப்பு வசதிகளில் நிலைபேறான அபிவிருத்திக்கு ஆதரவளிப்பதை உறுதிப்படுத்தல். | • போக்குவரத்துத் துறையை தூய எரிசக்தியை பயன்படுத்துவதன் மூலம் புதை படிவ எரிபொருள்களிலிருந்து மின்சார இயக்கத்திற்கு முறையாக மாற்றுதல்.<br>• தேசிய போக்குவரத்துத் திட்டம், தேசிய மின்சார இயக்கத்திட்டம், மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அபிவிருத்தித் திட்டம் என்பனவற்றை ஒன்றிணைத்தல்.<br>• மின்சார இயக்க முயற்சிகளை மேற்பார்வையிட ஒரு பிரத்தியேக அமைப்பொன்றை உருவாக்குதல்.<br>• தேசிய மின்சார வாகனங்களை மின்னூட்டுவதற்கான வலையமைப்பொன்றினை உருவாக்குதலும் மற்றும் ஹப் மற்றும் ஸ்போக் ஸ்மார்ட் நகரங்களின் (hub-and-spoke smart city) போக்குவரத்து வலையமைப்புக்களை நடைமுறைப்படுத்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | • மின் வாகனங்களின் பயன்பாட்டினை ஊக்குவிப்பதற்கு நிதிசார் வெகுமதிகளை அறிமுகம் செய்தல். |
| எரிசக்தி வர்த்தகம் | உலகளாவிய எரிசக்தி சந்தைகளில் ஒரு போட்டித்தன்மை வாய்ந்த ஒரு நாடாக இலங்கையை நிலைப்படுத்தல். | • சர்வதேச தரவை அடிப்படையாகக் கொண்டு எரிசக்தி முதலீடுகள் மற்றும் வர்த்தகம் மற்றும் உலகளாவிய சந்தையின் எதிர்கால போக்கு தொடர்பாகவும் குறித்த நிபுணர்களின் ஆலோசனைகளை வழங்குவதற்கு நியதிச் சபையொன்றினை நிறுவுதல்.<br>• புவியியல் மற்றும் பொருளாதார சாத்தியப்பாட்டினை பயன்படுத்தி, இலங்கையை எரிசக்தி வர்த்தக மையமாக உருவாக்குவதற்கு ஒரு முழுமையான மூலோபாயத்தை தயாரித்தலும் மற்றம் நடைமுறைப்படுத்தலும். |
| டிஜிடல் தளமொன்றினை உருவாக்குதல். | வெளிப்படையான, வினைத்திறனான கேள்வி மனுக்கோரல், கொள்முதல் முறைமைகள் போன்றவற்றுடன் ஒரு முழுமையான டிஜிடல் தளமொன்றினை உருவாக்குவதன் ஊடாக பணத்திற்கான பெறுமதியை உறுதிப்படுத்தல். | • எரிசக்தித் துறையில் வெளிப்படையான போட்டி தன்மை வாய்ந்த கொள்முதல் செயன்முறைகளுக்கான பாதுகாப்பான தளமொன்றினை உருவாக்குதல்.<br>• எரிசக்தி பரிவர்த்தனைகளை மெய்-நேர கண்காணிப்பை எளிதாக்குவதற்கு உள்ளூர் வங்கி முறைமைகளுடன் தடையின்றி இணைப்பதற்கு டிஜிடல் தளமொன்றினை பயன்படுத்தல் உறுதிப்படுத்தல்.<br>• கைத்தொழில் வர்த்தக துறைகளுக்கு குறிப்பாக ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை வடிவமைத்து நடைமுறைப்படுத்த இந்த டிஜிடல் தளத்தை பயன்படுத்தல்.<br>• நிரம்பல் சங்கிலியின் நம்பகத் தன்மையை மேம்படுத்தி, நிரம்பல்களுக்கு உடன் கொடுப்பனவுகளை உறுதிப்படுத்துவதற்கு செயன்முறைகளை நெறிப்படுத்தல்.<br>• எரிசக்தி வளங்களுக்கான சமமான அணுகலை உறுதி செய்து, நலிவடையக் கூடிய வாடிக்கையாளர்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை இணைத்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| எரிசக்தி கணக்காய்வு | எரிசக்தி கணக்காய்வுகளை நடாத்துவதற்கான வெகுமதி பொறிமுறைகளை அறிமுகப்படுத்துவதன் ஊடாக எரிசக்தி வினைத்திறனை உறுதிப்படுத்தல். | • முழுமையான எரிசக்தி கணக்காய்வுகளை நடாத்துவதற்கு வர்த்தகங்களை ஊக்குவிப்பதற்கு நிதி ஊக்குவிப்புக்களை நடைமுறைப்படுத்தல்.<br>• வினைத்திறன் மேம்பாடுகளையும் மற்றும் பாதுகாப்பையும் மேம்படுத்த பெரிய அளவிலான கைத்தொழில் மற்றும் வர்த்தக நுகர்வோர் தொடர்ச்சியான எரிசக்தி கணக்காய்வுகளை மேற்கொள்வதை கட்டாயமாக்குதல்.<br>• எரிசக்தி பாதுகாப்பில் சிறந்த நடைமுறைகளுடன் இணங்குவதை உறுதி செய்வதற்காக கைத்தொழில் உபகரணங்கள், கட்டடங்கள், மற்றும் உபகரணங்களுக்கான தர நிலைகளை மேம்படுத்தலும், குறைந்த எரிசக்தி செயலாற்றுகையை செயற்படுத்தலும். |
| உழிழ்வைக் கட்டுப்படுத்தும் பொறிமுறை | உமிழ்வுகள் மற்றும் பசுமை எரிசக்தி பயன்பாட்டின் வெளிப்படைத் தன்மையை ஊக்குவிப்பதன் மூலம் சர்வதேச சந்தைகளில் உள்ளூர் கைத்தொழில்களின் போட்டித் தன்மையை உறுதி செய்தல். | • சர்வதேச சந்தைக்கு உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் உள்ளூர் கைத்தொழில்களுக்கு ஆதரவளிப்பதற்கும் மேற்பார்வை செய்வதற்கும் மற்றும் பசுமை எரிசக்தி நடைமுறைகளை சான்றுப்படுத்தவும் பொறுப்பான பிரத்தியேகமான கண்காணிப்பு நிறுவனமொன்றை உருவாக்குதல். |
| தொழில்நுட்ப மேம்பாடும் திறன் அபிவிருத்தியும் | சர்வதேச எரிசக்தித் துறையில் நாட்டின் போட்டித் தன்மையை மேம்படுத்தும் அதே வேளை, உலகளாவிய காலநிலை முயற்சிகளுக்கு பங்களிப்புச் செலுத்தக் கூடிய திறன் வாய்ந்த தொழிற்படையொன்றை உறுதிப்படுத்தல். | • காலநிலை இலக்குகளை அடைவதற்கான உலகளாவிய காலநிலை முயற்சியில் பங்களிப்புச் செலுத்தும் திறமைகள் வாய்ந்த மற்றும் திறன் மிக்க இலங்கையின் தொழிற்படையை அபிவிருத்தி செய்தல் மற்றும் வெளிநாட்டு வருமானத்தை ஈட்டல்.<br>• இலங்கை மின்சார சபையினதும், மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினதும் பயிற்சிப் பிரிவுகள் உலகளாவிய எரிசக்தித் துறைக்குத் தேவையான திறன்களை வழங்குவதற்கு உள்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் அமைப்புடனும் மற்றும் ஏனைய தொழில்சார் பயிற்சி நிறுவனங்களுடனும் ஒன்றிணைக்கப்படல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | • எரிசக்தித் துறையில் அபிவிருத்திக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது தேசிய உயர் கல்வி நிறுவனனங்கள் மற்றும் எரிசக்தி பயன்பாடுகள், ஒழுங்கு முறைப்படுத்துவோர், மற்றும் கைத்தொழில் போன்ற பங்குதாரர்களுக்கிடையில் உற்பத்தித் திறன் வாய்ந்த ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான ஒத்துழைப்புக்களை ஊக்குவித்தல்.<br>• மின்சாரம் மற்றும் பெற்றொலியத் துறையில் உள்ளூர் கம்பனிகளுக்கு உள்ள தடைகளை நீக்குவதோடு, பாரம்பரியமற்ற புதுப்பிக்கத்தக்க எரிசக்திக் கருத்திட்டங்களுக்கான அவர்களது பங்கேற்பையும் மற்றும் முதலீடுகளையும் ஊக்குவித்தல்.<br>• தொழில்நுட்ப மாற்றல் மற்றும் முதலீடுகளை கவர்வதற்கு வசதியளிப்பதற்கு சர்வதேச கம்பனிகளுடன் பங்கேற்புகளை உருவாக்குதற்கு உள்ளூர் கம்பனிகள் ஊக்குவிக்கப்படல்.<br>• சர்வதேச சந்தைகளில் போட்டியிடுவதற்கு தேசிய எரிசக்தி கருத்திட்டங்களின் பங்கேற்பின் ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்ட இக்கம்பனிகளின் அனுபவங்களையும், மற்றும் தகைமைகளையும் பயன்படுத்துவதோடு, உள்ளக மற்றும் இராஜதந்திர பொறிமுறைகளின் ஊடாக மேலும் ஆதரவளித்தல். |

## 3.11 சிறந்ததொரு பொதுப் போக்குவரத்துச் சேவை - விரைவான பயண இலக்கு

**கொள்கை கோட்பாடுகள் -**

- போக்குவரத்து ஒரு பொதுச் சேவையாகக் கருதப்படல்.
- சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் நிலைபேறான போக்குவரத்துச் சேவை
- பாதுகாப்பான மற்றும் வினைத்திறனான போக்குவரத்துச் சேவை
- பயணிகளின் கூட்டமைவில் பன்முகத்தன்மையை உள்ளடக்கல்
- பல்வேறுபட்ட போக்குவரத்து முறைமைகளுக்குள் ஒருங்கிணைப்பு
- டிஜிடல் தொழில்நுட்பம் சாரந்த போக்குவரத்து முறைமை

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| புகையிரத சேவை | தேசிய புகையிரத முறையை மறுசீரமைத்தல் மற்றும் விரிவாக்குவதன் ஊடாக நிலைபேறான மற்றும் வினைத்திறனான போக்குவரத்தினை உறுதி செய்தல். | • பாழடைந்த நிலையில் உள்ள புகையிரதப் பாதைகளை மீள திருத்தம் செய்தலும், முறையான பராமரிப்பு நிகழ்ச்சித்திட்டமொன்றினை அறிமுகம் செய்தல், மற்றும் புதிய தொழில்நுட்பத்துடன் தானியங்கி சமிக்ஞை முறையொன்றை உருவாக்குதல்.<br>• பிரதான புகையிரதப் பாதைகளை இரு தடங்களாகவும், முக்கிய நகரங்களைச் சுற்றியுள்ள புகையிரதப் பாதைகளை மூன்று தடங்களாகவும் அபிவிருத்தி செய்தல்.<br>• தற்போது புகையிரத வலையமைப்பினால் உள்ளடக்கப்படாத பிராந்தியங்களை முன்னுரிமை அடிப்படையில் புகையிதப் பாதையாக படிப்படியாக விரிவடையச் செய்தலும், மற்றும் அதன் மூலம் அனைத்து பிரதான நகரங்களுக்கு புகையிரத அணுகலை வழங்கலும்.<br>• அதிக புகையிரதப் பெட்டிகளை உள்ளடக்கி, இயங்கும் அதிர்வெண்ணை அதிகரிப்பதன் மூலம் கிழமையில் அனைத்து நாட்களும் இருபத்தி நான்கு மணிநேரமும் வினைத்திறனான புகையிரத சேவையொன்றை வழங்குதல்.<br>• மின்சாரத்தில் இயங்கும் வகையில் புகையிரத முறைமையை படிப்படியாக அபிவிருத்தி செய்தல்.<br>• உற்பத்தி, மூலப்பொருட்கள், நுகர்வோர் பொருட்கள், மற்றும் விவசாய மற்றும் மீன்பிடி உற்பத்திப் பொருட்களை பாதுகாப்பாக கொண்டு செல்ல புகையிரத சேவையை வினைத்திறனான முறையில் பயன்படுத்தல்.<br>• பயணிகளுக்குச் சொந்தமான தனியார் வாகனங்களை நிறுத்த புகையிரத நிலையங்களுக்கு அருகே வாகன தரிப்பிட வசதிகளை அபிவிருத்தி செய்தல்.<br>• புகையிர மற்றும் பேருந்து சேவைகளை அபிவிருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை முன்னுரிமைப்படுத்தும் அதே வேளை, மக்கள் அதிகமாக வசிக்கும் பகுதிகளில் பொதுப் போக்குவரத்தை பலப்படுத்துவதற்காக படிப்படியாக புகையிரத வண்டிகளை (இலகு ரயில் போக்குவரத்து முறைமை) அடிப்படையாகக் கொண்ட போக்குவரத்து முறைமையை அறிமுகம் செய்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| பேருந்து பயணிகள் சேவை | தகவல் தொழில்நுட்ப தீர்வுகள் மற்றும் தரமான மனித வளங்கள் உள்ளிட்ட தேவையான உட்கட்டமைப்புடன் பேருந்து சேவையை நவீனமயப்படுத்துவதன் மூலம் பயணிகளுக்கு உகந்த பொதுப் பேருந்து போக்குவரத்தை ஊக்குவிப்பதை உறுதிப்படுத்தல். | • பயணிகள் போக்குவரத்திற்காக பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட பேருந்துகளை அறிமுகம் செய்தலும் மற்றும் அத்தகைய பேருந்துகளை கொள்முதல் செய்வதற்கு எளிதான நிதித்திட்டமொன்றினை வழங்குதல்.<br>• பயணிகள் பேருந்து போக்குவரத்து திருப்தியற்ற நிலையில் உள்ள பிரதான வீதிகளிலும் மற்றும் ஏனைய வீதிகளிலும் இரவில் போக்குவரத்தை விருத்தி செய்வதன் மூலம் வலுவான ஒரு பயணிகள் பேருந்து சேவையை அபிவிருத்தி செய்தல்.<br>• பேருந்துகளிலிருந்து கிடைக்கும் வருமானத்தை நியாயமான முறையில் சமமான முறையில் பேருந்துகளின் உடமையாளர்களுக்கிடையில் விநியோகிக்கக் கூடிய வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுப் பொக்குவரத்து பிராந்தியங்களுக்கான அரச மற்றும் தனியார் பேருந்து சேவைகளை ஒன்றிணைப்பதன் மூலம் நவீன டிஜிடல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கொத்தணி பேருந்துக் கம்பனிகளை உருவாக்குதல்,<br>• அனைத்துப் பேருந்துகளிலும் ஒரு டிஜிடல் தளத்தின் ஊடாக முன்-செலுத்தல் அட்டைகளின் மூலம் கொடுப்பனவுகளை அங்கீகரிக்கும் பீஓஎஸ் இற்கும் பேருந்து டிக்கட் இயந்திரங்களை பேருந்துகளில் பொருத்துதல்.<br>• பொதுப் போக்குவரத்திற்கு முன்னுரிமை அளித்து மக்கள் வசிக்கும் பகுதிகளில் பேருந்துப் பாதைகளை ஒதுக்கீடு செய்தல் மற்றும் படிப்படியாக பேருந்து துரித போக்குவரத்து முறைமையை (BRT) அறிமுகம் செய்தல்.<br>• பொதுப்போக்குவரத்துத் சேவைக்கு மின்சாரத்தின் மூலம் இயங்கும் பேருந்துகளை படிப்படியாக அறிமுகம் செய்தல்.<br>• பயணிகள் எந்தவித துன்புறுத்தல்களும் இல்லாமல் கண்ணியமாக பேருந்துகளில் பயணிக்கும் சூழலை உருவாக்குவதற்கு தேவையான மனநிலை மாற்றத்தை ஏற்படுத்த பயணிகள் மற்றும் தொழிலாளர்களுக்கிடையில் விழிப்பூட்டலை உருவாக்கலும் மற்றும் பயிற்சியை வழங்கலும்.<br>• பயணிகளால் பயன்படுத்தப்பட்ட தனியார் வாகனங்களை நிறுத்துவதற்கு பேருந்து நிலையங்களுக்கு அருகே வாகன தரிப்பிட வசதிகளை அபிவிருத்தி செய்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| ஒரு முறையான மற்றும் அத்தியாவசிய நேர அட்டவணை முறைமை | தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் ஆதரவளிக்கப்பட்ட பொதுப் போக்குவரத்தை மேம்படுத்துவதற்காக ஒழுங்குமுறையான பொறிமுறையொன்றை உருவாக்குவதை உறுதிப்படுத்தல். | • புகையிரத சேவை மற்றும் பயணிகள் பேருந்து சேவை இரண்டிற்கும் ஒரு அத்தியாவசிய கால அட்டவணை முறையை அறிமுகப்படுத்தல்.<br>• காலையிலிருந்து நடு இரவு வரையிலான ஒரு நேர அட்டவணைகரு ஏற்ப இயங்கக் கூடிய அத்தியாவசிய பொதுப் போக்குவரத்து சேவையை உருவாக்குதல்.<br>• டிஜிடல்மயமாக்கப்பட்ட .கால அட்டவணைகள் நிகழ்நிலையில் வெளியிடப்படுவதோடு, நிலையங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள நேர அட்டவணைக்கு ஏற்ப பேருந்துகளும், மற்றும் புகையிரதங்களும் கண்டிப்பாக இயங்க வைத்தல்.<br>• நீண்ட தூர பயணங்களுக்கான ஆசனங்களை நிகழ்நிலை அடிப்படையில் ஒதுக்கீடு செய்வதற்கு பயணிகளுக்கு வாய்ப்புக்களை அளித்தல். |
| மாறும் நகரங்கள் | ஒன்றிணைக்கப்பட்ட, வினைத்திறனான பொதுப் போக்குவரத்துக்கான மாறும் நகரங்களின் அபிவிருத்தியை உறுதிப்படுத்தல். | • நீண்ட தூரங்களிலிருந்து புற நகர் நகரங்களுக்கு வரும் பயணிகளுக்கு அதே இடத்தில் பேருந்து மற்றும் புகையிரத நிலையங்கள் அமைந்திருக்கும் போது மாறும் நகரங்களை உருவாக்குவதற்கு வசதிகளை இனங்காணலும் மற்றும் அபிவிருத்தி செய்தலும்.<br>• மாறும் நகரங்களிலிருந்து பிரதான நகரங்களுக்கு வினைத்திறனான பொது போக்குவரத்து சேவைகளை வழங்குதல்.<br>• மாறும் நகரங்களில் பாதுகாப்பான வாகன தரிப்பிட வசதிகளையும், மற்றும் ஏனைய தேவையான பொது வசதிகளையும் அபிவிருத்தி செய்தல். |
| கிராமிய போக்குவரத்து | கிராமியப் பிரதேசங்களில் பொதுப் போக்குவரத்தை விரிவடையச் செய்தல் மற்றும் மேம்படுத்தலின் ஊடாக உள்ளடக்கிய வளர்ச்சியை உறுதிப்படுத்தல். | • தற்போது பொதுப் போக்குவரத்து இல்லாத கிராமப்புறங்களில் பொதுப் பேருந்து சேவைகளை அறிமுகம் செய்தல்.<br>• கிராமிய வீதிகளில் பேருந்து சேவைகளை தொடர்வதற்கு தேவையான போது விஷேட ஊக்குவிப்புக்களை வழங்குதல்.<br>• பாதுகாப்பான முறையில் கிராமியப் பொது மக்களுக்கு உற்பத்திப் பொருட்களை போக்குவரத்து செய்வதற்கு பொருத்தமான தொழில்நுட்பங்களுடன் போக்குவரத்து சேவைகளை வழங்குதல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| வீதிப்பராமரிப்பு | நிலைபேறான பராமரிப்பு மற்றும் விரிவான வீதி இணைப்பு வலையமைப்புக்களின் ஊடாக வினைத்திறனான அணுகலையும் மற்றும் இடப்பெயர்ச்சியையும் உறுதிப்படுத்தல் | • உடனடியாகத் திருத்தம் செய்ய வேண்டியுள்ள கிராமிய மற்றும் தோட்ட வீதிகளை அடையாளம் காணல், முன்னுரிமைப் பட்டியலை தயாரித்தல், முன்னுரிமை அளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்கு எற்ப, வீதிகளை திருத்தம் செய்தல் மற்றும் நிலைபேறான முறையில் பராமரித்தல்.<br>• கடுகதிப்பாதைகள் ( E), அதிவேக நெடுஞ்சாலைகள் (A, B'), மற்றும் மாகாண வீதிகள் ( C , D )' ஆகியவற்றின் வினைத்திறனான முறையில் குறித்த காலத்தில் பராமரிபபை மேற்கொள்ளல்.<br>• கடவத்தையிலிருந்து மீரிகமை வரையிலான தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மத்திய அதிவேக நெடுங்சாலையின் பிரச்சினைகளை தீர்ப்பதும் மற்றும் நிர்மாணப் பணிகளைை நிறைவு செய்தலும். |
| துவிச்சக்கர வண்டியின் பயன்பாட்டை ஊக்குவித்தல். | துவிச்சக்கர வண்டியின் பயன்பாட்டுக்கான உட்டகட்டமைப்பின் ஊடாக நிலைபேறான நகர இடப்பெயர்ச்சியை உறுதிப்படுத்தல். | • போக்குவரத்து நெருக்கடியுள்ள பிரதான நகரங்களுக்குள்ளும், பிரதான நகரங்களுக்கு அருகிலுள்ள பிரதேசங்களிலிருந்தும் பாதுகாப்பான துவிச்சக்கர வண்டிப் பாதைகளை நிர்மாணித்தல்.<br>• முடியமான இடங்களிலெல்லாம் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீதிகளுக்கான தேவையான துவிச்சக்கர வண்டிப் பாதைகளுக்கான உட்கட்டமைப்பை உள்ளடக்குதல்.<br>• பிரதான புகையிரத மற்றும் பேருந்து நிலையங்கள், நிறுவனங்கள் மற்றும் ஏனைய பொது இடங்களில் துவிச்சக்கர வண்டிகளின் தரிப்பிட வசதிகளை வழங்குதல். |
| பாதசாரிகளின் ஒழுங்கைகள் | பாதசாரிகளுக்கு உகந்த ஒரு சுற்றுச்சூழலை உருவாக்குதல். | • பிரதான நகரங்களின் வீதியின் இரு மருங்கிலும் பாதசாரிகளுக்கான ஒழுங்கைகளை நிர்மாணித்தல்.<br>• பாதசாரிகளுக்கு நிழல் தரும் வகையில் வீதியோரங்களில் மரங்களை நடுதல். |
| பொருட்கள் மற்றும் பயணிகளின் போக்குவரத்துக்கு நீர் வழிகளை பயன்படுத்தல். | போக்குவரத்துக்கான குறிப்பிடத்தக்க பங்களிப்பாளராக நீர் வழிகளை உருவாக்குதல். | • நீர்வழிப் போக்குவரத்தை மேம்படுத்துவது குறித்து ஆராய்ச்சி மற்றும் ஆலோசனைகளை மேற்கொள்வதற்கு ஒரு தொழில்நுட்பப் பிரிவை நிறுவுதல.<br>• சாத்திய வள ஆய்வுகளின் ஊடாக அடையாளம் காணப்பட்ட நீர் வழிகளில் |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | பயணிகளினதும் மற்றும் பொருட்களின் போக்குவரத்துச் சேவைகளை நடைமுறைப்படுத்தல். |
| பெண்கள், முதியோர், மற்றும் மாற்றுத் திறனுள்ள பயணிகளையும் பாதுகாத்தல், மற்றும் தேவையான உட்கட்டமைப்புகளையும் அபிவிருத்தி செய்தல். | பொதுப் போக்குவரத்தை சமூகத்திலுள்ள அனைவருக்கும் பாதுகாப்பானதாகவும், அணுகக் கூடியதாகவும், மற்றும் வசதியானதாகவும் உறுதிப்படுத்தல். | • பெண்கள், முதியோர் மாற்றுத் திறனாளிகள் போன்ற விஷேட போக்குவரத்துத் தேவைகளுள்ள சமூகங்களுக்கு மத்தியில் மனப்பான்மையை மாற்றுதல்.<br>• போக்குவரத்துச் சேவைகளில் பெண்கள் எதிர்நோக்கும் துன்புறுத்தல்கள் மற்றும் பிரச்சினைகளை உடனடியாக அறிவிப்பதற்கு ஒரு எப் ஐ (App) உருவாக்கலும் மற்றும் இது தொடர்பான பிரச்சினைகளைக் கையாள ஒரு பிரத்தியேகப் பிரிவையும் உருவாக்குதல்.<br>• புகையிரத வண்டிகள் மற்றும் பேருந்துகளில் மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியோர்களுக்கான விஷேட அணுகல் வசதிகளை அளித்தல்.<br>• மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியோர் புகையிரத நிலையங்கள் மற்றும் பேருந்து நிலையங்களுக்கு இலகுவாக அணுகும் வகையில் திருத்தம் செய்தல்.<br>• பொதுப் போக்குவரத்து வாகனங்களில் முதியோர் மற்றம் மாற்றுத் திறனாளிகளுக்கு ஆசனங்களை ஒதுககீடு செய்தலானது கட்டாயமாக்கப்படல். |
| வீதி விபத்துக்களைக் குறைத்தல் | மேம்படுத்தப்பட்ட வீதி பாதுகாப்புச் சட்டங்களின் ஊடாக நாடுகளுக்கிடையில் பாதுகாப்பான பயணத்தை உறுதிப்படுத்தல். | • நிகழக் கூடிய விபத்துக்களை தவிர்ப்பதற்கு வீதி உட்கட்டமைப்பில் இனங்காணப்பட்ட பிரச்சினைகளை உருவாக்கக் கூடிய புள்ளிகளுக்கான தீர்வுகளை அறிமுகம் செய்தல், அனைத்து சாரதிகளை மற்றும் பயணிகளுக்கும் மிகவும் ஒழுக்கமான முறையில் வாகனம் செலுத்துவதற்கு வழி நடாத்துதல், மற்றும் வீதிச் சட்ட திட்டங்களை கடைப்பிடிப்பதை கட்டாயமாக்குதல்.<br>• சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் மற்றும் புதுப்பித்தல் செயன்முறையை முறைப்படுத்தல். |
| பயணிகளுக்கான மாற்றுச் சேவை செயற்பாடுகள் (Para-transit operations) | பயணிகளுக்கான மாற்றுப் போக்குவரத்துச் சேவைகளை Para-(transit operations) முறைப்படுத்தல் மற்றும், | • முச்சக்கர வண்டிச் சேவைகள், அலுவலக பணியாளர்களின் போக்குவரத்துச் சேவைகள், பாடசாலை போக்குவரத்துச் சேவைகள் உள்ளடக்கிய வாடகை வாகனங்களின் சேவைகளின் தரத்தையும் மற்றும் வினைத்திறனையும் மேம்படுத்துவதற்கு முறைப்படுத்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | மேம்படுத்துவதன் ஊடாக விருத்தியுற்ற இடப்பெயர்ச்சியை உறுதிப்படுத்தல். | • மாற்றுச் சேவை போக்குவரத்துச் சேவைகளுக்கான டிஜிடல் நடமாடும் தொலைபேசி App ஒன்றை உருவாக்குதல். |
| பயணிகளையும், பயனாளிகளையும் ஏற்பாடு செய்தல். | போக்குவரத்து சேவைகள் மற்றும் போக்குவரத்து உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தியில் மக்கள் மைய தீர்மானம் எடுக்கும் செயன்முறைகளை உறுதிப்படுத்தல். | • பயணிகள் நிறுவனங்களை இத்துறையில் பங்குதாரர்களாக அங்கீகரித்து அவர்களை தீர்மானம் எடுக்கும் செயன்முறையின் ஒரு பகுதியாக மாற்றுதல்.<br>• அந்தந்த பகுதிகளில் உள்ள வீதிகள் மற்றும் பாலங்கள் போன்ற போக்குவரத்து உட்கட்டமைப்புக்கான நிர்மாண மற்றும் பழுதுபார்க்கும் நடவடிக்கைகளை மதிப்பீடு செய்தல், மற்றும் கணக்காய்வு செய்வதில் அப்பகுதிகளில் வசிப்பவர்கள் செயலூக்கமுள்ள பங்கேற்பாளர்களாக சேர்த்துக் கொள்ளல். |

## 3.12 நிலைபேறானதொரு கடல் வளம் - உலகளாவிய கடல் வர்த்தகத்தின் ஒரு பகுதியைப் பெறுதல்

**கொள்கை கோட்பாடுகள் –**

- கடல் வளங்களின் நிலைபேறான பயன்பாட்டிற்கான ஒரு ஒன்றிணைக்கப்பட்ட கடல் கட்டுப்பாடு
- கடல்சார் சூழல் மற்றும் வளங்களைப் பாதுகாப்பதில் பொறுப்பாகவும் மற்றும் பொறுப்புணர்வோடும் இருத்தல்.
- பொதுவான கடல் வளங்களுக்கான அணுகலும் மற்றும் அவற்றின் தனிப்பட்ட பயன்பாடு நுகர்வுக் கட்டணத்திற்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
- கடல் கட்டுப்பாடு மற்றும் நிர்வாகம் தொடர்பான தீர்மானம் எடுப்பதில் முன்னெச்சரிக்கை அணுகுமுறை
- திட்டமிடல், பயன்பாடு, கடல் பாதுகாப்பு, கரையோரப் பிரதேசங்கள் மற்றும் அவர்களது வளங்கள்
- பொது மக்களுக்கிடையில் கடல் வளங்களின் நன்மைகள் நியாயமான முறையில் பகிர்ந்தளிக்கப்படல்.

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| சமுத்திர வளத்தின் ஏற்பாட்டியல் | சர்வதேச கடல்சார் கைத்தொழிலில் எழுச்சி பெற்று வரும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அதிக திறன் வாய்ந்த மற்றும் போட்டித் தன்மை கொண்ட தொழிற்படையொன்றினை உருவாக்குதல். | • முதன்மை மற்றும் தொழில்துறை கடல்சார் கல்வியை அபிவிருத்தி செய்வதற்கு அரச தலையீட்டை விரிவாக்குதல்.<br>• தொழில்துறை திறன்களை அபிவிருத்தி செய்தலும், மற்றும் தொடர்புடைய சான்றிதழ்களை பெற்றுக் கொள்வதற்கு எளிதாக்குதல்.<br>• சர்வதேச கடல்சார் நிறுவனத்தின் (IMO) தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக பாட விதானத்தை ஆராயவும் மற்றும் திருத்தம் செய்யவும் ஒரு கட்டமைக்கப்பட்ட செயன்முறையை அறிமுகம் செய்தல்.<br>• அமைச்சின் பரீட்சைப் பிரிவானது தர முகாமைத்துவ முறைமைக்கேற்ப (QMS) செயல்படுவதை சான்றுப்படுத்த மூன்றாம் தரப்பு மதிப்பீட்டுக் குழுவொன்றை நியமித்தல்.<br>• கைத்தொழில் பயிற்சி வசதிகளை அபிவிருத்தி செய்தல்.<br>• சர்வதேச சந்தையில் புதிய வேலைவாய்ப்புக்களுக்கான அணுகலை விரிவுபடுத்தல்.<br>• கடல் சார் நலன் மற்றும் நெறிமுறைப்படுத்தலும் மற்றும் அபிவிருத்தி செய்தலும் |
| | தேசிய வருவாய், மற்றும் பொருளாதார வளர்ச்சியை அதிகரிப்பதற்கும் உலகளாவிய கடல் வர்த்தகத்தை ஈர்ப்பதற்கும், தரமான வசதிகளுடன் அதி நவீன துறைமுகத்தை நிறுவுதல். | • துறைமுகத்தின் விரிவாக்கம், பராமரிப்பு, தரவுக் களஞ்சியம், உற்பத்திச் செயன்முறை, தேசிய கப்பல்கள், உட்கட்டமைப்பு, முனைவுகள், மற்றும் நடைமுறைப்படுத்தல்கள்.<br>• கடல்சார் கைத்தொழில் சேவைகள், பராமரிப்பு செயல்பாடுகள், பிரதிநிதிகள், நிரம்பல் வலையமைப்புக்கள், விஷேட தொழில்நுட்ப சேவைகள், வங்கிகள், கப்பல் மீள் சுழற்சி, கப்பல்கள் மற்றும் ஏனைய நடவடிக்கைகளுக்கான சேவைகள். ஏன்பனவற்றை விருத்தி செய்தல்.<br>• சுற்றுலா கைத்தொழிலுடன் கடல்சார் துறையை ஒன்றிணைத்தல்.<br>• கடல்சார் பாதுகாப்பு, எரிபொருள், மற்றும் உணவு உள்ளிட்ட கடல்சார் சேவைகளை வழங்கும் கடல்சார் சேவைகளுக்கான மையமாக இலங்கையை மாற்றுதல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | • மாற்றுப்படை மற்றும் கப்பலில் இருந்து கப்பலுக்கு சரக்குப் பரிமாற்றம் மற்றும் குறுக்கு நறுக்குதல் சேவைகளை வழங்குவதற்கான அனைத்து வசதிகளுடன் திறமையான பிராந்திய ஏற்பாட்டியல் முகாமைத்துவ சேவையாற்றுவதற்கு துறைமுக வசதிகளை அபிவிருத்தி செய்தல்.<br>• இலங்கை முழுவதும் பயணிக்கும் கப்பல்களுக்கு பணியாளர்களை மாற்றும் நிலையமொன்றினை உருவாக்குதல்.<br>• கப்பல்கள், கப்பல் கட்டுதல், மற்றும் திருத்தம் செய்தலுக்கான தொழில்நுட்ப மற்றும் உட்கட்டமைப்பினை விருத்தி செய்தல். |
| | நிலைபேறான சுற்றுச்சூழல் நடைமுறைகளை உறுதி செய்யும் அதே வேளை, வர்த்தகத்துக்கு உகந்த சூழலை உருவாக்கும் முற்போக்கான சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை நடைமுறைப்படுத்தல். | • கப்பல்களை பதிவுசெய்தலுடன் தொடர்புபட்ட சட்டங்களை ஆராய்தலும் மற்றும் திருத்தம் செய்தலும் மற்றும் சந்தை மாதிரிகளை தழுவுதல்.<br>• ஒரு உற்பத்தித் திறன் வாய்ந்த மற்றும் எச்சரிக்கையான துறைமுக அரச கட்டுப்பாட்டு முறைமையை (PSC) அறிமுகம் செய்தல்.<br>• இலக்குகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு வெளிப்படைத் தன்மையுள்ள துறைமுக அரச கட்டுப்பாட்டு முறைமை சேவையை அறிமுகம் செய்தல்.<br>• கப்பல்களிலிருந்தும் மாசுபடலைத் தடுப்பதற்காக சர்வதேச சம்மேளனங்களையும் மற்றும் ஏனைய சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டங்களையும் இயற்றுதல். (MARPOL)<br>• இலங்கையில் கடல் சார் பாதுகாப்பு தொடர்பான சட்டங்களை இயற்றுதல். |

## 3.13 பாதுகாப்பானதொரு தரவு முறை - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப புரட்சி

**கொள்கை கோட்பாடுகள் -**

- ஒவ்வொரு பிரஜைக்கும் தொடர்பாடல் அணுகலை உறுதி செய்தல்
- தகவல் மற்றும் தரவுக்கான எளிதான அணுகல்.
- நியாயமான விலை
- தேசிய மற்றும் தனிப்பட்ட தரவுகளின் பாதுகாப்பு
- சைபர் பாதுகாப்பு மற்றும் தரவு தனியுரிமை
- பசுமை உட்கட்டமைப்பு வசதிகள்

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு அபிவிருத்தி | குறைந்த செலவில் பொது மக்களுக்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு அணுகலை செயல்படுத்துவதை உறுதி செய்தல். | **கம்பிகளினால் இணைக்கப்பட்ட தொடர்பாடல்**<br>• உட்கட்டமைப்புப் பகிர்வை எளிதாக்கும் மற்றும் சேவை வழங்குனர்களிடையே சந்தாதாரர் எண்களை (தொலைபேசி எண்) தடையின்றி மாற்ற அனுமதிக்கும் தேசிய மூலோபாயத்தின் கீழ் தேசிய தொடர்பாடல் வலையமைப்பொன்றை உருவாக்குதல் மற்றும் ஒருங்கிணைத்தல்.<br>• சேவை வழங்குனர்களிடமிருந்து பெறுனருக்கு அணுகல் வலையமைப்பில் பொறுப்பு மற்றும் செயற்பாடுகளை மேற்கொள்ள நகர சபைக்கு அதிகாரமளித்தல்.<br>• பொது இணையத்தள அணுகலுக்கான இடங்களை அதிகரித்தல்.<br>• கிராமப்புற பிரதேசங்களுக்கு தொடர்பாடல் வசதிகளை விரிவாக்குவதற்கு மின்சார சபையின் பரிமாற்ற வலையமைப்புடன் மையப்படுத்தப்பட்ட அடிப்படை வலையமைப்பொன்றை கட்டியெழுப்புதல்.<br>• தொலைபேசி கம்பனிகளின் நிறுவனங்களின் குடிமைப் பதிவு மற்றும் பெறுனரின் தரவு முறையை ஒருங்கிணைத்தல்.<br>• இ - நிர்வாக முறைமை ஒன்றுக்கான உட்கட்டமைப்பை நிறுவவுதல் மற்றும் அனைத்து சேவைகளையும் ஒருங்கிணைந்த தளமாக மையப்படுத்தல்.<br>**கம்பியில்லா தொடர்பாடல்**<br>• 5 G மற்றும் LTE + போன்ற அதிர்வெண் வரம்பில் அதிக வினைத்திறன் கொண்ட தொழில்நுட்பத்திற்கு முன்னுரிமை அளித்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | • 3G, CDMA போன்ற பழைய தொழில்நுட்பத்தினை படிப்படியாக பயன்படுத்துவதை நீக்குதல் மற்றும் அவசர சேவைகளுக்கு 2G, தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தல். |
| | டிஜிடல் உட்கட்டமைப்பை பலப்படுத்துதல் மற்றும் தொடர்பாடல் சேவைகளை விரிவாக்குதல். | **காவலர் பட்டைகள்**<br>• சேவை வழங்குனர்களுக்கு வழங்கப்படும் அதிர்வெண் வரம்புகளை திருத்தம் செய்தல், தொடர்ச்சியான அதிர்வெண் வரம்பை வழங்குதல் மற்றும் காவலர் பட்டைகளை வரையறுத்தல்.<br>**பொது Wi-Fi மற்றும் கம்பியுள்ள இணைப்புக்களை ஊக்குவித்தல்**<br>• பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், நூலகங்கள், கல்வி நிறுவனங்கள், மைதானங்கள், அரசாங்க அலுவலகங்கள், போன்ற பொது இடங்களில் wi-fi இணைப்புக்களை ஏற்படுத்தல், அனைத்து அதிதியாவசிய சேவைகளிலுடன் IOT இற்கான இலவலச அணுகலுடன் நியாயமான விகிதத்தில் இணையத்தள அணுகலை வழங்குதல்.<br>**இலத்திரனியல் தொடர்பாடல் கைத்தொழிலுக்கான பொதுச் செயன்முறைகள்**<br>• இலத்திரனியல் தொடர்பாடல் சேவை வழங்வோர் அனைத்து பொது மக்களுக்கும் தமது வலையமைப்பு அணுகலை ஏற்படுத்தக் கூடிய வகையில் இலக்குகளை வழங்குதல்.<br>• அவசர சேவைகள், அரசாங்க சேவைகள், சுகாதார சேவைகள் மற்றும் கல்வி போன்ற அத்தியாவசிய சேவைகளுக்கு இலவச அணுகலை வழங்குதல்.<br>• கிராமப்புறங்களில் வரையறுக்கப்பட்ட உள்ளடக்கத்தைக் கொண்ட பகுதிகளிலும் மற்றும் பொது இடங்களிலும் உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | • அனைத்துப் பிரஜைகளுக்கும் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள், நிகழ்நிலை கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள், ஆவணங்கள் மற்றும் இ - நூலகங்கள் போன்ற ஏனைய கல்வி தொடர்பான சாதனங்களுடன் IOT சாதனங்களுக்கு இலவச அணுகலை வழங்குதல்.<br>• அனைத்துத் துறைகளிலும் IOT நடைமுறைகளை பிரயோகங்களுக்கான உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்தல்.<br>• கம்பனிகளுக்கிடையில் உட்கட்டமைப்புப் பரிமாற்றத்தை தொடர்பாடல் தர நிர்ணயங்கள் மற்றும் விலைகளையும் நெறிமுறைப்படுத்துவதற்கும், ஒரு ஒழுங்குமுறை பொறிமுறையை உருவாக்குதல்.<br><br>**ஒலிபரப்புக் கைத்தொழில்**<br><br>• ஒலிபரப்பு வலையமைப்புக்களை டிஜிடல்மயமாக்குதல், சமீபத்திய தொழில்நுட்பங்களை உள்வாங்குதல், பொது மக்களுடன் தொடர்புடைய சேவைகளை வழங்குதல்.<br>• CRC-SL கீழ் ஒலிபரப்புத் துறைக்கான ஒழுங்குமுறைப்படுத்தும் நிறுவனம் ஒன்றினை உருவாக்குதல்.<br>• அரசுக்குச் சொந்தமான வானொலி மற்றும் தொலைக்காட்சி நிறுவனங்களை அவற்றின் அடையாளங்கள் பாதுகாக்கப்படும் வகையில் ஒருங்கிணைந்த கம்பனியாக ஒருங்கிணைத்தல்.<br>• Eye அலை வரிசையை வர்த்தக களத்துக்கு மாற்றும் அதே வேளை, தேசிய அலை வரிசைகள், (CH-01), நேத்ரா அலைவரிசை (CH-02) என்பனவற்றை பொதுச் சேவைகளின் அலைவரிசைக்குள் செயற்படுத்துதல்.<br>• இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் உள்ளூர் சேவை மற்றும் தமிழ் சேவை என்பனவற்றை பொதுச் சேவைகளின் |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | அலைவரிசைகளுக்குள் நடைமுறைப்படுத்தும் அதே வேளை, ஏனைய அலைவரிசைகளை வர்த்தக சேவைகளாக பராமரித்தல்.<br>• பொதுச் சேவை ஒலிபரப்பாக பராமரிக்கப்படும் நிறுவனங்களுக்கு ஒவ்வொரு அமைச்சிலும் வெகுசனத் தொடர்பாடலிற்கான வருடாந்த வரவு செலவுத்திட்டத்தினை ஒதுக்கீடு செய்தல்.<br>• பொழுதுபோக்கு மற்றும் கல்வியை உள்ளடக்கிய ஒலிபரப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு தேவையான தொழில்நுட்ப உட்கட்டமைப்பை விருத்தி செய்தலும் மற்றும் மேம்படுத்தலும்.<br>• கல்விச் சேவைக்கான வினைத்திறனான ஊடகமாக புவியியல் தொலைக்காட்சி வலையமைப்பை இனங்காணலும் மற்றும் தேவையான தொழில்நுட்ப உட்கட்டமைப்பை அபிவிருத்திசெய்தல்.<br>• இந்தப் பிராந்தியத்தில் விளையாட்டுக்கள், பொழுது போக்கு, மற்றும் சுற்றுலாக் கைத்தொழில் ஆகியவற்றுடன் இணைக்கப்பட்டுள்ள சர்வதேச விழாக்கள் மற்றும் போட்டிகளின் வெளிப்புற ஒளி பரப்புகளை உள்ளடக்கிய மற்றும் அனுப்பும் வெளிப்புற ஒளிபரப்புப் பொறியியல் நிறுவனமாக சர்வதேச வெளி ஒளிபரப்புத் துறையில் போட்டித் தன்மையுடன் செயற்படுதல்.<br><br>**சினிமா மற்றும் பொழுதுபோக்குக் கைத்தொழில்**<br>• டிஜிடல் சினிமா கருத்திட்டங்களுக்கான குறைந்த தர நிர்ணயமாக 2K ஐ கட்டாயமாக்குதல்.<br>• சினிமா, பொழுதுபோக்கு, டிஜிடல் மற்றும் புதிய ஊடகக் கைத்தொழில்களுக்கான ஒழுங்குகுமுறைப்படுத்தும் நிறுவனமொன்றினை நிறுவுதல்.<br>• அதி நவீன திரையரங்குகள், தயாரிப்புக்குப் பின்னரான வசதிகள், என்பனவற்றை உருவாக்குதல், முன்னேற்றத் தொழில்நுட்பத்தில் தனியார் துறை முதலீடுகளை ஊக்குவித்தல். வரி வெகுமதிகள் மற்றும் |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | ஏனைய வடிவங்களிலான ஆதரவுகள் என்பனவற்றின் ஊடாக உபகரணங்களை .இறக்குமதி செய்தல்.<br>• பதிவு உள்ளடக்கிய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்யவும் மற்றும் ஒருங்கிணைக்கவும் மையப்படுத்தப்பட்ட ஒரு அலுவலகத்துடன் வெளிநாட்டு திரைப்பட தயாரிப்புகளுடன் தொடர்புபட்ட வெளிநாட்டு திரைப்படக் கம்பனிகள் மற்றும் கைத்தொழில்களுக்கான வசதியளிப்பு சேவைகளுக்கான புதிய ஒழுங்குமுறை விதிகளை அறிமுகம் செய்தல்.<br>• OTT மற்றும் கோரிக்கை மீதான காணொளிகள் (VOD) சேவைகள் போன்ற பொருட்களின் இணையம் (IOT) பயன்பாடுகளிலும் பொழுது போக்குகளிலும் டிஜிடல், மற்றும் புதிய ஊடக கைத்தொழில்களிலும் முதலீடுகளை ஊக்குவித்தல். |

## 3.14 உற்பத்தித்திறன் வாய்ந்ததொரு காணி முகாமைத்துவ முறையும் மற்றும் ஒன்றிணைக்கப்பட்ட கட்டுப்பாட்டுத் திட்டமும்

**கொள்கை கோட்பாடுகள்** –

- உகந்த காணிப் பயன்பாடு
- உணர்திறன் உள்ள பிரதேசங்களை பாதுகாத்தல்
- வினைத்திறனான மற்றும் உற்பத்தித் திறன் வாய்ந்த காணி நிர்வாகமும் மற்றும் முகாமைத்துவமும்

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| காணிப் பயன்பாடும் காணிப்பயன்பாட்டு முகாமைத்துவமும் | பொருளாதார மதிப்பையும், திரும்பலையும் அதிகரிப்பதற்கு வரையறுக்கப்பட்ட காணி வளங்களின் வினைத்திறனான பயன்பாட்டை விருத்தி செய்தல். | • தேசிய காணிப்பயன்பாட்டுக் கொள்கை மற்றும் திட்டத்தினை தயாரித்தல்/ புதுப்பித்தல்<br>• ஒன்றிணைக்கப்பட்ட காணிப்பயன்பாட்டு வரைபடத்தைத் தயாரித்தல்/ புதுப்பித்தல்<br>• தேசிய காணிப்பயன்பாட்டுக் கொள்கைக்கு இணங்க உள்ளூர் அபிவிருத்தித் திட்டத்தினை தயாரித்தல்.<br>• தரவுப் பகுப்பாய்வின் அடிப்படையில் நிலப்பொருத்த வரைபடத்தினை தயாரித்தல்.<br>• புதிய காணிச் சட்டக் கட்டமைப்பை உருவாக்குதல் மற்றும் வினைத்திறனான காணி நிர்வாகம் மற்றும் முகாமைத்துவத்தை உருவாக்கக் கூடிய காணிச்சட்டமொன்றினை இயற்றுதல்.<br>• காணிப்பயன்பாட்டுக் திட்டங்களின் ஊடாக அனர்த்தத் தணிப்பு, காலநிலை நெகிழ்திறன் மற்றும் ஏற்புப் பொறிமுறைகளை பொருத்தமான முறையில் உறுதி செய்தல்.<br>• காணி முகாமைத்துவத்தினை ஒருங்கிணைக்கவும் மற்றும் மேற்பார்வை செய்யவும் தேசிய காணிச் சபையொன்றினை உருவாக்குதல்.<br>• காணிப்பட்டியலை தயார் செய்து புதுப்பித்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | டிஜிடல்மயமாக்கலின் ஊடாக பயனுறு விளைவுள்ள மற்றும் வினைத்திறனான காணி நிர்வாக முறைமையின் மேம்பாட்டினை உறுதிப்படுத்தல். | • காணிப்பதிவு மற்றும் காணித்துண்டுகள் மற்றும் அறிக்கைகளை டிஜிடல்மயமாக்கல் போன்றவற்றிற்கு இலத்திரனியல் முறை ஒன்றினை உருவாக்குதல்.<br>• காணி மதிப்பீட்டு செயன்முறையை முறையானதாகவும், மற்றும் வினைத்திறனானதாகவும் மாற்றுதல்.<br>• காணி தொடர்பான பிரச்சினைகளை விரைவாகவும் மற்றும் நியாயமாகவும் தீர்க்க காதி – நீதித்துறை நிறுவனங்களின் வலையமைப்பை நிறுவுதல்.<br>• விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப முறைகளின் ஊடாக எளிமையான மற்றும் வினைத்திறனான காணிப்பயன்பாட்டு மற்றும் மற்றும் அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்களை அறிமுகம் செய்தல். |
| | சுற்றுச்சூழல் ரீதியாக உணர்திறன் கொண்ட சுற்றுச்சூழல் முறைமைகளை உறுதி செய்தல் மற்றும் அவற்றைப் பாதுகாப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்தல். | • உணர்திறன் உள்ள பகுதிகளில் காணியைப் பாதுகாத்தல்.<br>• சுற்றுச்சூழல் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளை பாதுகாக்க நடவடிக்கைகளை எடுத்தல். |
| காணிப்பதிவு | காணி உரிமை மாற்றம் தொடர்பாக மக்களுக்கு சிறந்த சேவை விநியோகத்தை அளிப்பதற்காக நிறுவன ரீதியான இயலுமையை பலப்படுத்தல். | • நீண்ட காலமாக அரச காணிகளில் வசிப்பவர்களுக்கு முறையான மதிப்பீடொன்றின் பின்னர் காணிப்பத்திரங்களை வழங்குதல்.<br>• அனைத்து உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் காணி முகாமைத்துவ நிறுவனங்களை இணைக்கும் ஒர ஒன்றிணைக்கப்பட்ட காணி தகவல் உட்கட்டமைப்பை (ILII) நிறுவுதல்.<br>• வினைத்திறனான, வெளிப்படையான, மற்றும் பொறுப்பான காணி தொடர்பான பொதுச் சேவையொன்றினை உறுதிப்படுத்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| நில அளவை மற்றும் வரைபடம் | வினைத்திறனான, பயனுறு விளைவுள்ள மற்றும் நிலைபேறான காணி முகாமைத்துவத்திற்கான நில அளவை மற்றும் வரைபட சேவைகளை வலுப்படுத்தல். | • நில அளவீடு மற்றும் வரைபடத்தை தயாரிப்பதற்கான கட்டுப்பாட்டு வலையமைப்பை விரிவாக்குவதோடு, மற்றும் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்தின் ஊடாக நிலப்பகுப்பாய்வுகளின் உற்பத்தித் திறனை அதிகரித்தல். |
| | | • நவீன தொழில்நுட்பத்தின் ஊடாக நில அளவை மற்றும் வரைபடத்தை வரைவதற்கான நிர்வாக வலையமைப்பை விரிவாக்குதல் மற்றம் நில அளவையின் வினைத்திறனை விருத்தி செய்தல்.<br>• நாடு முழுவதையும் உள்ளடக்கக் கூடிய வகையில் LiDAR அளவைகள் அல்லது பொருத்தமான தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்தல்/ நடைமுறைப்படுத்தல் மற்றும் துல்லியமான உயரத் தரவைப் பிரித்தெடுத்தல்.<br>• தடையற்ற ஒருங்கிணைப்புக்காக அனைத்து அளவைகளையும் தேசிய கட்டத்துடன் இணைத்தல்.<br>• புதிய அளவையியல் பட்டதாரிகளிடமிருந்து சிறந்த சேவையைப் பெறுவதற்கான பொறிமுறையை அறிமுகம் செய்தல்.<br>• அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு தேவையான துல்லியமான மற்றும் சரியான நேரத்தில் இடம் சார்ந்த தரவுகளை முன்னுரிமை அடிப்படையில் சேகரித்தலும் மற்றும் சேமித்து வைத்தலும்.<br>• நம்பகமான மற்றும் துல்லியமான தரவு மூலங்களை வழங்கலும் மற்றும் புவி – தகவல் உற்பத்திக்குத் தேவையான இடஞ்சார்ந்த தரவுகளைப் புதுப்பிக்க புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | • முழுமையான தரவு முகாமைத்துவத்தை எளிதாக்குவதற்கு தேசிய இடஞ்சார்ந்த தரவு ஒருங்கிணைப்பு பொருத்தனை ஒன்றினை வழங்குதல். |

## 3.15 விஞ்ஞான ரீதியாக முகாமை செய்யப்படும் நிர்மாணக் கைத்தொழில் - சிறந்த தரமான தொழிற்படை

**கொள்கை கோட்பாடுகள் –**

- ஒரு ஆக்கபூர்வமான நிர்மாணக் கைத்தொழில்
- வெளிப்படையான மற்றும் நியாயமான கொள்முதல்
- நிர்மாணத் துறையை கண்காணித்தல், ஆதரவளித்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்
- தொழில்முயற்சியாளர்களுக்கிடையில் நியாயமான போட்டி மற்றும் சமமான அணுகல்
- வேலை பாதுகாப்பு, நியாயமான கூலிகள், மற்றும் புதிய கட்டடக்கலை அறிவை அடிப்படையாகக் கொண்ட திறன் அபிவிருத்திக்கான வாய்ப்புக்கள்

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| உயர் தரத்திலான மற்றும் போட்டித் தன்மை கொண்ட நிர்மாணக் கைத்தொழில் | நிர்மாணக் கைத்தொழில் துறையின் ஆராய்ச்சி, மற்றும் அபிவிருத்தி இயலளவுகள், புத்தாக்கங்கள், நிலைபேறான தன்மை மற்றும் போட்டித் தன்மை ஆகியவற்றின் ஊடாக வளர்ச்சியை ஊக்குவிக்கும் சூழல் ஒன்றை உருவாக்குதல். | ▪ நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தை ஆய்வு செய்து தேவையான திருத்தங்களை மேற்கொள்ளல்.<br>▪ நிர்மாணத்துறையில் அனைத்து பங்குதாரர்களுக்கும் பரந்த நெறிமுறை அமைப்பை அறிமுகப்படுத்துதல்.<br>▪ CIDA வினால் அங்கீகரிக்கப்பட்ட கம்பனிகளுக்கு நிர்மாண உத்தரவாத நிதியின் ஊடாக நிதி உத்தரவாதங்களை வழங்குதல்.<br>▪ நிர்மாணக் கைத்தொழிலில் பணிபுரியும் ஒவ்வொரு தொழிலாளிக்கும் அவர்களின் சமூக அங்கீகாரத்தையும் மற்றும் திறன் மட்டத்தையும் தீர்மானித்து சான்றளிக்கக் கூடிய வகையில் ஒரு அடையாள அட்டையை வழங்குதல்.<br>▪ நிர்மாணத்துறையில் உள்ள மோதல்களை விரைவாகத் தீர்க்க நடுவர் நிலையம் மற்றும் நடுவர் குழுவை வலுப்படுத்தல்.<br>▪ சுற்றுச்சூழல் இடர்கள் தொடர்பான ஆழமான மதிப்பீடொன்றுடன் அனைத்து நிர்மாணக் கருத்திட்டங்களுக்கும் சுற்றுச்சூழல் பொறுப்புணர்வை அவசியமாக்குதல்.<br>▪ குறிப்பிட்ட நிபந்தனைகளின் கீழ் நிர்மாணத் துறையில் உள்ள சர்வதேச நிறுவனங்களை ஈடுபடுத்துவதன் மூலம் உள்ளூர் கைத்தொழிலாளர்களை பாதுகாத்தல்.<br>▪ உலகளாவிய அபிவிருத்திகள் மற்றும் சர்வதேச தர நிர்ணயங்கள் என்பவற்றிற்கு ஏற்ப, நிர்மாணக் கைத்தொழிலை நவீனமயப்படுத்தவும், மற்றும், புதுப்பிக்கவும், திட்டங்களையும் மற்றும் விவரக் குறிப்புக்களையும் தயாரித்தல்.<br>▪ நிர்மாணத்துறையில் இலத்திரனியல் கேள்வி மனு கோரும் முறைமையை முறைப்படி நடைமுறைப்படுத்தல்.<br>▪ சர்வதேச நிர்மாணக் கருத்திட்டங்களில் உள்ளூர் கைத்தொழிலாளர்கள் நுழையக் கூடிய வகையில் அரசாங்க அனுசரணையை வழங்குதல்.<br>▪ உள்ளூர் கேள்வி மனுதாரர்களின் பங்கேற்பை அதிகரிப்பதற்கு கொள்முதல் செயன்முறையின் வெளிப்படைத்தன்மையை சான்றுப்படுத்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | ▪ புதிய தொழில்நுட்பத்தையும் மற்றும் குறைந்த செலவிலான மூலப்பொருட்களையும் அறிமுகப்படுத்துவதற்கு நிர்மாணக் கைத்தொழிலுக்கு விஷேட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு ஒன்றை நிறுவுதல்.<br>▪ நாட்டிலுள்ள அனைத்து நிர்மாணப் பயிற்சி நிறுவனங்களையும் ஒருங்கிணைத்தல் மற்றும் நிர்மாண தொழில்நுட்ப கல்வியை ஒழுங்குமுறைப்படுத்தல்.<br>▪ பதிவு செய்துள்ள நிர்மாணத் தொழிலாளர்களுக்கு நீண்ட கால காப்புறுதித் திட்டம் மற்றும் ஓய்வூதியப் பயன் திட்டமொன்றினையும் அறிமுகம் செய்தல்.<br>▪ தேசிய அனர்த்த நிலைமைகளை முகாமை செய்தல் மற்றும் தொழிற்படையை பயிற்றுவித்தல் என்பனவற்றில் அரச துறை நிர்மாண நிறுவனங்களின் பங்கேற்பினை சான்றுப்படுத்தல்.<br>▪ புதிய கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் ஒப்பந்த முகாமைத்துவம் தொடர்பான கள அறிவை விருத்தி செய்தல்.<br>▪ மதிப்பீடு மற்றும் கொள்முதல் செயன்முறைகள் தொடர்பாக அரச மற்றும் தனியார் துறை தொழில்நுட்ப ஊழியர்களை பயிற்றுவித்தல். |

## 3.16 நெகிழ்திறன் கொண்ட மற்றும் புதுமை வாய்ந்ததொரு விமானப் போக்குவரத்துத் துறை

**கொள்கை கோட்பாடுகள் –**

- பிராந்திய இணைப்பை பலப்படுத்துதல்.
- சுற்றுலாக் கைத்தொழிலுக்கான ஒரு ஊக்கியாக செயற்படல்.
- ஆசியப் பிராந்தியத்தின் விமான சேவைகள் மற்றும் பராமரிப்பு மையமாக மாறுதல்.

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | நடவடிக்கைகள் |
|---|---|---|
| சுற்றுலா அபிவிருத்தியை நோக்கிய விமானப் போக்குவரத்து | வெளிநாட்டு உறவுகளை பலப்படுத்தும் மற்றும் இந்நாட்டை முக்கிய சுற்றுலா தளமாக மேம்படுத்தும் நிலையான மற்றும் போட்டித் தன்மை கொண்ட தேசிய விமானச் சேவையொன்றினை அபிவிருத்தி செய்தல். | • தேசிய விமான சேவையை பாதுகாத்தல் மற்றும் அதன் நிதி ஸ்திரத்தன்மைக்கு இழப்பு ஏற்படாத வகையில் பிரதான சுற்றுலா தளங்களுக்கான இணைப்பினை உறுதிப்படுத்தல். |
| | சர்வதேச விமான நிலையங்கள் மற்றும் உள்நாட்டு விமான நிலையங்கள் உள்ளிட்ட விமான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தலும் மற்றும் விரிவாக்கலும் . | • பிரதான சுற்றுலா மூலச் சந்தைகளிலிருந்து இலங்கை வரை குறைந்த செலவிலான விமான சேவைகளை ஊக்குவித்தல்.<br>• நாட்டில் உள்ள குறைவாகப் பயன்படுத்தப்படும் விமான நிலையங்களை சிறந்த முறையில் பயன்படுத்தல்.<br>• பிராந்தியத்திலுள்ள போட்டித் தன்மை வாய்ந்த விமான நிலையங்களின் தர நிர்ணயங்களுக்கு ஏற்ற படி சுற்றுலாத் துறைக்கு உகந்த, கவர்ச்சிகரமான வசதிகளை ஏற்படுத்துவதில் கவனத்தைச் செலுத்துவதன் ஊடாக பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை விரிவாக்குதல்.<br>• இலக்காகக் கொள்ளப்பட்ட சுற்றுலாப் பிரிவுகளை ஈர்ப்பதற்கும், மற்றும் வசதிகளை வழங்குவதற்கும் யாழ்ப்பாணம், அம்பாந்தோட்டை மற்றும் மட்டக்களப்பு சர்வதேச விமான நிலையங்களை சார்ந்த பிரதேசங்களை விஷேட சுற்றுலா வலயங்களாக ஸ்தாபிக்கும் அதே வேளை அவ்விமான நிலையங்களை சுற்றுலா கைத்தொழிலுக்கான பிரதான வாயிலாக அபிவிருத்தி செய்தல்.<br>• பிரதான சுற்றுலா பயண இலக்குகளாக உள்நாட்டு விமான இணைப்புகளை உறுதிப்படுத்துவதற்கு தற்போது ஒழுங்குமுறைபடுத்தல் மற்றும் செயற்பாட்டு சுற்றுச்சூழலை மீளாய்வு செய்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | • உயர் செலவினங்களை மேற்கொள்ளும் சுற்றுலா வளர்ச்சியொன்றுக்கு அவசியமான இணைப்பிற்கு ஆதரவளிப்பதற்கு சாத்தியமான பிரதான பிரதேசங்களில் உள்நாட்டு விமான நிலையங்களையும் மற்றும் நீர்-விமான நிலையங்களை மேலும் அபிவிருத்தி செய்தல்.<br>• நாடு பூராவும் உள்ள விமான நிலையங்கள் மற்றும் பயண இலக்குகளுக்கு சுற்றுப் பிரயாணிகள் தடைகள் எதுவுமின்றி பயணம் செய்வதை உறுதிப்படுத்துவதற்காக சிறந்த தரைப் போக்குவரத்து வலையமைப்பொன்றை ஸ்தாபித்தல். |
| விமான சேவைகள் | இலங்கையை இப்பிராந்தியத்தில் (பராமரிப்பு, பழுதுபார்த்தல், முழுமையாகப் புதுப்பித்தல் ) MRO கேந்திரமாக நிலைநிறுத்துதல். | • ஆசியப் பிராந்தியத்தின் விமான சேவைகளின் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்வதற்கு விமான சேவைகள் மற்றும் பராமரிப்பு நிலையமொன்றினை நிறுவுதல். |

# 4 ஆம் அத்தியாயம்

## 4. கண்ணியமானதொரு வாழ்க்கை – உறுதியானதொரு நாடு

### அறிமுகம்:: நிர்வாகம் மற்றும் சீர்திருத்தங்களின் ஊடாக நிலைபேறானதொரு எதிர்காலம்

ஜனநாயகத்தை பலப்படுத்துதல், மற்றும் அனைத்து பிரஜைகளினதும் சமத்துவத்தை உறுதிப்படுத்துவதற்காக ஒரு நாட்டிற்குள் அனைத்து மக்களும் நிர்வாகத்தில் ஈடுபடக் கூடிய வகையில் அரசியலமைப்பில் சீர்திருத்தங்கள் அறிமுகம் செய்யப்படும்.

1.4 மில்லியன் ஊழியர்களை உள்ளடக்கிய அரச சேவையானது, அரச கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் பிரதான கருவியாக இருந்தாலும் கூட, தற்போது ஊழல் மற்றும் அரச தலையீட்டின் காரணமாக வினைத்திறனின்மை மற்றும் மக்களின் அவநம்பிக்கை போன்ற சவால்களுக்கு முகங்கொடுத்துள்ளது. மக்களின் நம்பிக்கையை மீண்டும் ஏற்படுத்துவதற்கும், வினைத்திறனையும் மற்றும் பயனுறு விளைவையும் விருத்தி செய்வதற்கும் அரச சேவையை சீர்திருத்தம் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது.

நீதித்துறை அமைப்பில், சுயாதீனமும் மற்றும் வெளிப்படைத்தன்மையும் இல்லாமையின் காரணமாக பொது மக்களின் நம்பிக்கையை இழந்து விட்டது. பொது மக்களின் நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புதல் மற்றும் நீதியின் சுயாதீனமும் மற்றும் வினைத்திறனான நிர்வாகமுமே சட்டத்திற்கான ஆட்சியை உருவாக்குவதற்கு வழிவகுக்கின்றது.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் சட்டத்தையும் மற்றும் அமைதியையும் பேணுவதற்கு பெரும் பங்காற்றி வருகின்றனர். ஆனால், பெரும்பாலும் அவர்கள் ஊழல் மற்றும் அரசியல் தாக்கங்களுக்கு உள்ளாகியிருக்கிறார்கள் என்பது பொது மக்களின் அபிப்பிராயமாகும். பொது மக்களுக்கு நேர்மையாக சேவை புரியும் சுயாதீனமான மற்றும் வினைத்திறனான சேவையொன்றாக பொலீஸை மாற்றுவது மிகவும் அவசியமாகும்.

சிறைக்கூடங்களின் அமைப்பு முறை, அதிக அளவிலான கைதிகளின் நெருக்கடி, அடிப்படை வசதிகள் மிகக் குறைவாக இருத்தல் மற்றும் சிறைக் கைதிகளை துஷ்பிரயோகம் செய்தல் போன்ற இன்னோரன்ன பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றது. குற்றங்கள் புரிவதற்குத் தூண்டாததொரு சமூகத்தை உருவாக்குவதற்கு எதிர்பார்த்தாலும் கூட, சிறைக்கைதிகளின் பொது நலன் மற்றும் அவர்களுக்கான வினைத்திறன் வாய்ந்த புனர் வாழ்வு நிகழ்ச்சித்திட்டமொன்றினை நடைமுறைப்படுத்துவது இன்றியமையாத ஒரு தேவையாக உள்ளது.

போதைப் பொருள் பயன்பாடானது, குறிப்பிடத்தக்கதொரு சமூக பிரச்சினையாக உருவாகியுள்ளதோடு, போதைப் பொருள் வர்த்தகத்திற்கு எதிராகப் போராடுவதற்கு அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் போதியதாக இல்லாமையின் காரணமாக, அதன் நிலைமை மேலும் மோசமான நிலைமைக்கு மாறியுள்ளது. சிறையிலிடலை மாத்திரம் கவனஞ் செலுத்துவதை விட போதைப் பொருள் தடுப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பது தொடர்பான விடயங்களில் கவனஞ் செலுத்துவதும் மிக முக்கியமானதாகும்.

இலங்கையின் மூலோபாய அமைவிடமானது இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மற்றும் இராஜதந்திர தலைமைத்துவம் என்பவற்றிற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தாலும் கூட, வெளிப்புறக் காரணிகளின் காரணமாக இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையானது அடிக்கடி செல்வாக்குக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. பிராந்திய பதட்டங்களுக்கு மத்தியிலும் கூட பொருளாதார மீட்சி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு தேசிய நலன்களை அடிப்படையாகக் கொண்ட வெளிநாட்டுக் கொள்கையொன்று எமது நாட்டுக்கு அவசியமாக உள்ளது.

தேசிய பாதுகாப்பு என்பது சுதந்திரமான மற்றும் சீரான இராஜதந்திரம், ஜனநாயக ஆட்சி, சமத்துவம், நல்லிணக்கம், மற்றும் பிரஜைகளை பாதுகாப்பதில் அர்ப்பணிக்கப்பட்ட தொழில்முறை இராணுவம் என்பனவற்றில் சார்ந்துள்ளது. உள்ளக பாதுகாப்பை உறுதி செய்வதற்கு சட்டத்தை அமுலாக்கும் பல்வேறு நிறுவனங்களுக்கிடையே ஒருங்கிணைக்கப்பட்ட முயற்சிகள் தேவையாக உள்ளது.

**கொள்கைக் கூற்று**

அனைத்து பிரஜைகளுக்கும் நிலைபேறானதொரு எதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்கு கடந்த காலத்திலிருந்து கற்றுக் கொண்டவைகளை அடிப்படையாகக் கொண்டு ஒருங்கிணைக்கப்பட்ட ஐக்கியமானதொரு அடையாளத்தை இலங்கையில் உறுதிப்படுத்துதல்.

## 4.1. புதியதொரு அரசியலமைப்பு – ஐக்கியமானதொரு இலங்கை நாடு

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாயத் திசை | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| ஜனநாயக ஆட்சியை வலுப்படுத்துதல். | ஓரங்கட்டப்பட்ட குழுக்களை பாதுகாப்பதற்கு சட்டம் மற்றும் நிறுவன ரீதியான கட்டமைப்பை வலுப்படுத்தல். | • சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பாக சர்வதேச சமவாயங்களில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகளை அடிப்படை உரிமைகளாக இனங்கண்டு இயற்றுதல்.<br>• சர்வதேச சமவாயங்களுக்கு ஏற்ப, சிறுவர்கள், பெண்கள், மற்றும் மாற்றுத் திறன் கொண்ட மக்கள் ஆகியோரின் உரிமைகள் தொடர்பாக அரசியலமைப்புச் சட்டத்தை விரிவாக்குதல். |
| | அரசியலமைப்பு மற்றும் தேர்தல் சீர்திருத்தங்களின் ஊடாக ஒன்றுபட்ட சமூகமொன்றினை உருவாக்குதல். | • ஒரு நாட்டிற்குள் அனைத்து மக்களும் ஆட்சியில் ஈடுபடக் கூடிய வகையில் நிர்வாகத்தில் அனைத்து உள்ளூராட்சி மன்றங்கள், மாவட்டங்கள், மற்றும் மாகாணங்களுக்கும் அரசியல் மற்றும் நிர்வாக அதிகாரத்தை பரவலாக்கம் செய்யும் ஜனநாயகத்தை வலுப்படுத்தும் மற்றும் அனைத்துப் பிரஜைகளினதும் சமத்துவத்தை உறுதிப்படுத்தும் புதிய அரசியலமைப்பொன்றை அறிமுகப்படுத்துதல்.<br>• நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ரத்து செய்து, பாராளுமன்றத்திற்குப் பொறுப்பான அரசாங்கமொன்றினை நிறுவுதல், மற்றும் நிறைவேற்று அதிகாரமில்லாத ஜனாதிபதி ஒருவரை நியமித்தல்,<br>• புதிய பாராளுமன்ற தேர்தல் முறைமையை அறிமுகப்படுத்தல்.<br>• உத்தியோகபூர்வ ஜனாதிபதி இல்லங்களை ஒன்றுக்கு வரையறுத்தல்.<br>• ஓய்வு பெற்ற ஜனாதிபதிகளுக்கும் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கும் வழங்கப்பட்ட ஓய்வூதியங்கள், மற்றும் விஷேட சலுகைகளையும் ரத்து செய்தல்.<br>• தர்க்கரீதியாக தீர்மானிக்கப்பட்டு ஸ்தாபிக்கப்பட்ட 25 அமைச்சுக்களுக்கு 25 அமைச்சர்களையும் மற்றும் அதற்குரிய பிரதி அமைச்சர்களையும் நியமித்தல் மற்றும் இராஜாங்க அமைச்சர்களின் பதவி நிலைகளை இல்லாமல் செய்தல்.<br>• ஒவ்வொரு அமைச்சுக்கும் உரிய விடயம் தொடர்பாக விஷேட நிபுணர்களை உள்ளடக்கிய ஆலோசனை சபையொன்றினை நியமித்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாயத் திசை | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | • பாராளுமன்ற அமைச்சர்கள், மற்றும் உறுப்பினர்கள், அவர்களது தனிப்பட்ட ஊழியர்களாக அவர்களது நெருங்கிய குடும்ப உறுப்பினர்களை நியமிக்க இடங்கொடுக்காமை உள்ளடங்கலாக நெறிமுறை கோவைக்களம் ஒன்றினை அறிமுகம் செய்தல்.<br>• பாராளுமன்ற அமர்வுகளில் பங்கேற்பதற்காக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகளை ரத்து செய்தல்.<br>• 05 வருடங்களின் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட ஓய்வூதியங்களை ரத்து செய்தல்.<br>• பாராளுமன்ற உறுப்பினர்கள், அல்லது அவர்களது நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகலோ வர்த்தகத்தில் ஈடுபடுவதைத் தடுத்தல்.<br>• பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான வரியற்ற வாகன அனுமதிப்பத்திரங்களை நீக்குதல்.<br>• அமைச்சர்கள் / பிரதி அமைச்சர்கள் அல்லது அவர்களின் பதவிக் காலத்தில் பயன்படுத்துவதற்கு ஒரு வாகனத்தை மாத்திரம் வழங்குதல்.<br>• பாராளுமன்றத்தில் அத்தகைய அமைச்சர் பொறுப்பை நிறைவேற்றா விட்டாலோ அல்லது ஊழலில் ஈடுபட்டாலோ பாராளுமன்ற உறுப்பினரை வாக்காளர்கள் மூலம் திரும்ப அழைப்பதற்கான ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துதல்.<br>• இனங்களுக்கிடையில் ஒற்றுமையின்மை மற்றும் மத மற்றம் சமய ரீதியான வெறுப்பு இல்லாத அல்லது பாலினம் அல்லது வேறு எந்த காரணங்களுக்காகவும் பாகுபாடு காட்டாத நிபந்தனைகளுக்கு உட்பட்டு பேச்சுச் சுதந்திரத்தை உறுதிப்படுத்துதல்.<br>• நாட்டிற்கு உள்ளேயும் மற்றும் வெளியேயும் குடியேறியவர்களின் வாக்குரிமையை பாதுகாத்தல். |

## 4.2. வினைத்திறன் மிக்கதொரு அரசாங்க சேவை – திறன் அடிப்படையிலான தொழில்முறை

**கொள்கை கோட்பாடுகள் –**

- வெளிப்படைத்தன்மையையும் பொறுப்புணர்வையும் உறுதி செய்தல்
- தகுதி அடிப்படையிலான நியமனங்களும் மற்றும் பதவி உயர்வுகளும்.
- வினைத்திறனும் மற்றும் முறையான செயன்முறையும்
- நெறிமுறையான நடத்தையும் மற்றும் தொடர்ச்சியும்
- முன்னேற்றமடைந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தல்
- உற்பத்தித் திறன் வாய்ந்த கொள்கைகளை தயாரித்தல்
- பங்கேற்பு
- பொது மக்கள் பங்கேற்பு, விழிப்புணர்வு மற்றும் திறன்கள்
- அனைவரையும் உள்ளடக்குவதை உறுதிப்படுத்தல்
- பாகுபாடுகள் இல்லை

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| வினைத்திறனான அரச சேவை விநியோகம் | அரச வளங்களை அதிக பட்சம் பயன்டுத்துவதன் மூலம் டிஜிடல் மயமாக்கப்பட்ட அரசாங்க சேவையொன்றினை வழங்குவதனை உறுதிப்படுத்தல். | • அரசாங்க சேவைகளின் கூட்ட அறிக்கைளில உள்ள பிரச்சினைகளை தீர்த்தல் மற்றும் அவற்றைத் திருத்தம் செய்தல்.<br>• தரைமட்டத்திலிருந்து இனங்காணப்பட்ட சமூக பொருளாதார பிரச்சினைகளையும் மற்றும் தேவைகளையும் தீர்த்து வைப்பதற்கு தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு அவசியமான பொறிமுறையொன்றினை தயாரித்தல்.<br>• அரச திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் விடயப் பரப்பை இனங்காணல், மற்றும் தர்க்க ரீதியாக அவற்றை புதிய அமைச்சுக்களுக்கு இணைத்தல் மற்றும் சமூக - பொருளாதார இலக்குகளை அடைவதில் உயர்வான வினைத்திறனை பேணுவதற்காக இந்நிறுவனங்களுக்கிடையில் செங்குத்து மற்றும் கிடை மட்ட இணைப்புகளை உருவாக்குதல்.<br>• தேவைக்கேற்ப புதிய நிறுவனங்களை உருவாக்குதல், ஒரே வகையான விடயப்பரப்பை உடைய நிறுவனங்களை தர்க்க ரீதியான அடிப்படையில் ஒன்றிணைத்தல், மற்றும் தேவையற்ற நிறுவனங்களை இல்லாமல் செய்தல்.<br>• டிஜிடல்மயமாக்கல், செயலாற்ற முகாமைத்துவம், மற்றும் பிரஜைகளின் ஈடுபாடு ஆகிய எண்ணக்கருக்களை கருத்தில் கொண்டு நடைமுறையிலுள்ள அரச முகாமைத்துவ செயன்முறைகளை புதிய அரச முகாமைத்துவத்திற்கு மாற்றியமைத்தல்.<br>• அரசாங்க சேவையின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக பிரபலமான மாற்றீடான தொழிலாளர்களை பணி நீக்கம் செய்வதற்குப் பதிலாக புதிய சமூக பொருளாதார இலக்குகளை அடையும் குறிக்கோளுடன் ஊழியர்களை மீள்பதவிகளில் அமர்த்த அவர்களின் திறன்கள் மற்றும் தகைமைகள் போன்ற தகவல்களை இனங்கண்டு உடனடியாக குடித்தொகை மதிப்பீடொன்றை மேற்கொள்ளல்.<br>• திணைக்களங்களும் மற்றும் அவற்றின் பணியாளர் குழாமும் அவற்றின் இலக்குகளை அடைவதை உறுதி செய்வதற்காக செயலாற்ற முகாமைத்துவ செயன்முறையொன்றினை அறிமுகம் செய்தல்.<br>• டிஜிடல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஒரே கூரையின் கீழ் எண்ணக்கருவை அடிப்படையாகக் கொண்டு பிரதேச செயலகங்களை பல்சேவைகளை வழங்கும் நிலையங்களாக ஸ்தாபித்தல். தீர்மானம் எடுக்கும் செயன்முறையில் செயலூக்கத்துடனும் மற்றும் செயலற்ற நிலையிலும் நிகழக் கூடிய பொது நிதி விரயமாவதைத் தடுத்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | • வினைத்திறனான முறையில் நன்னடத்தையுள்ள, ஊழலற்ற, முறையில் பொதுச் சேவையை வழங்குவது தொடர்பாக அலுவலர்களை மதிப்பீடு செய்து பொதுமக்களின் பின்னூட்டலைப் பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகளை அறிமுகம் செய்தல்.<br>• அரச வளங்களை முறையாகவும் வினைத்திறனான முறையில் முகாமை செய்வதற்கு அரச சொத்துக்களின் பதிவேடு ஒன்றைப் பேணுதல்.<br>• அரச வளங்கள் வீணடிக்கப்படுவதை தடுப்பதற்கு அரச நிறுவனங்களை ஊக்குவித்தலும், மற்றும் அவற்றை அளவிட அளவீடுகளை அறிமுகம் செய்தல்.<br>• கொள்முதல் நிதியளிப்பு, கணக்காய்வு, திட்டமிடல் மற்றும் நிர்வாகம் உள்ளிட்ட அரச சேவை உள்ளக நடவடிக்கைகளின் வினைத்திறனை விருத்தி செய்வதற்கு டிஜிடல் சாதனங்களை அபிவிருத்தி செய்தல்.<br>• குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அரசாங்க சேவையின் அனைத்து வகையான சேவைகளுக்கும் அலுவலர்களை நியமிக்கும் போதும் மற்றும் பதவி உயர்வுகளை வழங்வதற்கும் தேவையான சட்ட திட்டங்களையும் ஒழுங்கு விதிகளையும் திருத்தம் செய்தல்.<br>• அரச கொள்கைகளை தயாரிப்பதில் ஆதரவளிப்பதற்கும் மற்றும் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் அலுவலர்களுக்கு இருக்க வேண்டிய திறன்களை அபிவிருத்தி செய்வதற்கும் அரச கொள்கைகள் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் இயலளவை அதிகரிப்பதன் மூலம் மீள்கட்டமைத்தல் |

## 4.3 சட்டத்தின் ஆட்சி - சமமான அணுகலுடனானதொரு நீதி முறைமை

**கொள்கை கோட்பாடுகள் –**

■சமமானதும் சமத்துவமானதுமான சட்டப் பாதுகாப்பு
■ சுதந்திரமும், பொது மக்களின் நம்பிக்கையும்
■ வெளிப்படைத்தன்மையும் மற்றும் வினைத்திறனும்

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| நீதித்துறையின் சுதந்திரத்தை உறுதிப்படுத்தல். | நீதித்துறை அமைப்பை மேம்படுத்துவதன் ஊடாக நீதி வழங்கலை சரியான நேரத்திலும் சமமான நீதியை வழங்கலை உறுதி செய்தல். | • நடைமுறையிலுள்ள சட்டங்களை மீளாய்வு செய்து தேவையான சட்டங்களை புதுப்பிப்பதற்கு சட்ட நிபுணர்களைக் கொண்ட குழுவொன்றை நியமித்தல்.<br>• நீதித்துறை செயன்முறைக்கு நவீன தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்தல் மற்றும் நீதிபதிகளுக்கும் மற்றும் தொடர்புடைய பணியாளர்களுக்கும் பொருத்தமான பயிற்சிகளையும் வழங்குவதற்கு நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் நீதித்துறை செயன்முறையானது சுமுகமாகவும் வினைத்திறனாகவும் மேற்கொள்ளல்.<br>• காத்திரமான நீதி மன்றங்களை (Smart Court Houses) ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் நீதி மன்ற அறிக்கைகளின் மென் நகல்களை பராமரித்தல்.<br>• துல்லியமான, தெளிவான மற்றும் உடன் பெறுபேறுகளைப் பெற மேன்முறையீட்டு நீதி மன்றங்கள் மற்றும் மூல நீதி மன்றங்களின் நீதிபதிகளுக்கு உதவுவதற்காக ஆராய்ச்சி உத்தியோகத்தர்களை நியமித்தல்.<br>• தெற்காசிய வலயத்தில் சர்வதேச வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களை அடிப்படையாகக் கொண்டு எழும் சர்ச்சைகளை நடுவர் மற்றும் சமரசம் செய்வதற்கான சர்வதேச நடுவர் மற்றும் சமரச .நிலையமொன்றினை நிறுவுதல்.<br>• குற்றவியல் சட்ட வழக்குகள் தொடர்பான ஆதாரங்களைப் பாதுகாப்பாக களஞ்சியப்படுத்துவதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.<br>• நீண்ட காலமாக சேமித்து பாதுகாத்து வைக்கப்பட்ட வழக்குகள் தொடர்பான பொருட்களின் சந்தைப் பெறுமதிகள் குறைவடைவதற்கு முன்னர் குறிப்பிட்ட பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு விரைவாக அகற்றுவதற்கு அல்லது அரசுடமையாக்குவதற்கான செயற்பாட்டை துரிதப்படுத்துவதற்கான சட்டங்களை அறிமுகம் செய்தல்.<br>• பிணைச் சட்டம் மற்றும் பிணை செயன்முறைகளில் தற்போதுள்ள பிரச்சினைகளை பார்ப்பதன் மூலம் பிணையுடன் தொடர்புடைய சட்டங்களை புதுப்பித்தல்.<br>• நீதித்துறை செயன்முறைகளை துரிதப்படுத்துவதற்காக அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் மாகாண கிளைகளை ஸ்தாபித்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| சட்ட மா அதிபர் திணைக்களம் | இலஞ்சம் மற்றும் ஊழலை நீக்குதல் | • திருடப்பட்ட அரச சொத்துக்களை மீட்பதற்காக திருடப்பட்ட சொத்துக்களை மீட்டல் (STAR) மற்றும் ஐக்கிய நாடுகள் போதைப் பொருட்கள் மற்றும் குற்றங்கள் அலுவலகம் (UNIDC) போன்ற சர்வதேச நிறுவனங்களின் தொழில்நுட்ப மற்றும் ஆலோசனை உதவியுடன் திருடப்பட்ட பொதுச் சொத்துக்களின் மீட்பு நிறுவனம் ஒன்றை நிறுவுதல்.<br>• இலஞ்சத்தை தடுப்பதற்கும் மற்றும் திருடப்பட்ட சொத்துக்களை மீட்பதை ஒருங்கிணைத்தல் தொடர்பான சர்வதேச சமவாயத்தினை அமுலுக்குக் கொண்டு வரும் வகையில் 2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழலுக்கு எதிரான சட்டத்தின் 34 ஆம் பிரிவிற்கு ஏற்ப, தேவையான அதிகாரத்துடன் இலஞ்ச ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்திற்கு வசதிகளை வழங்குதல்.<br>• நிதிக்குற்றங்கள், இலஞ்சம் மற்றும் ஊழல் வழக்குகளை நெறிமுறைப்படுத்துவதற்கு உயர் நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகளைக் கொண்ட நிரந்தர குழாமொன்றை நியமித்தல்.<br>• ஒவ்வொரு மாவட்டத்திலும் ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழுவை நிறுவுதல்.<br>• ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழுவிடமிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பார்டுகளை ஆறு (06) மாதங்களுக்குள் விசாரணை செய்தல் அல்லது அவ்வாறு விசாரணை செய்யப்படாத முறைப்பாடுகள் தொடர்பாக அறிக்கையொன்றினை ஆறு மாதங்களுக்கு ஒரு முறை பாரளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.<br>• அரச நிதி ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குபவர்கள் அக்குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடையவர்கள் என கருதி சட்டத்தின் முன் அவர்களைக் கொண்டு வருவதற்கு தேவையான சட்டங்களைத் தயாரித்தல்.<br>• நிதி மோசடி, இலஞ்சம், மற்றும் தரகு போன்ற ஊழல் நடைமுறைகளை தடுப்பதற்கான சட்டங்களை இயற்றுவதை முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய ஒரு விடயமாகக் கருதி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.<br>• ஊழல், மோசடி, மற்றும் இலஞ்சம் போன்ற விடயங்கள் தொடர்பாக பொது மக்களுக்கிடையில் அரசாங்க அனுசரணையுடனான விழிப்புணர்வு பிரச்சாரமொன்றை நடாத்துதலும் மற்றும் அவற்றிற்கெதிராக பொது மக்களை வலுவூட்டுதல்.<br>• இலஞ்ச ஆணைக்குழுவினாலும் மற்றும் சட்ட மா அதிபரினாலும் திரும்பப் பெறப்பட்ட வழக்குகளை மீளப் பார்வையிடலும் மற்றும் பொருத்தமான வழக்குகளை மீளச் சமர்ப்பித்தலும். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| சட்ட மா அதிபர் திணைக்களம் | சட்ட மா அதிபர் திணைக்களத்தினை பலப்படு:த்துதல். | • நீதிமன்ற அமைப்புக்குள் ஏற்படும் தாமதங்களை நீக்குவதற்கான பொறிமுறையொன்றாக அரசாங்கத்தின் பிரதான அலுவலகத்தையும் ( Directorate of Public Prosecution (DPP)) அறிமுகம் செய்தலும், அரசாங்கத்தின் சார்பில் வழக்குகளைத் நடாத்துவதற்காக சட்ட மா அதிபர் திணைக்களத்திடமிருந்து சுயாதீனமாகச் செயற்படும் பிரதான அலுவலகத்தையும் மற்றும் உப அலுவலகங்களை மாகாணங்களில் ஸ்தாபித்தல்.<br>• விசாரணை செயன்முறையின் பின்னர் சட்ட மா அதிபர் திணைக்களத்தினால் வழக்குத் தொடராமலிருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டால் அதற்கான காரணத்தை முறையீட்டாளர்கள் அல்லது பாதிக்கப்பட்டவர்களுக்கு அறிவித்தல்.<br>• .சட்ட மா அதிபர் திணைக்களத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக பாதிக்கப்பட்ட தரப்பினரின் மனக்குறைகளுக்குத் தீர்வு காண்பதற்கு விஷேட பாராளுமன்ற குறை கேள் அதிகாரி (ஓம்புட்ஸ்மன்) ஒருவரை நியமித்தல்.<br>• சிரேஷ்ட வழக்கறிஞர் ஒருவரின் கீழ் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் மாகாண அலுவலகங்களை நிறுவுதல். |

## 4.4 மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் - மக்களுக்கு உகந்த சேவை

**கொள்கை கோட்பாடுகள் –**

- சுதந்திரம்
- வினைத்திறனான மற்றும் உகந்த சேவை
- தொழில்முறை திறன்கள்

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| பொலீஸ் சேவை | தொழில்முறை தன்மை மற்றும் பொறுப்புணர்வை பலப்படுத்துவதன் ஊடாக வெளிப்படைத்தன்மை, வினைத்திறன் மற்றும் நம்பகமான சேவையொன்றை உருவாக்குதல். | • பொலிஸிற்கும் பொது மக்களுக்கும் இடையில் நெருங்கிய மற்றும் முறையான உறவினை ஏற்படுத்துவதற்கு பொலிஸ் மற்றும் பொது மக்களைக் கொண்ட இணைப்புக் குழுக்களை அறிமுகம் செய்தல்.<br>• பொலிஸினால் ஒரு நபர் கைது செய்யப்படும் போது 24 மணி நேரத்திற்குள் சந்தேக நபரின் பாதுகாவலர்களுக்கு அல்லது நெருங்கிள உறவினர்களுக்கு அறிவித்தல்.<br>• ஏதாவது ஒரு சந்தேகத்தின் பேரில் பொலிஸ் நிலையத்திலிருந்து ஒரு சந்தேக நபர் வெளியே எடுத்துச் செல்லப்படும் போது மாஜிஸ்திரேட்டிற்கு அறிவித்தல் அல்லது சந்தேக நபரின் உயிரைப் பாதுகாப்பதற்கான முறையான செயன்முறைகளை மேற்கொள்ளல்.<br>• அனைத்து முறைப்பாடுகளையும் கணணிமயப்படுத்துவதற்ககு அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கல் மற்றும் இ- பொலிஸ் அறிக்கைகளை தயாரித்தல்.<br>• பொலிஸிற்குக் கிடைக்கும் அனைத்து முறைப்பாடுகளும் உடனடியாக விசாரணை செய்யப்பட்டு முடிவு செய்தல் மற்றும் அவ்வாறு செய்ய முடியாத சந்தர்ப்பங்களில் பொலிஸ் ஆணைக்குழுவிற்கு அறிக்கையிடல்.<br>• குற்றங்களை விசாரணை செய்வதற்கு விஞ்ஞானபூர்வமான பயிற்சிகள் புதிய தொழில்நுட்ப சாதனங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்றனவற்றைப் பயன்படுத்தல்.<br>• பொலிஸ் சேவையில் அனைத்து நியமனங்கள், பதவி உயர்வுகள், மற்றும் இட மாற்றங்கள் அரசியல் தலையீடுகள் இன்றி மேற்கொள்வதற்கு பொலிஸ் ஆணைக்குழுவை வலுப்படுத்தல்.<br>• பொலிஸ் கான்ஸ்டபிள் முதல் பிரதான பரிசோதகர் வரையிலான பதவி உயர்வுகளுக்கான முறையான பதவி உயர்வு செயன்முறையொன்றினை அறிமுகப்படுத்துதல்.<br>• பொலிஸ் சார்ஜன்ட் முதல் உதவி பொலிஸ் அத்தியட்சகர் வரை பதவி உயர்வுக்கான திட்டமொன்றினை அரசியல் தலையீடின்றி திறன்கள் மற்றும் |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | செயலாற்றுகையின் அடிப்படையில் மேற்கொள்ளக் கூடிய திட்டமொன்றினை அறிமுகம் செய்தல்.<br>• பொலிஸ் சேவை தொழில்நிலை பொலிஸ் சேவையாக மாற்றுவதற்கு அவசியமான அறிவு மற்றும் பயிற்சி அளித்தல் மற்றும் குற்றவியல், குற்றவியல் நீதி, பொலிஸ் மக்கள் தொடர்புகள் ஆலோசனை அளிப்பு, மற்றும் உளவியல் போன்ற பகுதிகளில் பட்டப்படிப்புகளை மேற்கொள்வதற்காக வாய்ப்புகளை அளித்தல்.<br>• திறன் வாய்ந்த பொலிஸ் உத்தியோகத்தர்களை பாராட்டுவதற்காக பரிசுகள், சான்றிதழ்கள் வழங்குதல் மற்றும் அவர்களுக்கு வெளிநாட்டு பயிற்சிகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குதல்<br>• சொந்த வீடொன்றில்லாத பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு வீடுகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றினை அறிமுகம் செய்தல்.<br>• ஏனைய அரச ஊழியர்களுக்கு ஒப்பீட்டு ரீதியில் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அதிகரித்தல்.<br>• இலஞ்சம், ஊழல், மற்றும் மோசடிகளற்ற பொலிஸ் சேவையொன்றிற்காக விஷேட புலனாய்வுப் பிரிவை வலுப்படுத்துதல். |
| அனைவருக்கும் நீதி | நீண்ட காலமாக தீர்க்கப்படாதிருந்த குற்றங்களுடன் தொடர்புடைய சட்டங்களை அமுல்படுத்தல். | • ஈஸ்டர் ஞாயிறு தின தாக்குதல்கள் தொடர்பாக உச்ச நீதி மன்றத்தில் வழக்குத் தீர்ப்புகளின் மூலம் குற்றவாளிகளாகக் கருதப்பட்ட அரசியல் வாதிகள் மற்றும் அரச ஊழியர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுத்தல்.<br>• 2019.04.21 ஆம் திகதி இடம் பெற்ற ஈஸ்டர் ஞாயிறு தின தாக்குதல் தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு ஏற்ப, குறிப்பிட்ட அரசியல்வாதிகள், மற்றும் ஊழியர்களுக்கு எதிராக உடனடியாக சட்ட நடவடிக்கைகள எடுத்தல்.<br>• நீண்ட காலமாக தீர்க்கப்படாதிருந்த அரசியல் கொலைகள், ஊடகவியலாளர்கள், விளையாட்டு வீரர்கள் மற்றும் ஏனையவர்களை கடத்திச் செல்லல் போன்றன தொடர்பான விசாரணைகளை உடனடி முடிவு |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | செய்து குற்றவாளிகளுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்தல். நடைமுறைப்படுத்தல்.<br>• அரசியல்வாதிகளின் அச்சுறுத்தல்களினால் நாட்டை விட்டுச் சென்ற ஊடகவியலாளர்கள், பாதுகாப்புத் துறை ஊழியர்கள் உள்ளிட்ட ஏனைய நபர்களுக்கும் நீதியை நிலைநாட்டுதல். |

## 4.5. மனிதாபிமானமுள்ளதொரு சிறைக்கூடம் – ஒரு சட்டபூர்வமான சிறைத் தண்டனை

**கொள்கை கோட்பாடுகள் –**

- பாதுகாவலும் பாதுகாப்பும்
- புனர்வாழ்வும் மீள சமூகமயப்படுத்தல்

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| சிறைத்துறை | சிறைக்கைதிகளின் புனர்வாழ்வு மற்றும் பொது நலன் என்பனவற்றை மேம்படுத்துவதன் ஊடாக தரமான வாழ்க்கைத் தரத்தினை உறுதிப்படுத்தல் மற்றும் அவர்களின் உரிமைகள், மற்றும் பொதுநலனைப் பாதுகாத்தல். | • சிறைகளுக்குள் இடம்பெறும் அனைத்து வடிவங்களிலுமான சித்திரவதைகளையும் தடுத்தல்<br>• சிறைக்கைதிகளின் தன்மை, மன நிலை, மற்றும் ஏனைய குண நலன்கள் தொடர்பாக பகுப்பாய்வொன்றினை மேற்கொண்டு அதற்கிணங்க, அவர்களை வகைப்படுத்தி சிறைப்படுத்தி வைத்தல்.<br>• சர்வதேச தர நிர்ணயங்களுக்கு ஏற்ப விஷேட வசதிகள் உள்ளிட்ட சிறைகளுக்குள் வசதிகளை விரிவாக்குதல்.<br>• சிறைக்கைதிகளுக்கு வழங்கப்படும் உணவின் தரத்தை உறுதிப்படுத்தல்.<br>• சிறிய குற்றங்களுக்கு தண்டனை அனுபவிக்கும் நபர்களை கைது செய்யாது சமூக நிகழ்ச்சித்திட்டங்களில் ஈடுபடுத்தல்.<br>• சிறைக்கைதிகளுக்கு புனர்வாழ்வளிப்பதற்காக தொழில்சார் ஆலோசனை சேவைகளை ஆரம்பித்தல்.<br>• கைதிகளின் உடல் ஆரோக்கியத்தைப் பேணுவதற்காக வழமையான உடற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகம் செய்தல்.<br>• நீண்ட காலமாக சிறைத் தண்டனையை அனுபவித்து வரும் சிறைக் கைதிகளுக்கு பல்வேறு உற்பத்திச் செயன்முறைகள் மற்றும் சேவைகளில் ஈடுபடுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகம் செய்தல்.<br>• நன்னடத்தையுள்ள சிறைக் கைதிகளை திறந்த வெளிச் சிறைச்சாலைகளில் காவலில் வைத்தல் அல்லது முறையான கண்காணிப்பின் கீழ் வீடுகளுக்கு அனுப்பி வைப்பதற்கான செயன்முறையொன்றினை நெறிமுறைப்படுத்துதல்.<br>• அனைத்துச் சிறைச்சாலைகளிலும் கல்வி மற்றும் தொழிற்கல்விப் பயிற்சி பாடநெறிகளை வழங்குதல்.<br>• தடுப்புக் கைதிகளாக நீண்ட காலமாக தடுத்து வைக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக குற்றவியல் நீதி முறையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் வினைத்திறனை விருத்தி செய்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | • பெண் கைதிகளின் நலன் மற்றும் சிறைச்சாலைகளில் அவர்களுக்கு எதிராக இடம்பெறும் அனைத்து வகையான வன்முறைகளையும் தடுப்பதில் விஷேட கவனம் செலுத்துதல்.<br>• சிறைச்சாலைகளில் தாய்மாருடன் வாழும் குழந்தைகளுக்கு கல்வி, சுகாதாரம், மற்றும் ஏனைய சேவைகளை விரிவுபடுத்துதல். |

## 4.6. போதைப் பொருட்களற்றதொரு நாடு – ஆரோக்கியமான பிரஜைகளின் வாழ்க்கை

**கொள்கை கோட்பாடுகள் –**

- போதைப்பொருட்களைத் தடுத்தல்
- போதைப்பொருட்களின் பாவனையாளர்களுக்கான புனர்வாழ்வு

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான செயற்பாடுகள் |
|---|---|---|
| போதைப்பொருட்களைத் தடுத்தல் | பொருத்தமான ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் நிறுவன ரீதியான பொருத்தமான சீர்திருத்தங்களின் ஊடாக போதைப்பொருட்களின் விற்பனையைத் தடுத்தல் மற்றும் போதைப் பொருட்களுக்கு அடிமையாகியுள்ளவர்களுக்கு புனர்வாழ்வளித்தல். | • நாட்டில் போதைப்பொருட்கள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களைத் தடுக்க ஒரு ஒருங்கிணைந்த நடவடிக்கையை செயற்படுத்தல்.<br>• போதைப்பொருட்களைத் தடுப்பதற்கான (Narcotics) பிரத்தியேகமான பணியகமொன்றை ஸ்தாபித்தல்.<br>• நாட்டிற்குள் போதைப்பொருள் நுழைவதைத் தடுக்க கடற்படை மற்றும் வான்வழி கண்காணிப்பு வசதிகளை மேம்படுத்தல் மற்றும் அதிகாரிகளுக்கு நவீன உபகரணங்கள் மற்றும் பயிற்சி வழங்குதல்.<br>• போதைக்கு அடிமையானவர்களுக்கு போதைப்பொருள் பாவனையிலிருந்து விடுவிப்பதற்காக புனர்வாழ்வு நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குபடுத்தல்.<br>• போதைப்பொருள் குற்றங்களுக்கான தண்டனைகளை வலுப்படுத்தல் மற்றும் வழக்குகளை விரைவாகத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.<br>• பாடசாலை மாணவர்களுக்கு கற்பிப்பதற்காக தொடர்ச்சியான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல். |
| போதைப் பொருட்களுக்கு அடிமையாகியுள்ளவர்களுக்கு புனர்வாழ்வளித்தல். | | • தேசிய அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் தொழிற்பாடுகளை விரிவாக்குதல் மற்றும் போதைப்பொருட்களுக்கு எதிராக செயற்படும் நபர்களுக்கு கண்காணிப்புக் குழுவொன்றினை நியமித்தல்.<br>• போதைப்பொருட்களின் பாவனையின் மோசமான விளைவுகள் பற்றி சமூகத்திற்கு விழிப்புணர்வூட்டல். |

## 4.7 கௌரமானதொரு இராஜதந்திரம் - இறையாண்மையுள்ளதொரு அரசு

**கொள்கை கோட்பாடுகள் –**

- ஐக்கிய நாடுகளின் சாசனம், அதன் கோட்பாடுகள் மற்றும் ஐக்கிய நாடுகள் நிறுவனங்களின் அமைப்புடன் இணங்குதல்.
- சர்வதேச மற்றும் பிராந்திய அமைதி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்தல்.
- அமைதியான சக வாழ்வு: இறையாண்மை மற்றும் ஆள்புல எல்லை ஒருமைப்பாடு தொடர்பான பரஸ்பர கௌரவம், மரியாதை, ஆக்கிரமிப்பு இல்லாமை, அரசுகளின் சமத்துவம், பரஸ்பர வளர்ச்சி, பரஸ்பர மரியாதை, மற்றும் ஒருவருக்கொருவர் ஒவ்வொருவரினதும் உள் விவகாரங்களில் தலையிடாமை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஏற்படுத்தப்படும் அமைதியான சக வாழ்வு: -
- ஒரு அரசிடமிருந்து மற்றொரு அரசுக்கு மற்றும் மக்களிடமிருந்து மக்களுக்கு இராஜதந்திரத்துடன் பிராந்தியங்களுக்கிடையிலும் மற்றும் உலகளாவிய ரீதியிலும் ஒருங்கிணைப்பினை மேம்படுத்தல்.

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான செயற்பாடுகள் |
|---|---|---|
| அணிசேரா மற்றும் சமனிலையிலான இராஜதந்திர கொள்கை | மாறும் வெளிநாட்டுக் கொள்கையொன்றின் ஊடாக இலங்கையின் உலகளாவிய இருப்பு, மற்றும் இராஜதந்திர வினைத்திறனை மேம்படுத்தல். | • மூலோபாய முன்னுரிமைகளை, இலக்குகள், மற்றும் வெளிநாடுகளில் இலங்கையின் பிரதிநிதிகள் எதிர்பார்க்கப்பட்ட நடத்தைகளை விவரிக்கும் மற்றும் தெளிவான வழிகாட்டல்களுடனான முழுமையான வெளிநாட்டுக் கொள்கையொன்றினை தயாரித்தல்.<br>• வளர்ந்து வரும் உலகளாவிய மாற்றங்களுக்கு ஏற்பபொருத்தமான முறையில் பயன்படுத்தக் கூடிய வகையில் கொள்கையை அவ்வப்போது மீளாய்வு செய்தல்.<br>• முழுமையான பகுப்பாய்விற்குப் பின்னர் புதிய வெளிநாட்டுக் கொள்கை நோக்கங்களை பூர்த்தி செய்ய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினை உள்ளக ரீதியாக மறுசீரமைத்தல்.<br>• இலங்கை வெளிநாட்டு சேவை தொடர்பாக மையப்படுத்தப்பட்ட மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட வழிகாட்டல்களை அறிமுகம் செய்தல்.<br>• நாட்டின் பொருளாதாரத் திறனை வலுப்படுத்தக் கூடிய வகையில், இலங்கை தனது தூதரகங்களை திறக்க வேண்டிய பொருளாதார ரீதியாக அபிவிருத்தியடைந்து வரும், மற்றும் வளர்ந்து வரும் நாடுகளுடனான வலயங்களை மதிப்பீடு செய்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான செயற்பாடுகள் |
|---|---|---|
| இராஜ தந்திர தூதரகங்கள் | உலகளாவிய ஈடுபாட்டில் வினைத்திறனையும் மற்றும் விளைவுத் திறனையும் மேம்படுத்துவதற்கு இலங்கையின் தூதரகங்களின் வலையமைப்பை சாதகமாக்குதல். | • இலங்கை வெளிநாட்டு தூதரகங்களை பிரமாணப்படுத்தல் மற்றும் தூதரகங்களை சரியான முறையில் அளவிடல்.<br>• வர்த்தக மேம்பாடு, சுற்றுலா ஊக்குவிப்பு, தொழில்நிலை மற்றும் தொழில்சார் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்புக்களுடன் இணைந்த ஒவ்வொரு தூதரகங்களுக்குமான செயலாற்றக் குறிகாட்டிகளை உருவாக்குதல்.<br>• இலங்கைத் தூதரகங்களின் தலைவர்களாக நிரூபணமான சாதனைகளின் பதிவுகளைக் கொண்ட உத்தியோக பூர்வ தொழில்முறை இராஜதந்திரிகளை நியமித்தல்.<br>• வெளிநாட்டுச் சேவைக்கு தகுதி அடிப்படையில் தொழில்சார் சிறப்பு, நெறிமுறை நடத்தையின் மிக உயர்ந்த தர நிலை, மற்றும் இராஜ தந்திர விவேகம் என்பவற்றின் அடிப்படையில் தகுதி வாய்ந்த உத்தியோகத்தர்களை நியமித்தல்.<br>• நெறிமுறை வழிகாட்டுதல்கள்: நேர்மை, ஒருமைப்பாடு, தொழில் திறமை, பொறுப்புணர்வு என்பனவற்றின் வலியுறுத்தும் தூதர்களுக்கான தெளிவான நடத்தை நெறிமுறைகளை நிலைப்படுத்துதல்.நிறுவதல்.<br>• வெளிநாட்டுச் சேவையை அரசியலை விட்டு நீக்கி தகுதி அடிப்படையில் பொருத்தமான நியமனங்களை வழங்குதல். |
| நிறுவன ரீதியான சீர்திருத்தங்கள் மற்றும் மையப்படுத்தப்பட்ட கண்காணிப்பு | பதிலளிப்புத் தன்மை, பொறுப்புணர்வு, மற்றும் வினைத்திறனை விருத்தி செய்வதற்கு இலங்கையின் இராஜ தந்திர கட்டமைப்பை வலுப்படுத்தல் மற்றும் நவீனமயப்படுத்தல். | • இராஜதந்திர முன்னெடுப்புக்களை பரவலாக்கம்: வழக்கமான மேற்பார்வையின் கீழ் பொறுப்புணர்வை உறுதிப்படுத்தும் அதே வேளை, இலங்கையின் ஒட்டு மொத்த வெளிநாட்டுக் கொள்கை கட்டமைப்பிற்கு இணங்க முன்னெடுப்புக்களை எடுப்பதற்கு தூதரகங்களை வலுப்படுத்தல்.<br>• நெறிப்படுத்தப்பட்ட செயன்முறைகள்: பிரஜைகள் மற்றும் அரசின் தேவைகளுக்கு மிகவும் வினைத்திறனான முறையிலும் மற்றும் பதிலளிக்கக் கூடிய முறையிலும் இருக்கும் வகையில் இராஜதந்திர செயன்முறைகளை எளிமைப்படுத்தலும் மற்றும் நெறிப்படுத்தலும்.<br>• மனித வளங்கள் (அனைத்துக் வகையினரையும்) மற்றும் பௌதீக சொத்துக்கள் தொடர்பான தரவு அடிப்படையொன்றினை உருவாக்குதல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான செயற்பாடுகள் |
|---|---|---|
| | | • இராஜதந்திர பயிற்சி நிறுவனங்களையும் மற்றும் லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச உறவுகள் மற்றும் மூலோபாய கற்கைகள் நிறுவனத்தினை மீள்கட்டமைத்தலும் மற்றும் பலப்படுத்தலும். |
| இராஜதந்திர பயிற்சி மற்றும் இயல்திறனை கட்டியெழுப்பலையும் மேம்படுத்தல் | முழுமையான பிராந்திய குறித்த நிகழ்ச்சித்திட்டங்களை அபிவிருத்தி செய்வதன் மூலமும் மற்றும் நடைமுறைப்படுத்துவதன் மூலமும் இலங்கையின் இராஜ தந்திர இயல்திறனை மேம்படுத்தல் | • மேம்படுத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்: பேச்சு வார்த்தைத் திறன்கள், கலாச்சார இராஜதந்திரம், பொருளாதார இராஜதந்திரம், மற்றும் சர்வதேச சட்டம் என்பனவற்றை மையமாகக் கொண்டு இராஜ தந்திரிகளுக்கான முழுமையான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அபிவிருத்தி செய்தல்.<br>• பல்வேறு பட்ட பிராந்தியங்களில் எமது தூதுவர்கள் எதிர்நோக்கும் குறித்த சவால்களுக்கு தீர்வுகளை கண்டு பிடிப்பதற்கென தயாரிக்கப்பட்ட பயிற்சித் தொடர்களை அறிமுகம் செய்தல்.<br>• தொடர்ச்சியான தொழில்நிலை அபிவிருத்தி : இராஜதந்திரிகளுக்கான கட்டாய நிகழ்நிலை கற்கை மற்றும் தொழில்நிலை அபிவிருத்தியையும் அறிமுகம் செய்தல். |
| இலங்கைத் தூதரகங்களின் சேவை வினைத்திறன் | இலங்கை இராஜ தந்திர சேவையில் பொறுப்புணர்வு, நேர்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் வினைத்திறனை பலப்படுத்தல். | • மையப்படுத்தப்பட்ட கண்காணிப்புகளும் மற்றும் மதிப்பீடுகளும்: இலங்கை தூதுவர்களின் செயலாற்றுகையை கண்காணிக்கவும் மற்றும் மதிப்பீடு செய்யவும் வலுவான பொறிமுறையொன்றினை ஏற்படுத்துதல். அவர்களின் செயற்பாடுகளை தேசிய வெளிநாட்டு கொள்கை நோக்கங்களுக்கு பொருத்தமானதாக உள்ளதா என்பதை மதிப்பிடுவதற்கு வழமையான மீளாய்வுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.<br>• தரப்படுத்தப்பட்ட அறிக்கைகள்: தூதரகங்கள் தங்களின் செயற்பாடுகள், சவால்கள் மற்றும் அடைவுகள் தொடர்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு வழமையாக புதுப்பிக்கும் படி கோரப்படும் போது தரப்படுத்தப்பட்ட அறிக்கையிடல் செயன்முறைகளை நடைமுறைப்படுத்தல்<br>• சேவைகளுக்கு எடுக்கும் நேரத்தைக் குறைப்பதற்காக இலங்கை தூதரகங்களினால் வழங்கப்படும் இ- சேவைகளை அதிகரித்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான செயற்பாடுகள் |
|---|---|---|
| | | • மக்கள் சார்ந்த அணுகுமுறையொன்றுடன் வெளிநாடுகளிலுள்ள புலம்பெயர்ந்த இலங்கை மக்களுக்கு டயஸ்போராவிற்கு குறைந்த செலவில் உயர் தரம் வாய்ந்த சேவைகளை வழங்குதல்.<br>• தேசிய பாதுகாப்பில் கவனம் செலுத்தும் அதே வேளை, வெளிநாட்டவர்களின் இலங்கைக்கான வருகையை ஊக்குவிப்பதற்கு வினைத்திறனான முறையில் சேவைகளை வழங்குதல்.<br>• இலங்கை வெளிநாட்டுத் தூதரகங்கள் வினைத்திறனான முறையில் சேவைகளை வழங்குவதற்குத் தேவையான நிதி, தொழில்நுட்பம், மற்றும் தொழில்நுட்ப அறிவை வழங்குதல். |
| அரசியல் இராஜதந்திரம் | அனைவரையும் உள்ளடக்கிய உலகளாவிய நிர்வாகத்தை ஊக்குவித்தல் மற்றும் பல்தரப்புத் தன்மைக்கு ஆதரவளித்தல், சர்வதேச அரங்கில் இலங்கையின் விழுமியங்களை ஊக்குவித்தல் என்பனவற்றின் ஊடாக இலங்கையின் உலகளாவிய இருப்பையும் மற்றும் செல்வாக்கையும் உறுதிப்படுத்தல். | • முழுமையான ஆய்வொன்றின் பரிந்துரைகளுக்கு ஏற்ப, வெளிநாட்டு தூதரகங்களின் நிலையை தரமுயர்த்தலும் மற்றும் புதிய தூதரகங்களை திறத்தலும்.<br>• ஜி 20 (G20) நாடுகள், பிரிக்ஜ் (BRICS) நாடுகள், ஆசியான் (ASEAN) , தெற்காசிய, மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்கக் கண்டம் ஆகியவற்றுடன் இராஜதந்திர பொருளாதார மற்றும் கலாச்சார உறவுகளை வலுப்படுத்துவதற்கு முன்னுரிமையளித்தல்.<br>• அனைத்து அரசுகளுக்கும் அவற்றின் அளவு, மற்றும் வளர்ச்சி நிலையைப் பொருட்படுத்தாமல் உலகளாவிய ரீதியில் தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டில் பங்கேற்க ஒரு வாய்ப்பை வழங்குதல்.<br>• அனைத்து நாடுகளினதும் உரிமைகளுக்கு மதிப்பளிக்கப்படும் ஒரு திறந்த அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் வளமான தெற்காசிய பிராந்தியமொன்றை மேம்படுத்தல்.<br>• தெற்காசியாவிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் பாதுகாப்பான மற்றும் அமைதியான சூழலைப் பராமரித்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான செயற்பாடுகள் |
|---|---|---|
| | | • ஐக்கிய நாடுகள் நிறுவனம் மற்றும் பிராந்தியப் பொருளாதார ஆணைக்குழுக்கள் உள்ளிட்ட அதனுடன் இணைந்த நிறுவனங்ககளின் ஊடாக பல் தரப்புத் தன்மையை ஆதரித்தல்.<br>• இலங்கையின் தேசிய நலன்களை குறிப்பாக பொருளதாரத் துறையில் அடைவதற்கு உதவக் கூடிய புதிய வாய்ப்புகளையும் புதிய உலகளாவிய மற்றும் பிராந்திய தளங்களையும் ஆராய்தல்.<br>• சுதந்திரம், ஜனநாயகம், சமூக நீதி, மனித உரிமைகள், மற்றும் சட்டத்தின் ஆட்சி மற்றும் காலநிலை நீதி போன்ற விழுமியங்களின் ஊடாக இலங்கையின் தேசத்தின் சுய பிரதிபிம்பத்தை மேம்படுத்தல். |
| பொருளாதார இராஜதந்திரம் | சர்வதேச பங்கேற்பாளர்களுடன் இணைந்து இலங்கையை உலகப் பொருளாதாரத்தில் முன்னணியில் நிறுத்துதல். | • சர்வதேச பொருளாதாரத்துடன் இணைதல் மற்றும் பொருளாதார செல்வம் மற்றும் பாதுகாப்பை வழங்க உள்நாட்டு பொருளாதாரத்தை நிலைநிறுத்தல்.<br>• கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு வெளிநாட்டு நேரடி முதலீடுகள், நிதி உதவி மற்றும் தொழில்நுட்ப மாற்றல் ஆகியவற்றைக் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் வெளிநாட்டு பங்கேற்பாளர்களுடன் இணைந்தும் மற்றும் நேரடி வெளிநாட்டு முதலீட்டு மூலங்களை பன்முகப்படுத்த முயற்சி செய்தல்.<br>• இலங்கையை இந்து மகா சமுத்திரத்தின் கேந்திரஸ்தானமாக மாற்றும் நோக்கத்துடன் சர்வதேச பங்கேற்பாளர்கள் மற்றும் நண்பர்களின் ஆதரவுடன் ஒருங்கிணைந்து செயற்பட எதிர்பார்ப்பதனால், இலங்கையின் வர்த்தகம், சுற்றுலா மற்றும் முதலீட்டை பகுப்பாய்வு செய்து மேம்படுத்தல்.<br>• விவேகமான பொருளாதார முகாமைத்துவத்தைப் பின்பற்றுதல் மற்றும் ஏனைய நாடுகளுடன் பொருளாதார ஒத்துழைப்பை விரிவடையச் செய்வதற்கு தேசிய பொருளாதார கட்டமைப்புக்குள் உள்நாட்டுச் சந்தையை திறத்தல்.<br>• ஜி 20 (G20) நாடுகள் பிரிக்ஸ் (BRICS) நாடுகள், ஆசியான் (ASEAN) , மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்க கண்டம் ஆகியவற்றுடன் இராஜதந்திர , பொருளாதார |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான செயற்பாடுகள் |
|---|---|---|
| | | மற்றும் கலாச்சார உறவுகளை மேம்படுத்துவதற்கும் மற்றும் வலுப்படுத்துவதற்கும் அதிக முன்னுரிமை வழங்கல்.<br>• வெளிநாட்டு மற்றும் மற்றும் உள்ளூர் தனியார் துறைக்கான வர்த்தக சுற்றுச்சூழலை விருத்தி செய்வதற்கு, வர்த்தக நடைமுறைகளை ஒழுங்குபடுத்துதல், உட்கட்டமைப்பு வசதிகளுக்கு முதலீடு செய்தல், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான நிதிக்கான அணுகலை விருத்தி செய்தல், மற்றும் மனித வளங்களின் திறன்களையும் மற்றும் தரத்தினையும் உயர்த்துதல் உள்ளிட்ட நவீன மற்றும் முழுமையான முதலீட்டுச் சட்டமொன்றை இயற்றுதல்.<br>• ஏற்றுமதிகளை அதிகரிப்பதற்கு உலகளாவிய உற்பத்தி வலையமைப்புக்களுடன் இலங்கையை இணைத்தல் மற்றும் புதிய வர்த்தக உடன்படிக்கைகளின் ஊடாக ஏனைய சந்தைகளுக்கான அணுகலை விருத்தி செய்தல்.<br>• சர்வதேச வர்த்தகத்திற்கு முக்கியமான சேவை வழங்குனராக இலங்கையை அபிவிருத்தி செய்வதற்கும் இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்தவதற்கும் மற்றும் பிரதான வர்த்தக பங்காளிகளுடன் புதிய இரு தரப்பு மற்றும் பல தரப்பு வர்த்தக உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கும் மற்றும் நடைமுறையிலுள்ள வர்த்தக உடன்படிக்கைகளை ஏனைய பங்காளிகளின் சம்மதத்துடன் பகுப்பாய்வு செய்து நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கும் மேம்படுத்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான செயற்பாடுகள் |
|---|---|---|
| | | • புதுப்பிக்கத்தக்க எரிசக்தி இராஜ தந்திரம்: நிலைபேறான எரிசக்தி கருத்திட்டங்களில் சர்வதேச பங்கேற்பாளர்கள் மற்றும் முதலீடுகளை ஊக்குவிப்பதன் மூலமும் மற்றும் உலகளாவிய எரிசக்தி முன்னெடுப்புக்களில் மற்றும் சிறந்த நடைமுறைகளை பகிர்வதன் மூலமும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கருத்திட்டத்தில் இலங்கையை தலைவராக முன்னணியில் நிறுத்துதல்.<br>• வடக்கு மற்றும் கிழக்கு மற்றும் ஏனைய பிரதேசங்களில் மீன் பிடி நடவடிக்கைகளுக்கு வெளிநாட்டு மீனவர்களால் இராஜதந்திர ரீதியாக முன் வைக்கப்படும் சவால்களை தீர்த்து தேவையான உட்கட்டமைப்பு மற்றும் சந்தை வசதிகளுக்கு இடமளித்தல். |
| தேசிய பாதுகாப்பு | சர்வதேச தர நிலைகளுக்கு இணையான தனித்துவமான அணுகுமுறையின் ஊடாக இறையாண்மை மற்றும் தேசிய பாதுகாப்பைப் பாதுகாத்தல். | • ஆள்புல நீர் நிலைகளின் உரிமைகளை பாதுகாத்தல் உள்ளிட்ட இலங்கையின் இறையாண்மை மற்றும் ஆள்புலப் பிரதேசங்களின் ஒருமைப்பாட்டை பாதுகாத்தல்.<br>• எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளும் நோக்கத்தில் எந்தவொரு இராணுவப் படையையும் இலங்கைக்குள் நிலை நிறுத்த அனுமதிக்காதிருத்தல்.<br>• சர்வதேச சட்டத்தை பலப்படுத்தலும் மற்றும் மேம்படுத்தலும் பிராந்திய மற்றும் உலகளாவிய ஸ்திரத்தன்மை, பாதுகாப்பு, மற்றும் பல தரப்பு அமைப்பு முறைமையை வலுப்படுத்தல் போன்றவற்றிற்கான நடவடிக்கை எடுத்தல்.<br>• பயங்கரவாதம், பிரிவினைவாதம், தீவிரவாதம் கடற்கொள்ளை மற்றும் ஏனைய பாரம்பரியமற்ற பாதுகாப்பு அச்சுறுத்தல்களை எதிர்த்துப் போராடுவதற்கு தென்கிழக்காசிய மற்றும் ஆசியானுடனான ஈடுபாட்டை பலப்படுத்தல்.<br>• இலங்கையின் தேசிய பாதுகாப்பு, மற்றும் பொருளாதார நலன்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்து நிர்வகித்தல்.<br>• இணைய பாதுகாப்பு (cyber security ) உட்கட்டமைப்பு மற்றும் மூலோபாயங்களையும் மேம்படுத்த தேசிய பாதுகாப்பு கொள்கை சர்வதேச ஒத்துழைப்புக்களை கண்டிப்பாக கடைப்பிடிக்கும் அதே வேளையில் இணைய பாதுகாப்பு (cyber security ) ஒருங்கிணைப்பினை நிறுவுதல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான செயற்பாடுகள் |
|---|---|---|
| கடல்சார் இராஜ தந்திரம் | கடல் சார் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நம்பகமான நிரம்பல் சங்கிலிகளின் ஒருங்கிணைப்பு ஆகியவற்றில் அண்டை நாடுகளின் ஒத்துழைப்புடன் இந்தியப் பெருங்கடலில் இலங்கையின் பங்கை பலப்படுத்துதல். | • சர்வதேச சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது போல அனைத்து நாடுகளின் கடல்கள் மற்றும் விமான அணுகலை அனுபவிக்கும் உலகத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்தல்.<br>• ஐக்கிய நாடுகளினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கடல் சட்டத்தின் அடிப்படையில் பாதுகாப்பான மற்றும் நிலையான கடல்சார் வளம் மற்றும் இலவச மற்றும் திறந்த கடல் வழித் தொடர்புகளை பாதுகாத்தல்.<br>• இந்து சமுத்திரத்தில் முக்கிய கப்பல் பாதைகள், மற்றும் உயர் மட்டத்திலான வழங்கல் சேவைகளுக்கு நெருக்கமாக மூலோபாய அமைவிடத்தின் காரணமாக பிராந்தியப் பாதுகாப்பில் இன்றியமையாத பங்கை வகிப்பதை உறுதி செய்தல்.<br>• கடற்கொள்ளையைத் தடுக்கும் ரோந்து, சுற்றுச்சுழல் மாசுக்கட்டுப்பாடு, கடல் சூழல் அமைப்பு மற்றும் பல்லுயிர் பாதுகாப்பு, கடல் சார் தேடல், கடல் சார் பாதுகாப்பு, நெகிழ்திறன் மற்றும் நம்பகமான விநியோகச் சங்கிலிகள், தரவு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் மீட்பு நடவடிக்கைகள், கூட்டுப் பயிற்சிகள் போன்றவற்றில் இந்து சமுத்திரத்துடன் கடல் எல்லைகளைப் பகிர்ந்து கொள்ளும் நாடுகளுடன் நெருக்கமாக பணியாற்றும் நிகர பாதுகாப்பு வழங்குனராகவும் முதல் பதிலளிப்பவராகவும் மாறுதல். |
| கலாச்சார இராஜதந்திரம் | இலங்கையின் கலாச்சார இராஜதந்திரத்தை மேம்படுத்தல். | • வெளிவிவகார அமைச்சின் கீழ் இலங்கையின் கலாசார உறவுகளுக்கான இலங்கை இயக்குநர் பணியகமொன்றினை நிறுவுதல்.<br>• கலாச்சார பரிமாற்றங்களை மேம்படுத்துல் மற்றும் மென் வலுவை கட்டியெழுப்புவதற்காக வெளிநாட்டில் இலங்கை கலாச்சாரத்தை மேம்படுத்துதல் மற்றும் கலாச்சார மையங்களை நிறுவுவதன் ஊடாக பரஸ்பர புரிதலை வளர்த்தல், சர்வதேச மேடைகளில் இலங்கை கலைஞர்கள் மற்றும் செயற்படுவோரை ஆதரித்தல் மற்றும் உலகளாவிய கலாச்சார நிகழ்வுகளில் பங்கேற்றல்.<br>• இராஜதந்திரத்தை நடாத்துவதற்கு இன்றியமையாத முன் நிபந்தனையாக இலங்கை மக்களுக்கும் ஏனைய நாடுகளின் மக்களுக்கும் இடையில் பொருத்தமான பரஸ்பர புரிந்துணர்வை அங்கீகரித்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான செயற்பாடுகள் |
|---|---|---|
| | | • ஏனைய நாடுகளுடன் திடமான உறவுகளை ஏற்படுத்துவதற்கான விளையாட்டுப் பரிமாற்றங்கள் போன்ற விளையாட்டு இராஜதந்திரத்தை பயன்படுத்துதல்.<br>• கணிசமாக அளவில் இலங்கை புலம்பெயர்ந்தோர் வாழும் நாடுகள் மற்றும் எமது நாட்டுக்கு கணிசமான அளவில் சுற்றுலா பயணிகள் வருகை தரும் நாடுகளுடன் குறிப்பிட்ட கலாச்சார வாரங்கள் / மாதங்களை தொடங்குதல்.<br>• நாட்டின் பிரதி பிம்பத்தை மேம்படுத்தவும், மற்றும் மக்களிடையே நட்பை கட்டியெழுப்புவதற்கும் தூண்டுதல், ஈர்த்தல், மற்றும் கலாச்சார பரிமாற்றத்திற்காக மத இராஜதந்திரத்தை மேம்படுத்துதல். |
| விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப இராஜதந்திரம் | விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப இராஜதந்திரத்தை மேம்படுத்தல். | • விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்தை இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையில் அடிப்படைச் சாதனமாக உருவாக்குதல்.<br>• இலங்கையில் பிராந்திய மற்றும் உலகளாவிய முக்கியத்துவத்துடன் ஆய்வுக் கூடங்கள், ஆராய்ச்சி நிலையங்களை நிறுவுதல், மற்றும் கண்காட்சிகளை நடாத்துவதற்கு இலங்கையின் முக்கியமான விஞ்ஞானிகளின் நேரடி ஈடுபாட்டுடன் உலகளாவிய விஞ்ஞான சமூகத்தை கவர்தல்.<br>• இலங்கையை, விஞ்ஞானம், மற்றும் தொழில்நுட்பத்த துறைக்கான முக்கியமான பிராந்திய மையமொன்றாக மேம்படுத்துவதற்குத் தயாராக இருக்கும் விஞ்ஞானிகளுக்கும் மற்றும் சிறந்த ஆராய்ச்சியாளர்களுக்கும் குடியுரிமை வழங்குவது குறித்து பரிசீலித்தல்.<br>• அனைத்து கற்றல் மட்டங்களிலும் விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல், கலை, மற்றும் கணிதம் ஆகியவற்றின் STEAM கலவையை ஊக்குவிப்பதன் மூலம் மனித மூலதனத்தின் தரத்தை மேம்படுத்துவதற்கு வெளிநாட்டு ஆதரவைப் பெற்றுக் கொள்ளல்.<br>• ஆசியாவிற்கான டிஜிட்டல் நுழைவாயிலாக இலங்கையில் முதலீடு செய்ய பன்னாட்டு தகவல் தொழில்நுட்ப கம்பனிகளை ஊக்குவித்தல்.<br>• யுனெஸ்கொப் (UNESCAP) போன்ற பல தரப்பு நிறுவனங்களுக்கு அர்ப்பணிப்புள்ள பிரதிநிதிகளை நியமித்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான செயற்பாடுகள் |
|---|---|---|
| பாராளுமன்ற இராஜதந்திரம் | சர்வதேச ஒத்துழைப்புக்களை வளர்ப்பதன் மூலம் இலங்கையின் பாராளுமன்ற இராஜதந்திரத்தை மேம்படுத்தல். | • பாராளுமன்ற நட்புச் சங்கங்கள் ஏனைய பாராளுமன்றங்களுடன் கூட்டு நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்படுத்துதல் மற்றும்<br>• சபாநாயகர். பாராளுமன்ற உறுப்பினர்கள், மற்றும் பணியாளர் மட்டங்களிலான நிகழ்ச்சித்திநடைமுறைப்படுத்துதல்.<br>• நாட்டிற்கான சிறந்த சாத்தியமான பெறுபேறுகளைப் பெறுவதற்கு அனைத்து பிராந்திய மற்றும் உலகளாவிய பாராளுமன்ற பேரவைகளைப் பயன்படுத்துவதற்கு இலங்கை பாராளுமன்றத்திற்கு வசதி அளித்தல். |
| பொது மக்கள் இராஜதந்திரம் | பரஸ்பர உறவுகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் பொது மக்களின் இராஜதந்திரத்தை மேம்படுத்தல் | • பொது மக்களின் நலனுக்காக இலங்கையின் அரச சார்பற்ற நிறுவனங்களையும் மற்றும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட சிவில் அமைப்புகளையும் வெளிநாடுகளில் மேம்படுத்தல்.<br>• பிராந்திய மற்றும் உலகளாவிய அரசியல் மற்றும் பொருளாதார அபிவிருத்தியில், கற்கும் மற்றும் ஈடுபடும் புத்திஜீவிகளின் குழாம்கள் மற்றும் தளங்களை வலுப்படுத்தவும் மற்றும் மேம்படுத்தவும் தயாராக உள்ள இலங்கையின் இராஜதந்திரிகள், கல்வியியலாளர்கள், பாதுகாப்பு நிபுணர்கள், மற்றும் பல்வேறு துறைகளின் நிபுணர்களைப் பாராட்டுதல்.<br>• மாகாண சபைகள், நகர சபைகள், பல்கலைக்ககழகங்கள், மற்றும் பிற முக்கியமான பொது நிறுவனங்கள் போன்றவற்றின் மூலம் மற்ற நாடுகளில் உள்ள அவர்களது சமமான நிறுவனங்களுடன் சுமுகமான மற்றும் அர்த்தமுள்ள உறவுகளை ஏற்படுத்துவதற்காக வெளிநாட்டு உறவுகள் அலுவலகங்களை (அந்நாட்டில் நிர்ணயிக்கப்பட்ட சட்டத்திற்கு ஏற்ப) திறப்பதற்கு வசதியளித்தல்.<br>• தேவையேற்படும் போது பொது மக்களுக்கான இராஜதந்திரத்தை மேம்படுத்துவதற்காக அவர்களின் துறைகளில் சிறந்து விளங்கும் இலங்கையின் முக்கிய நபர்களை அடையாளத் தூதுவர்களாக அல்லது விஷேட தூதுவர்களாக சேவையில் ஈடுபடுத்துதல்.<br>• இலங்கை புலம்பெயர்ந்தோரை அவர்கள் வசிக்கும் நாட்டில் உள்ள ஏனைய சமூகங்களுடன் தொடர்பு கொள்ள ஊக்குவித்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான செயற்பாடுகள் |
|---|---|---|
| மனிதாபிமான இராஜதந்திரம் | மனிதாபிமான இராஜதந்திரத்தை மேம்படுத்துவதன் மூலம் இலங்கையின் உலகளாவிய மனிதாபிமான பங்கை பலப்படுத்துதல் | • சர்வதேச உதவித் திட்டங்கள் மற்றும் அனர்த்த நிவாரண தூதுவர் குழுவில் பங்கேற்றல்.<br>• உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் மனிதாபிமான நெருக்கடிகளுக்கு விரைவாக பதிலை அளிப்பதற்கான இயலளவை இலங்கைக்குள் கட்டியெழுப்புதல்.<br>• மற்ற நாட்டு மக்களின் உண்மையான குறைகளுக்கு ஆதரவளிப்பதற்கு முப்படைகள் மற்றும் பொலீஸ் காவல் துறையினருக்கு ஐக்கிய நாடுகளின் அமைதி காத்தல் மற்றும் அமைதியை அமுலாக்கலுக்கான வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளல். |
| சட்ட சீர்திருத்தங்கள் | பொருத்தமாள சட்ட சீர்திருத்தங்கள் மற்றும் ஏனைய உலகளாவிய ஒருங்கிணைப்பின் ஊடாக பொருளாதாரப் பங்களிப்புக்களை உச்சப்படுத்தல். | • வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களின் பங்களிப்புக்களை எளிதாக்குவதற்காக இரட்டை குடியுரிமைச் சட்டங்களையும் மற்றும் குடி வரவுச் சட்டங்களையும் சீர்திருத்தம் செய்தல்.<br>• கடல் சட்டம் (UNCLOS) தொடர்பான ஐக்கிய நாடுகள் சமவாயத்தின் கீழ் வழக்குத் தொடர்வது தொடர்பான சட்டங்களை அறிமுகம் செய்தல்.<br>• வெளிநாட்டுச் சந்தைகளில் நமது வர்த்தகத் தேவைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு இருதரப்பு மற்றும் பிராந்திய இலவச வர்த்தக உடன்படிக்கைகளின் (FTAs) ஊடாக வர்த்தக விதிகளை வலுப்படுத்தல்.<br>• பிராந்திய முழுமையான பொருளாதார பங்கேற்புகளை (RCEP) இருதரப்பாகவோ அல்லது பலதரப்பாகவோ ஸ்தாபித்தல்.<br>• ஸ்திரத்தன்மையையம் மற்றும் செழுமையையும் ஆதரிக்கும் சர்வதேச விதிகளை மேம்படுத்தல் மற்றும் பாதுகாத்தல் மற்றும் உலகளாவிய சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கான ஒத்துழைப்பை செயல்படுத்துதல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான செயற்பாடுகள் |
|---|---|---|
| வெளிநாடுகளில் வசிக்கும் புலம் பெயர்ந்த இலங்கையர்களின் (டயஸ்போரா) ஈடுபாடு | வெளிநாடுகளில் வசிக்கும் புலம் பெயர்ந்த இலங்கையர்களுக்கான ( டயஸ்போரா) சேவை விநியோகத்தை மேம்படுத்தலும் மற்றும் இலங்கையின் அபிவிருத்திக்கு அவர்களின் பங்களிப்பை பெற்றுக் கொள்ளலும் | • வெளிநாடுகளில் வசிக்கும் புலம் பெயர்ந்த இலங்கையர்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதற்காக (டயஸ்போரா) கிடைக்கக் கூடிய மனித மற்றும் நிதி வளங்களை மிகச் சிறந்த முறையில் ஒருங்கிணைப்பதன் மூலம் வினைத்திறனான முறையில் பயன்படுத்துவதற்காக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுடன் இணைத்தல்.<br>• வெளிநாட்டில் பணி புரியும் இலங்கைப் பிரஜைகள் தாம் வசிக்கும் நாட்டிலிருந்து தங்கள் வாக்குகளை பயன்படுத்துவதற்கு வசதி அளித்தல்.<br>• வெளிநாட்டில் வசிக்கும் பிரஜைகளுக்கு ஓய்வூதியமொன்று உள்ளடங்கலாக தேவையான காப்புறுதி மற்றும் சமூக பாதுகாப்பு முறையொன்றினை அறிமுகம் செய்தல்.<br>• வெளிநாடுகளில் வசிக்கும் திறமையான இலங்கை தொழில்முயற்சியாளர்களுக்கு நிதி உள்ளிட்ட வசதிகளை அளிப்பதற்காக வெளிநாட்டு அமைச்சுக்குள் தொழில்முயற்சி மேம்பாட்டுப் பிரிவொன்றை ஸ்தாபித்தல்.<br>• கணிசமான அளவிலான இலங்கையர்கள் வாழும் அனைத்து நாடுகளிலும் இலங்கையின் புலம்பெயர்ந்த மக்களுடன் (டயஸ்போரா) செயற்படுவதற்கு தூதரகங்களையும் மற்றும் ஒன்றிணைக்கப்பட்ட ஆலொசனைச் சபைகளையும் ஸ்தாபித்து இலங்கை வெளிநாட்டு தூதரகங்களுடன் நிரந்தரமாக தொடர்பு கொள்வதற்கு கட்டாயப்படுத்தல்.<br>• வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களின் தேவைகளைக் கண்டறிவதற்கு கௌரவ தூதுவர்களாக வதியாத இலங்கையர்களை ( NRSL) நியமித்தல்.<br>• இலங்கையிலுள்ள வங்கிக் கணக்குகளுக்கு பணத்தை அனுப்பும் போது ஏற்படக் கூடிய அதிக சேவைக் கட்டணம், வசிக்கும் நாட்டில் பல நாணய வங்கிக் கணக்குகளை திறத்தல் மற்றும் பராமரிப்பதில் உள்ள நெருக்கடியகள் போன்றவற்றுக்கு தீர்வை வழங்குதல் மற்றும் அத்தகைய கணக்குகளுக்கு அவசியமான காப்புறுதியை வழங்குதல்.<br>• வெளிநாட்டில் பணி புரியும் இலங்கை பிரஜைகளுக்கு அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு பிணை முறிகள் உள்ளிட்ட முதலீடுகளில் இலங்கையில் மேற்கொள்வதற்கான வசதிகளை அளித்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான செயற்பாடுகள் |
|---|---|---|
| | | • அந்தந்த நாடுகளில் பணிபுரியும் இலங்கைப் பிரஜைகளுக்கு பிறப்புச் சான்றிதழ்கள் மற்றும் பிற சான்றிதழ்கள் மற்றும் கடவுச் சீட்டுக்களை வழங்குதல் ஆகிய செயன்முறைகளை நெறிப்படுத்துதல்.<br>• இரட்டைக் குடியுரிமையைப் பெறுவதற்கு வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களை ஊக்குவிப்பதற்காக இரட்டைக் குடியுரிமை கட்டணங்களை திருத்தம் செய்தல். |
| தற்போதைய வெளிநாட்டுக் கொள்கை நிலைப்பாடுகள் | தற்போதைய வெளிநாட்டுக் கொள்கையின் ஸ்திரத் தன்மையை உறுதிப்படுத்தல். | • பிராந்தியத்திலுள்ள எந்தவொரு நாட்டினதும் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலையோ அல்லது இடரையோ ஏற்படுத்துவதற்கு இலங்கையின் தரைநிலம், கடல், மற்றம் ஆகாயப் பரப்பை பயன்படுத்துவதற்கு எந்தவொரு நாட்டிற்கோ அல்லது நிறுவனத்திற்கோ அனுமதிப்பதை தடை செய்தல்.<br>• சுதந்திரமான இறையாண்மை கொண்ட பலஸ்தீன அரசொன்றை நிர்மாணிப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இரண்டு அரசுத் தீர்வுகளுக்கு ஆதரவளித்தல்.<br>• பயங்கரவாதம், பிரிவினைவாதம், மற்றும் தீவிரவாத அச்சுறுத்தலை நீக்குதல்.<br>• ஒரு உறுதியான கொள்கையாக இந்த சமுத்திரத்தில் வெளிநாட்டு இராணுவத் தளங்கள் மற்றும் அவற்றுக்கு ஒத்த இராணுவ உடன்படிக்கைகளையும் மற்றும் இராணுவமயமாக்கல் முன்னெடுப்புக்களையும் எதிர்த்தல். |

## 4.8 உயர்வான தேசிய பாதுகாப்பு – பாதுகாக்கப்பட்டதொரு அரசு

**கொள்கை கோட்பாடுகள் :**

- பிரஜைகளின் பாதுகாப்பு
- இறையாண்மையும் மற்றும் ஆள்புல ஒருமைப்பாடும்
- உள்நாட்டு பாதுகாப்பும் மற்றும் தேசிய நல்லிணக்கம்
- கடல் சார் வலயம் மற்றும் வான்வெளி பாதுகாப்பு
- பொறுப்புணர்வும் மற்றும் தேசிய பாதுகாப்பின் பொறுப்பும்
- தேசிய வளங்களின் பாதுகாப்பு
- எரிசக்தி பாதுகாப்பு
- தேசிய பாதுகாப்புக்கு அரச புலனாய்வுச் சேவைகளின் பங்களிப்பு

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| தேசிய பாதுகாப்பும் இறையாண்மையும் | முப்படைகள் மற்றும் அவற்றுடன் இணைந்த சேவைகளுக்கு அதி நவீன தொழில்நுட்பத்தை ஒருங்கிணைப்பதன் மூலம் தேசிய பாதுகாப்பு மற்றும் ஆள்புல ஒருமைப்பாட்டை வலுப்படுத்துதல். | • தேசிய பாதுகாப்பிற்கான பொறுப்பு மற்றும் பொறுப்புணர்வை உறுதி செய்வதன் மூலம் தேசிய பாதுகாப்பு சபையை வலுப்படுத்துதல் மற்றும் முறைப்படுத்துதல்.<br>• பிராந்திய பாதுகாப்பு மற்றும் அமைதியான நல்லிணக்கத்தை .உறுதி செய்தல், பாதுகாப்பான சர்வதேச உறவுகளின் ஊடாக தேசிய பாதுகாப்பை வலுப்படுத்தல்.<br>• சமரசம் இல்லாமல் நாட்டின் ஆள்புல ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மையை உறுதி செய்தல்.<br>• சிக்கலான மற்றும் வேகமாக மாறி வரும் சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கு நவீன மற்றும் தொழில்நட்ப அறிவு மற்றும் அபிவிருத்தியுடனான பாதுகாப்புத் துறையை அவ்வப்போது புதுப்பிப்பதற்காக பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கட்டமைப்பை நெறிப்படுத்தல்.<br>• விஞ்ஞானம், தொழில்நுட்பம், மறறுறம் புத்தாக்கத்தடன் தேசிய பாதுகாப்பு தொடர்பான அறிவை ஒருங்கிணைப்பதன் மூலம் பாதுகாப்புத் துறையில் சிறந்து விளங்குதல்.<br>• பொருளாதார ஸ்திரத்தன்மைக்கான மூலோபாய பாதுகாப்பு சூழலொன்றையும் மற்றும் நிரந்தர அடித்தளமொன்றையும் உருவாக்குதல்.<br>• , சர்வதேச சட்டத்திற்கு எற்ப, அனைத்து நாடுகளுக்கும் கடல் மற்றும் வான்வழி அணுகலை அனுபவிப்பதற்கு உலகினைப் பாதுகாக்க நடவடிக்கைகளை எடுத்தல்.<br>• கடல் கட்டுப்பாட்டு பிராந்தியத்திற்குள் வான்வெளியைப் பாதுகாப்பதற்காக , இலங்கை விமானப்படையில் தேடல் மற்றும் மீட்புப் பிராந்திய மற்றும் விமானத் தகவல் பிராந்தியத்தை (FIR) ஒன்றிணைத்தல் மற்றம் முறைப்படுத்தல்.<br>• விமானப்படையின் தொழில்நுட்ப அறிவை கடற்படை மற்றும் விமான சேவைகளுடன் ஒருங்கிணைத்தல் மற்றும் தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதற்காக பிராந்திய பாதுகாப்பை உறுதி செய்ய முக்கியமான ஆதரவை வழங்குதல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | • தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைகளில் நிபுணர்களைக் கொண்ட தேசிய பாதுகாப்பு ஆலோசனை சபையொனறினை ஸ்தாபித்தல்.<br>• தேசிய பாதுகாப்பைப் பாதுகாப்பதற்காக தேசிய மற்றும் மூலோபாய வளங்களின் நுகர்வு மற்றும் பாதுகாப்பிற்குப் பொறுப்புணர்வுள்ள மற்றும் பொறுப்பான பொறிமுறையொன்றினை உருவாக்குதல். |
| கடல் பாதுகாப்பு | இலங்கையின் மூலோபாய இமைவிடத்தைக் கருத்திற்கொண்டு வளர்ந்து வரும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கு தீர்வு காணும் அதே வேளை, உலகளாவிய வர்த்தகத்தை எளிதாக்குவதற்காக பிராந்திய கடல் பாதுகாப்பை உறுதிப்படுத்தல். | • கடலுக்குள் நிலையான ஒரு கடல் சூழலொன்றை பாதுகாத்தல் மற்றும் கடற்றொழில் எதிர்நோக்கும் சவால்களுக்கு எதிராக கடல்சார் சட்டங்களை அமுல்படுத்துவதை உறுதி செய்தல்.<br>• ஆள்புல நீர்நிலைகளின் உரிமைகள் உள்ளிட்ட இலங்கையின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை பாதுகாத்தல்.<br>• கடல் சட்டம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் சமவாயத்தின் கீழ் சர்வதேச கடல் எல்லைகளை உற்பத்தித் திறனான முறையில் கட்டுப்படுத்துவதற்கு பிராந்திய ஒத்துழைப்புடன் ஒருங்கிணைக்கப்பட்ட முகாமைத்துவ பொறிமுறையொன்றினை அறிமுகம் செய்தல்.<br>• இலங்கையின் கடற்படை மற்றும் இலங்கை கடலோர காவல்படையின் தொழில்நுட்ப புதுப்பிப்புக்கான நடவடிக்கைகளை எடுக்கவும் மற்றும் இலங்கையின் பிரத்தியேக பொருளாதார வலயத்தின் (EEZ) பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு பொருத்தமான சட்டங்களை இயற்றுதல்.<br>• முக்கிய கப்பல் மற்றும் உயர் தர ஏற்பாட்டுச் சேவைகள் ஆகியவற்றின் மூலோபாய இருப்பிடம் அருகாமையில் இருப்பதால் இந்து சமுத்திரத்தில் பிராந்திய பாதுகாப்பில் முக்கிய பங்கு வகிப்பதை உறுதி செய்தல்.<br>• கடற்கொள்ளையர் எதிர்ப்பு ரோந்து, சூழல் மாசுக்கட்டுப்பாடு , கடல் சூழல் அமைப்பு மற்றும் பல்லுயில் பாதுகாப்பு, கடல்சார் தேடல், கடல்சார் பாதுகாப்பு, மீள் மற்றும் நம்பகமான விநியோகச் சங்கிலிகள், தரவு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் மீட்பு நடவடிக்கைகள், கூட்டுப் பயிற்சிகள் போன்றவற்றில் இந்து சமுத்திரத்துடன் கடல் எல்லைகளைப் பகிர்ந்து கொள்ளும் நாடுகளுடன் |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | நெருக்கமாக பணியாற்றும் நிகர பாதுகாப்பு வழங்குநராகவும் முதல் பதிலளிப்பாளராகவும் மாறுதல்.<br>• பிராந்திய ஒத்துழைப்புடன் காற்று, கடல் மற்றும் தரை நில சுதந்திரத்தின் மீது முழுமையான கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதன் மூலம் கடல் பகுதிகளில் விழிப்புணர்வை ஏற்படுத்த பொறிமுறையொன்றை அறிமுகப்படுத்துதல். |
| இராணுவப் படையின் தொழில்நிலை மேம்பாடு. | வினைத்திறனான மனித சக்தி திட்டமிடல் செயன்முறையின் மூலம் பாதுகாப்புப் படையின் தொழில்நிலை மற்றும் போட்டித் தன்மையையும் விருத்தி செய்தல். | • இலங்கையின் பாதுகாப்புப் படையை போட்டித் தன்மையுள்ள தலைமைத்துவத்தின் கீழ் தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்ப அறிவு, மற்றும் தேசிய பாதுகாப்புச் சூழல் தொடர்பான அறிவு மற்றும் திறன்களுடன் முறையான பயிற்சியுடன் கூடிய தொழில்முறையை மீட்டெடுத்தல்.<br>• ஏற்றுக் கொள்ளப்பட்ட இராணுவ நடைமுறைகள் மற்றும் தகுதி, தொழில்முறை திறன்கள் மற்றும் கறையற்ற தொழில்முறை வரலாற்றின் அடிப்படையில் மாத்திரம் உயர் பதவிகளுக்கான நியமனம், மற்றும் பதவி உயர்வு, மற்றும் ஆயுதப்படைகளுடன் தொடர்புடைய விஷேட பயிற்சிகளுக்கான தேர்வு போன்றவற்றுக்கு பின்பற்றப்படும் செயன்முறையை நெறிப்படுத்தல்.<br>• பாதுகாப்புப் படையிலிருந்தும் மற்றும் பொலீஸிலிருந்தும் ஓய்வு பெற்றோருக்கு தொழில்நிலையையும் மற்றும் தெழில் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்கு தனியார் பாதுகாப்புத் தொழிலை ஒழுங்குமுறைப்படுத்தல்.<br>• ஆயுதப்படைகளின் உறுப்பினர்களின் கௌரவம் மற்றும் கண்ணியத்தைப் பாதுகாத்தல் மற்றும் அவசர தேசியத் தேவைகளைத் தவிர அவர்களுடன் தொடர்பில்லாத சிவில் பணிகளுக்கு நியமிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்தல்.<br>• ஊழல் மற்றும் நிதிக் குற்றங்கள் மற்றும் ஏனைய கட்டமைப்புக்களைத் தடுக்க சட்டங்களை வலுப்படுத்தல் மற்றும் முறைப்படுத்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| புலனாய்வுத் துறை , மேற்பார்வை மற்றும் பொறுப்புணர்வு | வளர்ந்து வரும் பாதுகாப்பு நிலப்பரப்பை தொடர்ந்து பகுப்பாய்வு செய்வதன் அடிப்படையில் பாரம்பரிய மற்றும் பாரம்பரியமற்ற அச்சுறுத்தல்களை இனங்காண்பதன் மூலம் பாதுகாப்புச் செயற்பாடுகளில் வினைத் திறனான கண்காணிப்பு மற்றும் பொறுப்புணர்வை உருவாக்குதல். | • தேசிய பாதுகாப்பிற்கான கடமைகளைப் பூர்த்தி செய்வதில் உள்ள பொறுப்பையும் மற்றும் பொறுப்புணர்வையும் உறுதிப்படுத்துவதற்கு பொருத்தமான செயன்முறைகளுடன் நம்பகமான மற்றும் வினைத்திறனான புலனாய்வுத் துறைப் பொறிமுறையொன்றினை ஸ்தாபித்தல்.<br>• தேசிய நலன்களைப் பாதுகாப்பதற்காக சுயாதீனமான மற்றும் அரசியலற்ற விசாரணைகளை உறுதிப்படுத்துவதற்காள பொறிமுறையொன்றை நிறுவுதல்.<br>• சட்டம் இயற்றும் நிறுவனங்களின் (பொலீஸ், சுங்கம், மற்றும் சிறை) முழுமையான பொறுப்புணர்வை சான்றளிப்பதன் மூலம் தேசிய புலனாய்வு சேவையின் உற்பத்தி ஒருங்கிணைப்புடன் கண்காணிப்பு, முறையை சீர்திருத்தம் செய்தல் மற்றும் முறைப்படுத்தல்.<br>• இணைய பாதுகாப்பு உட்கட்டமைப்பு மற்றும் மற்றும் மூலோபாயங்களை மேம்படுத்த தேசிய பாதுகாப்பு கொள்கை சர்வதேச ஒத்துழைப்புகளை கண்டிப்பாக கடைப்பிடிக்கும் அதே வேளையில் இணைய பாதுகாப்பு ஒத்துழைப்பை நிறுவுதல்.<br>• தொடர்புடைய நிறுவனங்களை வலுவுட்டும் அதே வேளை, தேசிய தகவல் முறைகளில் பாதுகாப்புக் கொள்கையை வினைத் திறனாகவும், உற்பத்தித் திறன் வாய்ந்த முறையிலும் அபிவிருத்தி செய்தல். |
| பாதுகாப்பு ஆளணியின் நலன்கள் | ஓய்வு பெற்ற மற்றும் தற்போதைய பாதுகாப்பு ஊழியர்களின் நல்வாழ்வையும் கௌரவத்தையும் உறுதிப்படுத்தல். | • தமது தாய்நாட்டிற்காக பல்வேறு உயிர்த் தியாகங்களை மேற்கொண்ட ஓய்வு பெற்ற முப்படை அங்கத்தவர்கள், மரணமடைந்த, காணாமல் போன, மாற்றுத் திறனுள்ள, மற்றும் சேவையில் ஈடுபட்டுள்ள இராணுவ வீரர்கள் கௌரவமாக வும் மற்றும் அபிமானத்துடனுமான வாழ்க்கையொன்றை வாழ்வதை உறுதிப்படுத்தல்.<br>• பாதுகாப்புச் சேவைகளை விட்டுச் சென்ற படை வீரர்களை மனிதாபிமானத்துடன் கருதுவதன் மூலம் கௌரவமான மற்றும் வினைத் திறனுள்ள பிரஜைகளாக வாழ்வதற்கு அவர்களை வலுவூட்டல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான நடவடிக்கைகள் |
|---|---|---|
| | | • ஓய்வு பெற்ற பாதுகாப்புப் படை அங்கத்தவர்கள் மற்றும் மாற்றுத் திறனுள்ள அங்கத்தவர்களை கௌரவமாகவும் மற்றும் ஆடம்பரமாகவும் வாழ்வதாக உறுதிப்படுத்தல். |

## கொள்கை கோட்பாடுகள்

- அனைத்து இனங்னங்களின் அரசியல் பங்கேற்பு
- எந்தப் பிரஜையும் /சமூகமும், இனம், மொழி, மதம், சாதி, பாலினம், கீழ்த்தரமான கவனிப்பு, அல்லது அநீதிக்கு ஆளாக்கப்படக் கூடாது.
- அனைத்து இனங்கள் மற்றும் மதக் குழுக்களின் பாதுகாப்பு, பரஸ்பர புரிதல், நம்பிக்கை, மற்றும் உரிமைகள்
- இனவாதம், சாதி, மற்றும் சமயக் கருத்தியல்களால் பிளவுபடாத இணக்கமான இலங்கை தேசம்

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான செயற்பாடுகள் |
|---|---|---|
| ஜனநாயகம் | மக்களின் சுதந்திரம் மற்றும் ஆட்சியில் அவர்களின் ஈடுபாட்டையும் உறுதிப்படுத்தல். | • ஒரே நாட்டிற்குள் அனைத்து மக்களும் ஆட்சியில் ஈடுபடக் கூடிய வகையில் ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றம், மாவட்டம் மற்றும் மாகாணத்திற்கு அரசியல் மற்றும் நிர்வாக அதிகாரத்தை பகிர்ந்தளித்து அனைத்து பிரஜைகளுக்கும் சமத்துவத்தை உறுதிப்படுத்தும் ஜனநாயகத்தை வலுப்படுத்தும் புதிய அரசியலமைப்பொன்றை அறிமுகம் செய்தல்.<br>• மாகாண சபைகள், மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை நடாத்துவதன் மூலம் ஆட்சியில் மக்கள் இணைவதற்கான வாய்ப்பொன்றை அளித்தல்.<br>• வடக்கு கிழக்கு உள்ளிட்ட அனைத்து பிரதேசங்களிலும் கடந்த காலங்களில் இடம் பெற்ற தாக்குதல்கள், அரசியல் படுகொலைகள், காணாமற் போனோர், தொடர்பில் விசாரணை செய்து நீதி வழங்குதல்.<br>• அரசியல் கைதிகளை விடுவித்து அவர்களின் சுதந்திரமான சமூகமயமாக்கலை உறுதி செய்தல்.<br>• நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள மக்களின் சிவில் உரிமைகளை சமூகமயமாக்கலை உறுதிப்படுத்தும் அனைத்து அடக்கு முறை சட்டங்களை ரத்து செய்தல்.<br>• பாரபட்சத்திற்கு எதிரான ஒரு ஆணைக்குழுவை சட்ட பூர்வமாக ஸ்தாபித்தல்.<br>• இனவாதம், மற்றும் சமய தீவிரவாதத்தால் ஏற்படும் வன்முறைச் செயல்களை விசாரிக்க உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பணியை விரிவுபடுத்தல்.<br>• மதங்களுக்கிடையிலான பிரச்சினைகளை தீர்க்க அனைத்து மதத் தலைவர்களையும் மற்றும் மத அறிஞர்களையும் உள்ளடக்கிய மதங்களுக்கிடையேயான சபையொன்றை நிறுவுதல்.<br>• உலக மதங்களின் ஒப்பீட்டு ஆய்வுக்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை அமுல்படுத்தல்.<br>• தேசிய, மாகாண, மற்றும் மாவட்ட அளவில் சேிய மற்றும் மத ஒற்றுமைக்கான கலாச்சார நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளை ஏற்பாடு செய்தல். |

| கவனம் செலுத்த வேண்டிய பகுதி /கருப்பொருள் பகுதி | மூலோபாய வழிகாட்டி | பிரதான செயற்பாடுகள் |
|---|---|---|
| | | • வடக்கு கிழக்கு உள்ளிட்ட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள மக்களின் சிவில் உரிமைகளை உரிமைகளை உறுதிப்படுத்தும் வகையில் சிவில் நிர்வாகத்தை முறைப்படுத்தல்.<br>• அரசியல் செல்வாக்கு இல்லாமல் தகுதியின் அடிப்படையில் அனைத்து இனத்தினருக்கும் கல்வி மற்றும் வேலை வாய்ப்புக்களை வழங்குதல். |
| மனிதாபிமான சமூகம் | இனம் மதம் மொழி, சாதி மற்றும் பாலினம் போன்றவற்றைப் பொருட்படுத்தாது சமமான வாய்ப்புக்களுடன் தேசிய ஒற்றுமையை உறுதி செய்தல். | • நிவாரணம் மற்றம் பாதுகாப்பு தெவைப்படும் யுத்த விதவைகள், உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்கள், மாற்றுத் திறனாளிகள், மன அதிர்ச்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நபர்களுக்கு நிவாரணம் வழங்குதல்.<br>• காணிகள் மற்றும் குடியேற்றங்கள் தொடர்பான தேசிய ஆணைக்குழுவொன்றை மூலம் தற்போதுள்ள காணிகள் மற்றும் குடியேற்றங்கள் தொடர்பான பிரச்சினைகளை தீர்த்தல்.<br>• குடித்தொகை அமைப்பை மாற்றியமைக்கும் கோக்கத்துடன் நடைமுறைப்படுத்தப்படும் மீள்குடியேற்ற நிகழ்ச்சித்திட்டத்தினை முடிவுக்குக் கொண்டு வரல்.<br>• தேவையான வளங்கள் மற்றம் தொழில்நுட்ப வசதிகளை வழங்குவதன் மூலம் அரசியலமைப்பின் 16 ஆம் திருத்தத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தல்.<br>• 15.10.2023 ஆம் திகதியின் தேசிய மக்கள் சக்தியினால் வெளியிடப்பட்ட ஹட்டன் பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ள படி மலையக தமிழ் மக்களின் அடையாளம் மற்றும் உரிமைகளை அங்கீகரித்து அவர்களின் காணிகள், வீடுகள், கல்வி மற்றும் சுகாதார ஆகிய வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தல். |
| | அனைத்து மக்களினதும் சமூக பொருளாதார நிலைமைகளை தரமுயர்த்துவதன் மூலம் அவர்களின் கௌரவத்தை உறுதி செய்தல். | • வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ற படி மலையக தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரித்தல்.<br>• வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மற்றும் மலை நாட்டு பிரதேசங்களில் காணப்படும் பொலிஸ் பிரிவுகள், அரசாங்க அலுவலகங்கள், போன்ற சிவில் சேவைகளின் தமிழ் மொழியில் பணியாற்றக் கூடிய பணியாளர்கள் மற்றும் மொழி பெயர்ப்பாளர்களையம் வழங்குதல். |